ஸ்ரீரமணார்ப்பணம்!

பாலகுமாரன்




வானம் முழுவதும் நீல நிறம் மின்னிற்று. மிகத் துப்புரவாக இருந்தது. மேல் மாடியில் இருந்து வானத்தைப் பார்க்க, உலகத்திலேயே மிகப் பிரமாண்ட விஷயம் இந்த வானம்தான் என்று தோன்றியது.

மலையோ மடுவோ, ஆறோ கடலோ, மிருகமோ பறவையோ அதிசயம் இல்லை.
பூமியினுடைய அதிசயம் இந்த வானம்;
மேகமே இல்லாத நீல நிற வானம்.

இது, சொல்ல முடியாத பிரமாண்டம். அந்த வானத்தைப் பார்த்ததும், வேங்கடரமணனுக்கு மெல்லியதாய் சிரிப்பு வந்தது. நண்பனைப் பார்த்த போது எப்படிச் சிரிக்க முடியுமோ, அப்படி அவன் வானம் பார்த்துச் சிரித்தான். பூமி- மனிதர்களுடைய இடம். வானம்- கடவுளுடைய இடம். நாயன்மார்களுக்கு மலை உச்சியிலோ, கடல் மீதோ, கோயில் சுவரிலோ, கோபுரத்தின் உச்சியிலோ சிவபெருமான் காட்சியளிக்கவில்லை. வானத்தில்தான் ரிஷபாரூடராக சிவன் காட்சி அளித்திருக்கிறார். எனவே, வானம்தான் சிவன்; சிவன்தான் வானம். இறைவன் அசையாதது; எங்கும் நிறைந்தது; எல்லாமும் ஆனது. பூமி அசைவது; அசைவில்தான் சக்தி. எல்லா கிரகங்களும் அசைகின்றன.





அசைகின்ற எல்லாமும் சக்தி. அசையாதது சிவன். அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிவன் காட்சியளித்திருக்கிறார். மிகப் பிரியமாக இருந்திருக்கிறார். கண்ணப்பரின் கைப் பிடித்து, 'நில்லு கண்ணப்ப...' என்று கொஞ்சியிருக்கிறார். இயற்பகை நாயனாருக்கு வானம் முழுவதும் நிறைந்தபடி காட்சியளித்திருக்கிறார். திருநீலகண்ட குயவனாருக்குக் காட்சி அளிக்கும்போது, ஊர் மக்கள் அத்தனை பேரும் பார்த்திருக்கிறார்கள். சுந்தரருக்கு உதவி செய்திருக்கிறார். திருஞானசம்பந்தருக்கு அமுது வழங்கியிருக்கிறார். போர் வீரருக்குக் காட்சியளித்திருக்கிறார். சூதாடுபவருக்குத் துணை செய்திருக்கிறார். கையால் தவழ்ந்து கயிலை ஏறிய காரைக்கால் அம்மையாருக்குத் திருவாலங்காட்டில் கால் தூக்கி நடனமாடியிருக்கிறார். இறைவனைக் காண்பது கடினமல்ல; எளிது. ஆனால், ஒரு விஷயம் செய்தே ஆக வேண்டும். கடவுளே கதி என்று இறுக்கப் பிடித்துக்கொள்ள வேண்டும்.

வேறு எதுவும் முக்கியமில்லை. நீயே எல்லாமும், உனக்காகவே என்னுடைய எல்லாமும் என்று தீர்மானமாய் இருக்க வேண்டும். நெல்முனையளவும் மாறாது, அவரையே உள்ளுக்குள் ஆராதித்துக் கொண்டிருக்க வேண்டும். அப்படி இருந்தால், ரிஷபாரூடராய் நிச்சயம் சிவன் காட்சியளிப்பார்.

என்னால் அப்படி இருக்க முடியுமா? எல்லாமும் விட்டுவிட்டு, கடவுளே கதி என்று இறுக்கப் பிடித்துக்கொள்ள முடியுமா? முடியும் என்று தோன்றுகிறது; ஆனால், பயமாகவும் இருக்கிறது. கணக்குப் பாடம் எழுத வேண்டும்; ஆங்கிலம் மனனம் செய்ய வேண்டும்; கால்பந்து விளையாட வேண்டும்; மாரியம்மன் கோயில் தெப்பக்குளத்தில் நீச்சலுக்கு கூப்பிட்டிருக்கிறார்கள். அங்கும் போக வேண்டும். கபடி ஆடிவிட்டு நீச்சலா, நீச்சலடித்துவிட்டுக் கபடியா... தீர்மானம் செய்ய வேண்டும். இத்தனை விஷயங்களை மனதில் வைத்துக்கொண்டு ரிஷபாரூடராகக் கடவுள் தோன்றவேண்டுமெனில் எப்படி நடக்கும்? வேங்கடரமணனுக்கு உள்ளே வேதனை பொங்கியது. நான் பொய்யாக இருக்கிறேனோ... உள்ளே ஒரு கவலை எழுந்தது.

கடவுள் மீதும் ஆசை; கணிதப் பாடத்தின் மீதும் ஆசை. ஆங்கிலத்திலும் முதலாவது வர வேண்டும்; கபடியிலும் ஜெயிக்க வேண்டும். எப்படி... எப்படி கடவுள் வருவார்? அவனுக்குள் கேள்வி எழுந்தது. தன் மேலே கோபம் பொங்கியது. 'நீ சரியில்லை வேங்கடரமணா' என்று உள்ளுக்குள்ளே குரல் எழுந்தது. மேல் மாடியில் இருந்து, வேங்கடரமணன் கீழே இறங்கினான்.

சிறிய அறை ஒன்றில், சிறிது நேரம் உட்கார்ந்தான்; முன்னும் பின்னும் உலாவினான்; கீழே இறங்கினான். முற்றத்தில் பாதி வாழைத்தார் இருந்தது. இரண்டு வாழைப்பழங்களைப் பிய்த்து எடுத்துக் கொண்டான். உரித்துச் சாப்பிட்டான். வாசலுக்கு வந்தான். மாட்டு வண்டிகள் கோயில் நோக்கிப் போய்க்கொண்டிருந்தன.


 

மாட்டு வண்டிக்குள் ஏகப்பட்ட ஜனங்கள் நெருங்கி உட்கார்ந்து கொள்ள, மாடு சிரமப்பட்டு இழுத்துக்கொண்டு போயிற்று. அந்தச் சிறிய மாட்டுக்குச் சுமை அதிகம்தான். ஆனாலும், இழுத்துக்கொண்டு போகிறது. கோயில் நோக்கி ஓடுகிறது. நானும் அந்த மாடு மாதிரி ஓட வேண்டும்; எத்தனைச் சுமை இருந்தாலும் கோயில் நோக்கி ஓட வேண்டும்; கடவுள் நோக்கி ஓட வேண்டும்.

"அவர்கள் எல்லாம் தவம் செய்தார்கள்; கடவுளை அடைந்தார்கள். நீ நன்றாகத் தின்றுவிட்டு, ஆனந்தமாக உறங்குகிறாய். இடி இடித்தாலும் எழும்பாத கும்பகர்ண தூக்கம். உன்னால் எப்படித் தவம் செய்ய முடியும்?" அண்ணா அடிக்கடி கேலி செய்வான். "போதும், கடவுளை அப்புறம் பார்த்துக்கொள்ளலாம். இப்போது படி!" என்று கட்டளையிடுவான்.

இந்தக் குத்தல் மிக வேதனையாக இருக்கும். வயிற்றைப் பிசையும். கடவுள் தரிசனம் எனக்குக் கிடைக்கவே கிடைக்காதா? இந்த ஏக்கம் உடம்பு முழுவதும் பொங்கி எழும். குறுக்கும் நெடுக்கும் அலையத் தோன்றும். எங்கேனும் கால்போன போக்கில் போய்விடலாமா என்று வேகம் எழும்.

இப்போது இங்கே கேலி செய்ய யாரும் இல்லை. இருந்தாலும் வேங்கடரமணன் தனக்குத் தானே கேலி செய்து கொண்டான். 'உனக்கெல்லாம் இது எப்படி வரும்?' என்று மெள்ள, தனக்குத் தானே இடித்துப் பேசிக்கொண்டான்.



குளத்திலே நீச்சலுக்குக் கூப்பிட்டா மாட்டேன் என்று சொல்ல முடியுமா? கபடிக்குக் கட்சி பிரிச்சா மாட்டேன் என்று சொல்ல முடியுமா? முன்னால் போய் இடுப்பிலே கை வெச்சுண்டு நிப்பே இல்லே.

வேட்டியை அவிழ்த்து வெச்சுட்டு கோமணத்தோடு குதிப்பே இல்லே. பிசாசு மாதிரி எதிர்ப்பக்கம் பாஞ்சு பாஞ்சு கபடி கபடின்னு ஓடுவே இல்லே. அப்ப எல்லாம் கடவுள் எங்கே போச்சு? கபடி ஆடறபோது ரிஷபாரூடர் வருவாரா? நமசிவாயம், நமசிவாயம்னு தூதாடினாரே... அவருக்குக் கடவுள் காட்சி கொடுத்தாரே... என்ன செய்தாலும் சுந்தரருக்கு கடவுள் நண்பராக இருந்தாரே... எனக்கு நண்பராக இருக்கக் கூடாதா? என் கட்சியிலே சேர்ந்து கபடி ஆடக் கூடாதா?

உள்ளே ஏக்கம் பொங் கியது. ஒரு பதற்றம் உள்ளுக்குள் நிலவியது. என்னமோ

சரியில்லை; நான் சரியில்லை; எனக்கு எதுவும் சரியில்லை என்று உள்ளே ஒரு ஆக்ரோஷமான ஆவலாதி பிறந்தது.


சித்தாப்பாவிடம் கேட்டால் சிரித்துக் கொண்டு, "வேற யாராவது பெரியவா கிட்ட கேளு!" என்று தள்ளிவிடுவார்.

அப்பா இருந்தால் கேட்கலாம். அப்பா நிதானமாக பதில் சொல்வார். ஆனால், அப்பா இறந்து வெகு நாளாயிற்று. அப்பா இறந்ததால்தான் சித்தாப்பாவின் தயவு நாடி, அவரின் குடையின்கீழ் வளர, மதுரைக்கு வந்தாகிவிட்டது.

இந்த சொக்கப்ப நாயக்கர் தெரு வீடு, கோயிலுக்கு வெகு அருகில் இருக்கிறது. நினைத்தபோதெல்லாம் கோயிலுக்கு ஓடிப்போய்விட முடியும். எல்லாச் சந்நிதிகளிலும் நின்று நின்று வணங்க முடியும். கொஞ்ச நாட்கள் முன்பு பெரியபுராணம் புத்தகத்தைப் படித்ததை ஞாபகம் வைத்துக்கொண்டு, ஒவ்வொரு நாயன்மாராகத் தொட்டு வணங்க முடியும்.

அப்பா இருந்தால், மறுபடியும் எல்லோருடைய கதையையும் சொல்லுங்கள் என்று கேட்கலாம். அண்ணாவுக்குத் தெரியும்; சொல்லமாட்டான். சித்தப்பாவுக்கும் தெரிந்திருக்கக்கூடும். ஆனால், "எனக்கு வேலை இருக்குடா, குழந்தை!" என்று நகர்ந்துவிடுவார்.

கடவுள் பற்றிச் சொல்லிக் கொடுக்க யாருமில்லை. இது சொல்லிக் கொடுத்து வராது என்று அண்ணா சொல்லியிருக்கிறான். தானாகவே வர வேண்டும் என்று சித்தப்பாவும் சொல்லியிருக்கிறார். கடவுள் விஷயம் பேசுகிறபோது, அண்ணா எல்லாம் தெரிந்தவனாய் சித்தப்பாவுடன் பேசுவான்; வேங்கடரமணனை லட்சியம் செய்யமாட்டான். "உனக்கெல்லாம் இது புரியாத விஷயம்; மிக உயர்வான விஷயம்" என்று அவனை நகர்த்திவிடுவான். இருந்தாலும், அண்ணா பேசுவதை வேங்கடரமணன் விடாது கேட்பான். மறுபடி மறுபடி ஞாபகம் வைத்துக் கொள்வான்.



அப்பா இறந்ததுதான் வாழ்க்கையில் மிகப் பெரிய நஷ்டம். குடும்பம் காணாமல் போயிற்று. வீடு குலைந்து போயிற்று. அம்மா ஒரு பக்கம், தங்கை ஒரு பக்கம், தம்பி ஒரு பக்கம், அண்ணாவும் வேங்கடரமணனும் ஒரு பக்கம் என்று பிரிந்தனர். "உன்னை வளர்க்கறது என் பொறுப்பு. தயவுசெய்து என் பேச்சைக் கேளு; கணக்கு போடு!" என்று அண்ணா அதிகாரமாக, அதே நேரம் கெஞ்சலாகப் பேசுவான்.

வேதனையாக இருக்கும். கணக்குப் பாடத்தின் மீது வெறுப்பு வரும். "கோயிலுக்கு ஏதோ ஒரு மாலை மரியாதை, மேளதாளத்தோடு போறது. கொஞ்சமாவது அசைய வேண்டாமா? இப்படி தூங்கறியேடா!" - அண்ணா வியப்பான்.

"குழந்தைதானேடா, தூங்கிட்டுப் போறான்!" - சித்தி ஆதரவாகப் பேசுவாள். "இவனுக்குத் தபஸ் பண்ணணும்னு ஆசை. இவன் தபஸ், இப்போதைக்குத் தூக்கம்தான்!" என்று மறுபடியும் அண்ணா குத்திக் காட்டுவான். அவமானமும் துக்கமும் பொங்கும். ஏன் இப்படித் தூங்குகிறோம் என்று வேதனை வரும். அப்பா இருந்தால், இந்தத் தூக்கம் இல்லாமல் இருப்பதற்கு என்ன வழி என்று தெரிந்துகொள்ளலாம்.

இவர்களைக் கேட்டு என்ன பயன்? நாமாக முயற்சி செய்ய வேண்டும். நாயன்மார்கள் எல்லாம் யாரைக் கேட்டார்கள்? கடவுளைப் பற்றி எங்கு அறிந்தார்கள்? தானாகத் தெரிந்துகொண்டது அல்லவா! அப்படித் தானாகத்தானே முயற்சி செய்ய வேண்டும். வேகமாகத் தாவி, படி ஏறினான். மேல் மாடியில்

உள்ள சிறிய அறையில் போய் உட்கார்ந்து கொண்டான்.

படபடப்பு அடங்கும்வரை வெறுமே சுவரைப் பார்த்துக்கொண்டு இருந்தான். இப்போது என்ன யோசிக்கிறது மனசு என்று தன் மனதைப் பார்த்தான். அப்பாவை யோசிக்கிறது. அப்பா எப்படி இருந்தார். மறுபடியும் நினைவுக்குக் கொண்டுவந்தபோது, அப்பா நடந்ததும், நின்றதும், பேசியதும், ஞாபகம் வராமல் படுக்கையில் கிடந்ததும், தன்னை நோக்கிக் கை நீட்டியதும்தான் ஞாபகம் வந்தது.

அப்பா மரணப் படுக்கையில் இருக்கிறார் என்று சுற்றியுள்ளவர்கள் பேசிக்கொண்டனர். குசுகுசுப்பாய் பேசினாலும், அது வேங்கடரமணன் காதில் விழுந்தது. அப்பா இறந்துபோகப் போகிறார் என்ற எண்ணம் அவனுக்குத் திகிலூட்டியது. அப்பா, அவன் கைகளை இறுகப் பிடித்துக் கொண்டார். அவனை உற்றுப் பார்த்தார். அவனுக்கு அழுகை பொங்கியது. அவனை மெள்ள அணைத்தபடி, உறவினர்கள் வெளியே வந்தார்கள்.

அப்பா கை பொத்தென்று படுக்கையில் விழுந்தது மட்டும் கடைசியாகப் பார்த்தது ஞாபகம் இருக்கிறது. "தொந்தரவு பண்ணாதே... இருக்கட்டும்" என்று அவனை வெளியே உட்கார வைத்தனர். அடுத்த அரை மணியில் அப்பா இறந்துவிட்டதாக அறிவித்தார்கள். நடந்ததெல்லாம் கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல் இருந்தது.



சுற்றி உள்ளோர் வேகமாகச் செயல்பட்டார்கள். அப்பாவின் இறப்புக்குக் காத்திருந்தவர்கள்போல் பல பேர் ஓடி வந்தார்கள். மூங்கில், ஓலை எல்லாம் தயாராயிற்று. வீட்டினுள் பெரிய அழுகைச் சத்தம் கேட்டது. இவன் ஓடிப் போய்ப் பார்த்தான். அம்மாவைக் கட்டிக் கொண்டான்; அவனும் அழுதான். மறுபடியும் வெளியே வந்தான்.

அப்பாவை அடுத்த மூன்று மணி நேரத்தில் தூக்கிவிட்டார்கள். அண்ணாதான் ஈரத் துணியோடும் நெருப்புச் சட்டியோடும் முன்னே போனான். இவனைத் தடுத்துவிட்டார்கள். "தகனம் பண்ணிட்டேன்டி, தகனம் பண்ணிட்டேன்டி, சுந்தரத்தை தகனம் பண்ணிட்டேன்டி" என்று சித்தப்பா பெருங்குரலில் அழுதார். அந்த அழுகுரல் மறுபடியும் மனசுள் ஒலித்தது; துக்கம் பொங்கியது; கண்ணில் நீர் கோத்தது.

'இறந்துபோதல் என்றால் என்ன? அப்பாவை எப்படித் தகனம் பண்ணியிருப்பார்கள்? நெருப்பு மூட்டி எரித்தால் வலிக்காதா? ஏன் வலிக்காமல் போயிற்று? எது இருந்தால் வலி? எதை இழந்தால் மரணம்?' என்று தன்னைத்தானே உற்றுப் பார்த்தான். எது இருக்கிறது உள்ளே என்று மெள்ளத் தேடினான். இறந்துபோதல் என்றால், எது வெளியே போகவேண்டும் என்று மறுபடியும் ஆராய்ந்தான். இப்படி உட்கார்ந்து பார்த்தால் தெரியுமா, இறந்து போனால்தானே தெரியும்?!

மிகப் பெரிய அறிவாளிகள்கூட மரணம் பற்றி யோசிக்க விரும்பமாட்டார்கள். பதினாறு வயது வேங்கடரமணன் அதை அறிய விரும்பினான். பளீரென்று ஒரு பயம் வந்தது. செத்துப் போயிடுவோமோ? உடம்பு ஆரோக்கியமாய் இருந்தாலும், பயம் பதற வைத்தது. 'பரவாயில்லை, போ!' அவன் மரணத்துக்குத் தயாரானான்.

பயம் பெரிதாயிற்று. விலக்க விலக்க வேகமாய்ப் பற்றிக் கொண்டது. உட்கார முடியவில்லை. வேண்டாம் என்று உதறி எழுந்துவிடலாமா? மனம் பின்னடைந்தது. இல்லை; விடமாட்டேன். என்ன என்று தெரியாமல் விலகமாட்டேன்.

இறந்து போவது என்றால் என்ன? இறந்து போவது என்றால், நீட்டிப் படுக்க வேண்டும்.

அவன் சட்டென்று கால் நீட்டிப் படுத்துக்கொண்டான். உடம்பை விறைப்பாக்கினான். இப்போது உடம்பு செத்துவிட்டது. இந்த உடம்புக்கு மரணம் வந்துவிட்டது. நான் இறந்துவிட்டேன். கொண்டுபோய் தகனம் செய்யப் போகிறார்கள். அண்ணாதான் மறுபடியும் நெருப்புச்சட்டி தூக்கிக்கொண்டு போகவேண்டும்.

ஆடி ஆடித் தூக்கிக்கொண்டுபோய், சுடுகாட்டில் வைத்து விறகு அடுக்கி, கொளுத்திவிடுவார்கள். இந்த உடம்பு மெள்ள மெள்ள நெருப்புப் பட்டு சாம்பலாகிவிடும். ஒன்றுமே இருக்காது. உடம்பு காணாமல் போய்விடும். எது இருப்பதால் நான் இருக்கிறேன்? எது இருப்பதால் நான் படுத்திருக்கிறேன்? எது இல்லாது போனால் நான் இறந்து விடுவேன்?

வேங்கடரமணன் உற்று ஆழ்ந்து, எது இருக்கிறது என்று பார்த்தான். அவனது மூச்சில் மாறுதல் ஏற்பட்டது. மனம் அடங்க, மூச்சும் அடங்கும். மூக்கில் இருந்து ஓரடி தூரம் வெளிவருகின்ற காற்று மெள்ளச் சுருங்கிற்று. உள்ளுக்குள் ஆழ்ந்து எது இருக்கிறது என்று பார்க்க, மூச்சு விடுவது மூக்கின் எல்லைவரை இருந்தது. இன்னும் ஆழ்ந்து எது இருக்கிறது, எது இழந்தால் மரணம் என்று உற்றுப் பார்க்க, மூச்சானது மேல்மூக்கு வரை நின்றது.

அட, இதோ... இந்த இடத்தில்தான், இந்த இடத்தில்தான் ஏதோ இருக்கிறது. அதனுடைய இருப்பால்தான் உடம்பின் எல்லா விஷயங்களும் ஆடுகின்றன. இன்னும் உற்றுப் பார்க்க, மூச்சானது வெளியே போகாமல் தொண்டைக் குழியில் இருந்து நுரையீரலுக்குப் போயிற்று; நுரையீரலில் இருந்து தொண்டைக்குழிக்கு வந்தது; தொண்டைக்குழியில் இருந்து நுரையீரலுக்குப் போயிற்று. இன்னும் உற்று ஆழ்ந்து பார்க்க, வேங்கடரமணன் உடம்பு வேகமாக விறைத்தது. உடம்பில் உள்ள மற்ற புலன்களின் ஆதிக்கங்கள் தாமாய் இழந்தன. ரத்த ஓட்டம் வேறு மாதிரியான கதிக்குப் போயிற்று. இறந்தபோது ஏற்படும் விறைப்புத்தன்மை உடம்பில் சட்டென்று ஏற்பட்டது.

அவன் அந்நியமாக நின்று வேடிக்கை பார்த்தான். மூச்சானது, இப்போது மெள்ள நுரையீரலில் இருந்து சிறிது தூரம் வெளிப்பட்டு, மறுபடியும் நுரையீரலுக்குப் போயிற்று. மூக்குக்கு அருகே, தொண்டைக்கு அருகே வராமல், மூச்சுக் குழாய் அருகே சிறிது தூரம் போய்விட்டு மறுபடியும் பின்திரும்பியது. மூச்சு இருந்தது; ஆனால் முழுவதுமாக இல்லாது, ஒரு காளையின் கொம்புபோல அதே அளவுடன், சிறிது வளைவுடன் மூச்சு சில அங்குலங்கள் எகிறி, மறுபடியும் நுரையீரலுக்கு வந்தது.

மனம் அடங்க, மூச்சும் அடங்கும். மூச்சு அடங்க, மனமும் அடங்கும். இரண்டு காளைக் கொம்புகளாய் மூச்சு அசைந்துகொண்டிருந்த போது, சட்டென்று உள்ளுக்குள்ளே பேரொளி ஒன்று தோன்றியது. தாங்கமுடியாத அதிர்ச்சி வந்தது. இரண்டு மூச்சுக்கு நடுவேயும், இரண்டு காளைக் கொம்புகளுக்கு நடுவேயும் ஏதோ ஒன்று பிரகாசமாக ஆடியும் ஆடாமலும், அசைந்தும் அசை யாமலும் மிகப் பொலிவோடு நின்றுகொண்டு இருந்தது. எண்ண ஓட்டங்கள் சில்லென்று நின்றன. அது... அந்தப் பேரொளி எண்ணத்தை விழுங்கியது.

எண்ணம் விழுங்கப்பட, 'நான்' என்ற அகந்தையும் உள்ளே விழுங்கப் பட்டது. 'நான்' என்கிற எண்ணம் காணாமற்போக... பேரொளியே தானாகி, வேங்கடரமணன் கிடந்தான்.



இதுவே நிரந்தரம்; இதுவே முழுமை; இதுவே இங்கே இருப்பு; இதுவே இங்கு எல்லாமும். இதுவே முதன்மை; இதுவே சுதந்திரம்; இதுவே பரமானந்தம்; இதுவே பூமி; இதுவே பிரபஞ்சம்; இதுவே அன்பு; இதுவே கருணை; இதுவே அறிவு; இதுவே ஆரோக்கியம்; அனைத்து இடங் களிலும் நீக்கமற நிறைகின்ற அற்புதம். இதுவே எல்லா உயிர்களிலும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

மூடிய கண்களில் பெரிய வெளிச்சம், மூடாத காதுகளில் ரீங்காரம், உடம்பு முழுவதும் புல்லரிக்க வைக்கும் தகதகப்பு, புத்தியில் ஒரு திகைப்பு, உள்ளங்காலில் ஒரு சுகவேதனை; ஆசனவாய் இழுத்துச் சுருங்கிக் கொண்டு, கழுத்துவரை ஒரு சக்தியைத் தள்ளி அனுப்புகிறது.

முதுகுத் தண்டில் ஒரு குடையல், நெஞ்சுத் துடிப்பில் நிதானம், இருதயத்தில் அழுத்திய கனம், தொண்டையில் ஒரு சுழல், நெற்றியில் ஒரு குறுகுறுப்பு, உச்சிமண்டையில் ஒரு அக்னி, ஆஹா ஆஹா... எல்லா இடமும், எல்லா உயிரிலும் நீக்கமற நிறைந்திருக்கிறதே! அதுவே அதுவே.. வேங்கடரமணனின் மனம் மெள்ள விழித்துக்கொண்டு அலறியது.

உணர்வு திரும்பி எழுந்திருக்க, அரைமணி நேரம் ஆயிற்று. வேங்கடரமணன் எழுந்து சப்பணமிட்டு உட்கார்ந்துகொண்டான். எதிரே இருந்த சுவர் பார்த்து வெறுமே அழுதான். பிறகு, காரணமின்றிச் சிரித்தான். மீண்டும் அழுதான். எழுந்து நின்று சுவர் மூலையில் சாய்ந்துகொண்டான்.

தள்ளாடி, வாசல் நோக்கி நகர்ந்தான். வேகமாகத் தாவி ஏறும் மாடிப்படி, அன்று பார்க்க பயமாக இருந்தது. உருண்டு விழுந்து விடுவோமோ என்று தோன்றியது.

'என்ன நடந்தது எனக்கு, என்ன நடந்தது எனக்கு...' ஒவ்வொரு படியாய் மெள்ள இறங்கி வந்தான். உள்ளே இருப்பது நான். அதுதான் நான். ஒரு படி இறங்கினான். இந்த உடம்பு நான் அல்ல. இந்த புத்தி நானல்ல. என் சக்தி நானல்ல. என் மனம் நானல்ல. ஒவ்வொரு படி இறங்கும்போதும், அவனுக்குள் தெள்ளத் தெளிவாய் விஷயம் புரிந்தது. உள்ளே பேரொளியாய், சுடராய் இருக்கிற அதுவே நான். அதுவே எல்லார் உள்ளும்... எனக்குள் இருப்பதே எல்லா இடத்திலும் இருக்கிறது. நான்தான் அது. நான்தான் சித்தி, நான்தான் சித்தப்பா, நான்தான் அண்ணா, நான்தான் தெரு நாய், நான்தான் வண்டு, நான்தான் பசு மாடு, நான்தான் மாடப்புறா, நான்தான் எல்லாமும்.



ஒருமை எப்படிப் பன்மையாகும்? இது மிகப் பெரிய தவறு. நான் என்பது எல்லாவிதமாகவும் விளங்கியிருக்கிறபோது, எல்லாமுமாய்ப் பிறந்து இருக்கிறபோது, எனக்கும் அவர்களுக்கும் என்ன வித்தியாசம்? என்ன வேறுபாடு? ஒருமை எப்படிப் பன்மையாகும்?

பத்தாவது படியில் இறங்கி நின்றான். மாடிப்படி திரும்பினான். சிரித்தான். இதை யாரிடம் போய்ச் சொல்வது? இப்படி நடந்தால் என்ன அர்த்தம் என்று எவரிடம் விளக்கம் கேட்பது? நான் சரியாகப் புரிந்துகொண்டு இருக்கிறேனா? எனக்கு ஏதோ நடந்தது... அது சரியாக நிகழ்ந்ததா? தூக்கமா, பிரமையா அல்லது உள்ளுக்குள் இருப்பதுதான் வெளிப்பட்டதா? அவன் இறங்கி நடந்து கோயிலுக்குள் போனான். மதுரை சுந்தரேஸ்வரரைப் பார்த்துக் கைகூப்பினான். அந்தக் கைகூப்பலில் நன்றி இருந்தது; நெகிழ்வு இருந்தது; சந்தோஷம் இருந்தது; அமைதி இருந்தது; அன்பு இருந்தது; ஒரு ஆனந்தம் பெருக்கெடுத்து ஓடிற்று.

எல்லாம் கரைந்து மனம் முழுவதும் ஒன்றாகி, அவன் மறுபடியும் ஸ்வாமியை நமஸ்கரித்தான். மறுபடியும் போய் அவ்விதமே ஆழ்ந்து உட்கார்ந்துகொள்ள வேண்டும்; அல்லது, படுத்து அந்த அனுபவத்தை மறுபடியும் அனுபவிக்க வேண்டும் என்று தோன்றியது.

'மீண்டும் நீங்க வரணும்' என்று மதுரை சுந்தரேஸ்வரரை கைகூப்பி இறைஞ்சினான். ஊர் முழுவதும் சுற்றிவிட்டு வீடு திரும்பும்போது, ஒரு காலியான பாத்திரம்போல வேங்கடரமணன் நடந்தான்.

அந்தப் பாத்திரம் நிரம்ப... இறையருள் காத்திருந்தது.

தன்னைச் சுத்தம் செய்துகொள்வது என்பது எல்லோருக்கும் நடப்பது இல்லை. வெகு சிலருக்கே நிகழ்கிறது. அப்படி நடந்தவருக்குத்தான் ஞானி என்றும் மகான் என்றும் பெயர்.

வேங்கடரமணன் என்கிற அந்த பதினாறு வயது இளைஞன் பிறகு ஸ்ரீரமண மகரிஷி என்று அழைக்கப்பட்டார். பகவான் என்று கோடிக்கணக்கானோர் அவரை வணங்கினார்கள்.

வேங்கடரமணன் பிறந்த ஊர் திருச்சுழி. ராமநாதபுரம் சமஸ்தானத்துக்கு அடங்கிய சிறிய ஊர். சுற்றிலும் பொட்டல் காடு. வானம் பார்த்த பூமி. ஆனால், அங்கே அழகான சிவன் கோயில் ஒன்று இருந்தது.

உலகில் பிரளயம் ஏற்பட்டபோது, சிவன் சூலத்தால் ஒரு பள்ளம் ஏற்படுத்த, பிரளயம் சுழித்துக்கொண்டு அந்தப் பள்ளத்தில் மறைந்தது. பிரளயம் சுழித்து மறைந்ததால், அது திருச்சுழி.

வெகு காலத்துக்குப் பிறகு, அதே சுழியில் இருந்து பிரளயம் ஒன்று வெளிப்பட்டது. அது அன்புப் பிரளயம். ரமணானுபவம். அது பொங்கி எழுந்து உலகையெல்லாம் நனைத்தது.

திருச்சுழியின் மிகப் பெரிய சொத்து, அதன் அமைதி. திருச்சுழி சிறிய நகரம்; பெரிய கிராமம். அது மற்ற ஊர்களிலிருந்து விலகியிருந்தது. எப்போதேனும் ராமேஸ்வரத்துக்குப் போகிற யாத்ரீகர்கள் சற்று திசை மாறி, அந்தப் பக்கம் நடந்து வருவார்கள். தங்கி, இளைப்பாறிச் செல்வார்கள்.

ஊர் அவர்களை ஆவலுடன் வரவேற்கும். சுற்றிச் சுற்றி நின்று வேடிக்கை பார்க்கும். இப்படி, சாதாரண யாத்ரீகர்கள் வருவதுகூட விசேஷமாக அமைந்த அந்த ஊரில், சுந்தரமய்யர் வக்கீலாக வேலை பார்த்து வந்தார்.

சுந்தரமய்யர் வக்கீலுக்குப் படித்தவர் அல்ல; ஆனால், படித்தவர். வாதாடத் தெரிந்தவர். அந்தக் காலத்தில் படித்தவர்கள் குறைவாக இருந்ததால், கொஞ்சம் படித்தவர்களைக்கூட வழக்குகளில் வந்து வாதாட, ஆங்கிலேய அரசாங்கம் அனுமதித்திருந்தது.

சுந்தரமய்யர் நல்ல உயரம். இறுக்கமான முகம். கூரிய கண்கள். அழுத்தமான உதடுகள். துருத்திய கன்னம். நீதியின் முன்பு வாது செய்ய வந்தவர் சிரிப்பாய் இருக்கலாகாது என்பது அவருக்குள் ஓர் எண்ணம். எனவே, எப்போதுமே அமைதியாகவும் கூர்மையாகவும் இருப்பது அவர் வழக்கம்.

வக்கீல் தொழில் நன்றாக நடந்ததால், வருமானம் வந்தது. வருமானம் வந்ததால், கோயிலுக்கு அருகிலேயே ஒரு வீடு வாங்கினார். வீட்டுக்கு இரண்டு நிலைப்படிகள் வைத்தார். ஒரு பக்கம் முழுவதும் அவர் உபயோகத்துக்கு; மற்றது, அலுவலகம்போல் வருவோர் போவோர் புழங்குவதற்கும் தங்குவதற்கும் வசதியாயிற்று.

தொலைவிலிருந்த கிராமங்களிலிருந்து நிலம் சம்பந்தமாகவோ, அடிதடி ரகளையில் ஈடுபட்டோ, நீதி விசாரணைக்கு விண்ணப்பம் கொடுத்து ஜனங்கள் வருவார்கள். இரவு வந்துவிட்டால், திருச்சுழி தாண்டி காட்டுப் பாதையில் நடக்க ஆண்கள்கூட அச்சப்படுவார்கள். எனவே, விடிந்த பிறகு போகலாம் என்று இங்கேயே தங்கிவிடுவார்கள். அப்படித் தங்க சௌகரியமான இடம் சுந்தரமய்யர் வீடு.

தங்கினால் போதுமா, உணவுக்கு வழி? அதிலும் சுந்தரமய்யர் அன்பு. 'நம்ம வீட்டுல இருந்து ராத்திரி சாப்பிட்டுட்டு, கார்த்தால கஞ்சி குடிச்சுட்டுப் போகலாம்' வஞ்சனையே இல்லாத உபசரிப்பால் அவர் மிளிர, மனைவி அழகம்மையும் உடனடியாக அதை நிறைவேற்றுவார்.

சுந்தரமய்யர்- அழகம்மைக்கு முதலில் ஒரு மகன் பிறந்தான். அந்தக் குழந்தைக்கு 'நாகசுவாமி' என்று பெயரிட்டார்கள். சுந்தரமய்யருக்கு லக்ஷ்மி என்று ஒரு தமக்கை இருந்தாள். அவர் ஓர் ஆண் மகனை ஈன்றுவிட்டு, மரணம் அடைந்தார். அவரின் குழந்தையை சுந்தரமய்யரே எடுத்து வளர்த்தார். 'ராமசுவாமி'

என்று பெயரிட்டார். இரண்டாம் முறை அழகம்மை கருத்தரித்தார். வீட்டிலுள்ள பெரியவர்கள் அதைக் கொண்டாடினார்கள்.

இந்த முறை அழகான ஒரு பெண் குழந்தை பிறந்தால், அதை ராமசுவாமிக்குத் திருமணம் செய்து வைக்கலாமே என்று கணக்குப் போட்டார்கள். ஒரு குழந்தை பிறக்கும் முன்பே அதற்கு மணமுடிக்கின்ற பேராவல், வாழ்க்கை பற்றிய ஆசை, அக்கறை அன்று மனிதர்களிடையே அதிகம் இருந்தது. வம்ச விருத்தி மிக முக்கியம் என்று நினைக்கப்பட்டது.



"அழகம்மை, நீ பேருக்கேத்த மாதிரி ரொம்ப அழகா இருக்கே. கன்னம் சிவந்து, உதடு கனிஞ்சு, அழகிட்டுண்டிருக்கு. இந்தத் தடவை பொண்ணுதான்."

அழகம்மைக்கு எதுவாயினும் சந்தோஷம். நல்லபடி பிறக்க வேண்டும். சுந்தரமய்யருக்கு வெறும் வக்கீல் என்ற செல்வாக்கு மட்டுமல்ல; நல்லவர், உதவி செய்பவர், ஏழைப் பங்காளர் என்கிற நல்ல பெயரும் இருந்தது. வறுமை காரணமாகவும், வேறு பிழைப்பின்மை காரணமாகவும் அந்த ஊரைச் சுற்றிக் கள்வர் பயம் அதிகமிருந்தது. வழிப்பறி, கூரை பிரித்து இறங்குதல், கன்னம் வைத்தல் போன்ற விதம்விதமான திருட்டுகள் அவ்வப்போது நடைபெற்றுக் கொண்டிருந்தன.காவலர்கள் தேடிப் பிடித்துக் கள்வர்களை மடக்கிக் கைது செய்வர். சுந்தரமய்யர் அவர்களுக்காக வாதாடுவார். வழக்காக மாறும் முன்பேகூட பஞ்சாயத்து பண்ணித் தீர்த்து வைப்பார்.

"என்னம்லே... செட்டியார் வீட்டுல கை வச்சுட்டீங்களாம்ல"

"நாங்க இல்லீங்க சாமி"

"எங்கிட்டயேவா... உன்னைப் பார்த்ததுக்கு ஆள் இருக்கு. உன் கூட்டாளி போட்டுக் குடுத்துப்பிட்டான். உள்ள உக்காந்துண்டிருக்கான். என்ன செய்ய..."

"சொல்லுங்க சாமி"

"கொடுத்துடு... எச்சரிச்சுவிட்டாப்போல ஆவும்"

"மடக்கி அடிப்பாங்க சாமி"

"நான் பாத்துக்கறேன். வீட்டு வாசல்ல வச்சுட்டு எட்டக்கப் போயிடு"

"ஒரு வம்பும் வராதா"

"நாங்க இருக்கோம்ல" - உத்தரவாதம் கொடுப்பார்.

திருடப்பட்ட நகை, வீட்டு வாசலில் மூட்டை கட்டி வைக்கப்பட்டிருக்கும். திருட்டுக் கொடுத்தவர், 'கடவுளே.. கடவுளே...' என்று சந்தோஷப்படுவார்.

"குந்துமணிகூடக் குறையலை. எல்லாம் சரியா இருக்கு" வீட்டுப்பெண்கள் கண்களில் நீர் வழிய, நன்றி சொல்வார்கள்.

"பிழைப்புக்கு வேற வழியில்லை. இதுவே பழக்கமாயிடுத்து. அரிசி பருப்போடு அஞ்சோ, பத்தோ கொடுத்துடுங்கோ. இந்தப் பக்கமே வர மாட்டான்"

ஒரு மூட்டை அரிசியும், ஒரு பை பருப்பும், மளிகை சாமானும், காசுமாய், நகை மூட்டை வைத்த இடத்திலேயே வைக்கப்பட்டிருக்கும்.

"இத்தனையும் எனக்கா"- கள்வர் வியப்பார்கள். "சோறு திருடத்தான் போனேன். நகை இருந்திச்சு. எடுத்துக்கிட்டு வந்துட்டேன்" குழந்தைபோலப் பேசுவார்கள்; அடிபடாமல் உயிர் காத்த சுந்தரமய்யரைத் தெய்வமெனப் புகழ்வார்கள்.

"யாரு முன்னால போறது"

"சுந்தரமய்யர்"

"ஒத்த வீடு அய்யருதானே... எனக்கு நாப்பது ஏக்கர் நிலம் இருக்கு. ஆறேழு வீடு இருக்கு. தாண்டிப் போப்பா"

பணக்காரர் தாண்டிப் போக, சுந்தரமய்யர் வணக்கம் சொல்ல, பணக்காரர் முகம் திருப்பிக்கொண்டார். காசு கர்வம் காட்ட, கல்வி மெல்லச் சிரித்தது.

ஒரு மைல் தூரம் போக, ஒரு திருப்பத்தில் பத்துப் பதினைந்து பேர் அந்தச் செல்வந்தர் வண்டியைச் சூழ்ந்து கொண்டு கடையாணியைப் பிடுங்கி... கத்தியைக் காட்டி மிரட்டிக்கொண்டிருந்தார்கள்.

"கழட்டுடா... எல்லாத்தையும் கழட்டிக் கொடு!" என்று கூச்சலிட்டார்கள்.

"ஏய்... இன்னொரு வண்டி வருது"

"மடக்கு... மடக்கு"

"ஐயோ.. அது அய்யரு வண்டி" - சுந்தரமய்யரின் வண்டியைப் பார்த்ததும், சரசரவென்று பாதையை விட்டு இறங்கி, முட்செடிகளுக்குள் மறைந்தார்கள்.

"யாரடா அது" - சுந்தரமய்யர் அதட்டல் போட்டார்.

இரண்டு பேர் பவ்வியமாக முன்னே வந்து, கை கட்டி நின்றார்கள்.

"என்ன எடுத்தே"

"இப்பதாங்க ஆரம்பிச்சோம்..."


"கொடுடா அதை"

எடுத்ததைத் திருப்பிக் கொடுத்தார்கள்.

"ரெண்டு போட்டேன்னா, முதுகு பிய்ஞ்சு போயிடும்" கல்வி கர்ஜித்தது. காசு பயந்து நடுங்கி, ஒரு ஓரமாக நின்று கொண்டிருந்தது.

"இன்னொரு தடவை உங்களை இந்தப் பக்கம் பார்த்தேன்... தொலைச்சுப்புடுவேன்" - சுந்தரமய்யர் மீண்டும் சீறினார். அவர்கள் பதுங்கிப் பின்னடைந்தனர்.

"இரு, இரு... ஐயா, ஆளுக்கு ரெண்டு ரூபா குடுத்துருங்க"



இரண்டு ரூபாய் என்பது அன்று பெரிய காசு. மூன்று நாள் உணவு. தங்கமும் வைரமுமாய் இழந்திருக்கவேண்டிய செல்வந்தர், கள்வர்களுக்குத் தலா இரண்டு ரூபாய் கொடுத்துவிட்டு, சுந்தரமய்யருக்கு நன்றி சொன்னார்.

"உங்களை அலட்சியமா நினைச்சு வந்துட்டேன். மன்னிச்சுக்குங்க" - செல்வந்தர் கைகூப்பினார்.

"ஏதோ சிந்தனையா இருந்தீங்க. அதனால கவனிக்கலை. சரி, முன்னால போங்க. நான் கூடவே துணைக்கு வரேன்!" - சுந்தரமய்யர் தட்டிக்கொடுத்தார்.

அறிவும் கம்பீரமும்தான் ஆணின் அலங்காரங்கள். சுந்தரமய்யர் அலங்காரபுருஷராய் விளங்கினார்.

"எனக்கொண்ணும் பெரிசா பூஜை புனஸ்காரம் தெரியாது. வீட்ல இருக்கிற சுவாமிக்கு சாஸ்திரிகள் வந்து பூஜை பண்ணிட்டுப் போவார். நான் சர்க்கரைப் பொங்கலோடு சரி. ஆனா, இந்த மாதிரி ஏழைகளைப் பார்த்தா வயிறு குழையும். 'பகவானே, இவாளை நல்ல கதிக்கு மாத்தப் படாதா'ன்னு ஒரு ஏக்கம் வரும்..."

அவர் நெஞ்சிலிருந்த ஈரம் கருவிலிருந்த குழந்தையிடமும் இருந்தது.

சடங்குகளைவிட வாழ்க்கை முக்கியம். அனுஷ்டானத்தை விட அன்பு முக்கியம். பொய்யான ஜாதி கர்வத்தைவிட சத்தியமான பிரியம் முக்கியம். இந்தக் குணங்கள்தான், கருவிலிருந்த குழந்தைக்கும் இயல்பாக இருந்தன. வித்து பலமாக இருந்ததால், விருட்சம் பெரிதாகக் கிளர்ந்தது.

அது மார்கழி மாதம். பூமி சில்லென்று இருந்தது. நல்ல மழை பெய்து முடித்து, பூமி முழுவதும் பச்சென்றிருந்தது. எல்லா உயிரினங்களும் துள்ளிக் குதித்தன. சிங்காரமாய் உலவின.

மார்கழி, தேவர்களின் விடியல். மார்கழியில் திருவாதிரை நட்சத்திரம் சேர்ந்த தினம், சைவர்களுக்குப் புனித நாள். எல்லா சிவாலயங்களிலும் நடராஜர் ஊர்வலம் வருகின்ற தினம். திருச்சுழியில் உள்ள சகாயவல்லி சமேத பூமிநாதர் ஆலயத்திலும் திருவாதிரைத் திருவிழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது.

வீதி உலா முடிந்து, எம்பெருமான் நடராஜமூர்த்தி ஆலயப்பிரவேசம் செய்துவிட்டார். திருவாதிரை முடிந்து, புனர்பூசம் ஆரம்பித்துவிட்டது.

சுந்தரமய்யர் வீட்டின்முன் அறையில், பல பெண்கள் போவதும் வருவதுமாக அலைந்துகொண்டிருந்தனர். இரவு ஒரு மணிக்குமேல் பரபரப்பானார்கள். அழகம்மையின் வேதனைக் குரல், சுந்தரமய்யரை மெல்ல வாட்டியது. இடையறாது நமசிவாய ஜபம் செய்தார். 1:17-க்குக் குழந்தை பிறந்தது. ஆண் மகவு.

ஆண் மகவு என்று சுந்தரமய்யருக்கு அறிவிக்கப்பட்டது. அவர் கோயில் கோபுரம் நோக்கிக் கைகூப்பினார். அது, 1879-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 30-ஆம் தேதி.

குளிர் மிகுந்த டிசம்பர் மாதத்தில், உலகின் பல பகுதிகளில் பல மகான்கள் பிறந்திருக்கிறார்கள். பரத கண்டத்தில், தேவர்கள் கண் விழிக்கும் மாதம் மார்கழி. உன்னதமான காலம். மனிதர்களின் மன வெப்பம் நீக்கிக் குளிர்விக்க, அங்கே அற்புத பிறப்பு நிகழ்ந்தது.

உதவி செய்ய வந்த பெண்களில் ஒரு மூதாட்டி இருந்தாள். அவள் பல குழந்தைகள் பெற்றவள். பல குழந்தைப் பேறு பார்த்தவள். ஆனால், அவளுக்கு அப்போது கண் பார்வை மிகவும் மங்கியிருந்தது. ஒரு மூலையில் அமர்ந்துகொண்டு, மற்றவர்களுக்கு ஆலோசனை சொல்லிக்கொண்டிருந்தாள். அந்த மூதாட்டியின் அனுபவம், மற்ற பெண்களுக்கு உதவியாக இருந்தது.

கண்பார்வை இல்லாததால், அந்தக் கிழவியின் மனம் முழுவதும் அந்தக் குழந்தைப் பிறப்பின் மீதே இருந்தது. நல்லபடியாக சிசு வெளியே வரவேண்டுமே என்ற கவலை இருந்தது.

குழந்தை பிறந்ததும், அதை அந்த மூதாட்டியின் கைகளில் கொடுத்தார்கள். உடனே பளிச்சென்று அந்த மூதாட்டிக்குக் கண்கள் தெரிந்தன. எதிரில் இருப்பது குழந்தையா, பெரும் ஒளியா என வியந்தாள். இத்தனை இருட்டில் ஒரு குழந்தை இத்தனைப் பிரகாசமாக இருக்கிறதே, எப்படி என்று ஆச்சரியப்பட்டாள். பிறந்த குழந்தையை 'மகான்' என்று சிறிது நேரத்தில் ஜாதகமும் சொல்லியது.

இரண்டாம் வீட்டில் புதன், சுக்கிரன், ஐந்தில் குரு, மிக மிக விசேஷம். ஞானவான் பிறந்திருக்கிறான் என்பதற்கு அடையாளம். ஐந்தாம் இடம் பூர்வ புண்ணிய ஸ்தானம். பூர்வ புண்ணிய ஸ்தானத்தில் குருவின் ஆதிக்கம், மிக மிக உயர்ந்த மனிதன் என்பதை நிரூபிக்கும். ஆனால், சுந்தரமய்யர் வீட்டுக்கு ஒரு சாபம் இருந்தது. உண்ண உணவும், படுக்க இடமும் கேட்ட ஒரு துறவியைப் பல தலைமுறைகளுக்கு முன்னால் விரட்டி அடித்ததால், அந்த வம்சத்தில் ஒவ்வொரு தலைமுறையிலும் யாரோ ஒருவர் துறவியாகப் போவார் என்ற விதி இருந்தது. அதுபற்றி அப்போது யாரும் கவலைப்படவில்லை.




சுந்தரமய்யருக்கு குலதெய்வம் வேங்கடரமண சுவாமி என்பதால், குழந்தைக்கு வேங்கடராமன் என்று பெயர் வைத்தார்கள். குழந்தை கொழுகொழுவென்று இருந்தான்; துடியாக வளர்ந்தான். 'என்ன பாட்டு... என்ன ஆட்டம்... என்ன துள்ளல்..! கொஞ்ச நேரம் சும்மா இருக்கமாட்டேன் என்கிறானே!' என்று தாய் அன்போடு அலுத்துக்கொள்ள, சீரும் சிறப்புமாக வளர்ந்தான்.

அதே ஊரிலுள்ள மன்னர் சேதுபதி பள்ளிக்கூடத்தில் சேர்த்தார்கள். இடுப்புத் துண்டும், வெறும் மார்பும், சிலேட்டும், பலப்பமுமாய் பிள்ளை பள்ளிக்கூடம் போவது பார்க்கப் பரவசமாயிருந்தது.

*'ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டா*
*ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டா'*

பிள்ளை மற்ற மாணவர்களோடு கைகட்டி உரக்கப் பாடம் சொல்வது, கேட்க ஆனந்தமாக இருந்தது. ஊர் முழுவதும் அந்தக் குழந்தையின் புகழை ஓதப் போகிறது; அந்தக் குழந்தையின் அருள் மொழியைக் கேட்கப் போகிறது; உலக மக்கள் எல்லாப் பொல்லாங்கையும்

உதறிவிட்டு அதன் காலடியில் அமைதியை, ஆனந்தத்தை அனுபவிக்கப் போகிறார்கள் என்பதை ஊரோ, அந்தக் குழந்தையின் பெற்றோரோ அறியவில்லை.

"டேய்... கப்பல் பண்ணலாமாடா! கத்திக் கப்பல் பண்ணி தண்ணில

விடலாமாடா?"

"கெட்டிப் பேப்பர் வேணும்டா!" - நண்பன் கேட்டான்.

வேங்கடராமன் ஓடிப்போய் மேஜையின் மீது நாற்காலி போட்டு, மேஜையிலிருந்து நாற்காலிக்கு ஏறி, பரண் மீதிருந்த ஒரு கட்டுக் காகிதத்தை எடுத்துக் கீழே போட்டான். சுற்றியுள்ள சணலைப் பிரித்து, நாலைந்து காகிதங்களை உருவி, மடமடவென்று மடித்துக் கிழித்து இரட்டைக் கப்பல், கத்திக் கப்பல், வெறும் கப்பல், பாய்மரக் கப்பல் என்று பலதும் செய்தான். எடுத்துக் கொண்டு கோயில் குளத்துக்கு ஓடினான். மெல்லிய காற்றில் அலையும் நீரில், கப்பல்கள் ஆனந்தமாய் பிரயாணம் செய்தன.

அது வீட்டுப் பத்திரம். ஸ்டாம்புப் பேப்பர். கெட்டியான தாள்கள். நன்கு பயணித்தன.




தந்தை சுந்தரமய்யர்



"அவனைச் சட்டைத் துணியைக் கழட்டிட்டு, ஊரை விட்டு போகச் சொல்லு! அவன் வீட்டுக்குள்ளே வரப் படாது. அது இன்னொருத்தர் வீட்டுப் பத்திரம். நான் என்ன பதில் சொல்வேன்?" - சுந்தரமய்யர் விஷயம் தெரிந்து உரக்கக் கத்தினார். வேங்கடராமன் மிரண்டு, வெளியே ஓடிப் போய், காணாமல் போனான்.

மாலை வந்தது. இரவு நெருங்கிற்று. வேங்கடராமனைக் காணோம் என்று வீடு தேடிற்று. அக்கம்பக்கத்திலுள்ளோர் தேடினார்கள். விஷயம் கேள்விப்பட்டு, ஊர் முழுவதும் இங்கேயோ, அங்கேயோ என்று அலைந்தது.

கோயிலில் அன்று கூட்டமில்லை. சுவாமிக்கு அர்த்தஜாம பூஜை முடித்துவிட்டு, அம்பாளுக்கு நைவேத்தியம் முடித்து விளக்குத் தூண்டிவிட்டபோது, அம்பாளின் பின்பக்கம் ஏதோ அசைவு கேட்க, சிவாச்சார்யருக்குத் திக்கென்றது. துள்ளிக் குதித்து வெளியேறி, 'யாரது' என்று குரல் கொடுக்க, வேங்கடராமன் முகம் எட்டிப் பார்த்தது.



"கன்னுக்குட்டி! இங்கேயா இருக்கே! ஊர் முழுக்க உன்னைத் தேடறதேடா அம்பி! உங்கம்மா இரண்டு தடவை கோயிலைச் சுத்தி வந்துட்டாளே... பாவம், அழறாடா! இங்கே என்ன பண்றே?"

"அப்பா அடிப்பா!"

"அதுக்குப் பயந்து ஒளிஞ்சிண்டிருக்கியா? ஒளியறதுக்கு இதுவா இடம்?"

அந்த கன்னுக்குட்டியைத் தோளில் போட்டுக்கொண்டு வந்து வீட்டில் சேர்த்தார் சிவாச்சார்யர்.

எல்லாம் வல்ல இறையிடம் அடைக்கலம் புக வேண்டும் என்கிற உணர்வு வேங்கடராமனுக்கு அந்த வயதிலேயே, அவன் அறியாமலேயே ஏற்பட்டுவிட்டது.



வேங்கடராமன் மேற் படிப்புப் படிக்க திண்டுக்கல் போனான். முதலில் ஆட்டம், பிறகுதான் படிப்பு என்கிற நியதிதான் அவனுக்கு இருந்தது. பிரபஞ்சத்தின் ஆட்டத்தை உற்றுப் பார்ப்பவருக்குப் படிப்பு எதற்கு என்பதுதான் பிற்காலத்தில் நியதியாயிற்று.

விளையும் பயிர் முளையிலே என்பது உண்மையான வாக்கியமாயினும், முளைத்த பயிரை உற்றுப் பார்க்க எல்லோருக்கும் தெரியாது. முளைவிட்ட பயிரும் தன்னை யாரென்று காட்டாது.

எல்லாக் குழந்தைகளையும்போல வேங்கடராமன் உற்சாகத்துடன் ஓடியாடினான். நல்ல திடகாத்திரனாய் இருந்ததால், எல்லா விளையாட்டுகளிலும் மும்முரமாய் ஈடுபட்டு ஜெயித்தான். அவன் இருக்கும் பக்கம் சேர்ந்துகொள்ள, பையன்கள் ஆசைப்படுவார்கள். கட்சி பிரிக்கின்றபோது, "என்னைச் சேர்த்துக்கடா, என்னை சேர்த்துக்கடா" என்று கெஞ்சுவார்கள்.

திருச்சுழியில் ஐந்தாம் வகுப்பு முடித்துவிட்டு திண்டுக்கல் நகராட்சி பள்ளியில் ஆறாம் வகுப்பு சேர்ந்தான். திண்டுக்கல் இன்னும் பெரிய ஊர். அங்கும் பல நண்பர்கள் சேர்ந்தார்கள்.

திண்டுக்கல்லில், குறுநில மன்னர்களால் கட்டப்பட்ட கோட்டை ஒன்று இருந்தது. அதற்கு 'ஊமையன் கோட்டை' என்று பெயர். ஆங்கிலேயர் ஆட்சிக்குப் பெரும் கலவரம் கொடுத்த அந்த ஊமையன், அந்தக் கோட்டையிலிருந்து ஆட்சி செய்து வந்தான். அந்தக் கோட்டையை ஆங்கிலேயர்கள் முற்றுகையிட்டபோது, சுற்றுச்சுவரில் ஒரு துளையிட்டுத் தப்பித்துவிட்டான். அந்தக் கோட்டைக்குள் நுழைய வேங்கடராமன் தன் நண்பர்களுடன் போனபோது, காவலர்கள் உள்ளே விடவில்லை. சுற்றுச்சுவர் ஏறிக் குதித்து உள்ளுக்குள்ளே போய் விளையாடி, காவலர்கள் கவனித்துத் துரத்தும்போது ஊமையன் தப்பித்த சிறிய துவாரம் வழியாகவே வேங்கடராமனும் மற்ற பையன்களும் வெளியேறினார்கள்.



அப்படி வீரதீரமான செயல்களால் நண்பர்களிடையே வேங்கடராமன் புகழ் ஓங்கிற்று. எத்தனைக்கெத்தனை உற்சாகமாக விளையாட்டு இருந்ததோ, அத்தனை அளவு உறக்கமும் இருந்தது. ஒரு விசேஷத்துக்குப் போவதற்காக, அவனைப் படிக்கச் சொல்லி வீட்டில் இருக்க வைத்துவிட்டு, அவன் காவலிருப்பான் என்று வீட்டிலுள்ளவர்கள் வெளியேறினர். அவர்கள் வெளியேறியதும் வேங்கடராமன் சிறிது நேரம் படிப்பதுபோல் இருந்துவிட்டு, பிறகு புத்தகத்தை மூடி வைத்து ஜன்னல் கதவு, வாசற்கதவு, பின்கதவு எல்லாவற்றையும் தாளிட்டு மூடினான். பாய் விரித்துப் படுத்தான். உறங்கிப் போனான். விசேஷம் முடிந்து வீட்டிலுள்ளவர்கள் வந்து பல்வேறு விதமாகக் குரல் கொடுத்தும், கதவு தட்டியும், ஓசை எழுப்பியும் வேங்கடராமன் எழுந்திருக்கவில்லை.

அது மனம் ஒருமித்த உறக்கம். உடலே இல்லாத, மனமே இயங்காத ஆழ்ந்த உறக்கம். வெளியே சென்றவர்கள் ஏதோ ஒரு விதமாக வீட்டுக்குள் நுழைந்து, அவனை உலுக்கி எழுப்பினார்கள்.

உடம்பு எடுத்த காரணத்துக்காக உறங்க வேண்டிய நேரத்தையெல்லாம் இளமையிலேயே ஒட்டுமொத்தமாய் உறங்கிவிட்டு, ஒரு குறிப்பிட்ட வயதுக்குப் பிறகு உறங்காமலேயே அறிதுயிலில் ஆழ்ந்து கிடக்கின்ற அற்புதம் நிகழப் போகிறது என்பது யாருக்கும் தெரியவில்லை.

'கும்பகர்ணா', 'தூங்குமூஞ்சி' என்று அந்தச் சிறுவனைக் கடிந்து கொண்டார்கள். தூக்கம் வீட்டில் மட்டுமல்ல; வகுப்பறையிலும் வந்தது. தூங்கினால் காது திருகி, தலையில் குட்டி, ஆசிரியர் எழுப் புவார், அவமானப்படுத்துவார் என்பதால், குடுமியின் நுனியில் நூல் முடித்து, அந்த நூலை எடுத்து சுவரிலுள்ள ஆணியில் மாட்டிவிட்டு வேங்கடராமன் படித்துக்கொண்டிருப்பான். தூங்கி வழிந்தால், சட்டென்று குடுமி

இழுபடும். விழித்துக்கொள்வான். எப்போது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் தூங்க முடியும் என்கிற வரப்பிரசாதம் இளம் வயதில் அவனுக்கு இருந்தது.

திண்டுக்கல்லில் இருந்தபோதுதான், வேங்கடராமன் தன் தந்தையை இழந்தான். திண்டுக்கல்லிலிருந்து திருச்சுழி வந்து மரணப் படுக்கையில் இருந்த தந்தையைச் சந்தித்தான். தந்தையின் மரணம், அந்தத் தாக்கம் அவனுக்குள் ஆழ்ந்த விளைவுகளை ஏற்படுத்தியது. தந்தையின் அகால மரணம் குடும்பத்தைச் சிதறடித்தது.

தாய் திருச்சுழியிலும், அண்ணனும் தங்கையும் பெரியப்பா வீட்டிலும், நாகசுவாமி என்கிற தமையனும் வேங்கடராமனும் மதுரையிலுள்ள சித்தப்பா சுப்பையர் வீட்டிலும் தஞ்சம் புகுந்தார் கள். சித்தப்பாவும் சித்தியும் மிக ஆதரவாகக் குழந்தைகளை அரவணைத்துக் கொண்டார்கள்.

ஆனால், எவர் ஆதரவுமின்றி இறை மட்டுமே துணையாக வேங்கடராமன் வாழப் போகிறான் என்று அப்போது எவருக்கும் தெரியவில்லை.

மதுரை பிரமாண்டமான நகரம். கிராமத்திலிருந்து அங்கு தஞ்சம் புகுந்த வேங்கடராமனும் நாகசுவாமியும் மதுரையை விழிகள் விரியப் பார்த்தார்கள். எப்போதும், எல்லா இடத்திலும் ஜனக்கூட்டம் இருப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டார்கள்.

அங்கு ஸ்காட் உயர்நிலைப்பள்ளியில் சிறிது காலமும், அமெரிக்கன் மிஷன் பள்ளி யில் சிறிது காலமும் படித்தான் வேங்கடராமன்.

சொக்கப்ப நாயக்கத் தெருவில், தெற்கு கோபுர வாசலுக்கு மிக அருகில் அவர்கள் வீடு இருந்தது. வீட்டின் மேல் மாடியிலிருந்து பார்த்தால் கோபுரம் தெரியும்.


மாட்டு வண்டிகளும், குதிரை வண்டிகளும், நடமாடும் பலகாரக் கடைகளுமாக ஊர் அமர்க்களப்பட்டது. கோயிலின் நீளமும், அகலமும், சிற்பங்களும், சித்திரங்களும், தோரணங்களும், வண்ண விளக்குகளும் எல்லோரையும் வியக்க வைத்தன.

மீனாட்சி அம்மன் கோயிலில் தினம் தினம் ஏதேனும் ஒரு கொண்டாட்டம் இருந்தது. மீனாட்சி அம்மன் கோயில் மட்டுமல்ல; சுற்றி பல்வேறு கோயில்கள் இருந்தன. தொலைவில் உள்ள அழகர்மலையில் மிக அழகிய பெருமாள் கோயில் இருந்தது. ஜனங்கள் திரளாக மலையேறிச் சென்று, சுவாமி தரிசனம் செய்வார்கள். அழகர்கோயில் பிரசாதமான சர்க்கரைப் பொங்கல் அமிர்தமாக இருக்கும்.

கள்ளழகருக்கு அபிஷேக ஆராதனை செய்யப்போகும் அறிந்தவர் தெரிந்தவர் களோடு, பிரசாதம் கிடைக்கும் என்ற ஆசையில் வேங்கடராமனும் போனான். இரவு நேரத்தில் திரும்பி வருகிறபோது, சர்க்கரைப்பொங்கல் தூக்கை திடகாத்திரமாக இருந்த வேங்கடராமனின் தலையில் வைத்துவிட்டார்கள். இருட்டில் தட்டுத் தடுமாறியபடி, தூக்கு நிறைய இருந்த சர்க்கரைப் பொங்கலை கழுத்து வலிக்கத் தூக்கிக்கொண்டு வந்தான் வேங்கடராமன். கீழே இறக்கி வைத்துக் கழுத்தைத் தடவிப் பார்த்தபோது, கழுத்து வீங்கியிருப்பது தெரிந்தது.

'பிரசாதம் வேண்டும் என ஆசைப்பட்டேன் அல்லவா... பகவான் கழுத்தை வீங்க வைத்துவிட்டார். படு, நன்றாக அவஸ்தைப்படு' என்று தன்னைத்தானே வேங்கடராமன் கடிந்துகொண்டான். மறுபடியும், சர்க்கரைப் பொங்கல் தூக்கைத் தலையில் தூக்கி வைத்துக்கொண்டு, மதுரை வரை வந்தான். அந்தச் சர்க்கரைப் பொங்கலை யார் அபிஷேக ஆராதனை செய்தார்களோ, அவர்கள் அதை வேலைக்காரர்களுக்கும் பகிர்ந்து கொடுத்தார்கள். வேங்கடராமனுக்கும் ஒரு பங்கு கிடைத்தது.

அண்ணா நாகசாமி, பெரிய பையன். அவன் தன்னொத்த வயதுப் பிள்ளைகளோடு விளையாடுவான். அப்போது வீட்டுக்குக் காவல் வேங்கடராமன்தான். அண்ணா படிக்கப் போய்விட்டால், வேங்கடராமன் தன் நண் பர்களுடன் மாரியம்மன் கோயிலுக்கு நீச்சல் அடிக்கப் போவான். நண்பர்கள் யாரும் இல்லையெனில், கோயிலைச் சுற்றி வரு வான். படிப்பு தவிர, மற்ற எல்லா விஷயங்க ளிலும் அவனுக்கு ஆர்வம் இருந்தது. ஆனால், படிப்புதானே முக்கியம். குமாஸ்தா வாகி நாலு காசு சம்பாதித்தால்தானே, பசி இல்லாமல் காலம் கழிக்க முடியும்.



ஒரு முறை அண்ணா விளையாடப் போயிருந்தபோது, வேங்கடராமனுக்குப் பெரியபுராணப் புத்தகம் படிக்கக் கிடைத்தது. உரைநடை கடினமாக இருந்தது. ஆனாலும், உள்ளேயிருந்த விஷயங்கள் சுவாரஸ்யமாக இருந்தன.

'என்ன இது... சின்னக் குழந்தையாக இருக்கும்போதே பாட்டுப் பாடிவிட்டாரா. 'தோடுடைய செவியன் விடையேறி யோர் தூவெண் மதி சூடி...' திருஞானசம் பந்தருக்கு எப்படிப் பாட்டு வந்தது. அந்தக் குழந்தைக்கு மட்டும் சிவனும் பார்வதியும் தோன்றிப் பால் கொடுப்பானேன். என்ன ஆச்சரியம், என்ன பாக்கியம்,' - வேங்கட ராமன் திரும்பத் திரும்பப் படித்துப் பரவசமானான்.

பெற்ற மகளுக்குத் திருமணம். வாசலில் ஒரு சிவயோகி வந்து நிற்கிறார். 'இன்று என்ன விசேஷம்' என்று கேட்கிறார். 'என் மகளுக்குத் திருமணம்' என்று பூரிப்புடன் சொல்லும் தந்தை, மணமகனையும் மணமகளையும் வரவழைத்து, சிவயோகியை வணங்கும்படி செய்கிறார். அவர்களை ஆசீர்வதித்த அந்தச் சிவயோகி, மணமகளின் தலையில் உள்ள நீண்ட கூந்தலைப் பார்த்துவிட்டு, "அடடா... எவ்வளவு நீண்ட கூந்தல். இதை எனக்குக் கொடுப்பீராயின், பூணூலாகத் தரித்துக்கொள் வேனே' என்கிறார். 'ஆஹா... சிவயோகிக்குக் கொடுப்பதைவிட மிகப் பெரிய பாக்கியம் உண்டா' என்று சொல்லி, மகளை உட்கார வைத்து, அவள் தலையை மழுங்கச் சிரைத்து, அலங்காரம் செய்யப்பட்ட அவளின் தலை முடியை சிவயோகிக்குத் தருகிறார் தந்தை.

சிவயோகியாக வந்தது சாட்சாத் சிவனே. சிவயோகி மறைந்து, சிவன் காட்சியளிக்க, மணமகளின் தலைமுடியும் பழையபடியே வளருகிறது. சுற்றி யிருந்த அத்தனை பேரும் பெரும் பேறு பெற்றார்கள்.

வேங்கடராமனுக்கு அழுகை வந்தது. என்ன மனம் அது. தனக்கென்று எதையும் வைத்துக்கொள் ளாத மனம். எப்படி அது இவர்களுக்கு வாய்த்தது.

பசு மாடுகள் மேய்க்கச் சொன்னார்கள். சண்டேஸ்வர நாயனார் மேய்த்தார். புல்வெளியில் சிவலிங்கம் அமைத் தார். மாட்டின் பால் கறந்து அபிஷேகம் செய்தார். மனம் நிறைவு பெறாதிருந்தது. இன்னொரு மாட்டின் பால் கறந்து அபிஷேகம் செய்தார். இப்படியே, எல்லா மாடுகளின் பாலையும் சிவனுக்கு அபிஷேகம் செய்து விட்டார். பால் இல்லாமல் கறவைகளின் சொந்தக் காரர்கள் கூவினார்கள்.

ஒருநாள், அவருடைய தந்தை வந்து ஒளிந்திருந்து பார்த்தார். பிள்ளை கறவை மாடுகளை இழுத்து வந்து பால் கறப்பதைப் பார்த்துக் கோபப்பட்டார். பிரம்பெடுத்து பிள்ளையை விளாசித் தள்ளினார். பிள்ளை பொறுத்துக்கொண்டான்.

'என்னடா இது. இதான் சாமியா? இதான் சிவ லிங்கமா' என்று தந்தை காலால் சிவலிங்கத்தை எட்டி உதைக்க முற்பட்டபோது, பிள்ளை தன் கையிலிருந்த மழுவால் ஓங்கி ஒரே போடு போட்டான். தந்தையின் கால் துண்டானது.

'எனக்குத் தகப்பன் நீங்கள். என்னைக் கொலை செய்தாலும், பொறுத்துக்கொள்வேன். ஆனால், என் சுவாமியை நிந்திக்க எவருக்கும் அதிகாரமில்லை. தந்தையே ஆனாலும் தண்டிப்பேன்' என்று சீறி எழ, சிவபெருமான் தோன்றினார். நாயனாரை அமைதிப் படுத்தினார்.

வேங்கடராமன் படித்த கதைகளில் மிக அற்புதமானது, கண்ணப்ப நாயனார் கதைதான். திண் ணன் என்னும் வேடன் பன்றியைப் பின்தொடர்ந்து ஓடி, அடித்துக் கொன்று மாமிசமாக்கி, நண்பர்க ளோடு பங்கு போட்டுக்கொண்டிருந்த நேரத்தில், மலை மீது ஏதோ இருக்கிறதே என்று ஈர்க்கப்பட்டு அங்கே போனான். அங்கு சிவலிங்கம் இருப்பதைக் கண்டான். "தனித்திருக்கிறீரே ஐயா. பசித்திருக் கிறீரே!" என்று அவரை ஆரத் தழுவிக்கொண்டு, அவர் குடிப்பதற்கு நீரும், உண்பதற்குப் பன்றி மாமிசமும் கொண்டு வந்தான். தன் தலையில் சூடியிருந்த மலர்களை சிவனுக்குச் சூட்டி, வாயில் உள்ள நீரை உமிழ்ந்து, பன்றி மாமிசம் படைத்து, "உண்ணுக, உண்ணுக" என்று கெஞ்சினான்.

மறுநாள், அங்கு பூஜை செய்யும் அந்தணர் வந்து பார்த்து அதிர்ந்தார். மாமிசம் படைத்தவனைத் திட்டியபடியே இடத்தை சுத்தம் செய்தார். பின்பு, வில்வ இலைகளால் பூஜை செய்துவிட்டுக் கிளம் பினார். அவர் போன சிறிது நேரத்தில், திண்ணன் வந்தான். 'இதென்ன இலைக் குப்பை. நேற்று நான் படைத்த மாமிசம் எங்கே... சிவன் தின்றுவிட் டாரா. அல்லது, வேறு யாரேனும் எடுத்துப் போய்விட்டார்களா' என்று பதைபதைத்தான்.



'அதனாலென்ன, மீண்டும் கொண்டு வருவேன்' மறுபடியும் மாமிசப் படையல் நடக்கிறது; மீண் டும் அது எரிச்சலோடு சிவாச்சார்யரால் சுத்தம் செய்யப்படுகிறது. வில்வ இலை அர்ச்சனை நடக் கிறது. 'யார் இந்தக் குப்பையைப் போட்டது' என்று கடிந்துகொண்டு, வில்வ இலைகளை அகற்றிவிட்டு, திண்ணன் மீண்டும் மாமிசம் கொண்டு வர... அங்கே ஓர் அற்புதம் நிகழ்கிறது.

'யார் இப்படி தினம் தினம் சிவலிங்கத்துக்கு மாமிசப் படையல் செய்வது' என்று சிவாச்சார்யர் மறைந்திருந்து பார்த் துக்கொண்டிருந்த நேரத்தில், சிவலிங் கத்தின் ஒரு கண்ணிலிருந்து ரத்தம் வந்தது. கண்ணுக்குக் கண்ணே மருந்து என்று திண்ணன், தன் கண்ணைக் கூரிய அம்பால் குத்தி யெடுத்து, ரத்தம் வரும் சிவலிங்கக் கண்ணில் அப்ப, இப்போது மறு கண்ணிலும் ரத்தம் வருகிறது.

'என் கைவசம்தான் மருந்து இருக் கிறதே' என்று நினைத்த திண்ணன், 'அது சரி, இன்னொரு கண்ணையும் பிடுங்கிவிட்டால், நான் முழுக் குருட னாகி விடுவேனே. அப்புறம் எப்படி, ரத்தம் வழியும் கண்ணில் அதை அப்புவது' என்று யோசித்தான். பின்பு சற்றும் தயங்காமல், தன் காலைத் தூக்கிச் சிவலிங்கத்தின்மீது வைத்து, கால் கட்டை விரலை சிவலிங்கத்தின் கண் இருக்கும் இடத்தில் அடையாளமாக வைத்துக்கொண்டான். பின்பு, தன் மற்றொரு கண்ணையும் பெயர்த்தெடுக்க அம்பைச் சொருக முனைந்தான். அடுத்த கணம், சிவலிங்கத்திலிருந்து ஒரு கை வெளிப்பட்டு, "நில்லு கண்ணப்ப" என்று அவனைத் தடுத்தாட்கொண்டது. ஈசன் வாயால் 'கண்ணப்பா' பட்டம். அந்தணர் பார்க்க, அந்த அற்புதம் நடந்தது.

இந்தக் கதையைப் படித்து முடித்ததும், வேங்கட ராமன் நெஞ்சில் புத்தகத்தைக் கவிழ்த்துப் போட்டுக்கொண்டு 'ஹா'வென்று கிடந்தான். கடவுளுக்கு முன் எந்தச் சாதியுமில்லை; எந்த பேதமுமில்லை. உண்மையான அன்பு யாரிடம் உள்ளதோ, அவரே உயர்ந்தவர். வெறும் நாடகத் தனமான பூஜைகள் கடவுளுக்குத் தேவையில்லை. தன்னை யார் சமர்ப்பணம் செய்கிறார்களோ, தன் அகந்தையை

விட்டொழித்து யார் சரணாகதி அடைகிறார்களோ, அவரைத்தான் இறைவன் ஆட்கொள்கிறான். அவருக்குத்தான் ரிஷபாரூடராகக் காட்சியளிக்கிறான்.

'இது முடியுமா. என்னால் என்னை சிவனுக்குத் தர முடியுமா. இதைப் பற்றி யாரிடம் கேட்பது. அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிவன் காட்சியளித்திருக்கிறாரே, எனக்குக் காட்சி யளிக்கமாட்டாரா... நான் என்ன செய்கிறேன்... வெறுமே கோயிலுக்குப் போய் விபூதியும் குங்கு மமும் இட்டுக்கொண்டு வந்துவிடுகிறேன்.

ஒருமுறையாவது சுவாமியை உற்றுப் பார்த்தது உண்டா... கை கூப்பி, என்ன வேண்டும் என்று கேட்டதுண்டா... எல்லா இடத்திலும் ஒரு அவசரம்; ஒரு அசமந்தம். எனக்கு ஏன் இந்த ஈடுபாடு வரவில்லை' மருகி மருகித் தவித்தபோதுதான் அந்த மரண அனுபவம் ஏற்பட்டது.

பெரிய புராணத்தின் தாக்கம், அப்பாவின் மரணம், தான் எதற்கும் லாயக்கற்றவனோ என்ற அச்சம்... தான் யார் என்ற வினா, பதினாறு வயது இளைஞனுக்குத் தோன்றி எழுந்தது. வேங்கடராமன் மரணம் பற்றி யோசித்தான்.

உயிருள்ளபோதே மரணத்தை அனுபவித்தான். எதை அறிந்தால் அறிவோ, அதை அறிந்தான்; எதை அடைந்தால் உயர்வோ, அந்த உயர்வை எட்டினான்.

இந்த மரண அனுபவத்துக்குப் பிறகு, என்ன செய்வது என்று வேங்கடராமனுக்குத் தெரியவில்லை.

எந்த ஒரு விஷயத்தையும் தெரிந்துகொள்வதற்கு, ஒருவருக்கு இன்னொருவருடைய உதவி தேவைப்படுகிறது. அப்படி ஒரு விஷயத்தைத் தெரிவிக்க வந்தவருக்கு 'ஆச்சார்யன்' என்றும், 'குரு' என்றும் பெயர். வித்தையைக் கற்றுக்கொடுப்பவர் ஆச்சார்யர் என்றும், ஞானத்தை உணர்த்துபவர் குரு என்றும் சொல்லப்படுகிறார். இதற்குச் சொல்லிக்கொடுக்கின்ற நபரின் அண்மை தேவைப் படுவதால், பலருக்குத் தந்தையே ஆச்சார்யனாகவும், குருவாகவும் விளங்குகிறார்.

ஆனால், வேங்கடராமனுக்குத் தந்தை இல்லை. அவர் இழப்பினாலேயே குடும்பம் கலைந்து, வெவ்வேறு இடங்களுக்குப் பிரிந்தது. பதினாறு வயது இளைஞனுக்கு மூத்த சகோதரனே வழிகாட்டியாக இருக்கவேண்டுமென்ற நிர்பந்தம் ஏற்பட்டது. தம்பியை நல்லவிதமாகப் படிக்க வைத்து, உத்தியோகத்தில் அமர்த்தும் பொறுப்பு தனக்கு இருக்கிறது என்று வேங்கடராமனின் அண்ணா நாகசாமிக்கு திடமாகத் தோன்றியது. எனவே, வேங்கடராமனின் நடவடிக்கைகள் அவரால் கவனிக்கப்பட்டன; அடிக்கடி சுட்டிக்காட்டிச் சீர்திருத்தப்பட்டன. இது வேங்கடராமனுக்கு இடைஞ்சலாக இருந்தது. வழிகாட்ட எவரும் இல்லை; ஆனால், கண்டிக்கத் தமையன் உண்டு என்கிற நிலை, யோசித்துப் பார்த்தால் மிகக் கடினமானது.

சாதாரண பாடப் புத்தக சந்தேகங்களை எவரிடத்தேனும் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியும். ஆனால், மரணம் பற்றிய கேள்வியையும், மரணம் பற்றிய விசாரம் தனக்குள் விளைவித்த அதிசயத்தையும் எங்கே போய், யாரிடம் பகிர்ந்துகொள்வது. அப்படிப் பகிர்ந்துகொண்டால், கேலி செய்யாமல் விடுவார்களா. அப்படிக் கேலி செய்து, அந்த கேலி தனக்கும் தொற்றிக்கொண்டால், தனக்குத் தெரிந்த ஓர் அற்புதத்தைத் தானே தன்னையறியாமல் இழிவுபடுத்தி விட்டால் என்ன ஆவது என்று வேங்கடராமன் பயந்தான்; எனவே, தனது அனுபவத்தை எவரிடமும் சொல்லாமல் அமைதியாக இருந்தான்.

மனித மனம் என்பது, எப்போதும் வெளிப்புறம் வேடிக்கை பார்ப்பது; அப்படிப் பார்த்ததை இன்னும் பெரிதாக உள்ளே கற்பனை செய்துகொள்வது. மனிதருக்குள் உலக விவகாரங்கள் இப்படித்தான் சிக்கிக் கொண்டு விதம்விதமாக பூதம் காட்டுகின்றன. மனம் கடும் சிக்கலுக்கு ஆளாகிறது.

வேங்கடராமனின் பார்வை வெளியில் போகாது உள்ளுக்குள்ளே தங்கிவிட்டது. அந்த அனுபவத்துக்குப் பிறகு, மரணம் பற்றிச் சிந்தித்து, எது இறக்கிறது என்ற கேள்வி கேட்டு, எது இறக்கவில்லையோ அதை தரிசனம் செய்த பிறகு, அதை நன்றாக உணர்ந்து அனுபவித்த பிறகு... மனம் வெளியே போய் எந்த விவகாரத்திலும் சிக்கிக்கொள்ளாமல் திரும்பத் திரும்ப எதைப் பார்த்தானோ, எதை உணர்ந்தானோ, எது உள்ளே அசையாது, எந்தவித குணமும் இல்லாது இருக்கிறதோ அதை வலுவாகப் பற்றிக் கொண்டது.




இதை வேங்கடராமனுக்கு யார் சொல்லிக் கொடுத்தார்கள்.
வேங்கடராமனுக்குக் 'குரு' என்று யாருமில்லை. தெய்வத்தையும் கை கூப்பி, 'இது வேண்டும்' என்று அவன் கேட்கவில்லை.

வெறுமே 'தான் யார்' என்று விசாரித் தான். உண்மையாக விசாரித்தான். சத்தியமான கேள்வியைக் கேட்டான். மிக சத்தியமாகத் தனக்குள் என்ன நடக்கிறது என்பதை முழு முனைப்புடன் சிந்தாமல் சிதறாமல் பார்த்தான். இது மிகப்பெரிய கொடுப்பினை; பூர்வஜென்ம வாசனை; பேரறிவாளனின் பேரருள்.

திருஞானசம்பந்தருக்கு அம்பாளிடமிருந்து கிடைத்த முலைப்பால் பிரசாதம் இப்படித்தான் இருந்திருக்குமோ என்று தோன்றுகிறது.

உண்மையைப் பற்றி நிற்க, உள்ளே வெண்மை பரந்து பெருகும். எல்லா நிறத்துக்கும் ஒரு குணம் உண்டு. வெண்மைக்குக் குணமில்லை. எந்தக் குணமுமில்லாது வெறுமே நிற்கிறபோது, வெண்மை முழுவதுமாக ஆக்ரமித்துக்கொள்ளும்.

திருஞானசம்பந்தருக்குக் குளத்தில் மூழ்கிய தகப்பனைக் காணோம் என்றதும் உள்ளுக்குள்ளே ஏற்பட்ட அதிர்ச்சி, இந்த உண்மையை, வெண்மையைக் கொடுத்திருக்கக் கூடும்.



தான் யார், தான் இறந்த பிறகு என்ன என்று ஒரு சிறிய அறைக்குள் மல்லாந்து படுத்த வேங்கடராமனுக்குள், உண்மையின் காரணமாக இந்த வெண்மை இறங்கிற்று. எப்போதோ நட்ட விதை முளைத்து மரமாய்க் கிளை பரப்பி, 'நட்டது நான்தான்' என்பது மறந்து போயிருக்கும் போது, மடியிலே விழுந்த கனி.

உள்ளுக்குள் ஒருவர் பார்த்தால் வெளி விவகாரங்களில் ஈடுபட முடியாதா. முடியும். உண்ணவும், உடுக்கவும், உறங்கவும் முடியும். ஆனால், இவை அனைத்தும் வேறு விதம். உண்ணும் உணவைக் கண் பார்த்து, மூக்கு முகர்ந்து, நாவில் ஜலம் ஊறி, வயிறு பசித்து உண்பது என்பது வெளித்தோற்றம். என்ன உண்ணுகிறோம் என்ற பிடிப்பின்றி ஓர் உணவை உட்கொள்வது என்பது ஒரு விதம்.

மனம் மனதைப் பற்றிக்கொள்ள, மற்றவை மறந்து போகும். மானத்தை மறைக்க ஏதோ உடுத்திக் கொள்ளுமே தவிர, அது அலங்காரம் காட்டாது. 'என்ன அழகு' என்று தன்னைப் பார்த்து வியக்காது; மற்றவர் முன் அலட்டாது.

அந்த உறக்கம் வேறு வகையானது. உடம்பு தூங்கினாலும் உள்ளம் விழித்திருக்கும். தன்னையே பார்த்திருக்கும். தூங்கும்போது தன் நிலை என்ன என்று இன்னும் தீவிரமாகத் தேடிக் கண்டுபிடிக்கும்; அனுபவிக்கும். அப்படிச் செய்வதால் வெளி நடவடிக்கை என்னவாகும். மனம் மெள்ள மெள்ளத்

தளர்ந்துபோகும். மற்றவரை விட்டு விலகி நிற்கும். எந்த விஷயங்களிலும் ஆர்வம் காட்டாமல், அலட்சியம் செய்யாமல் ஒரு மிதமான போக்கையே கைக்கொள்ளும்.

வேங்கடராமன் எப்போதும் தனிமையை நாடினான். விளையாடுகின்ற ஆசை விலகியது. அந்த விளையாட்டில் வெறித்தனமாகப் போராடி ஜெயிக்கவேண்டுமென்ற மும்முரம் முற்றிலும் ஒழிந்தது. எல்லா முனைப்புகளும் உள்முகமாயின. அவன் ஏகாந்தமாக இருக்க விரும்பினான். ஆனால், உலகம் விடுமா. உலகம் விவகாரங்கள் மிக்கது.

"படி! பாடப் புத்தகங்களை எடுத்துப் படி. அதுக்குத்தானே பிறந்திருக்கே!" - அண்ணா கடுமையாகக் கோபித்துக் கொள்வார். 'அப்படியா' என்ற கேள்வி வேங்கடராமனுக்குள் எழுந்தது. 'இதற்குத்தானா பிறந்திருக்கிறோம்!' என்ற ஆச்சரியம் பெரிதாகியது.

வேறு வழியில்லாமல் மற்றவர்களுக்காகப் புத்தகத்தைப் பிரித்து வைத்துக்கொள்வான். மனம் புத்தகத்தில் லயிக்காது; புத்தகத்தின் விஷயங்களை உள்வாங்காது. அது, உள்ளுக்குள்ளே தன்னைப் பார்த்துக் கொண்டிருக்கும்.

"தெருமுனைக் குழாய்க்குப் போய் இரண்டு தவலை தண்ணீர் எடுத்துண்டு வாடா!" - சித்தி அழைப்பாள்.

முன்பு, வேங்கடராமன் இதற்காகச் சலித்துக் கொண்டது உண்டு; கோபித்துக்கொண்டது உண்டு. 'என்னை மட்டும் வேலை வாங்கறியே' என்று சித்தியைக் கடிந்துகொண்டது உண்டு. ஆனால், இப்போது அப்படியில்லை.



தவலையைத் தூக்கிக்கொண்டு நிதானமாகத் தெருக்கோடிக்குப் போய், தண்ணீரை நிரப்பித் தோளில் வைத்துக்கொண்டு, வீட்டுக்கு வந்து, பெரிய அண்டாவில் ஊற்றி, மறுபடியும் போய் இன்னொரு தவலை சுமந்து... இப்படி இரண்டு, மூன்று தவலைகள் தண்ணீர் எடுத்து வந்து அண்டாவை நிரப்பி, தவலையையும் நிரப்பிக் கீழே வைத்துவிட்டு, மறுபடியும் புத்தகத்தோடு உட்காருவான்.

பகல் முழுவதும் அலைந்ததால் உண்டான அயர்ச்சி மேலிட, உடம்பைத் தரையில் கிடத்துவான். மனம், கிடத்தப்பட்ட உடம்பை வேடிக்கை பார்க்கும். அது உறங்காமல் உள்ளுக்குள்ளே எப்போதும் விழித்துக்கொண்டு இருக்கும். உடம்பு நன்றாக ஓய்வெடுத்தது. உள்ளம் அமைதியாக, எந்த உணர்வுமற்று, விழிப்பு நிலையில் இருந்தது. உள்ளத்தில் நல்ல உள்ளம் உறங்காது.

பள்ளிக்குப் போகும்போது, ஆகாயத்தின் பிரமாண்டம் மனதைக் கவரும். எல்லாப் புராணங்களும் 'கடவுள் ஆகாயத்தில் தோன்றினார்' என்றுதானே சொல்கின்றன! இப்போது வரமாட்டாரா, வந்து எதிரே நிற்கமாட்டாரா, 'ரிஷபாரூடராக...' என்று பெரிய புராணம் அடிக்கடி சொல்கிறதே.. அப்படி, ரிஷபத்தின் மீது அம்மையோடு வந்து நின்று, 'வேங்கடராமா' என்று கூப்பிடமாட்டாரா, 'என்ன' என்று நாம் அவரிடம் ஓடமாட்டோமா என்று உள்ளே மனம் ஏங்கும்.

கோயிலுக்குள் போய் சந்நிதியில் நிற்கும்போது... வெறுமே விபூதி, குங்குமம் இட்டுக்கொண்டு அடுத்த சந்நிதிக்குப் போகவேண்டும் என்கிற மனதின் பரபரப்பு அடங்கிப் போயிற்று. கோயில் என்பது வேகமாகவோ வேடிக்கையாகவோ சுற்றுகிற இடமில்லை. சரியான மனநிலையில், சரியான இடத்தில் இருந்து, சரியானபடி தரிசனம் செய்தால், உள்ளுக்குள் இறை ஈடுபாடு கூர்மையாகும். பிரதிமை நடராஜரோ, அம்பாளோ யாராக இருந்தாலும், அந்தப் பிரதிமையின் மேன்மை, அது சொல்லும் விஷயம் நெஞ்சுக்குள் 'குபுக்'கென்று பற்றிக் கொள்ளும். கால் தூக்கி ஆடுகின்ற களி நடனம் என்னவென்று தெரியும். எல்லையில்லா ஆனந்தத்தை ஒரு சிற்பி இப்படித்தான் வடிக்கமுடியும் என்பது புரியும்.

மனம் மனதோடு பேசுவதுகூட ஒரு கூடல்தான்; மூச்சு உள்ளே புகுந்து வெளியே வருவதும் ஒரு கூடல்தான்; பார்வை ஒன்றின்மீது பட்டு ஒரு விஷயம் புரிவதும் கூடல்தான்; இரண்டு பேர் பேசுவதும் கூடல்தான்; வணக்கம் சொன்னாலும் கூடல்தான். வெயிலிலிருந்து மர நிழலில் ஒதுங்குவது, குளிரிலிருந்து வெப்பத்துக்குப் போவது எல்லாமே கூடல்தான். இதை எப்படிச் சொல்ல; எந்த வார்த்தையில் விவரிக்க!

ஆவுடையாரும் லிங்கமும் ஓர் அடையாளம்தான்; உலகம் முழுவதும் கூடிக்கூடி இடையறாது ஒன்றோடு ஒன்று கலந்துகொண்டிருக்கிற விஷயம் என்பதைச் சொல்லத்தான் இந்தப் பிரதிமை.

இந்த நினைப்பு உள்ளுக்குள்ளே தோன்ற, மனம் பரிதவித்து எழும். 'வா! வந்து என்னுள் புகுந்துகொள். என்னை ஆட்சி செய். என்னை மயக்கித் தனியே பித்தனாக விடாதே! என்னை முழுவதுமாகத் தின்று தீர்த்துவிடு' என்று கதறும். கண்ணீர் பெருகும். கைகூப்பி விம்மி விம்மி அழும்.

எதிரே, மீனாட்சி அம்மன் கோயிலில் உள்ள சந்நிதிகளில்... வேங்கடராமன், உள்ளேயிருந்த 'தான்' என்ற இடத்திலிருந்து 'கடவுள்' என்ற இடம் நோக்கிக் கதறினான். அது அவலமான அழுகையில்லை; ஆனந்தக் கண்ணீருமில்லை. அது தானற்றுக் கிடக்கும்போது ஏற்படுகின்ற நிகழ்ச்சி; தானே எல்லாமுமானபோது ஏற்பட்ட பரவசம்.

நான் நீ, அது இது என்று எதிரும் புதிருமாய்ப் பிரித்து வைத்து இருப்பவருக்கு இது புரியாது; தன்னைக் காணாமல் போக்கிய வருக்கு எல்லாமும் தானென்று புரியும். இங்கேயிருந்து எதிர்ப்பக்கம் பார்ப்பதுபோல, எதிர்ப்பக்கத்திலிருந்தும் தன்னைப் பார்க்க முடியும். எல்லாப் பக்கத்திலிருந்தும் தன்னை அவதானிக்க முடியும்.

அப்படிப் பார்க்கிறபோது, தான் எந்தவிதத்திலும் முக்கியமில்லை; இருப்பு என்பது இந்த உடலல்ல; தான் என்பது ஆத்மா; அது எதிலும் நிறைந்திருக்கிறது; எல்லா இடத்திலும் நிறைந்திருக்கிறது; எல்லாமுமாய் இருக்கிறது என்பது தெள்ளத் தெளிவாக, பரம சத்தியமாகத் தெரியும். அப்படித் தெரியவருகிறபோது ஏற்படுகிற தனிமை, ஒரு குழந்தைத்தனமான மிரட்சியைக் கொடுக்கும்.

எப்போதும் வாய்பிளந்து கிடக்கும் குருவிபோல, கட்டுத் தறிக்குக் கட்டுப்பட்டுத் தலைகுனிந்திருக்கும் எருது போல, கடும்வெயிலில் சிறிய மர நிழலில் தூங்குகின்ற சிங்கம் போல, மலை இடுக்கில் ஈரம் படர்ந்த இடத்தில் சுருண்டு அசையாது கிடக்கின்ற பாம்பைப்போல மனம் பேரமைதியுடன் காணப்படும்.

இப்படி மாறிய மனம், என்ன பாடம் படிக்கும்..? ஆரவாரமான இந்த உலகுக்கு நடுவே நின்று, எந்த ஆரவாரமும் இல்லாமல் அமைதியாக தனக்குள்ளே, தான் மூழ்கிக் கிடப்பது என்பது ஒருவித அவஸ்தை.


இறந்த பிறகு உயிர், வைதரணி நதி என்கிற ஒரு வெந்நீர் ஆற்றைக் கடக்கவேண்டியிருக் குமாம். கடக்கும் நேரம் அந்த உயிர் பேரவஸ்தைப்படுமாம். உலகத்தில் வாழும்போதுதான் ஒரு கொதிப்பில் கிடக்கிறேன் என்றால், உலகத்தை விட்டு வெளியே வந்த பிறகும் இந்தக் கொதிப்பிருக்கிறதே என்று தளருமாம்; தள்ளாடுமாம்.

'தான்' என்ற நினைப்பை விட்ட ஞானியின் நிலையும் இப்படித்தான் அவஸ்தையானது. வேங்கடராமன் இந்தப் பேரவஸ்தையை அனுபவித்தான்.

எவ்வளவு காலம் இந்த ஆரவாரத்துக்குள் தன்னை உணர்ந்த ஒரு ஆத்மா ஜீவித்திருக்க முடியும். இந்த உலகாயதமான ஒரு வாழ்க்கையை உதறுவதற்கு உண்டான நேரத்தை அது எதிர்பார்த்துக் கொண்டிருக்கும்; தனக்குள் தயாராகிக்கொண்டிருக்கும்.

அந்த வேளை வேங்கடராமனுக்கும் வந்தது.

ஆங்கில இலக்கணத்தை மனப்பாடம் செய்யும்படி பள்ளியில் கட்டளையிட்டிருந்தார்கள். மனம் ஏற்கெனவே பதமாகயிருந்ததால், இலக்கணத்தை மனப்பாடம் செய்ய விரும்பவில்லை; செய்யவில்லை.



ஏன் செய்யவில்லை என்று காரணம் கேட்டுக் கடிந்து, நிச்சயம் செய்தாக வேண்டும் என்று சொல்லி, மூன்று முறை அந்த ஆங்கில இலக்கணப் பாடத்தை எழுதி வரும்படி பள்ளி கட்டளையிட்டது.

உலக வாழ்க்கையில் சரியாக இருக்கின்ற இலக்கணம், உள்முக வாழ்க்கையில் மிகப் பெரிய தவறாகத் தெரியும். ஒருமை எப்படிப் பன்மையாக முடியும். நான் என்பது இல்லாவிட்டால், நீ என்ற வார்த்தைக்கு அர்த்தமென்ன. இது மிகப் பெரிய இலக்கணப் பிழையல்லவா.

பாடமாய்க்கூட அதை வேங்கடராமனால் படிக்க முடியவில்லை. பள்ளியின் கடுமையை நினைத்து ஒருமுறை எழுதினான். உட்கார்ந்துகொண்டிருந்தான். தன்னையே பார்த்துக்கொண்டிருந்த கண்கள் தானாக மூடின. முதுகு நிமிர்ந்தது. தலை, முதுகு, கழுத்து, இடுப்பு ஒரே நேர்க்கோட்டில் அமைந்தது. சட்டென்று மனம் மனதைப் பற்றிக்கொண்டது. அமைதியாக நின்றது.

"தம்பி... தம்பி" - அண்ணனின் அதட்டல் குரல் கேட்டது.

"என்ன பண்ணிண்டிருக்கே... தியானமா. இலக்கணப் பாடம் யார் எழுதுவா. சிம்பிள் கிராமர். இது புரியல... உனக்கு எதுக்கு தியானம். படிச்சுப் பாஸாகி பெரிய வேலைல சேரணும்கறதை விட்டுட்டு, எதுக்கு தியானம். அப்படி தியானம் பண்ணறதா இருந்தா, உனக்கு எதுக்குப் படிப்பு. காசுக்குப் புடிச்ச கேடா?"

கொடுமையான வார்த்தைகள் வீசப் பட்டன. கண்டிக்க உரிமை உள்ள தமையன் தானே கண்டிக்கிறான் என்று சித்தப்பாவும் சித்தியும் வேடிக்கை பார்த்தார்கள். வேங்கடராமன் மனம் தளர்ந்தான்.

ஆமாம், இது தவறுதானே. இங்கேதான் வாழவேண்டுமெனில் இலக்கணப் பாடம் எழுதித்தான் ஆக வேண்டும். ஆனால், இலக்கணப் பாடம் எழுதுவதற்காகத்தான் நான் வாழ்கிறேனா. இது என்ன அபத்தம். வெளியே போனால் என்ன செய்யலாம். இலக்கணப் பாடம் எழுத வேண்டாம்; எவரோடும் பேச வேண்டாம்; எப்போதும் தியானத்தில் இருக்கலாம்; உள்ளுக்குள்ளே தோன்றிய அந்த ஒளியை மறுபடி மறுபடி இழுத்து இழுத்து இன்னும் பெரிதாக்கி, பரவெளியில் பறக்கலாம்; இன்னும் சந்தோஷத்தை அனுபவிக்கலாம். படிப்பு சந்தோஷம் இல்லை; இலக்கணம் சந்தோஷம் இல்லை; பரீட்சை சந்தோஷமில்லை; பள்ளிக்கூடம் சந்தோஷமில்லை; உத்தியோகம் சந்தோஷமில்லை.

இந்த உலகில் ஜெயிப்பது என்று நினைப் பது எல்லாம் தோல்வியே. தன்னை வெற்றி கொள்ளவேண்டும். அதுக்குத்தான் பிறவி. தன்னை அறிந்தவராலேயே தெய்வத்தை உணர முடியும்; தெய்வம் உணர்ந்த அத்தனை பேரும் தன்னை உணர்ந்தவர்; தானே அதுவாக மாறியவர்; அதுவே இறுதி; அதுவே முடிவு; அதுவே முனைப்பு; அதுவே முழுமை; அதற்காகவே முயற்சி; அதற்காகவே வாழ்தல்; அதற்காகவே இந்தப் பிறப்பு. உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் அதை நோக்கியே இருக்க வேண்டும். அப்படி இருக்க இந்த இடம் உதவாது. பெரும் சந்தோஷத்தை அனுபவிக்கிறபோது, இந்த உலகாயத விஷயங்களெல்லாம் சந்தோஷமாகக் காணப்படவில்லை. ஏற்கெனவே தாய், தந்தை என்ற கட்டுகளெல்லாம் தளர்ந்த நிலையில் இருக்கிற வேங்கடராமன் என்ற அந்த இளைஞனுக்கு, இந்த ஒரு கட்டையும் அறுத்துவிட எண்ணம் தோன்றியது.

தமையனுக்குக் கீழேயிருப்பதையும், சித்தப்பா சித்தியின் அன்பில் கட்டுண்டு கிடப்பதையும் விலக்கி விட்டோம் என்றால், தானே தன்னை இன்னும் பெரிதாக்கித் திடப்படுத்துகின்ற வழிக்குப் போகலாம்.

இந்த இலக்கணப் பாடம் ஒரு வீண். ஒருமை எப்படிப் பன்மையாகும். இது மிகப் பெரிய பொய். நான் என்ற கர்வம்

வரும்போதுதான், நீ என்கிற அலட்சியம் தோன்றும். நான் என்ற விஷயமே இல்லை. அப்படி ஒரு தன்மையே கிடையாதே. இந்த உலகம் பொய்யாய், மாயையாய் மயங்கிக்கொண்டிருக்கிறது. நான் நீ, அது இது என்று அலட்டிக்கொண்டிருக்கிறது. இது மிகப் பெரிய அறியாமை. இப்படித்தான் வாழ வேண்டும் என்றால், இதுதான் வாழ்க்கையின் இலக்கணம் என்றால், இந்த வாழ்க்கை கடும் குப்பை. சரி, இதை விட்டு எங்கே போவது. உள்ளே கேள்வி எழுந்தது.

'அண்ணாமலை' என்ற பெயர் தோன்றியது.



இதற்கு முன் வீட்டுக்கு வந்தவரிடம் எங்கிருந்து வருகிறீர்கள் என்று கேட்க, 'அண்ணாமலை' என்று சொல்ல, உடம்பில் ஒரு பரவசம் தோன்றியதே, அது மறுபடியும் நினைவுக்கு வந்தது. அண்ணாமலைக்குப் போக வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. அது எழுந்தபோதே ஆனந்தம் பொங்கியது. யாரோ மிகத் தெரிந்தவர் அங்கு இருக்கிறார்; அவரைப் பார்க்கவேயில்லை; இப்போது போய்ப் பார்க்கவேண்டும் என்ற ஆவல் கிளர்ந்தது.

ஆனால், எப்படிப் போவது. காசு வேண்டுமே. முதலில், திருவண்ணாமலை எங்கிருக்கிறது என்று தெரிய வேண்டும். மதுரையிலிருந்து திருவண்ணாமலைக்கு ரயில் மார்க்கம் தேடினான் வேங்கடராமன். அது பழைய ரயில் வரைபடம்.

திருவண்ணாமலைக்கு ரயில் வந்துவிட்டது. திண்டிவனம்தான் திருவண்ணாமலைக்கு அருகே இருக்கிற ஊர் என்று வேங்கடராமன் நினைத்துக்கொண்டு, திருவண்ணா மலைக்குப் போக எத்தனை காசு என்று கணக்கிடும்போது, 'மூன்று ரூபாய் இருக்கும்' என்ற எண்ணம் வந்தது.

சரி, மூன்று ரூபாய்க்கு என்ன வழி என்று யோசிக்கும்போது, வெளியே போய் யோசிக்கலாமே என்று தோன்றி யது. "மின்சாரம் பற்றிய தனி வகுப்பு இருக்கிறது. நான் கிளம்புகிறேன்" என்று ஒரு பொய்யைச் சொல்லிவிட்டு, வேங்கடராமன் எழுந்திருந்தான்.

"அப்படியா... கீழே பெட்டியில் ஐந்து ரூபாய் வைத்திருக்கிறேன். அதை எடுத்துக்கொண்டு போய் என் கல்லூரிக் கட்டணத்தைக் கட்டிவிடு" என்றான் அண்ணா. அண்ணாமலைக்குப் போக, காசுக்கு என்ன செய்வது என்று யோசித்தபோது, அண்ணன் மூலமாக இப்போது ஐந்து ரூபாய் கிடைத்திருக்கிறதே என்று சந்தோஷப்பட்டான் வேங்கடராமன். திண்டிவனம் போக மூன்று ரூபாய்தானே ரயில் செலவு. அது போதும் என்று நினைத்து, வீட்டை விட்டு வெளியேற முடிவு செய்து, அண்ணனுக்குக் கடிதம் எழுதினான். இந்த உலகில் எழுதப்பட்ட பல கடிதங்களில் மிகச் சுருக்கமானதும், மிகச் சுவையானதுமான கடிதம் அது. சத்தியத்தில் நனைந்த வார்த்தைகள் அவை. மூன்று ரூபாய் மட்டும் எடுத்துக்கொண்டு, மீதி இரண்டு ரூபாயுடன் தமையன் நாகசாமிக்கு தம்பி வேங்கடராமன் கடிதம் எழுதினான்.

'என் தகப்பனாரைத் தேடிக்கொண்டு, அவருடைய உத்தரவின்படி இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிட்டேன். இது நல்ல காரியத்தில் பிரவேசித்திருக்கிறது. ஆகையால், இந்தக் காரியத்துக்கு ஒருவரும் விசனப்பட வேண்டாம். இதைப் பார்ப்பதற்காகப் பணமும் செலவு செய்ய வேண்டாம். உன் சம்பளத்தை இன்னும் செலுத்தவில்லை. ரூபாய் 2 இத்தோடு இருக்கிறது. இப்படிக்கு -' என்று எழுதி, வெறும் கோடு மட்டும் கிழித்தான். பெயர் எழுதவில்லை. துண்டுக் காகிதத்தில், பென்சிலால் எழுதப்பட்ட கடிதம் அது. இந்தக் கடிதம் எவ்வாறோ மிகப் பாதுகாப்பாக வைக்கப்பட்டு, இப்போதும் ரமணாஸ்ரமத்தில் கவனமாகப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இது இறைவன் செயல். இந்தக் கடிதம் சத்தியம் என்பதை, இந்த சத்தியம் எப்போதும் அழியாது என்பதை இதன் இருப்பு காட்டுகிறது.

'தகப்பனாரைத் தேடிக்கொண்டு, நான் அவர் உத்தரவின்பேரில்...' என்று கடிதம் ஆரம்பிக்கிறது. ஒரு மனிதனால் இது நடத்தப்படவில்லை. அங்கிங்கெனாதபடி எங்கும் பிரகாசமாக இருக்கிற இறைவனால், அவன் கட்டளையால் நிகழ்ந்திருக்கிறது. எதற்காக இந்த நகர்வு என்றால், 'அவரைத் தேடிக்கொண்டு' என்று பதில் சொல்கிறது.

வீடு விட்டது ஒரு துக்ககரமான செயலா? இல்லை; மிக நல்ல காரியம். ஒவ்வொரு உயிரும், ஒவ்வொரு ஆன்மாவும் செய்யவேண்டிய காரியம். இறைவனைத் தேடல் என்பது, தேடிப்போதல் என்பது, அதற்காகப் பிரிதல் என்பது உத்தமமான விஷயம். எனவே, இந்தப் பிரிவு பற்றி எவரும் விசனப்படவேண்டாம்; இதற்காக எந்த விரயமும் செய்ய வேண்டாம்; எந்த முயற்சியும் செய்யவேண்டாம் என்பதை சூசகமாக இந்தக் கடிதம் சொல்லுகிறது.

மறுபடி திரும்பி வருதல் இல்லை என்பதை அழகாக, ஆணித்தரமாகத் தெரிவிக்கிறது. பிடித்துக் கொண்டுவர முடியாது என்பதை அந்தக் கடிதம் சுட்டிக்காட்டுகிறது. அதே நேரம், போகும் முன்பு, தான் செய்த ஒரு விஷயத்தின் விளைவு மற்றவருக்குத் துன்பமாக இருக்கக்கூடாது என்பதால், 'உன் சம்பளத்தை நான் இன்னும் செலுத்தவில்லை. ரூபாய் இரண்டு இத்தோடு இருக்கிறது' என்று மற்றவருக்கு உதவியாக, தன் நடவடிக்கையின் கடைசிப் பகுதியைச் சொல்லிவிட்டு, இப்படிக்கு என்று எழுதி, கையெழுத்திடாமல் அந்தக் கடிதம் முடிகிறது.

'*மானாபிமானம் விட்டுத் தானாக நின்றவருக்கு*' என்று ஒரு பாட்டு வரும். அப்படி நின்றவருக்குப் பெயரில்லை; விலாசமில்லை; நண்பர் இல்லை. 'நான்' என்று ஆரம்பித்த அந்தக் கடிதம், 'இது' என்று தன்னைச் சுட்டிக்காட்டி, பிறகு, எதுவுமில்லாத தன்மையாகப் படிப்படியாக வளர்ந்து, ஒரு உச்சியில் மலர்ந்து வெடித்துச் சிதறியிருக்கிறது.

'அஹம்' என்பது அழிந்து போயிருக்கிறது. அப்படிச் சிதறிய பிறகும், மிகுந்த கருணையுடன், அடுத்தவருக்கு எந்தவித இடைஞ்சலும்

இல்லாது, ஒரு சிறிய தகவலைச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறது. இந்தத் தகவல் உலகாயதமானது. ஆனால், யார் எழுதினாரோ அவருக்கு உண்டானது அல்ல. தமையன் என்ற காப்பாளரின் கடனை அங்கே வேங்கடராமன் அழகாக முடித்தான்.

வைதிகர்கள் ஹோமம் செய்யும்போது அக்ரம், மத்யம், மூலம் என்று தர்ப்பையை நுனியிலும், நடுவிலும், இறுதியிலும் நெய்யால் நனைத்துப் பிறகு அக்னியில் சமர்ப்பிப்பர். பல விஷயங்களுக்கு உச்சி, நடு, ஆரம்பம் என்று தன்மைகள் உண்டு. எல்லா பரிமாணத்துக்கும் இது ஏற்பட்டிருக்கும். இந்தக் கடிதத்திலும் அந்த வளர்ச்சியைக் காணலாம். 'நான்' என்ற உச்சியில் கடிதம் ஆரம்பிக்கப்பட்டு, 'இது' என்று 'தான்' இல்லாத அந்த விடுதலையைக் குறிப்பிட்டு, எதுவுமே இல்லாதபடி, கையெழுத்தே இல்லாதபடி, கடிதம் மூலத்தைத் தொட்டிருக்கிறது. தன்னில் ஆரம்பித்து, தானற்ற நிலையில் வந்து, பிறகு எங்கு முடிய வேண்டுமோ மனம் அந்த இடத்தில் எந்தப் பெயரும் விலாசமுமின்றி முடிந்துவிட்டது.




ஞானத்தை நேசிப்பவர்களுக்கு, 'ரமண வழி' எது என்று தேடுபவருக்கு இந்தக் கடிதம் வெகு சுலபமாக வழி காட்டுகிறது. 'நான்' என்று தன்னை அழைத்துக் கொள்ளும் அகந்தையில் ஆரம்பித்து, 'இது' என்று சுத்த அகந்தைக்கு, அதாவது, 'தான் இருக்கிறோம். அதேநேரத்தில் எதுவுமற்று இதுவாக இருக்கிறோம்' என்பதை விளக்கி, பிறகு கையெ ழுத்தில்லாத கடிதம் முழுவதும் முடிவதன் மூலம், 'தான்' காணாமல் போகும் முக்தியை அடைகின்ற மிக உன்னதமான காரியம் காட்டப்பட்டிருக்கிறது.

'அண்ணாமலையாரின் கட்டளைப்படி' என்று சொல்லப்படவில்லை. 'தந்தையின் கட்டளைப்படி' என்று அண்ணாமலையாரை மிக உயர்வான இடத்துக்கு... 'கடவுள் என்பவரே தன் இருப்புக்கு ஆதாரம்; இருப்புக்கு மூலம்' என்பதைச் சொல்லாமல் சொல்லி, 'என் இச்சையில் நடக்கவேயில்லை. ஏதோ ஒரு ஆவேசம் என்னைத் தள்ளிக் கொண்டு போகிறது. வேறு ஏதோ ஒரு சக்தி என்னை இழுத்துக்கொண்டு போகிறது' என்பதை, 'அவரின் உத்தரவுப்படி' என்று விளக்கி, இந்தக் காரியத்துக்கு விசனப்பட வேண்டாம் என்று மிக அன்பாக ஆறுதலும் சொல்கிறது.

1896-ஆம் வருடம், ஆகஸ்ட் மாதம் 29-ஆம் தேதி பகல் 12 மணிக்கு, வீட்டிலுள்ளோர் மத்தியான வேளையில் உணவு உண்ட சுகத்தில் கண்ணயர்ந்து ஓய்வெடுத்துக்கொண்டிருக்க, வேங்கடராமன் வீட்டை விட்டு வெளியேறினான். எப்படியும் திருவண்ணாமலைக்குப் போய்ச் சேர்ந்துவிட வேண்டும் என்ற பதற்றம் இருந்தது; கவலை இருந்தது. மெல்லியதாக பயம்கூட இருந்திருக்கும்.

திண்டிவனம் வழியாக சென்னை செல்லும் அந்த ரயில் வண்டித் தொடர் சரியாக 12 மணிக்கு வந்துவிடும். வீட்டை விட்டுக் கிளம்புவதற்கு நாழியாகிவிட்டது. வண்டி போயிருக்குமோ என்ற கவலை இருந்தது. ஆனால், வண்டி வேங்கடராமனைவிடத் தாமதமாக வந்தது. வண்டி வரவில்லை என்ற சந்தோஷத்தில், வேங்கடராமன் அட்டவணைப் பலகையைப் பார்த்தான்.



திண்டிவனம் 2 ரூபாய் 13 அணா என்று போட்டிருந்தது. உடனே, டிக்கெட் வாங்க வேங்கடராமன் பறந்தான். பதற்றமில்லாமல் சற்றுக் கீழே பார்த்திருந்தால், 'திருவண்ணாமலை 3 ரூபாய்' என்று அந்த அட்டவணை யில் எழுதப்பட்டிருந்ததைப் பார்த்திருப்பான். ஒரு கவலையில், ஒரு குழப்பத்தில் அதைப் பார்க்காது விட்டு விட்டான். ஆனால், நல்லவருக்கு எது நடந்தாலும், நல்லதாகவே முடியும்.

ரயில் வந்தது. வேங்கடராமன் ஏறி உட்கார்ந்துகொண்டான். இடுப்பில் ஒரு வேட்டி, மேலே ஒரு சட்டை, காதிலே கடுக்கன். உடம்பிலே விவரிக்கமுடியாத ஆனந்தப் பரவசம். வண்டி சிறிது நேரம் நின்றுவிட்டுக் கிளம்பியது. பெரிய ஆசுவாசம் உள்ளே ஏற்பட்டது. தந்தையை நோக்கிப் போகின்றோம் என்ற எண்ணம் எழுந்தது. அண்ணாமலையாரை மனதுக்குள் வணங்கினான். சம்மணமிட்டு அமர்ந்து, கண் மூடிக்கொண்டான். உள்ளுக்குள்ளே தோன்றுகின்ற

வெண்மையை, வெற்றிடத்தை, 'நான்' என்ற எண்ணம் எங்கு எழுகின்றதோ அந்த மூலத்தைப் பார்க்கத் துவங்கினான்.

ரயில் வண்டி திண்டிவனம் நோக்கிப் போயிற்று. தன்னை விரைந்து வந்து யாரோ அணைத்துக் கொள்ளக் காத்திருக்கிறார்கள் என்ற உணர்வு, வேங்கடராமனுக்கு ஏற்பட்டது. தந்தையை இழந்து, தாயைப் பிரிந்து, அண்ணனின் அதீத அன்பால், அக்கறையால் அடக்கப்பட்டு, உறவினர் வீட்டில் வளருகின்ற அந்த இளைஞன் ஓடி யாடித் திரிந்தவன்; வெற்றி பெற எல்லா முனைப்புமாய் ஈடுபடுபவன்; கடும் முயற்சி உடையவன். அதே நேரம், அடித்துப்போட்டாற்போல் தூங்குபவன். கடவுளைப் பற்றி தனக்குச் சொல்லப்பட்ட கதை களையெல்லாம் கேட்டுக் கொண்டி ருந்தவன்; பெரியபுராணத்தில், ஒவ்வொரு நாயன்மாருக்கும் ஒவ்வொரு விதமாய் இறைவன் சோதனை வைத்ததையும், அதை அவர்கள் கடந்ததும் தரிசனம் தந்ததையும் மனதுக்குள்ளே தேக்கி வைத்துக்கொண்டவன்.

கோயிலிலும் வாசலிலும் இறைவன் இருக்கிறாரா என்று தேடியவன்; ஆகாயத்திலிருந்து இறைவன் குதித்துவிட மாட்டாரா என்று ஆசைப்பட்டவன்; அண்ணாமலை என்ற பெயரைக் கேட்டதுமே பரவசம் அடைந்தவன். கண்மூடி செத்துப்போவது என்றால் என்ன என்று அறிய, தானே செத்துப்போவதுபோல் பாவனை செய்து கிடந்தவன்; அந்த பாவனையை மும்முரமாகச் செய்ய, உள்ளுக்குள்ளே மாறுதல் ஏற்பட்டு, மிக அதிர்ச்சியான ஒரு மலர்ச்சியைச் சந்தித்தவன். அதன் பின்பு, நீரூற்றிய நெருப்புபோல சட்டென்று அடங்கியவன். எவரைக் குறித்தும், எது குறித்தும் கோபமில்லாதவன்.

படிப்பினால் என்ன லாபம் என்ற கேள்வி எழும்ப, படிப்பிலிருந்து விலக யத்தனித்தவன்; கண்மூடி தியானத்தில் ஆழ்வதையே மிகவும் விரும்பியவன்; அடிக்கடி தனிமையில் இருக்க ஆசைப்பட்டவன். புத்தகம் பிரித்து வைத்துப் படிக்க ஆரம்பித்தபோதும், உள்ளுக்குள் ஏதோ இழுக்கக் கண்மூடிக் கிடந்தவன்.

'இப்படியெல்லாம் இருக்கிறவருக்கு இதெல்லாம் எதற்கு' என்று தமையன் கேட்க, அதிலுள்ள மிகப் பெரிய நியாயத்தை உணர்ந்து, தமையனுடைய காசிலிருந்து மூன்று ரூபாய் மட்டும் எடுத்துக் கொண்டு, தன் தந்தையை நோக்கி, அதாவது அண்ணாமலையாரை நோக்கிப் பயணம் ஆரம்பித்தவன். அவன், அந்த ரயில் பெட்டியில் கண்மூடி அமர்ந்திருக்கிறான். அந்த உன்னதமான புருஷன் மிக உயர்வான இடத்துக்குப் போக, இன்னும் பலரை உய்விக்க, இன்னும் ஆசை கொண்டுள்ளவருக்கு வழிகாட்ட, 2 ரூபாய் 13 அணா போக மீதி காசை மடியில் வைத்துக் கொண்டு, எந்தக் கவலையும் இல்லாமல், இப்படிக் கண் மூடிக்கிடப்பதே வாழ்க்கை என்று தெளிவாகக்கொண்டு புறப்பட்டுவிட்டான்.

இது வெறும் மனித முயற்சி அல்ல. மனித முயற்சிக்கு அப்பால் ஏதோ ஒரு சக்தி, இப்படிச் சிலரைத் தேர்ந்தெடுத்து தன்னருகே இழுத்து வந்து, அவரைப் பிரகாசிக்க வைத்து, அந்தப் பிரகாசத்தின் மூலம் உலகத்திலுள்ள அஞ்ஞான இருளை விலக்குவதற்கு முனைகிறது.

'தில்லைவெளியிலே கலந்துவிட்டார்; அவர் திரும்பவும் வருவாரோ' என்கிற பாட்டுக்கு ஏற்ப, தன் பின்னே கடந்து மறைந்த மதுரையை மறந்தேபோனான் வேங்கடராமன். இன்னும் முன்னேறிச் செல்லச் செல்ல, காற்று சுகமாக வீசத் தொடங்கியது.

பயணிகளுக்கு நடுவே வெண்தாடி வேந்தராக ஒரு முதிய இஸ்லாமியப் பெரியவர் அமர்ந்திருந்தார். பேசி ஓய்ந்த பிறகு, அவரது பார்வை, கண்மூடி அமைதியாக உட்கார்ந்திருந்த வேங்கடராமனிடம் போயிற்று. அந்தணச் சிறுவன் என்பது முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. எனவே, இஸ்லாமியப் பெரியவர், மெள்ளக் கண் திறந்த வேங்கடராமனிடம் பேச்சுக் கொடுத்தார்.

"தம்பி எங்கே போகிறது?" என்று அன்பொழுகக் கேட்டார். "திருவண்ணாமலைக்கு!" - வேங்கடராமன் சந்தோஷமாகப் பதில் சொன்னான்.

"நானும் அதற்கு முந்திய ரயில்வே ஸ்டேஷனுக்குத்தான் போறேன்!" என்றார் இஸ்லாமியப் பெரியவர்.

"அதற்கு முந்திய ஸ்டேஷனுக்கா..?"

"ஆமாம். திருக்கோவிலூருக்குப் போறேன்!"

"அப்படியானால் இந்த வண்டி திருவண்ணாமலை போகிறதா?"

"தம்பி, என்ன சொல்கிறீர்கள்? திருவண்ணாமலை போகத்தானே டிக்கெட் எடுத்தீர்கள்?"

"இந்த வண்டி திருவண்ணாமலை போகிறது என்று தெரியாது. திண்டிவனத்துக்கு டிக்கெட் எடுத்தேன்."

"திண்டிவனம் போவது சுற்றல்லவா! திருவண்ணா மலைக்கு இந்த வண்டி போகவில்லை. ஆனால், திருவண்ணாமலைக்கு டிக்கெட் எடுத்தால், விழுப்புரத்தில் இறங்கி வேறு வண்டிக்கு மாற வேண்டும்!"

"அப்படியா... இது தெரியாமல் போயிற்றே!" - வேங்கட ராமன் திகைப்பில் ஆழ்ந்தான்.

அண்ணாமலையார் வேங்கடராமனை அலைக்கழிக்காது, தன்னை வந்து அடைவதற்கு இன்னும் எளிய வழியை அந்த இஸ்லாமியப் பெரியவர் மூலம் காட்டினார்.

மிகவும் பசித்ததால் மாலைநேரம் திருச்சியில், மீதமிருந்த மூன்றணாவில் கொஞ்சம் காசுக்கு இரண்டு பேரிக்காய்கள் வாங்கினான். ஒரு கடி கடித்ததும், பசி அடங்கிப் போயிற்று.

மறுநாள் காலை 3 மணிக்கு, அந்த ரயில் வண்டித் தொடர், விழுப்புரம் வந்தடைந்தது. விழுப்புரத்தில் இறங்கி பல இடங்களைச் சுற்றி வந்தான். திருவண்ணாமலைக்கு எப்படிப்போவது என்று தெரியவில்லை. யாரிடம் கேட்பது என்றும் புரியவில்லை. விடியல் நேரத்தில் விவரம் தெரிந்தவர்கள் அரிதாக இருந்தார்கள்.

ஒரு ஹோட்டல் வாசலுக்கு அதிகாலைப் பொழுதில் போய், 'பசிக்கிறது' என்று உணவு கேட்டான். அந்த ஹோட்டல்காரர் அவனை மதியம்வரை காத்திருக்கச் சொன்னார். ஹோட்டல் வாசலிலேயே மறுபடியும் அவன் கண்மூடி தியானத்தில் ஆழ்ந் தான். உணவு தயாரானதும் அவனை அழைத்துப் பரிமாறினார்கள். ஆவலாக வேங்கடராமன் உணவு உண்டான். எவ்வளவு காசு என்று கேட்டதற்கு, இரண்டணா என்று பதில் வந்தது.

இரண்டணா எடுத்துக் கொடுத்த போது, அந்த ஹோட்டல்காரர், "உன்னிடம் எவ்வளவு காசு இருக்கிறது?" என்று வேங்கடராமனைப் பார்த்துக் கேட்டார்.

"இரண்டரை அணா" என்று சொன்னான். ஹோட்டல்காரர் மெள்ளச் சிரித்தார்.

"வேண்டாம். அந்த இரண்டணாவை நீயே வைத்துக் கொள்" என்றார் அந்தப் புண்ணியவான்.

அந்த வயதுச் சிறுவர்கள் பல பேர் பல்லிளித்துக் கொண்டு இருக்க, முன்னும் பின்னும் அலைந்து கொண்டிருக்க, ஆழ்ந்து உள்ளுக்குள் உட்கார்ந்து அசையாதிருக்கின்ற பிள்ளையைப் பார்த்து, அவருக்குள் அந்த எண்ணம் தோன்றியிருக்க வேண்டும். மறுபடியும் விழுப்புரம் ரயில்வே ஸ்டேஷன் வந்து, இரண்டணாவுக்கு ரயில் எவ்வளவு தூரம் போகும் என்று பார்த்தபோது மாம்பழப்பட்டு வரைக்கும் டிக்கெட் எடுக்கலாம் என்று தெரிந்தது. இரண்டணா கொடுத்து மாம்பழப் பட்டுக்கு வேங்கடராமன் டிக்கெட் வாங்கினான். விழுப்புரத்திலிருந்து காட்பாடி செல்லும் வண்டி தயாராக நின்றது. வேங்கடராமன் அதில் அமர்ந்து கொண்டான்.

அன்று ஞாயிற்றுக்கிழமை, கூட்டம் அதிகம் இல்லை. காய்கறி வியாபாரிகளும், ஒரு சில பயணிகளுமே அதில் இருந்தார்கள். மறுபடியும் ஆழ்ந்து தனக்குள் பார்க்கத் துவங்கினான் வேங்கட ராமன். மாம்பழப்பட்டு வந்ததும், இறங்கினான். அந்த இடத்துக்குதானே வேங்கடராமன் டிக்கெட் வாங்கியிருந்தான். அவ்வளவுதானே அவனிடம் காசு இருந்தது. எனவே, மாம்பழப்பட்டில் இறங்கி, அங்கிருந்து திருவண்ணாமலைக்கு நடந்தே போகத் தீர்மானித்தான்.




நல்ல வெயிலில், வெறும் காலோடு ரயில் பாதை ஓரம் அந்த இளைஞன், அண்ணாமலையாரை நோக்கிப் பத்து மைல் தொலைவை மெள்ளக் கடக்கத் துவங்கினான். நல்ல விஷயங்களுக்குச் சோதனைகள் வரத்தான் செய்யும்.

மாலை வந்தது. இருளத் துவங்கியது. அதற்கு மேல் ரயில் பாதை ஓரம் நடக்க முடியாது.

எனவே, அருகிலிருந்த ஊர் நோக்கி நடந்தான். அது அரையணிநல்லூர். அந்த ஊரில் அதுல்ய

நாதேஸ்வரர் கோயிலைக் கண்டான். தென் பெண்ணை ஆற்றங்கரையில் ஒரு பாறை மீது அந்தக் கோயில் கட்டப்பட்டிருந்தது. திருஞானசம்பந்தரால் பாடப்பட்ட அற்புதமான, அழகான கோயில் அது. கோயில் வாசலில் போய் அமர்ந்து கொண்டான்.

இரவு நேர பூஜை நடக்கத் துவங்கியது. கோயிலுக்குள்ளே போனான். கோயிலில் கர்ப்பக் கிரகம் தவிர, மற்ற இடங்களெல்லாம் இருளோடிக் கிடந்தது. இருப்பினும், மண்டபத்தின் ஒரு ஓரத்தில் வேங்கடராமன் அமர்ந்து கொண்டான். மறுபடியும் உள்ளுக்குள் புகுந்தான். பளீரென்று ஒரு ஜோதி அவன் முன் தோன்றியது. அந்த இடம் முழுவதும் பரவியது. 'என்ன இது!' என

வேங்கடராமன் ஆச்சரியப்பட்டான். 'எங்கிருந்து வருகிறது அந்த ஒளி? கருவறையிலிருந்து, சிவலிங்கத்திலிருந்து வருகிறதா?' என்று கேள்வி எழுந்தது. வேகமாகக் கருவறைக்குப் போய் சிவலிங்கத்தைப் பார்த்தான். அந்த ஜோதி சிவ லிங்கத்திலிருந்து வரவில்லையென்று தெரிந்து கொண்டான். அந்த ஜோதி மறைந்துவிட்டது.

கோயிலும், கர்ப்பகிரகமும், கடவுளும் தனக் குள்ளே இருக்கிறது என்பதை அந்த இளைஞனால் உணர முடிந்தது. நடை சார்த்தப்பட்டது. கோயில் சிவாச்சார்யரின் தோளில் உணவு மூட்டை இருந்தது. தனக்கு மிகவும் பசிக்கிறது என்றும், உணவு தருமாறும் வேங்கடராமன் கையேந்திக் கேட்டான். "இங்கு யாருக்கும் உணவு தரப்படமாட்டாது" என்று சிவாச்சார்யர் கண்டிப்பான குரலில் சொன்னார்.

"நான் இங்கே தங்கிக் கொள்ளலாமா? இரவு படுத்துக் கொள்ளலாமா?" என்று மறுபடி கேட்க, "கோயிலில் தங்குவதற்கு எவருக்கும் அனுமதியில்லை. வெளியே போகலாம்" என்று உத்தரவு பிறந்தது. தளர்ந்த உடம்போடு வேங்கடராமன் அரையணிநல்லூர் அதுல்யநாதேஸ்வரர் கோயிலைவிட்டு வெளியே வந்தான். மற்றவர்களோடு கலந்து ஆற்றைக் கடந்து, எதிர்க் கரையில் உள்ள கீழூரை நோக்கி நடந்தான். கூட வந்த ஒருவர், "கீழூரில் சிவன் கோயில் ஒன்று இருக்கிறது. அங்கு அர்த்த ஜாம பூஜைக்குப் பிறகு உணவு கிடைக்கலாம்" என்று அவனுக்கு வழிகாட்டி, போகிற வழிக்குப் புண்ணியம் தேடிக்கொண்டார்.

வேங்கடராமன், கீழூர் வீரட்டேஸ்வரர் கோயில் நோக்கி நடந்தான். அர்த்தஜாம பூஜை முடிந்து, தீபாராதனை காட்டப்பட்டது. குருக்களும் வேலைக்காரர்களும் கோயிலைவிட்டு வெளியே கிளம்பத் தயாரானார்கள். பூஜை ஆகட்டும் என்று மண்டபத்தில் உட்கார்ந்த வேங்கடராமன், மறுபடியும் சமாதி நிலையில் ஆழ்ந்தான். அவனை எழுப்பி, "வெளியே வா! கோயிலைப் பூட்ட வேண்டும்" என்று சொன்னார்கள்.

வேங்கடராமன் சிறிது உணவுக்காக அங்குள்ள குருக்களிடம் கையேந்தினான். 'சாதம் ஏதும் தருவதிற்கில்லை' என்று மறுக்கப்பட்டது. அதை உற்றுக் கவனித்துக்கொண்டு இருந்த அந்தக் கோயில் மேளக்காரர், தன்னுடைய பட்டை சாதத்தை அந்தச் சிறுவனுக்குக் கொடுத்துவிடும்படி, கோயில் குருக்களிடம் வேண்டுகோள் வைத்தார்.

மேளக்காரரின் பங்கான பட்டை சாதம் வேங்கடராமனின் கைகளுக்குப் போயிற்று.

அசையாது உட்கார்ந்திருந்த அந்த இளை ஞனைப் பார்த்து, அந்த மேளக்காரர் மனம் நெகிழ்ந்திருக்க வேண்டும். 'இவன் இளைஞன் தான். ஆனால், உள்ளே ஏதோ ஒரு பெரிய விஷயம் இருக்கிறது' என்ற எண்ணம் வந்திருக்க வேண்டும்; அதனால் மனம் இளகியிருக்க வேண்டும். மேளக்காரரிடம் இருந்த உன்னிப்பான பார்வை, கோயில் சிவாச்சார்யரிடம் இல்லை.

நம்மில் பல பேர் அரைக்கண்ணால் பார்த்தும், மேலோட்டமாகப் பார்த்தும், அலட்சியமாகப் பார்த்தும், பார்த்தும் பார்க்காமலும் பல நல்ல விஷயங்களைத் தவற விட்டு விடுகிறோம். உற்றுக் கவனிக்க வெகு சிலருக்கே தெரிந்திருக்கிறது. உற்றுக் கவனித்த மேளக்காரர் புண்ணியவான் ஆனார்.

ஜாதி பேதம் மிகக் கடுமையாகப் பேசப்பட்டும், கைக் கொள்ளப்பட்டும் வந்த அந்தக் காலத்தில், வேங்கடராமன் சகலமும் உதறி, எல்லோருக்கும் பொது வான 'யார் கொடுக்கும் உணவையும் மனதார உண்' என்ற சத்வ குணத்தைப் பெற் றான். அதற்கு ஆரம்பமாக இது இருந்தது.

பட்டை சாதத்தை எடுத்துக்கொண்டு, கீழூரிலுள்ள ஒரு தெருவை அடைந்தான். குடிக்கத் தண்ணீர் வேண்டுமென்று ஒரு வீட்டு வாசலில் நின்று கேட்டான். அவர்கள் தண்ணீர் எடுத்து வருவதற்குள், பசி தாங்காமல் மயங்கி விழுந்தான். பட்டை சாதம் மண்ணில் விழுந்தது. மயங்கிய இளைஞனைக் கண்டு ஊர் கூடியது. தண்ணீர் தெளித்து எழுப்பியது. 'ஐயோ பாவம்' என்று பரிதாபப்பட்டு, அவன் விழித்த பிறகு பின்வாங்கியது.

வேங்கடராமன் நீர் குடித்தான். மண்ணில் கிடந்த சாதத்தில் மண் படாத இடங்களாகப் பார்த்து மேலாக எடுத்து உண்டான். பசி அடங்கியது. ருசியான, வகை வகையான உணவுகளை உண்ணுவதில் ஆர்வமுள்ள வேங்கடராமன், கீழே கிடந்த பருக்கைகளை, தூசுபடாத உணவை பொறுக்கியெடுத்து உண்டான் என்பது உணவின் ருசியை அறுத்தற்கான ஆரம்பம்.

உண்ட பின்பு, வேங்கடராமன் ஒரு வீட்டுத் திண்ணையில் அயர்ந்து தூங்க, ஒரு மகானைத் தாலாட்டும் உயர்ந்த பேறு பெற்றது கீழூர்.

மனதில் திட்டமிடல் இருக்கிறபோது, வளர்ச்சி தாழ்ச்சி என்கிற விஷயங்களும் வரும். பள்ளம் பாயும் நீருக்கு, வகுக்கப்பட்ட பாதை என்று ஏதும் உண்டா?

துறவு எந்தத் திட்டமிடலிலும் அடங்காதது. அது இயல்பானது; இலக்கற்றது. மிகப் பெரிய சரணாகதி அது. வேங்கடராமனின் பூர்வ ஜென்ம வாசனை, அவனை இலக்கில்லா நிலைக்குத் தள்ளியது.

மறுநாள் திங்கட்கிழமை. 31 ஆகஸ்ட், 1896. அன்று கோகுலாஷ்டமி. கண்ணன் பிறந்து கோகுலத்தை அடைந்த நாள். விடிந்ததும், வேங்கடராமன் கீழூரில் மேலும் கீழும் நடந்தான். பசி அதிகமாகியது. திருவண்ணாமலைக்குப் போகின்ற பாதை எது என்று தெரியவில்லை. கையில் காசும் இல்லை.

முத்துகிருஷ்ண பாகவதர் என்பவர் வீட்டில் நின்றான். 'பசிக்கிறது; உணவு வேண்டும்' என்று யாசித்தான். அவனை அந்த வீட்டுக்குள் அழைத்துச் சோறு போட்டார்கள். பழைய சாதம்தான்; இருந்தாலும், வயிறு குளிர்ந்தது. பசி போயிற்று.

மேலும் பயணம் தொடர, ரயில் டிக்கெட் வாங்கக் காசு வேண்டுமே, என்ன செய்வது? சோறு போட்ட முத்துகிருஷ்ண பாகவதரிடமே வந்து, தன்னிடம் இருக்கின்ற கடுக்கன்களைக் காண்பித்து, அதை வைத்துக் கொண்டு தனக்குக் காசு கொடுக்கும்படி வேண்டினான். கடுக்கன்களைப் பரிசோதித்த முத்துகிருஷ்ண பாகவதர், அவை 20 ரூபாய் பெறும் எனத் தெரிந்துகொண்டார். அந்தக் காலத்தில் 20 ரூபாய் என்பது, இந்தக் காலத்தில் கிட்டத்தட்ட 10,000 ரூபாய்க்குச் சமம். அவர் அவற்றை வாங்கிக்கொண்டு, 4 ரூபாய் கொடுத்தார். வேங்கடராமன் பெயரை எழுதிக்கொண்டு, அவனுக்குத் தனது விலாசத்தை ஒரு துண்டுச் சீட்டில் எழுதிக் கொடுத்தார். வேங்கடராமன் சந்தோஷமாக அந்த 4 ரூபாயை வாங்கி, இடுப்பில் முடிந்துகொண்டான்.



முத்துகிருஷ்ண பாகவதரின் மனைவி, அவனை உள்ளே அழைத்து, கோகுலாஷ்டமி பட்சணங்களை சுவாமிக்குப் படைக்கும் முன்பு அவனுக்குக் கொடுக்கத் தீர்மானித்து, ஒரு பொட்டலம் நிறைய முறுக்கு, சீடை, வெல்ல தின்பண்டங்களைக் கட்டி அவனிடம் கொடுத்தாள். அதை வாங்கிக்கொண்டு, சந்தோஷமாக வேங்கடராமன் வெளியே வந்தான்.

ஞானியாக வேண்டுமென்ற ஏக்கமுள்ளவருக்கு, ஒரு ஞானியை இனம் கண்டுகொள்ள முடியும். அது ஞானி என்ற சொற்றொடராக இல்லாது, ஏதோ ஒரு உந்துதல்...ஏதோ ஒரு பிரியம்... ஏதோ ஒரு நெகிழ்வு ஏற்படும். 'வந்திருக்கிறது கிருஷ்ணர்தானே, அப்படி வந்திருக்கின்ற கிருஷ்ணருக்குத் தானே இந்த பட்சணங்களைப் படைக்க வேண்டும், இதோ கொடுத்து விட்டேன்.' அந்த அம்மாள் சீடைப் பொட்டலத்தைக் கொடுத்துவிட்டு, புன்னகையோடு வழியனுப்பி வைத்தார்.

வேங்கடராமனுக்கு இடுப்புத் துண்டும், மேல் சட்டையும், அந்த நாலு ரூபாய் பணமும்தான் சொத்து. ஆனால், நெஞ்சு முழுக்க சந்தோஷம் பொங்கி வழிந்தது. கீழூரிலிருந்து திருக்கோவிலூருக்கு நடந்து வந்து, அந்த ரயில் நிலையத்திலேயே உறங்கி, மறுநாள் அதிகாலை செப்டம்பர் முதல் தேதி, அங்கு வந்த ரயிலில் ஏறி, திருவண்ணாமலை நோக்கிப் போனான். மெள்ள மெள்ள வெளிச்சம் பரவி, பனி அடர்ந்த அதிகாலைப் பொழுதில் திருவண்ணாமலையில் வேங்கடராமன் இறங்கினான்.

1896-ஆம் ஆண்டு, செப்டம்பர் முதல் தேதி, திருவண்ணாமலை என்கிற அந்தத் தொன்மையான நகரம், மகானாக மலரப் போகின்ற ஓர் இளைஞனை 'வருக, வருக'வென்று வரவேற்றது.

திருவண்ணாமலை இப்போது இருப்பது போலல்லாது ஒரு சிறிய ஊராகவே இருந்தது. ரயில் நிலையத்திலிருந்து நேராக நடந்து, தலைநிமிர்ந்து நிற்கின்ற மலையையும், உயர்ந்த கோபுரத்தையும் வேங்கடராமன் கைகூப்பி தரிசித்தான்.

ஒரு தபஸ்வியின் அடுத்த கட்டம்தான், பகவான் ரமணரின் திருவண்ணாமலை வாசம். ரமணரை ஊன்றிப் படிக்கப் படிக்க, 'துறவு என்பது எளிதில்லை; உடையையோ, உணவையோ, வீட்டையோ, நண்பர்களையோ, சுற்றுச் சூழலையோ துறப்பது துறவு அல்ல; தன்னுள் மிகுந்திருக்கும் கர்வத்தைத் துறப்பதே துறவு' என்பது புரியும். கர்வம் எப்போது வேண்டுமா னாலும் கிளர்ந்தெழலாம். அப்படிக் கிளர்ந் தெழாமல் முளையிலேயே கிள்ளி, வேரோடு அறுத்து, எந்தச் சலனமும் இல்லாமல் இருப்ப தற்குத் துறவற வாழ்க்கையைத்தான் மேற்கொள்ள வேண்டும். கரணம் தப்பினால் மரணம் என்பது போல, மனம் சிறிது சலனப்பட் டாலும், கர்வம் கிளர்ந்து, எந்த காரியத்துக்காகப் பிரவேசித்தோமோ, அதை இழந்து நிற்க வேண்டியிருக்கும். பகவான் ஸ்ரீரமணரின் வாழ்க்கையைக் கவனிக்கின்றபோது, எல்லா நேரத்திலும் அவர் மிகுந்த கூர்மையோடும்கவனத் தோடும் தன்னை நிலைநிறுத்தி வைத்தபடியே இருந்திருக்கிறார் என்பது புரிகிறது.

அப்படிப்பட்ட துறவை அவர் ஆரம்பிக்கிற போது, அவருக்குப் பதினாறு வயது. வீட்டை விடவேண்டும்; விட்டாயிற்று; திருவண்ணா மலைக்கும் வந்தாகிவிட்டது. எதிரே பெரிய மலை, கீழே உயர்ந்த கோபுரம், சுற்றிச் சிறிய ஊர். 'ஹா'வென்று வியந்தபடி, கருவறையை நோக்கி வேங்கடராமன் நடந்தான்.

அப்போது, கோயிலில் திருப்பணிகள் நடந்து கொண்டிருந்தன. அது, கோயில் திறந்திருக்கின்ற நேரம் இல்லை. இருந்தாலும், கோயில் திறந்திருந்தது. திருப்பணி வேலைக்காக

ஆட்கள் நடமாட்டம் இருந்தது. அதனால், திறந்திருந்த கதவுகள் வழியே வேங்கடராமன் கருவறை நோக்கி நடந்தான். யாரும் தடுக்கவில்லை; எதுவும் கேட்கவில்லை. அண்ணாமலையாரால் அழைக்கப்பட்டதால், அவனுக்கு எந்தவித இடைஞ்சலும் இல்லாமல், கடவுள் தரிசனம் காத்திருந்தது. கருவறைக்குப் போய் கை கூப்பி, மனமார அண்ணாமலையாரை தரிசித்தான். மனதினுள் மிகப் பெரிய நிம்மதி பரவிற்று.

உள்ளே இருப்பது சிவலிங்கம் தான். ஆனால், அந்த சிவலிங்க ரூபத்துக்கு அப்பால் உள்ளே ஏதோவொன்று தென்பட்டது. அது வெறும் கற்சிலை அல்ல; வெறும் கருங்கல்லால் கட்டப்பட்ட அறை அல்ல. இந்த இடம் வேறு ஏதோ ஒரு இடம் என்று உள்ளே உணர்த்தப்பட்டது. அமைதி தோன்றியது.

சகலமும் இந்த இடத்துக்கே... இந்த இறை வனுக்கே சமர்ப்பணம் என்ற ஒரு விட்டுவிடல் ஏற்பட்டது. எல்லாம் இழந்த ஒரு நலம் தோன்றியது. தனது, தான் என்று கொள்ளாத ஒரு நிறைவு ஏற்பட்டது. முகத்தில் மந்தகாசம் ஏற்பட்டது. கண்களில் ஒளி கூடியது. முகம் பொலிவுற்றது. உடம்பில் ஒரு வலுவின்மை தோன்றியது.



எத்தனை நேரம் அங்கிருந்தான் என்பது அவனுக்குத் தெரியவில்லை. அந்தச் சிவலிங்கம் முழுவதும் அவன் நிரம்பியிருந்தான். அந்த அறை முழுவதும் அவன் நிரம்பியிருந்தான். அறைக்குள் இருப்பதும், அவனும் வெவ்வேறாக இல்லாமல் ஒன்றாக இருந்தன.

'எல்லா இடத்திலும் இருப்பதே, இங்கும் இருக்கிறது. இங்கு இருப்பதுதான் எல்லா இடத்திலும் இருக்கிறது. என்னுள்ளும் இருக்கிறது. என்னுள் இருக்கின்ற அதுவே இங்கு அண்ணாமலையாராய் நின்று, என்னை வா என்று அழைத்தது. இனி என்னுடையது என்று எதுவுமில்லை. எனக்குச் சொந்தமென்று எதுவுமில்லை. என் நடவடிக்கை என்று எதுவுமில்லை. என் ஆசை என்று எதுவுமில்லை. என்னுள் இருக்கின்ற அது, அந்த அண்ணா மலையார், என்னை எங்கு இழுத்துப் போயினும், எனக்குச் சம்மதமே! அது செய்யும்... ஏதாவது செய்யும். இந்தப் பிரபஞ்சம் முழுவதும் அது இடையறாது நகர்ந்துகொண்டிருக்கிறது. அது என்னையும் நகர்த்தும். எங்கு வேண்டுமானாலும் நகர்த்திக்கொண்டு போகட்டும்!' - இந்த எண்ணம் வந்ததும், ஒரு மிகப் பெரிய விடுதலை ஏற்பட்டது. விழியில் ஒரு சிரிப்பு தோன்றியது; புத்தியில் ஆனந்தம் ததும்பி நின்றது.

தன்னை உருவமாகக் கொண்டுள்ள வரையில் உருவம் அற்றதை வழிபட முடியாது. தான் உருவமல்ல என்று உதறியபோது, உருவம் தாண்டி உள்ளதை உணர முடியும். உருவ வழிபாடு என்பது உருவத்தைப் பார்ப்பதற்கு அல்ல; அந்த உருவத்தைப் பார்ப்பதன் மூலம் உள்ளே பார்ப்ப தற்கு! எதிரே நெருப்பு கனன்று எரிந்து கொண் டிருக்கிறது. அந்த எரியும் நெருப்பை உற்றுப் பார்த்துக் கை கூப்பிக் கண் மூடினால், நெருப்பு உள்ளுக்குள் எரியும்; எரிய வேண்டும்.

சிவலிங்கம் என்பது அருவ உருவம். அது உருவமுமில்லை. உருவமில்லாத அருவமுமில்லை. அது வெறும் குறியீடு. கடவுள் என்பதன் தாக்கத்தைக் கல்லால் செய்த தத்துவம். தன்னை உற்றுப் பார்க்கும்போது, தத்துவம் உள்ளுக்குள் புகுந்து பெரிதாய் மலரும். எல்லா இடத்திலும் சிவலிங்கம் இருப்பதைக் கண்டுகொள்ள முடியும். பிரபஞ்சம் முழுவதும் சிவலிங்கத் தத்துவம்தான் என்பதை அறிந்துகொள்ள முடியும்.

இப்படி ஒரு தத்துவம் இருக்கிறது என்று தெரியாமல், அப்படி ஒரு விளக்கம் இருக்கிறது என்பது புரியாமல் வேங்கடராமன் வெறுமே பார்த்தான். தத்துவம் வார்த்தையாகத் தெரியவில்லை. அது ஓர் உணர்வாகத் ததும்பி இருந்தது. தத்துவம் செய்யுளாகவோ வசனமாகவோ மனசுக்குள் ஓடவில்லை. ஒரு செய்தியாக அவனுக்குள் மின்னிற்று. அண்ணாமலையாரைப் பார்த்து நீண்ட நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கினான். 'என்னை நீ எடுத்துக் கொள்; இது உனக்குச் சொந்தம். இந்த உடல், பொருள், ஆவி அத்தனையும் உனக்குச் சொந்தம். நான் என்பது இங்கு இல்லை. என்னுடையது இங்கு இல்லை' என்று சகலமும் விட்டுவிட்டு வெறும் குச்சியாக, தண்டமாக விழுந்து வணங்கினான். அந்த வணக்கம் உண்மையானதாக இருந்தது.

எவரும் தடுக்காமல் உள்ளே வந்தது போலவே, எவரும் மறிக்காமல் வெளியே வந்தான். கிழக்குக் கோபுரம் தாண்டினான். இன்னும் நடந்தான். எந்த இடம் நோக்கி என்ற இலக்கு இல்லை. எதற்காக என்ற லட்சியம் இல்லை. இதை முடித்துவிட்டு அதைச் செய்யவேண்டும் என்கிற திட்டமிடல் இல்லை. வெறுமே நடந்தான்.

இலக்கில்லா மனிதர் பெரியோர்; உள்ளவர் அடைய மாட்டார்.

உலகத்தின் சுகங்களை உதற மிகப்பெரிய அலுப்பு வேண்டும். உண்பது உறங்குவது தவிர வேறெதுவும் தெரியாத பிள்ளைக்கு என்ன அலுப்பு வரும்? இது வேறு ரசாயனம். உலகம் என்பதைக் கடவுள் என்று கொண்ட பிறகு, வேறு எதன் மீது நாட்டம் வரும்? மனிதர்கள் அத்தனை பேருக்கும் இந்தப் பொறி சில கணங்கள் தோன்றும். வேங்கடராமன் இந்தப் பொறியில் புகுந்து, தன்னை இழந்தான். இது விதி; பெரும்பேறு!

கோயில் மண்டபம் தாண்டி, தேரடி தாண்டி, சந்நிதி தெரு வழியாக நடக்கும்போது எதுவும் மனதில் பதியவில்லை. சந்நிதி தெரு முடியுமிடத்தில், ஒரு பெரிய குளம் இருந்தது. அதற்கு ஐயன் குளம் என்று பெயர். ஐயன் குளத்துக்கு அருகே, அருணகிரிநாதர் கோயில் இருந்தது. அங்குள்ள சிவனுக்கு அருணகிரிநாதர் என்று பெயர். பழைமையான கோயில்; சற்று பள்ளமான இடத்தில் இருந்தது. கோயிலை எட்டிப் பார்த்து வணங்கிவிட்டு குளக்கரையில் இறங்கினான். கையில் பட்சணப் பொட்டலம் இருந்தது. பையில் காசுகள் இருந்தன. எல்லாம் அண்ணாமலையாருக்கு என்று முடிவாகிவிட்ட பிறகு, பட்சணம் எதற்கு? 'அவன் பார்த்துக் கொள்வான்' என்ற பிறகு காசு எதற்கு? கையிலிருந்த பட்சணப் பொட்டலத்தைக் குளத்தில் வீசியெறிந்தான். குளத்து மீன்கள் பட்சணத்தைப் பாய்ந்து குதறி, வேகமாக உண்டன. காசுகளை வீசியெறிந்தான். நாணயங்கள் நீரைத் தொட்டு சேற்றுக்கடியில் போய்ச் சொருகின.

குளக்கரையில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டு இருந்தபோது யாரோ ஒருவர் வந்து, 'மொட்டையடிக்க வேண்டுமா?' என்று கேட்டார். வெளியூர்வாசி என்று முகத்தில் எழுதி ஒட்டியிருந்தது. உள்ளூர்வாசிக்கு இந்த நேரத்தில் குளக்கரையில் என்ன வேலை? பெரிய குளத்தின் வடப் பக்கத்தில் அக்ரஹாரத்துப் பெண்மணிகள் துணி துவைத்துக்கொண்டு இருந்தார்கள். மேற்குப் பக்கத்தில் இவன் மட்டுமே நின்றிருந்தான்.

மொட்டையடிக்க வேண்டுமா என்று கேட்டபோது, எந்தவித யோசனையும் இல்லாமல் சரியென்று தலையசைத்தான். அந்த ஆள் வேங்கடராமனை ஒரு நாவிதனிடம் அழைத்துப் போக, நீண்ட கருத்த குடுமி களையப்பட்டது. சரி, மழித்ததற்குக் காசு? 'இந்த நீண்ட தலைமுடிதான் காசு. இதில் சவுரி செய்தால் நிறையச் சம்பாதிக்கலாம்.' அந்த ஆசாமி முடியைச் சுருட்டித் துணியை மடித்துக் கொண்டு நகர்ந்தார். மொட்டைத் தலையோடு நின்றான் வேங்கடராமன். இனி என்ன செய்வது? சட்டையைக் கழற்றிக் குளக்கரையில் வீசினான். வேட்டியை அவிழ்த்துக் கிழித்துக் கோமணமாக்கினான். இடுப்பில் கட்டிக் கொண்டான். கோயிலுக்குப் போகலாம் என்று தீர்மானித்து நடந்தான்.

தலைமுடி மழித்துக்கொண்டு குளிக்காமல் போகலாமா? ஆனால், குளிக்க வேண்டுமென்று வேங்கடராமனுக்குத் தோன்றவில்லை. குளிக்காமல் குளக்கரையில் இருந்து கோயிலை நோக்கி நடந்தபோது, அருணாசலேஸ்வரர் மழையாகப் பொழிந்து, அவனைக் குளிப்பாட்டினார்.

வெகு நாளாக மழை காணாத திருவண்ணாமலை மண், மழையை ஆவலாக உறிஞ்சியது. ஒரு ஞானியின் பாதம் பட்டதும் தனக்குக் கிடைத்த ஆசீர்வாதத்தை நினைத்து ஆனந்தப்பட்டது. மழையில் சொட்டச் சொட்ட நனைந்தபடி கோயில் பக்கம் வந்தான் வேங்கடராமன். அங்குள்ள ஆயிரங்கால் மண்டபத்தில் உட்கார்ந்து கொண் டான். பசித்தது. ஆனால், யாரிடமும் சோறு கேட்க ஆசைப்படவில்லை. மௌனமாய்க் கண் மூடி, தனக்குள் தான் பார்த்தபடி உட்கார்ந்திருந்தான்.



பசி இருந்தது. ஆனால், தொந்தரவு செய்ய வில்லை. பசியை உணர முடிந்தது. ஆனால், சாப்பிடவேண்டும் என்ற எண்ணம் வரவில்லை. தின்பது என் உடம்பின் வேலை. அதற்கு உணவிடுவது அருணாசலேஸ்வரரின் வேலை. அவன் உள்ளுக்குள் மௌனமாக இருந்தான்.இரவு முழுவதும் சாப்பிடாமல், அங்கேயே உட்கார்ந்திருந்தான். கோயிலின் சுற்றுப்புறத்தை சுத்தம் செய்து பராமரிக்கிற மௌன சுவாமிகள் என்கிற அன்பர், அந்தச் சிறுவன் அசையாது உட்கார்ந்திருப்பதைப் பார்த்தார். பசியில் முகம் வாடியிருப்பது அந்த சாதுவுக்குத் தெரிந்தது.


பழனி சுவாமி என்கிற இன்னொரு சாதுவை நோக்கி, 'அந்தப் பிள்ளை வெகுநேரம் அசையாமல் உட்கார்ந்திருக்கிறான். பசியால் வாடியிருக்கிறான். அவனுக்குச் சிறிது உணவு கொடு' என்று மௌன பாஷையில் உத்தரவிட்டார். கோயில் நந்த வனத்தைப் பராமரிக்கிறவர் பழனி சுவாமி.

ஒரு தகர டப்பாவில் பழைய சோறும், அதன் மீது உப்பும் தூவி, மேலே ஊறுகாய் வைத்துக் கொடுத்தார் பழனி சுவாமி. எதிரே உணவு வைக்கப்பட்டதும், வேங்கடராமன் அதை எடுத்து உண்டான். பசி அடங்கியது. அருணாசலேஸ்வரர் தன் குழந்தைக்குக் கொடுத்த முதல் உணவு; தன் சீடனுக்கிட்ட முதல் பிசைவு; கையேந்தாமல் கிடைத்த பிரசாதம்.

"தோ பார்டா..! ஒரு மொட்டை, அசையாம சிலை மாதிரி உட்கார்ந்திருக்கு!" - ஒரு பையன் சுட்டிக் காட்டினான்.

"ஆட மாட்டானா? ஒரு கல்லு விட்டா, தானா ஆடுவான். இப்ப பாரு, ஆட வைக்கிறேன்!" - இன்னொரு பையன் சவால் விட்டான். விதியின் கோரப்பிடியில் மாட்டிக்கொண்டிருந்த பிள்ளை, பாவம் செய்யத் தூண்டப்பட்டான். கல் எகிறி, சடேரென்று பக்கத்துத் தூணைத் தாண்டி, தலையை உரசிப் போயிற்று.

"அசையலையே!"



இன்னொரு கல் விட்டான். அந்தக் கல்லும் மேலே படாமல் போயிற்று. இன்னும் இரண்டு பையன்கள் முயற்சி செய்தார்கள். குடிப்பவரைப் பார்த்துக் குடிப்பதும், கோபப் படுபவரைப் பார்த்துக் கோபப்படுவதும், பாவம் செய்பவனைப் பார்த்துப் பாவம் செய்வதும் இந்த உலகத்தின் இயற்கை. விதிவசத்தால் அந்தப் பையன்கள் தொடர்ந்து கல் எறிந்தார்கள். பின்பு, யாரோ துரத்த, சிதறி ஓடினார்கள்.

'இந்த இடம் சரியில்லையே!'- பாலசுவாமி மெள்ள எழுந்தார். அவருக்குள் எந்த வருத்தமுமில்லை. யார் முகமும் பதியவில்லை. மீண்டும் கல் வீசி அவர்கள் பாவம் செய்யாமல் இருக்கவேண்டுமே என்ற எண்ணத்தினாலோ என்னவோ, நகர்ந்து வேறொரு இடத்துக்குப் போனார்.

அது பாழடைந்த மண்டபம். மண்டபத் தின் கீழே, பாதாளத்தில் சிவலிங்கம் இருந்தது. பாதாள லிங்கேஸ்வரர் என்று அதற்குக் காரணப்பெயரிட்டிருந்தார்கள். யாரோ ஒருவரின் சமாதியின்மீது வைக்கப் பட்ட லிங்கம் அது. ஓர் இனத்தாருக்குச் சொந்தமான இடத்தை அரசர் வாங்கி இடித்துக் கல்மண்டபமாகக் கட்டியிருந்தார். சிவலிங்கத்தை அகற்றாமல் இருந்தார். அதைச் சுற்றிக் கல் மண்டபம் கட்டியதால், சிவலிங்கம் பாதாளத்துக்குப் போயிற்று. மண்டபம், சிவலிங்கத்தைவிட உயரத்தில் இருந்தது. ஆனால், அது கல்லெறிவதற்கு வசதியாக இருந்தது.

தூணுக்குப் பின்னே நின்று, மறுநாளும் அதற்கு அடுத்த நாளும்கூட அந்தப் பிள்ளைகள் கல் எறிந்தார்கள். இரண்டு, மூன்று கற்கள் மேலே பட்டன. பாலசுவாமி அசையாமல் இருந்தார். தன்னைச் சுற்றி என்ன நடக்கிறதென்று சிறிதும் அறியாதிருந்தார். தான் உட்கார்ந்திருந்த இடத்தில் என்ன இருக்கிறது என்பதும் தெரியாதிருந்தார். உட்கார்ந்த இடம் ஈரப்பதமாக இருந்தது. ஈரமான இடத்தில் விஷ ஜந்துக்கள் அலைந்தன. தொடையைப் பூரான்கள் அரித்தன. எறும்புகள் கடித்தன. அட்டைகள் தொற்றிக் கொண்டு, ஒட்டி உறிஞ்சின.

தேகம் என்பது பற்றிய சிந்தனை இல்லாமல், மனம் உள்ளுக்குள் போய், உள்ளே என்ன இருக்கிறதோ அதை இறுகிப் பற்றிக்கொண்டிருந்ததால், வெளியே நடப்பது முற்றிலும் தெரியாமல் போயிற்று.

"நாம கல்லடிச்சும் இந்த மொட்டை வெளியே வரலை. அசையாம உள்ளேயே இருக்கான், பாரேன்!"





கண்களைச் சுருக்கிக்கொண்டு பையன்கள் இருட்டுக்குள் உற்றுப் பார்த்தார்கள். ஆள் இருப்பதைக் கண்டு கொண்டார்கள். இந்த முறை எப்படியேனும் மேலே படும்படி அடித்து, இம்மியேனும் அசைத்து விடவேண்டுமென்ற ஆவேசத் தோடு, கற்கள் பொறுக்கி வீச ஆரம்பித்தார்கள். இப்படி அவர்கள் கல் வீசுவது பாலசுவாமியை நோக்கி மட்டுமல்ல; இதற்கு முன் பல பேரை நோக்கி எறிந்திருக்கிறார்கள். திருவண்ணா மலையில் வானம் பார்த்துச் சிரித்துக்கொண்டும், இடுப்பில் கை வைத்தபடி நடந்தவாறு தனக்குத்தானே பேசிக்கொண்டும் இருக்கின்ற சேஷாத்ரி சுவாமிகளைப் பார்த்தாலும் கல் விட்டு எறிவார்கள்.

'பைத்தியம்தான் தனக்குத்தானே பேசும்; பைத்தியம் தான் வானம் பார்த்துப் பேசும்' என்று அவர்களுக்குச் சொல்லிக் கொடுக்கப்பட்டிருந்தது. தன்னுள் கவனித்துப் பேசுவது என்பது, தனக்குத் தானே பேசுவது போல் தோன்றும் என அவர்களுக்கு யாரும் சொல்லிக் கொடுக்கவில்லை. சொல்லித் தரக்கூடிய வலிமை அவர்களைச் சார்ந்தோருக்கு இல்லை. எனவே, சாதுக்கள் மீது கல் எறிவது அவர்களுக்கு ஆனந்த விளையாட்டாக இருந்தது. அப்படி அடிபட்டு அவஸ்தைப்பட்ட சேஷாத்ரி சுவாமிகள், இப்போது யார் அடி வாங்குவது என்று தவித்து, வேகமாக மண்டபத்துக்குப் பாய்ந்தோடினார். பையன்களை அதட்டி விரட்டினார்.

'உள்ளே யார்?' என்று குரல் கொடுத்தார். ஆள் இருப்பது தெரிந்தது. அசைவில்லை.

மௌன சுவாமியையும், பழனி சுவாமியையும் குரல் கொடுத்து அழைத்தார். இருவரும் வந்தனர். உள்ளே போய், மெள்ள பால சுவாமியைத் தூக்கிக்கொண்டு வெளியே வந்தார்கள். மண்டபத்தில் உட்கார வைத்தார்கள். பின் பக்கம் முழுவதும் எறும்பால் அரிக்கப்பட்டிருந்தது. பூச்சியால் கடிக்கப்பட்டிருந்தது. ரணம் அதிகமாகி, சீழ் கோத்துக் குதறிக் கொண்டிருந்தது.

'இது எவ்வளவு வலி கொடுக்கும்! இந்த வலியைப் பொறுத்துக்கொண்டு தன்னை மறந்து இருக்க முடியுமா! இத்தனை கல் வீச்சை தாங்கிக்கொண்டு இருக்கமுடியுமா! என்ன மாதிரி சுவாமி இது! என்ன தபஸ் இது! எப்படி கிடைத்தது!'

ஆச்சரியப்பட்டார்கள். எழுப்பி நிற்க வைத்து, மருந்து போட்டார்கள். மெள்ளக் கைத்தாங்கலாய் அழைத்துக் கொண்டு வந்து, நந்தவனத்தில் உட்கார வைத்தார்கள். சோறு கொடுத்தார்கள்.

'இந்தத் தவத்தைக் கலைக்க வேண்டாம். இருக்கட்டும்' என்று சேஷாத்ரி சுவாமிகள் சொல்ல, வேளாவேளைக்கு உணவு மட்டும் கொடுத்துக் கவனித்து வந்தார்கள். ஆனால் அங்கும் தொந்தரவு தொடர்ந்தது.

'அங்கே தப்பிச்சுட்டே! இங்கே இருக்க விடுவோமா!' இன்னொரு போக்கிரிக் கும்பல் சேர்ந்துகொண்டது. பிறரைக் கொடுமை செய்து பழகி, அதில் இன்பம் கண்டுவிட்டால், பிறகு விடுவது கடினம். எந்த நேரமும் மனம் கொடுமையைப் பற்றியே நிற்கும். இது பூர்வஜென்ம கர்மா. போன ஜென்ம சாபம். ஒற்றைச் சாபம் நூறாய் பெருகி, அட்டகாசம் செய்வதற்குண்டான தூண்டுதல்.

உயரமான அரளிச்செடிகள் கூடிய அந்த நந்தவனத்தில் ஏதேனும் ஒரு மரத்தடியில் கண் மூடி பால சுவாமிகள் இருப்பார். பிறகு, விழித்துப் பார்க்கும்போது, வேறொரு மரத்தடியில் கிடப்பதை உணர்வார்.

எப்படிப் போனோம், எது நடந்தது, எது நகர்ந்தது, எப்படி நகர்ந்தோம் என்று தெரியாமல், மறுபடி கண் மூடி அமர்வார். எத்தனை தொந்தரவுகள் வந்தபோதும், எத்தனை வேதனைகள் வந்தபோதும் தவம் கலையவில்லை; மனம் ஒருமையிலிருந்து நீங்கவில்லை; வைராக்கியம் குறையவில்லை.

இல்லை... அது தவம்கூட இல்லை. தவம் குறிக்கோள் உடையது. எந்த இலக்கும் இல்லாமல் தன்னையே அவதானித்து, தனக்குள்ளேயே மூழ்கிக்கிடக்கின்ற மிகப் பெரிய பேரானந்தத்தை, அந்த பாலசுவாமி இடையறாது அனுபவித்துக் கொண்டிருந்தார். அண்ணாமலையார், அவருக்கு இன்னும் நிம்மதியான ஓர் இடம் தரவேண்டும் என்று ஆசைப்பட்டார். அதற்குண்டான மனிதர் கள் நகர்ந்து, பால சுவாமியை நோக்கி வரத் துவங்கினார்கள்.

கடவுளிடம் தன்னை ஒப்படைத்தவருக்கு எந்தக் கவலையும் இல்லை. கடவுள் அவரை மிக நிச்சயம் காப்பாற்றுவார். எப்படிக் காப்பாற்றுவார்? அது கடவுளுக்கு மட்டுமே தெரிந்த ரகசியம்!

மகான்கள் வெயிலில் நடக்கும்போது, ஒரு மேகம் நகர்ந்து வந்து நிழல் கொடுக்குமாம்; பகல் முழுவதும் பாதுகாக்குமாம். பொங்கி வரும் ஆற்று வெள்ளம், அந்த மகானின் வீட்டுக்கருகே வந்ததும் விலகி வளைந்து, வேறு திசையில் ஓடுமாம். காடுகளில் நடக்கும்போது கொடிய சிறுத்தையும், சிங்கமும், களிறும் உற்றுப் பார்த்துவிட்டு, மெள்ளப் பின்வாங்குமாம்.

வேங்கடராமன் என்று மதுரையில் அழைக்கப்பட்ட பாலசுவாமி, திருவண்ணாமலையில் அங்குமிங்கும் மோன தவத்தில் ஆழ்ந்தபோது, அவருக்கு இடைஞ்சல் செய்ய வந்த சிலரைப் போலவே, உதவி செய்யவும் சிலர் வந்தனர். அண்ணாமலையார் சந்நிதியில் பூஜை செய்யும் வயதான குருக்கள் ஒருவர், ஸ்வாமி பிரசாதம் கொடுப்பதுடன் மட்டுமல்லாமல், தன் வீட்டிலிருந்து உணவும் அனுப்பினார்; கெஞ்சிக் கூத்தாடி உண்ண வைத்தார்.

பாலசுவாமியின் கோவணத் துணி நைந்து கிழிந்திருந்தது. இடுப்பில் கட்டியிருந்த கயிறு அறுந்திருந்தது. கயிறு கட்டும் இடத்தில் இறுக்கிக் கட்டியதால், ரணம் உண்டாகியிருந்தது. தன்னிடம் இருந்த ஒரு வேட்டி யைக் கிழித்து, ரணம் தாண்டி இடுப்பில் கட்டி, மீதித் துண்டைக் கோவணமாக்கி பாலசுவாமிக்கு அணிவித்தார் குருக்கள். 'கார்த்திகை மாதம் வருகிறது. மக்கள் அதிகம் கூடுவர். அப்போது நிர்வாணமாக இருந்தால், காவல்துறையினர் அதைக் கண்டிப்பார்கள். கைதும் செய்யக்கூடும். எனவே, கோவணம் இருக்கட்டும்' என்று அந்த வயதான குருக்கள் வேண்டிக்கொண்டார்.ஆனால் இருப்பதும், இல்லாததும் அந்தப் பிள்ளைக்குத் தெரியவில்லை. உடுத்துவதும் உடுத்தாததும் ஒரு முக்கியமான விஷயமாகவே பாலசுவாமிக்குப் படவில்லை.

கார்த்திகை மாதம் பிரம்மோற்ஸவம் இருக்க, கும்பல் கும்பலாக ஜனங்கள் திருவண்ணாமலைக்கு வந்தனர். வந்தவர்களில் ஒரு பகுதியினர், பால சுவாமியைப் பார்த்துவிட்டு, எதனாலோ கவரப்பட்டு, சிறிது நேரம் அவர் எதிரே அமர்ந்துவிட்டுப் போனார்கள்.

உத்தண்டி நாயனார் என்பவர், வந்த வாசிக்கு அருகிலுள்ள பொன்மணி என்ற கிராமத்திலிருந்து கார்த்திகை உற்ஸவத்துக்கு வந்தார். ஆன்மிகத்தில் நாட்டமுடை யவர் அவர். நல்ல புத்தகங்களைப் படித்து, தன்னை ஒரு நிலைக்கு உயர்த்திக் கொண்டவர். ஆனாலும், தினசரி வாழ்வின் பதற்றமும் கவலைகளும் போகவில்லை. அமைதி வருவதும் போவதுமாக இருந்ததே தவிர, நிரந்தரமாக உள்ளே படரவில்லை. பழைய வாசனைகளாய், சிலநேரம் கோபம் சிலிர்த்துக்கொண்டு வந்தது. கோபம் வந்த கணத்தில் வெட்கமும் கவலையும் வந்தன. 'என்ன பிறப்பு இது!' என்று தன்னைத் தானே நொந்துகொண்டார். சில நேரம் மிகுந்த ஜொலிப்போடு, மற்றவர்கள் வணங்கத்தக்க வகையில் நடந்துகொண்டார்.

அவர் பாலசுவாமியைப் பார்த்ததும், ஆச்சரியத்தில் மூழ்கினார். 'அடடே! இங்கு ஓர் ஆனந்தப் பரவசம் வளர்ந்துகொண்டிருக் கிறதே! இந்த இடத்தில் நிற்பதே மிகவும் சந்தோஷமாக இருக்கிறதே! இதுவரை அனுபவித்திராத ஓர் அமைதியை இந்த இடத்தில் அனுபவிக்கிறேனே! இந்த பால சுவாமி சிந்துகின்ற அமைதியே இத்தனை சுகமாக இருக்குமென்றால், உள்ளே எத்தனை பேரானந்தம் இருக்கும்!

'கடவுளே... அண்ணாமலையாரே..! இதற்கல்லவா இத்தனைக் காலம் தவம் செய்துகொண்டிருந்தேன். இதெல்லாம் கிடைக்காது மனிதர்களுக்கு என்றல்லவா நினைத்துக்கொண்டிருந்தேன்! தெய்வ தரிசனம்

என்பதெல்லாம் கட்டுக்கதையோ என்று சந்தேகப்பட்டடேனே! இவன் வெறும் இளைஞனல்ல; ஞானி! இவன் வெறும் சிறுவனல்ல; பூரணன். இது வெறும் மனித உடல் அல்ல; தெய்வாம்சத்தைத் தன்னுள் தேக்கியிருக்கின்ற பாத்திரம்.'

உத்தண்டி நாயனார் உள்ளம் உருகினார். வீட்டுக்குத் திரும்புவதை அறவே மறந்தார். அங்கேயே, அவருக்கு அருகே படுத்துக்கொண்டு, சிறு சிறு உதவிகளைச் செய்து, பாலசுவாமியை வேறு எவரும் தொந்தரவு செய்யாமல் இருக்கும்படி பார்த்துக்கொண்டார்.



இது பாலசுவாமிக்கு பெரிய உதவியாக அமைந்தது. அந்த இலுப்பை மரத்தடியில் உத்தண்டி நாயனாரும் பாலசுவாமியும் இருக்கும் போது, ராஜம்மாள் என்ற பெண் அவருக்கு உணவு தர ஆசைப்பட்டாள். இளம் வயதினள்; கணிகையர் குலம். அவள், தனது உறவுக்காரப்பையனுடன் அவருக்கு உணவு கொடுக்க வருவாள். இளம்பெண் என்பதால், சுவாமியைத் தொட்டு எழுப்ப முடியாது என்று உறவுக் காரப் பையனின் உதவியை நாடினாள். சில காலத்துக்குப் பிறகு, அந்தப் பையன் வருவதை நிறுத்திவிட்டான். ராஜம்மாள் விடவில்லை; தாயாருடன் வந்து, வயது முதிர்ந்த தாயார் தொட்டு எழுப்ப, பாலசுவாமிக்கு உணவு கொடுத்தாள். அவள் கொண்டு வரும் உணவு களில் சிறு பகுதியை பாலசுவாமி ஏற்றுக் கொண்டார். உத்தண்டி நாயனாருக்கும் உணவு கிடைத்தது.

பல நாட்கள் எந்தப் பிரதிபலனும் பாராமல், ராஜம்மாள் உள்ளுணர்வு தாக்கச் செய்த இந்தப் பணிவிடை, அவளுக்குப் பெரும்பேறு கிடைக்க வைத்தது. கணிகையர் குலத்தில் பிறந்திருந்தாலும், அவளை விருப்பப்பட்டு ஒரு தனவான் மணந்துகொண்டார். மிக மரியாதையாக நடத்தினார். அவளுக்குப் பிறந்த பெண் குழந்தைக்கும் பிற்பாடு நல்ல இடத்தில் திருமணமானது. கணிகையர் குலம் என்ற பெயர் காணாமல் போயிற்று.

வேலூரார் என்று அழைக்கப்பட்ட வேலாயுதம் செட்டியாரின் மனைவி ரத்தினம்மாள், பாலசுவாமிக்கு உணவு அளித்து வந்தார். உணவு கொடுப்பதற்கும், அவரை உலுக்கி எழுப்பி வாயைத் திறக்க வைத்து, உணவு கொடுக்க வேண்டியிருந்தது.

சாதுக்களுக்கு உணவளிப்பதைப் பெரிய கடமையா கச் செய்து வந்த ஒரு பெண்மணி, தன் வீட்டுக்கு பாலசுவாமியை அழைத்து விருந்து படைக்க ஆசைப்பட்டார். வற்புறுத்தி அழைத்தார். ஆனால், பாலசுவாமி இணங்கவில்லை. 'நான் பிச்சையெடுத்துதான் உண்பேன். எவர் வீட்டுக்கும் விருந்துக்குப் போக மாட்டேன்' என்று சைகையில் சொல்ல, அவர் வருத்தத்துடன் திரும்பிச் சென்றார்.

மெள்ள பாலசுவாமி எழுந்து, தெருவோரம் நடந்தார். ஒரு வீட்டின் முன் போய் நின்று, கை தட்டினார். அது குருக்கள் வீடு. உள்ளிருந்து அந்த அம்மாள் பரபரப்புடன் ஓடி வந்து, அவருக்கு உணவு அளித்தார்; இறந்துபோன தன் மகனே நேரில் வந்ததாக உணர்ந்தார். கைகளில் உணவு விழுந்ததும், அதை ருசி பாராமல் அப்படியே சாப்பிட்டுவிட்டு, கைகளைத் தன் தலையில் தடவிக்கொண்டு, சுவாமி தொடர்ந்து தெருவோரம் நடக்க ஆரம்பித்துவிட்டார்.

திருவண்ணாமலைக்கு வந்து நான்கு மாதங்கள் கழித்து, ஒரு பெண்மணி அவருக்கு வலுக்கட்டாய மாக உடம்பில் எண்ணெய் தடவி, சிகைக்காய் போட்டு, தலையில் நீர் ஊற்றிக் குளிப்பாட்டிச் சுத்தம் செய்தார். அதுதான் திருவண்ணாமலைக்கு வந்து முதல் குளியல். அதற்குப் பிறகு அவர் ஒரு வருடம்

குளிக்கவேயில்லை. ஒரு அன்பர் சவரத்துக்கு ஏற்பாடு செய்ய, சுவாமி அதை வேண்டாமென்று சொல்லிவிட்டார்.



13-ஆம் நூற்றாண்டில் வீரசிகாமணி பரமாச்சார்யர் என்ற சாது, அண்ணாமலையார் மீது பக்திகொண்டு பல அற்புதங்கள் செய்துவந்தார். அவர் தன் உடலை நீத்ததும், அவரைத் திருவண்ணாமலையிலேயே ஓர் இடத்தில் அடக்கம் செய்து, லிங்கம் ஸ்தாபித்து, சிறு சமாதியை எழுப்பினர். அந்த இடத்தைச் சுற்றி நிலம் வாங்கி, மடம் அமைத்தனர். அந்தச் சீடர் பரம்பரை இடம்பெயர்ந்து, குன்றக்குடி ஆதீனமாக மாறிற்று.

அப்படி ஸ்தாபிக்கப்பட்ட மடத்தில் கட்டளைத் தம்பிரானாக இருந்தவர், அந்த மடத்தின் தலைவருடன் பிணக்கு ஏற்பட, அங்கிருந்து விலகி வந்து திருவண்ணாமலையில் உள்ள குரு மூர்த்தத்துக்கு பூஜை செய்யத் துவங்கினார். யார் அந்த மடத்தை ஸ்தாபித்தாரோ, அவரோடு தன் காலத் தைக் கழிக்க விரும்பினார். அவர்கள் எல்லோரும் திருவண்ணாமலையில் தேவார, திருவாசகங்களைப் பாடி, பொருளோ உணவோ பெற்று, அதைக்கொண்டு வாழ்க்கை நடத்தி வந்தனர். அந்தத் தம்பிரானின் பெயர் அண்ணாமலை.

அண்ணாமலைத் தம்பிரான், திருவண்ணாமலை கோயில் நோக்கிப் போகும் போது, இலுப்பை மரத்தடியில் மௌனமாக வீற்றிருந்த பால சுவாமியைப் பார்க்க நேர்ந்தது.

இது அற்புதமான ஓர் இடத்தில் இருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்துபோயிற்று. அவரைச் சிலர் தொந்தரவு செய்கின்றனர் என்பதும் தெரிய வந்தது. உத்தண்டி நாயனாரிடம், 'எதற்கு இந்த இடத்திலிருந்து அவஸ்தைப்பட வேண்டும்? என்னு டைய குருமூர்த்தத்தைச் சுற்றிலும் சுவர் எழுப்பி, வாசலில் கதவு போட்டு, தோட்டம் அமைத்து, நன்றாக வைத்திருக்கிறேன். பாலசுவாமி அங்கு வந்து இருக்கட்டுமே!' என்று வேண்டுகோள் வைத்தார். உத்தண்டி நாயனார் பாலசுவாமியிடம் தெரிவிக்க, அவரும் சம்மதிக்க, இருவரும் குருமூர்த்தத்துக்கு இடம் பெயர்ந்தனர்.

சுற்றிலும் மலர்த் தோட்டம்; சுவர் எழுப்பி, சிவ லிங்கம் வைத்த சமாதி; சுற்றிலும் செடி கொடிகள்; உயர்ந்த மரங்கள்; திருவண்ணாமலையின் ஜன சந்தடியில் இருந்து விலகியிருந்தது. ஆனால், அங்கும் எறும்புத் தொந்தரவு இருந்தது.

பாலசுவாமியை ஒரு முக்காலியில் உட்கார வைத்து, முக்காலிக்குக் கீழே தண்ணீர்க் குளம் தேக்கி, எறும்புகள் ஏறாதபடி பாதுகாத்தனர். பாலசுவாமி இங்கே இருப்பது தெரிந்து, இங்கேயும் மக்கள் கூட்டம் மெள்ளச் சாய்ந்தது. வகை வகையான உணவுகளை எடுத்துக்கொண்டு வந்து, பால சுவாமியைச் சாப்பிடச் சொல்லி வற்புறுத்துவது வழக்கமாயிற்று.

கஞ்சி, பாயசம், பழச்சாறு மூன்றையும் ஒன்றா கக் கலந்து கூழாக்கி, ஒருவேளை மட்டும் சிறு மிடறுகள் பாலசுவாமி குடிப்பார். அவருக்கு அதுவே போதுமானதாக இருந்தது. உயிர் வாழ்தலுக்கு உண்டான உணவு அவருக்குக் கிடைத்தது. மற்றபடி, ருசியான உணவு அவருக்குத் தேவையாக இருக்கவில்லை. ஆனந்தமாய் உள்ளே அமிழ்ந்துகிடப்பதே அவருக்கு இயல்பாயிற்று. மனம் என்கிற விஷயம் இல்லை; உடம்பு பற்றிய சிந்தனை இல்லை; அதனால், உணவு பற்றிய அக்கறையும் இல்லை. உடைகள் பற்றிய லட்சியமில்லை.

அண்ணாமலைத் தம்பிரான் பால சுவாமியின் தலைக்கு எண்ணெய் தடவி, சிகைக்காய் தேய்த்துக் குளிப் பாட்ட விரும்பினார்; சந்தனம் தடவி அபிஷேகம் செய்ய விரும்பினார். அதற்கான ஆயத்தங்களைச் செய்தார். பாலசுவாமிக்கு அது மிகப் பெரிய தொந்தரவாக இருந்தது.

ஒரு ஞானியின் தேவை என்ன என்பதைச் சாதாரண மனிதர்களால் ஒருபோதும் புரிந்துகொள்ளமுடியாது. ஞானிக்குத் தேவை என்ன? ஞானிக்கு எதுவுமே தேவையில்லை என்பதே உண்மை. விருப்பமாக ஒரு ஞானி எதையும் செய்வதில்லை. ஆனால், உயிர் வாழத் தேவையான அளவு தன்னை வைத்துக்கொள்ளவே ஒரு ஞானி விரும்புவார். அதற்கு உள்ளங்கை அளவு சோறு போதும்; ஒரு குவளை பால் போதும்; அல்லது, ஒரு சொம்பு பழரசம் போதும்.

உண்பதும் உடுப்பதும் தலைக்கு எண்ணெய் தடவி மினுக்குவதும், ஞானி ஒருநாளும் செய்யமாட்டார். தன்னைச் சிங்காரித்துக்கொள்ள முற்படுகிறவருக்கும் ஞானத்துக்கும் சம்பந்தமில்லை.

தினம் தினம் இந்த அபிஷேக அவஸ்தை தொந்தரவாகி விடுமோ என்று பயந்த சுவாமி, சுவரில் 'இதற்குத் தொண்டு இதுவே' என்று எழுதினார். உணவு நேரத்தின்போது அண்ணாமலை தம்பிரானிடம் அதை சுட்டிக் காட்டினார். உணவு கொடுத்தால் போதும், மற்ற எந்த உபத்திரவங்களும் செய்யவேண்டாம் என்பதைச் சொல்லாமல் சொல்ல, அண்ணாமலை தம்பிரானுக்குப் புரிந்துபோயிற்று. ஆனால், மற்ற அன்பர்களின் வருகையும், உணவு கொடுத்துவிட்டு, 'உண்ணுங்கள்... உண்ணுங்கள்' என்கிற தொந்தரவும் அதிகரித்ததாம்.


தான் பாலசுவாமியாக இருந்தபோது பட்ட கஷ்டங்களை, பின்னாட்களில் ரமண மகரிஷி மிகச் சிரிப்புடன் குறிப்பிடுவது உண்டு.

"ஒவ்வொருவரும், விதம்விதமான உணவுகளைக் கொடுத்து உண்ண வற்புறுத்துவதும், 'இவள் கையால் கொஞ்சம் வை; அவள் கையால் கொஞ்சம் வை' என்று மாறி மாறி, ஒரே உணவை பிடிப்பிடியாக வைப்பதும், அதை நான் தின்றாக வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதும் மிகக் கொடுமையாக இருந்தன.

எல்லாம் இழந்து, துறவியாய் இருப்பது எளிதல்ல. அதில் அதிக பிரச்னைகள் இருக்கின்றன. எந்த நிலையில் இருக்கிறோம் என்று அறியாது, மேலே விழுந்து பிடுங்கி உதவி செய்ய வருகிறவரின் உபத்திரவத்தை, மௌனமாகச் சகித்துக்கொள்ளக் கொஞ்சம் பிரயத்தனப் படத்தான் வேண்டியிருந்தது" என்றும் சொல்வார்.

உலகத்துக்கு ஆரவாரம்தான் இயல்பான மொழி. அங்கு அமைதியாக இருக்கிறவர்களைக் கண்டால், ஆரவாரமான இந்த உலகத்துக்கு மெல்லியதான பயமும் பொறாமையும் ஏற்படும்.

எப்படி... எப்படி இந்த மாதிரி அமைதியாக இருக்க முடிகிறது! என்னிடத்தில் இல்லையே இந்த அமைதி. என்னிடத்தில் இல்லையே இந்த ஆனந்தம். இந்த சூழ்நிலைக்குள் நுழைந்ததுமே, என் கண்ணில் நீர் பெருகுகிறதே.... மனம் விம்முகிறதே..! இதைப் பார்த்த உடனேயே உடலும் மனமும் துவண்டு போகிறதே! இப்படி இருக்கத்தானே நானும் விரும்பினேன். என்னால் முடியவில்லையே என்ற பெரும் கதறல், கூவல் எழுகிறதே!



எனக்கு வரவில்லை. என்னால் இப்படி உட்காரமுடியாது. உன்னால் முடிகிறது. உனக்கு என்னால் என்ன ஆகுமோ அதைச் செய்கிறேன். உனக்குப் பழம் வேண்டுமா, பால் வேண்டுமா, உணவு வேண்டுமா, விசிறி வேண்டுமா, வேட்டி வேண்டுமா, இந்த இடத்தைப் பெருக்கிச் சுத்தம் செய்து புண்ணியம் சம்பாதித்துக்கொள்ளட்டுமா? நடக்கும் போது குடை பிடித்து வந்து, பெரும்பேறு அடையட்டுமா? நின்ற இடத்தை, அமர்ந்த இடத்தைச் சுத்தம் செய்து, அதனால் மனநிம்மதி பெறட்டுமா என்று சுற்றி வரத் துவங்குவார்கள்.


சுத்தம் - அழுக்கு என்ற இரு மனநிலைகளில் சாதாரண மனிதர்கள் இருக்க, அந்த மகானோ இவையெல்லாம் கடந்த நிலையில், இதைப் பற்றிய எந்த பிரக்ஞையும் இல்லாமல் வெறுமே அமர்ந்திருக்கிறார்.

மதுரையிலிருந்து வந்த வேங்கடராமன் என்ற இயற்பெயர் கொண்ட இந்த பாலசுவாமியின் நிலைமை என்ன? இவர் ஏன் இப்படி மௌனமாக தனக்குள்ளே தான் மூழ்கி, எந்த உணர்வும் அற்று இருக்கவேண்டும்? உண்ணுதல் குறித்தோ, உறங்குதல் குறித்தோ கவலையில்லாமல் ஏன் இப்படி மௌனமாக இருக்க வேண்டும்?

இது, தன்னைத்தானே துன்புறுத்திக்கொள்ளும் விதமா அல்லது உன்னதமான இடமா? இது உன்னதமெனில், இந்த உன்னதத்தை ஏன் எல்லா மனிதர்களும் கைக்கொள்ள முடியவில்லை? இந்த உன்னதம், ஏன் வெகு சிலருக்கே வருகிறது? கேள்விகள் எழும்.

இந்த உலகத்தின் இயல்பு ஓசை என்றால், இந்த பிரபஞ்சத்தின் இயல்பு மௌனம். பிரபஞ்சம் ஒரு ரீங்காரமான சப்தத்துடன் மட்டுமே இருக்கிறது. மனிதர்களில் பலபேர் ஓசையோடு வாழ்ந்து, ஓசையோடே மரணிக்கிறார்கள். ஓசையற்று மனிதர்களால் இருக்க முடியாது. ஆனால், இந்த மனிதர்களில் சிலர், இந்தப் பிரபஞ்சத்தின் மௌனத்தை, இந்தப் பிரபஞ்சத்தின் ரீங்காரத்தைக் கண்டுபிடித்துவிடுகிறார்கள். அந்தச் சப்தத்தை மனம் ஸ்வீகரிக்க, பிரபஞ்சம் அவர்களோடு தொடர்புகொள்கிறது.

ஒரு கோடி பேருக்கு ஒரு சித்த புருஷர்; பத்து கோடி பேருக்கு ஒரு யோகி; நூறு கோடி பேருக்கு ஒரு மகான் என்ற கணக்கு உண்டு. மனிதர்களில் வெகு சிலருக்கே இந்த பிரபஞ்ச மௌனத்தோடு தொடர்புகொள்ளும் மன பாக்கியம் கிடைக்கும். இது பல ஜென்மங் களாய் வளர்ந்து வந்து, ஒரு ஜென்மத்தில் கனிந்து நிற்கும்.



இந்த பிரபஞ்ச சக்தி, இந்த மாதிரியான மனிதர்கள் மூலம் இந்த பூமியில் இறங்குகிறது. இங்கு காற்று சீராக வீசுகிறதெனில், வெயில் ஒழுங்காகக் காய்கிறதெனில், மழை அவ்வப்போது பெய்கிறதெனில், கடல் கட்டுக்குள் இருக்கிறதெனில், எரிமலை சீறாமல் இருக்கிறதெனில், இந்த பூமியின் சுழற்சி மிகச் சரியாக இருக்கிறதெனில், இரவு-பகல் சரியாகத் தோன்றுகின்றதெனில், பருவங்கள் நன்கு மாறுகிறதெனில், அதற்கு இந்தப் பிரபஞ்ச சக்தி, இங்குள்ள இம்மாதிரியான மனிதர்களோடு ஏற்படுத்திய தொடர்புதான் காரணம். இது விளம்பரப்படுத்தப்படாது. மற்றவருக்குச் சொல்லப்படாது. ரகசியமாக, அனாதியாக, இயல்பாக நடக்கிறது.

இதை இப்படிச் செய்கிறோம் என்று கொஞ்சமும் அலட்டுவதில்லை. பிரபஞ்சத்துடன் தொடர்புகொண்ட மகான்களும் அலட்டுவதில்லை. ஆனால், மகான்களுக்குத் தொண்டு செய்கின்ற பலருக்கு அலட்டல் வந்துவிடும். அகம்பாவம் தலைவிரித்தாடும்.

"நான்தான் இந்த மகானைப் பாத்துக்கறேன். நான் இல்லாட்டி இந்த மகான் இல்லை" என்று சிறுபிள்ளைத்தனமாகப் பேச நேரிடும்.

பகவான் ரமணர், தனக்கு உணவு கொடுக்க வந்த இந்த மனிதர்களின் கர்வத்தையும், அகம்பாவம் பற்றியும் மிக வருத்தமாகப் பேசியிருக்கிறார்.

ஒருமுறை ஒரு மகானை நமஸ்கரித்து வந்தால், உள்ளுக்குள்ளே ஒரு அமைதியும், சந்துஷ்டியும் பரவும். அமைதியும் சந்துஷ்டியும் வெளியே போய் விவகாரத்தில் ஈடுபட, அந்த விவகாரங்கள் நல்லபடி நடக்கும். அவை நல்லபடி நடப்பதால், இவர்கள் எது லாபம் என்று நினைக்கிறார்களோ, அது மடியில் வந்து விழும். அது மடியில் வந்து விழுந்தவுடன், 'அடடா! ஒரு முறை நமஸ்கரித்ததற்கே இவ்வளவு லாபமா! விடப்போவதில்லை இந்த மகானை!' என்று சுற்றிச் சுற்றி ஓடி வந்து தொந்தரவு செய்ய முற்படுகிறபோது, அதே விஷயமே எதிர்மறையாக, தவறாக, தண்டனைக்கானதாக மாறிவிடுகிறது.

எரிகின்ற தழலுக்கருகே வாழ்பவர், ஒரு நல்ல இடைவெளி விட்டு உட்கார்ந்துகொள்வது நல்லது. அதிகம் விலகியிருந்தால் குளிரும்; மிகவும் நெருங்கியிருந்தால் சுட்டுப் பொசுக்கிவிடும். மகான்கள் எரியும் தழல் போன்றவர் கள். ஒரு நல்ல சூடு மட்டுமே தன் மீது பரவியிருக்கின்ற ஒரு இடத்தில் அமர்ந்துகொண்டு தழலை தரிசிப்பது ஆனந்தமானது. அது நிச்சயம்
அமைதியைத் தரும்.



ஒரு நடிகனைப் பார்த்ததும் நடிகனாகவேண்டும் என்று ஆசையும், அரசியல்வாதியைப் பார்த்ததும் தானும் அதிகாரம் செய்யவேண்டும் என்ற ஆசையும், ஒரு அதிகாரியைப் பார்த்ததும் அதே அலட்டல் தனக்கும் வர வேண்டுமென்ற ஆசையும் மனிதர்க்கு எழுவது போலவே, ஒரு மகானைப் பார்த்து, தானும் மகானாக வேண்டும் என்ற பேராசை எழுவது இயல்பு.

அதிகாரியாகவும், அரசியல்வாதியாகவும், நடிகராக வும் மாறிவிடலாம். ஆனால், மகானாக ஆவது என்பது முயற்சியால் வருவது அன்று. அது எல்லா முயற்சியும் ஓய்ந்துவிட, முற்றிலும் ஒழிந்துவிட, உள்ளுக்குள்ளிருந்து பீறிட்டுக் கிளம்புகின்ற பேரன்பு. கட்டுக்கடங்காத பெருங் கருணை. மூளையிலுள்ள எந்த செல்லும் இயங்காது, மூச்சுத் திணற அடிக்கின்ற மௌனம். தான் என்பது காணாமல் போகின்ற கனிவு. உள்ளும் புறமும் ஒளிர்கின்ற ஒரு மகோன்னதமான பிரகாசம். பட்டைத் தீட்டிய மாணிக்கக் கல்லில் மேலே விழுந்த சூரியக் கதிரும் பிரதிபலிக்கும்; உள்ளுக்குள் போன ஒளிக்கதிரும் சுடர் வீசும். உள்ளும் புறமும் ஒரு மாணிக்கக் கல் எப்படி சிவந்து காணப்படுகிறதோ, அப்படி ஒரு மகான் பிரகாசமாகக் காட்சியளிக்கிறார்.

மகானாக மாற முற்பட்டு, முடியாமல் போய் நடிக்கத் துவங்குகிறபோதுதான், மிகப் பெரிய அகோரமும் ஏற்பட்டுவிடுகிறது. ஒருவேளை உணவு கொடுத்ததாலேயே புனிதர்களாகிவிட்டோம் என்ற கற்பனையும், ஓரிரு வாரங்கள் அவருக்கு அருகே இருந்து உழைத்ததால் எல்லாமும் அறிந்துவிட்டோம் என்ற கர்வமும், தன்னோடு கை கோத்து கூடியிருந்துவிட்டால், தனக்கும் சகல கம்பீரம் வந்துவிட்டதான நினைப்பும் சாதாரண மனிதர்களைக் கவிழ்த்துப் போடும்.

மகானாவது எப்படி? எவ்விதம் முடியும்? ஒரு மகானுக்கு, யார் மகானாகப் போகிறார் என்று தெரியும். அவரை அழைத்துத் தலை தடவி, உச்சி முகர்ந்து, மிக எளிதில் உள்ளுக்குள் தள்ளி மகானாக்குவார். புலி, புலிக்குட்டியை நக்கித்தான் புலியாக்கும். புலிக்குட்டி எது என்று புலிக்குத் தெரியும். ஆனால், ஒரு புலிக்குட்டிக்கு, தான் புலிக்குட்டி என்று தெரியாது.

உத்தண்டி நாயனாருக்கு பாலசுவாமியைப் பிரிந்து ஊருக்குப் போக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. பாலசுவாமியை யார் கவனித்துக் கொள்வார்கள் என்ற கவலை ஏற்பட்டது. உணவுக்குப் பஞ்சமில்லை. யாராவது கொண்டு வந்து கொடுத்துவிடுவார்கள். ஆனால், சுவாமியை வேறு யாரும் தொந்தரவு செய்யாதிருக்கக் காவலுக்கு ஒரு ஆள் வேண்டுமே என்ற கவலை ஏற்பட்டது.

திருவண்ணாமலை ஐயன்குளத் தெருவில் இருக்கும் விநாயகருக்கு அபிஷேக- ஆராதனை செய்து வந்த பழனிசாமி என்கிற மலையாளி, அவ்வப்போது பாலசுவாமியை சந்தித்து வந்தார். 37 வயதான பழனிசாமி உப்பில்லாத நைவேத்தியத்தைதான் உணவாக எடுத்துக்கொண்டு வந்தார். விநாயகருடைய பூஜையே அவருக்கு மிக முக்கியமாக இருந்தது.

பழனிசாமிக்குப் பரிச்சயமான ஸ்ரீநிவாச ஐயர் என்பவர், "போறும்... கல் விக்கிரகத்தைக் கட்டிக்கொண்டு கடவுள், கடவுள் என்று அழுகிறாய். அதோ, கடவுளே மனித ரூபத்தில் உட்கார்ந்திருக்கிறார். யார் பிரம்மத்தை அறிந்தாரோ, அவர் கடவுளுக்கு நிகரானவர். போய் அவருக்கு உதவி செய். அவருக்கு பூஜை

செய்" என்று திசை திருப்பிவிட, பழனிசாமிக்கும் பாலசுவாமியின் மீது மிகப் பெரிய பிரேமை ஏற்பட்டது. அவருக்கு உதவி செய்யவேண்டும் என்ற நினைப்போடு குருமூர்த்தத்தை அடைந்து அவருக்கருகே உட்கார்ந்தபோது, சொல்லொண்ணாத ஓர் ஆழ்ந்த ஆன்மிக அனுபவம் ஏற்பட்டது.

இவர் இளைஞர் அல்ல; வெறும் மானுடர் அல்ல. இது பிரம்ம தேஜஸ் என்பது உள்ளுக்குள் உணர்த்தப்பட்டது. கேரளாவில், பாலக்காட்டுக்கு அருகே ஒரு சிற்றூரிலிருந்து, ஆன்மிகத் தேடல் அதிகமாக, வீட்டிலிருக்க முடியாமல், திருவண்ணாமலையே தனக்கு ஏற்ற தலம் என்று வந்து சேர்ந்தவர் பழனிசாமி. மலையும், கோயிலும், கோயிலுக்கருகே இருந்த சாதுக்களும் அவரைப் பரவசப்படுத்தினர்.



அதிகக் கூட்டமில்லாத ஐயன்குளத்து விநாயகருக்குப் பூஜை செய்வது, அவருக்குள் ஆழ்ந்த அமைதியை உண்டு பண்ணியது. ஏகாந்தமாய் இருக்க வைத்தது. புலன்களை ஒடுங்க வைத்தது. இது படிப்படியான முன்னேற்றம்.

ஒரு பக்குவமான நிலையில், பழனிசாமி பாலசுவாமியிடம் சரணடைந்தார்.

பக்குவம் அடைந்தவர்களுக்கு, ஞானியின் அண்மை பெரிய சுகம். அருகில் மௌனமாக உட்கார்ந்து கொண்டிருந்தால், அவ்வப்போது உள்ளுக் குள்ளிருந்து சிரிப்பு பீறிடும். கருணை பொங்கி வழியும். அன்பு ததும்பும். இத்தனைக்கும் ஒருவருக்கொருவர் நேருக்கு நேர் பார்க்கவேண்டிய அவசியமில்லை; பேச வேண்டிய கட்டாயமில்லை. பாட்டோ, படிப்போ அங்கு நடைபெறாது.

உணவு நேரத்தில் அந்த ஞானிக்கு உணவு கொடுத்துவிட்டு, கை- கால் முகம் துடைத்து, இடுப்புக் கோமணம் மாற்றி, ஞானி உட்காரும் இடத்தைச் சுத்தம் செய்து, மறுபடியும் உட்கார வைத்துவிட்டால், அன்றைய பொழுதின் கடமை முடிந்தது. மற்றபடி, யாராவது வந்து உரத்த குரலில் வேண்டுதல் வைக்கும்போது, மெல்லியதாக அதட்டி, அகற்ற வேண்டியது; மேலே விழுந்து தொடாமல் இருக்கக் காபந்து செய்ய வேண்டியது.

'உலகாயத லாபங்களைக் கேட்டு என்ன பயன்? உன்னுடைய ஆசைக்கும், துன்பத்துக்கும் எது காரணம்? எது துன்பப்படுகிறது என்று யோசித்துப் பார்!' என்று சிலரை ஆற்றுப்படுத்தி, அங்கே சிறிது நேரம் உட்கார வைத்து அனுப்புவதும் பழனிசாமியின் வழக்கம்.



பழனிசாமிக்கு தமிழ் எழுதப் படிக்கத் தெரியாது. மலையாளம் மட்டுமே தெரியும். ஆனாலும் விவேக சூடாமணி, கைவல்ய நவநீதம் என்ற தத்துவ நூல்களை அவர் வாசக சாலையிலிருந்து வாங்கி வந்து, எழுத்துக் கூட்டிப் படிப்பார். செந்தமிழ், தமிழ் பேசுகிறவர்களுக்கே கடினமாக இருக்கும். பழனிசாமிக்குத் தலையும் புரியாது; வாலும் புரியாது. ஆனாலும், விடா முயற்சியாக திரும்பத் திரும்ப அந்த வாக்கியங்களைப் படித்து, அவற்றைத் தனக்குள் பதிய வைத்துக்கொள்ள முயற்சி செய்வார்.

பழனிசாமியின் இந்த அவஸ்தை பாலசுவாமிக்குப் புரிந்தது. ஒருநாள் பழனிசாமியின் கையிலிருந்த புத்தகத்தை வாங்கி, எல்லாப் பக்கங்களையும் தடவிக் கொடுத்து, அவரிடம் திருப்பிக்கொடுத்தார். பழனிசாமிக்கு உள் ளுக்குள் திடீரென்று ஒரு மாற்றம்

ஏற்பட்டது. அந்தப் புத்தகத்திலுள்ள அத்தனை விஷயங்களும் படிக்காமலேயே அவருக்குப் புரிந்த மாதிரி இருந்தன.

'இதில் புதிதாக ஒன்றுமில்லை; இதையெல்லாம் நான் உணர்ந்திருக்கிறேனே! எல்லாம் என் அனுபவம்தானே. எனக்குத் தெரிந்ததுதானே இந்தப் புத்தகத்தில் எழுதியிருக்கிறது!' என்று பழனிசாமிக்குப் புரிந்துபோயிற்று. நெகிழ்ச்சியுடன் பாலசுவாமியை நோக்கிக் கை கூப்பினார். பாலசுவாமி மெல்லியதாய் ஒரு புன்னகை மட்டும் செய்தார்.

பழனிசாமி பாக்கியவான்; எங்கு வர வேண்டுமோ அங்கு வந்துவிட்டார்; எதைப் பெற வேண்டுமோ அதைப் பெற்றுவிட்டார். குருவின் கருணை மகத்தானது. சீடனின் தவிப்பை ஒரு குரு எளிதில் உணர்ந்துகொண்டு, அவருடைய ஆன்மிக தாகத்தைச் சுலபமாகத் தீர்த்து வைக்கிறார். நல்ல குரு அதிகம் பேசுவதில்லை. நீட்டி முழக்கிப் பிரசங்கங்கள் செய்வதில்லை. உடற்பயிற்சிகளுக்கு உத்தரவிடுவதில்லை. மூச்சைப் பிடி, மனதைப் பார் என்று வித்தைகள் காட்டுவதில்லை. சொல்லாமல் சொல்லி, நினையாமல் நினைந்து... பரிமாற்றங்கள் ஏற்பட்டுவிடும்.

தன்னைத் தொட்டவருக்கு, தன்னுள் மூழ்கியவருக்கு, தான் யார் என்று தெரிந்தவருக்கு, மற்றவரின் மனதையும் தொடமுடியும்; மாற்ற முடியும். குருவின் அண்மை ஒரு புளகாங்கிதம். உள்ளுக்குள் ஓடும் ஓர் ஓயாத சிரிப்பு. பரமானந்தம். கர்வமில்லாத கம்பீரம். கோபமில்லாத ஆளுமை. எதுவும் வேண்டாமை நிலை. என்ன வேண்டுமோ, அது நிச்சயம் கிடைக்கும் என்ற நம்பிக்கைச் சாரமுள்ள தனிமை. சத்துள்ள சிந்தனை.

குருவின் அண்மையில் சிறப்புற்ற சீடனுக்கு, தன் வாழ்நாள் எவ்வளவு என்று தெளிவாகத் தெரிந்துவிடும். எப்படி மரணம் என்றும் புரிந்துவிடும். பெருங்கேள்வி உடைந்து, உள்ளுக்குள்ளிருந்து முத்துப் போல பதில் தெரிந்தவுடன், 'இனி விதித்த வரை வாழ்வு' என்ற நிம்மதி வந்துவிடும். யாரோடும் பிணக்கு இராது; எதன் மீதும் ஆசை வராது.

'உன் கணக்கு, என் கணக்குக்கு முந்தியே முடிந்து போகும்; உன்னோடு எனக்கு என்ன சண்டை, வந்து உட்கார்' என்று பிரியத்துடன் முதுகு தடவ வைக்கும். எதிரி என்று எவருமிலர்; உறவு என்றும் எவருமிலர்; எல்லோரும் வந்து போகின்றவரே என்ற பெரும் கணக்கு புரிந்துபோகும். அது மகோன்னதமான விடுதலை.

எப்போதும் கடவுள்தன்மை உள்ளுக்குள் பொங்கிப் பிரவாகமாவதை உணரமுடியும். அப்போது, மகா வாக்கியங்களின் அர்த்தங்கள் தெள்ளத் தெளிவாகப் புரியும்.

*'எல்லாமற என்னை இழந்த நலம்*
*சொல்லாய் முருகா சுரபூபதியே'*
*'அடடே... இதுதானா..!'*

என்று இந்த வாக்கியத்தை முழுவதுமாக உணர முடியும்.

மனம் ஏகாந்த அமைதியில் மூழ்கியிருக்கும். உள்ளதை உள்ளபடி உணரத் துவங்கும். இதெல்லாம் சொல்லிக்கொடுத்து வராது. பிரசங்கங்களில் கேட்டுத் தெரிந்துகொள்ள முடியாது.பிரசங்கியின் கர்வமும், கேட்பவரின் பொறுமையின்மையும் எதிரெதிராக முட்டும்போது, கேட்பவை அனைத்தும் தவறாகப் புரிந்துகொள்ள நேரிடும். உள்ளது உள்ளபடி புரிந்துகொள்ள, பேச்சற்று இருத்தலே நல்லது!

உள்ளுக்குள்ளே ஒரு கல்லைப் புரட்டிப்போட்டு நீர் பொங்க வைப்பது தான் சிறந்தது. பக்குவமடைந்த சீடனுக்கு, மிகப்பெரிய ஞானி அம்மாற்றத்தை ஏற்படுத்திவிடுவார்.

பழனிசாமி, பக்குவமடைந்த சீடர். கடவுளைக் காண ஏங்கிப் பரிதவித்த மனம் அவருடையது. எங்கெங்கோ சுற்றி, பாலசுவாமியைப் பார்த்த மாத்திரத்தில், இவரே தன் குரு என்று உணர்ந்து கொண்டார்.

'அன்பெனும் பிடியில் அகப்படும் மலையே' என்று தாயுமான சுவாமியின் பாடலில் ஒரு வரி உண்டு. பழனிசாமியின் அன்பில் பாலசுவாமியும் கட்டுப்பட்டார்; கற்றுக்கொடுத்தார்.

இந்த நிலைமைக்கு வர அன்புதான் பிரதானம். அன்பாயிருக்க வெளியார் யாரும் கற்றுக்கொடுக்க முடியாது. அது உள்ளுக்குள் இயல்பாகப் பெருகி வரும் ஊற்று. அடைப்புகளை நீக்கிவிட்டால் ஊற்று தன்னால் பெருகி வரும்.

இதேபோல், திருவண்ணாமலை தாலுகா ஆபீஸில் வேலை செய்யும் வேங்கடராம ஐயருக்கு, பாலசுவாமியின் மீது ஒரு பிரமிப்பு இருந்தது.

இந்த ரிஷியின் மூலமென்ன, இந்த நதியின் மூலமென்ன என்று அறியும் ஆவல் ஏற்பட்டது. எங்கிருந்து வந்திருக்கக்கூடும் இந்த இளைஞன்? யார் பெற்ற பிள்ளை இது? என்ன வளர்ப்பு! பெற்றோர் யார்? எவர் புண்ணியத்தில் பிறந்தது இந்த பிள்ளை? இவ்வளவு எளிதாக பிரம்ம சுகத்தில் லயித்துக்கொண்டிருக்கிறதே, இதனுடைய ஆரம்பம் எது என்று அறியும் ஆவல் ஏற்பட்டது.

'நீங்கள் யார்? உங்கள் பெயரென்ன? இதில் எழுதுங்கள்' என்று பேப்பரும் பென்சிலும் வைத்துக் காத்திருந்தார் அவர். 'நான் இன்றைக்கு அலுவலகம் போகப் போவதில்லை. அதிகாரிகள் கோபித்துக்கொண்டாலும், அது பற்றி அக்கறையில்லை. எனக்கு நீங்கள் யார் என்று தெரிந்தே ஆகவேண்டும்' என்று அன்புக் கட்டளையிட்டார்; நச்சரித்தார்.

'இதற்கிதுவே தொண்டு' என்று சுவரில் எழுதியது பாலசுவாமி. பார்த்தார். அப்படியானால் இந்த இளைஞனுக்கு எழுதப் படிக்கத் தெரியும். எழுதப் படிக்கத் தெரிந்திருந்தால், எங்கேயோ ஒரு நல்ல குடும்பத்தில் பிறந்து, பள்ளிக்கூடத்தில் சேர்ந்து வளர்ந்திருக்க வேண்டும். அப்படியானால் இவர் யார் என்ற எண்ணத்தில் மறுபடி மறுபடி 'உங்கள் பெயரைச் சொல்லுங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.

வேங்கடராம ஐயரின் வேண்டுகோளுக்கு இணங்க, ஆங்கிலத்தில், 'வேங்கடராமன், திருச்சுழி' என்று பாலசுவாமி எழுதிக் கொடுத்தார். 'திருச்சுழியா... அது எங்கிருக்கிறது?' - வேங்கடராம ஐயருக்குப் புரியவில்லை. திருச்சுழி என்பது ஒரு சிவஸ்தலம். சுந்தரர் பாடிய ஸ்தலம். திருச்சுழியல் என்று அதற்குப் பெயர் என்று பகவானே சுட்டிக்காட்டினார்.

வேங்கடராமன் என்கிற பெயரும், திருச்சுழி என்ற அவருடைய ஊரும் ஊருக்குள் பலபேருக்குத் தெரிந்தன. தன்னைத்தேடி தன்னுள் மூழ்கிய பாலசுவாமி யார் என்று வெளியுலகுக்குத் தெரிய இதுவே காரணமாயிருந்தது.

வேங்கடராமன் கடிதம் எழுதிவிட்டுக் கிளம்பிய பிறகு, அவர் வீடு தவித்தது. கோபித்துக்கொள்ளவே இல்லையே, எந்தவிதக் கடுமையும் காட்டவில்லையே... ஏன் போனான், எங்கே போனான் என்று அரற்றியது.

வேங்கடராமனின் தாயார் புத்திர சோகம் தாங்காமல் தவித்தார். கணவரை இழந்த நிலையில், யாரைப் போய் உதவி கேட்பது என்று ஒவ்வொரு உறவினரையும் விசாரித்தார். எல்லோருக்கும் அவரவர் கடமைகள் முக்கியமாக இருந்தன. ஆனாலும், நாலாபக்கமும் விசாரித்தபடிதான் இருந்தார்கள்.

ஒரு நாடகத்தில், ஒரு பையன் வேங்கடராமன் போலவே இருக்கிறான் என்று கேள்விப்பட்டு, ஓடிப்போய் நாடகம் பார்த்து, 'அவன் இல்லை' என்று திரும்பி வந்தார்கள். திருவனந்தபுரத்தில் ஒரு பையன் இருக்கிறான் என்று சொல்லக் கேட்டு, அங்கும் ஓடிப் போய்ப் பார்த்து, அவனுமில்லை என்று திரும்பி வந்தார்கள்.

இதற்கு மேல் வேறு எங்கு தேடுவது என்று தெரிய வில்லை. இப்போது இருப்பது போல், அப்போது சாலை வசதிகளோ போக்குவரத்து வசதிகளோ இல்லை. பயணப்படுவது சிரமமான காரியமாக இருந்தது. அதனால் தேடுதலில் முனைப்பு குறைந்தது. அழகம்மை துக்கத்தில் மூழ்கிப்போனார்.

இந்த நிலையில், திருவண்ணாமலையிலிருந்து வந்த அண்ணாமலைத் தம்பிரான், மதுரையில் ஒரு கூட்டத்தில் பாலசுவாமிகளைப் பற்றிப் பேசி, 'வேங்கடராமன், திருச்சுழி' என்று குறிப்பிட்டுச் சொல்ல, கூட்டத்தில் கலந்துகொண்ட வேங்கட ராமனின் உறவினர் பையன் ஒருவன், இதை அவர் குடும்பத்துக்குத் தெரிவித்தான். அந்தக் குடும்பம் திகைத்தது. திருச்சுழியில் வேறு வேங்கடராமன் இல்லையே... இவராகத்தான் இருக்க முடியும் என்ற முடிவுக்கு வந்தது. சுந்தரமய்யரின் சகோதரர், வேங்கடராமனின் சித்தப்பா கிளம்பி, திருவண்ணா மலைக்கு வந்தார்.

குருமூர்த்தத்தில் கூட்டம் அதிகமாக இருந்த தால், வேங்கடராம நாயக்கர் என்பவர் தனது மாந்தோப்பில் வந்து குடியிருக்கும்படி, பழனி சாமியை வேண்டினார். பழனிசாமி இதை பால சுவாமியிடம் தெரிவிக்க, குருமூர்த்தத்தை விட்டு அருகிலுள்ள மாந்தோப்பில் அவர்கள் இருவரும் குடியேறினர். மாந்தோப்பைச் சுற்றி பலமான வேலி போடப்பட்டிருந்தது. வாசலில் காவல்காரன் இருந்தான். எனவே, உள்ளே ஆட்கள் வருவது என்பது மிகத் தீவிரமாகக் குறைக்கப்பட்டது. பழனிசாமியின் உத்தரவு இல்லாமல், ஒருவரையும் உள்ளே விடக்கூடாது என்று காவல்காரனுக்கு வேங்கடராம நாயக்கர் கட்டளையிட்டார்.




எந்தத் தொந்தரவுமில்லாமல் ஏகாந்தமாக ஒரு மாமரத்தின்மீது பரண் அமைத்து பாலசுவாமி குடியிருந்தார். அந்தப் பரணுக்குக் கீழே பழனிசாமி அமர்ந்திருப்பார். தரிசிக்க வருபவர்கள் கொண்டு வரும் உணவை வாங்கி, அதை பாலசுவாமிக்குக் கொடுத்து, தானும் உண்டு, சுவாமியைத் தொந்தரவு செய்யாதிருக்கும்படி மற்றவர்களைக் கேட்டுக்கொண்டு, பாலசுவாமி ஏகாந்தத்தில் இருப்பதற்கு ஏற்பாடு செய்தார் பழனிசாமி.

தன் நண்பர் நாராயணசாமி ஐயரோடு மாந்தோப்புக்குத் தேடிக்கொண்டு வந்த, சுந்தரமய்யரின் தம்பி நெல்லையப்பரை அந்தக் காவல்காரன் உள்ளே அனுமதிக்க மறுத்துவிட்டான். நெல்லையப்பர் தன்னைப் பற்றிய குறிப்பை எழுதி அனுப்ப, பாலசுவாமி அவர்களை உள்ளே வரச் சொன்னார். பாலசுவாமியைப் பார்த்த நெல்லையப்பருக்கு, 'இது தனது அண்ணன் மகன் வேங்கடராமன்தானா' என்ற பெரிய சந்தேகம் வந்துவிட்டது. நீண்ட நகங்கள், சடாமுடி, மெலிந்த தோற்றம். வேங்கடராமனுக்கு உள்ளங் காலில் ஒரு பெரிய மச்சம் உண்டு. அந்த மச்சம் இருக்கிறதா என்று உன்னிப்பாகப் பார்த்து, இருப்பது தெரிந்ததும், 'இது வேங்கடராமன்தான்' என்று நெல்லையப்பர் உறுதி செய்துகொண்டார். அவருக்கு பாலசுவாமியின் நிலைமை புரியவில்லை. ஏதோ ஒருவிதமான ஹடயோகத்தைப் பிடிவாதமாகப் பயின்று உட்கார்ந்திருக்கிறார் என்றுதான் தோன்றியது.

"நீ ஏன் இங்கு கஷ்டப்படுகிறாய்? வீட்டுக்கு வந்துவிடு. அங்கு உனக்கு ஒரு நல்ல இடத்தை, நீ தொடர்ந்து சமாதி நிலையில் இருக்க நான் ஏற்பாடு செய்கிறேன். மதுரைக்கு வந்துவிடு" என்று மன்றாடினார்.

பாலசுவாமி பதிலேதும் சொல்லவில்லை. நெல்லையப்பர் பரம சாது. மிருதுவாகப் பேசுபவர். யாரையும், எதற்கும் வற்புறுத்தக்கூடாது என்ற கொள்கை உடையவர். 'இந்தப் பிள்ளை ஏன் இப்படி உட்கார்ந் திருக்கிறது? இப்படி உட்கார்ந் திருப்பது முறையல்லவே! வேத விஷயங்களைத் தெளிந்து, தத்துவங்களைக்

கரைத்துக் குடித்த பிறகல்லவா இந்த நிலைமை வரும். இது ஒரு, பேசாத வைராக்கிய நிலைமைதானே! இது எங்கே கொண்டு போய் விடப்போகிறதோ தெரியவில்லையே!' என்ற எண்ணத் தில் தவித்தார்.



அருகே உள்ள ஒரு மடத்தில், பெரியவர் ஒருவர் சொற்பொழி வாற்றிக்கொண்டிருக்க, அவரிடம் போய் பாலசுவாமியைப் பற்றி விசாரித்தார் நெல்லையப்பர். "பாலசுவாமிதானே! அது வெறுமே ஒரு வைராக்கியத்தில் உட்கார்ந்திருக்கிறது. அதற்கு ஒன்றும் தெரியாது. வேதமயமான விகாரங்கள் தெரியாத எவரும் இந்த மாதிரியான தபஸில் ஈடுபட முடியாது. சும்மா பல்லைக் கடித்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதைப்போல ஒரு பாவனை" என்று குறைவாகப் பேசினார். நெல்லையப்பருக்கும் அதுதான் சரியோ என்று பட்டது. பட்டும் பவிஷுமாய், ருத்திராட்சமும் மொட்டைத் தலை யுமாய், திருநீற்றுப்பட்டையும் கமண்டலமுமாய் உட்கார்ந்திருந் தால் 'இவர் வேதவித்து' என்று இந்த உலகம் வெகு சீக்கிரம் நம்பிவிடும். இப்படிச் சடை முடியும், அழுக்கு உடம்பும், மெலிந்த தேகமும், நீண்ட நகங்களும், எந்தப் பேச்சுமில்லாத வெறித்த பார்வையும் கொண்டிருந்தால், அது பார்ப்பவர் கண்களுக்கு மனப்பிறழ்ச்சிக்கு ஆளான ஒரு நபராகத்தான் தெரியும்.

மாயை என்பது அலங்கார மானது; பொய்யானது; தன் இயல்பை மறைத்து, வேறு ஒரு தோற்றத்தை ஏற்படுத்திக் கொள்கிற எதுவும் சத்தியத்துக்குக் கட்டுப்பட்டதல்ல. சத்தியம், எந்தவித அலங்காரத்துக்கும் கட்டுப்பட்டதல்ல. அலங்காரங் களையே பார்த்து ஏமாந்து போகின் றவர்களால் சத்திய சொரூபத்தைப் புரிந்துகொள்வது மிகக் கடினம். உரத்த குரலில் இடி முழக்கமாய் சொற்பொழிவாற்றுபவர்கள் மிகப்பெரிய புத்திசாலிகள், ஞானவான்கள் என்று பலர் நினைத்துக்கொள்கிறார்கள். அடுக்கடுக்கான உவமானங்கள், ஆரவாரமான பாடல்கள் போன்ற வற்றை வெளியிட்டால், அவருக்கு எல்லாம் தெரியும் என்ற எண்ணத்தை வளர்த்துக் கொள் கிறார்கள். மௌனமாய், பேச்சு மூச்சற்று இருந்த பாலசுவாமியை யாருக்கும் புரியவில்லை.

தொடர்ந்து கூட்டம் வந்தது. எப்போதும் வாசலில் பத்து இருபது பேர் நின்றவண்ணம் இருந்தார்கள். சின்ன அசைவு கேட்டாலும், 'அண்ணாமலைக்கு அரோகரா!' என்று கூவினார்கள். கூவலை, இறங்கச் சொல்லி வற்புறுத்த வேண்டியிருந்தது.

ஐயன் குளத்துக்கருகே அருணகிரி நாதர் கோயில் இருந்தது. சில காலம் வரை அந்தக் கோயிலில் பாலசுவாமி தங்கினார். அழகான, தொன்மையான, குளுமையான கோயில் அது. அருகேயுள்ள வீடுகளுக்குப் போய் கை தட்டி, பிச்சை கேட்டு, அங்கேயே உண்டு கை அலம்பி வருவார். பழனிசாமியை 'நீங்கள் தனியே போய்ப் பிச்சை எடுங்கள்' என்று வேறு பக்கம் அனுப்பிவிட்டார். நன்கு பழகிய, தனக்கு இதமான நண்பரையேகூட அவர் சற்று விலக்கித்தான் வைத்திருந்தார். எதனோடும் பின்னிப் பிணையாமல், எவரோடும் கலந்து மூழ்காமல் தனியே வாழும் தன்மை அவருக்கு இருந்தது.

மைத்துனர் நெல்லையப்பர், வேங்கடராமனைக் கண்டபிறகும், கையோடு அழைத்து வராமல், விட்டுவிட்டு வந்ததில் அழகம் மைக்கு மிகப் பெரிய வருத்தம்.உடனே கிளம்பிப் போய், தன் பிள்ளையைப் பார்த்து வரவேண்டும்; வற்புறுத்திக் கூப்பிட வேண்டுமென்ற பேராவல் அவருள் எழுந்தது. வேறு யாரையும் நம்பாமல், தன் மூத்த மகன் நாகசாமியை தன்னோடு வரப்பணித்தார். நாகசாமிக்கு லீவு கிடைக்கவில்லை. அடுத்து வந்த கிறிஸ்துமஸ் விடுமுறையின்போது, நாகசாமியும் அழகம்மையும் திருவண்ணாமலை வந்து இறங்கினார்கள்.



அவர்கள் வருவதற்கு முன்பே, பாலசுவாமி மீண்டும் இடம் மாறியிருந்தார். திருவண்ணாமலையின் கிழக்குப் பக்கம் பவழக்குன்று ஒன்று இருந்தது. குன்றின் உச்சியில் கோயிலும், குகை போன்ற அறையும் இருந்தன. பாலசுவாமி அந்தக் கோயிலுக்குள் போய் உட்கார்ந்துகொண்டதும், அவர் இருப்பது தெரியாமல், அங்கே பூஜை செய்பவர் பூட்டிவிட்டுப் போய்விடுவது உண்டு. மாந்தோப்பைவிட பவழக்குன்று இன்னும் அமைதியாக இருந்தது. அங்கும் சிலர் வந்தார்கள். ஆனால், கூட்டம் குறைவு. ஏகாந்தத்தின் இனிமையை பாலசுவாமி நன்கு அனுபவித்தார். அந்த அனுபவத்துக்கும் சோதனை வந்தது.

பாலசுவாமியின் தாயார் அழகம்மையும், தமையன் நாகசுவாமியும் திருவண்ணாமலை வந்து, மாந்தோப்பில் தேடி, குருமூர்த்தத்துக்கு வந்து விசாரித்துக்கொண்டு பவழக்குன்றுக்கு வந்தார்கள். பஞ்சு பட்ட நெருப்பு போல, பார்த்த உடனேயே, 'இது தன் பிள்ளை' என்று அழகம்மைக்குத் தெரிந்தது. வெடித்துக் கதறினாள். மிகுந்த சந்தோஷத்தோடும் மிகுந்த வேதனையோடும் அந்த அழுகை இருந்தது. காது கொடுத்த யாரும் கலங்கித் தான் போவார்கள்.

'இது என் புள்ள. இது என் புள்ள. எம்புள்ளதான்! வேங்கடராமா, என் புள்ளடா நீ... என் புள்ள நீ' என்று அழகம்மை கதறியழ, சுற்றி இருந்தவர்கள் திடுக்கிட்டார்கள். அச்சத்துடன் பின்வாங்கினார்கள். ஆனால், பாலசுவாமி சற்றும் அசையாது, கற்சிலையென உட்கார்ந்திருந்தார்.

வேறு சில மகான்களுக்கும் இந்தச் சோதனை வந்திருக் கிறது. 'எங்கே வேணா போ, எது வேணா பண்ணு! ஆனா, நான் சாகறபோது, பக்கத்துல நீ இருக்கணும். என்னை நீதான் கரையேத்தணும். நான் அநாதைப் பிணமாகப் போகக்கூடாது, சங்கரா!' என்று தாய் கேட்க, அந்தத் தாய்க்கு வாக்கு கொடுத்து, வான்வழியே வந்து இறங்கி, அவள் விருப்பப்படியே விறகிட்டுத் தீ மூட்டி, சமஸ்காரங்களை அந்த ஞானி செய்தார்.

எவர் கோரிக்கையையும் அந்த சந்நியாசி ஏற்றுக் கொள்ளாமல் புறந்தள்ளலாம். ஆனால், தாயின் கோரிக்கையை எப்படிப் புறந்தள்ள முடியும்! கேட்கும் சத்தியத்தைத் தர முடியாது என்று எப்படி உதற முடியும்? மார் மீதும் தோள் மீதும் போட்டு வளர்த்த தாயை, இடுப்பிலும் மடியிலும் அணைத்துக் கிடந்த தாயை, நிற்கவும் நடக்கவும் பழகச் செய்த தாயை, உறங்கும்போதும் தானுறங்காமல் உடனிருந்த தாயை, உணவு ஊட்டியவரை, உயிருக்கு உயிராக நேசித்தவரை எப்படி விலக்க முடியும்?

தாய் எதிரே நின்று, "எம்புள்ளடா நீ! வேங்கடராமா, ஆத்துக்கு வாடா. நான் சாதம் போடறேன்டா. என் ரூம்ல உட்கார்ந்துண்டேயிரு. உன்னை யாரும் தொந்தரவு பண்ணமாட்டா. நம்மாத்துக்கு நீ வரணும். என் புள்ளையோன்னோ... அம்மாவை இப்படித் தவிக்கவிடலாமா? நான் என்னடா தப்பு பண்ணேன்... என்ன பாவம் பண்ணேன்... எதுக்காக என்னைப் பிரிஞ்சு போனே? உன்னைக் கோச்சுண்டு நா ஒரு வார்த்தை சொன்னதில் லையே! படிக்கவேண்டாம் வேங்கடராமா, பள்ளிக்கூடம் போகவேண்டாம். உனக்கு பிடிச்ச அரைச்சுவிட்ட குழம்பு, கத்தரிக் காய் கறியெல்லாம் பண்ணிப்போடறேன்.

ஒரு மலைமேல உட்கார்ந்து இப்படி சடையாண்டியா இருக்கியே! பெத்த வயிறு பத்தி எரியறதே! ஏன்னா... இந்தக் கொடுமையெல்லாம் பார்க்கச் சொல்லிட்டு, நீங்க சௌக்கியமாய் போய்ச் சேர்ந்துட் டேளே..! உங்க புள்ள இருக்கிற இருப்பைப் பார்த்தேளா! அவனுக்கு நீங்க சொல்லித் தர மாட்டேளா! அப்பா இல்லாம வளர்ந்த புள்ள... அதனால தான் இப்படிப் போயிட்டான்னு உங்களை ஊரார் பழிச்சுச் சொல்வாளே..! உங்களுக்கு இழுக்கு வந்தா, அது எனக்கு வந்ததில்லையா..!" என்று புலம்பினாள்.

ஒரு சிறிய ஊசலாட்டம்கூட இல்லாமல், கண்ணில் ஒரு சின்ன சலனம்கூட இல்லாமல், பாலசுவாமி சிலையென அமர்ந்திருந்தார். உள்ளே, முற்றிலும் அறுந்துபோய் தனித்துக் கிடப்பவருக்குத்தான் இப்படி சலனமற்று இருக்க முடியும்.

அழகம்மையின் ஆத்திரம் வேறு விதமாக மாறியது.

"நான் இவனைப் பெத்த அம்மா. என் வயித்துல வளர்ந்த பிள்ளை இவன். இவன் நாகசாமி; மூத்த புள்ள. இவன், இரண்டாமவன். அவர் போய்ட்டார். எப்பப்ப முடியுமோ அப்பப்ப நாமதானே பார்த்துக்கணும்னு ஒரு அன்புல சொல்லியிருக்கான் பெரியவன். அவன் காலேஜுக்குக் கட்ட வேண்டிய காசை எடுத்துண்டு, ரயில் ஏறி, திருவண்ணாமலைக்கு இந்தப் புள்ள வந்துடுத்து. படிக்கச் சொன்னா கோச்சுப்பாளா? சொந்த சகோதரன் சொன்னதுக்குக் கோச்சுப்பாளா? வீட்டுக்கு வரச் சொல்லுங்கோ. நீங்கள்லாம் பெரிய மனுஷா. குடித்தனம் பண்ணினவா. குழந்தை பெத்தவா. ஒரு அம்மாவின் கதறல் உங்களுக்குப் புரியலையா? இந்தப் புள்ளகிட்ட சொல்லப்படாதா? இன்னும் குழந்தைதானே அவன்? எதுவும் புரியாத வயசுதானே!

ஒண்ணுமே சாப்பிடாம, கண்ணை மூடிண்டு உட்கார்ந்திருக்கான்னு நீங்களெல்லாம் கொண்டாடறேள். ஒரு அம்மாவுக்கு எப்படிப் பதறும்! கை காலெல்லாம் நகம் வளர்ந்து, சடை விழுந்து, கண் இடுங்கிக் கிடக்கிற குழந்தையைப் பார்த்தால், அம்மாவுக்கு எப்படி இருக்கும்! எண்ணெய் தேய்ச்சுவிட ஆளில்லை; பொங்கிப்போட ஆளில்லை; உடுத்தி விட ஆளில்லை. என்னது இது..! நீங்களெல்லாம் ஒரு வார்த்தை சொல்லமாட்டேளா.!" - அவள் பதறினாள்.

சுக்கி என்பவர் மெள்ள பாலசுவாமியை அணுகி, "ஒரு தாய் இப்படிக் கதறுகிறாரே, உங்களுக்குக் கேட்கவில்லையா? உங்கள் இடத்துக்கு வந்தால் அன்பு மேலிடுகிறது; கருணை பொங்குகிறது; அமைதி கூடுகிறது. அதனால் தானே உங்களைச் சுற்றிச் சுற்றி வருகிறோம்! அந்த அன்பு, அந்தக் கருணை உங்களுக்கு இப்போது எழவில்லையா, இவரைப் பார்த்தால்?" என்று நைச்சியமாகப் பேசினார்.


தாய் அழகம்மையுடன் ஸ்ரீரமணர்

உலகம் மிகத் தந்திரமானது. நல்லதை அல்லதென்றும், கெடுதலை நல்லதென்றும் சொல்லவல்லது. எல்லாம் தெரிந்ததுபோல நாக்கைப் புரட்டிப் பேசவல்லது.

பழங்கள் கொடுக்கும் முதியவர், தயிர்சாதம் கொண்டு வரும் இளைஞர், பால் கொண்டு வரும் பெண்மணி, கடை ரொட்டி கொண்டு வரும் கிழவி எல்லோரும் அழ கம்மைக்கு ஆதரவாகப் பேசி னார்கள்.

எல்லா உறவுக்கும் மேலான ஒரு உறவோடு பாலசுவாமியின் மனம் கலந்திருக்கிறது; உயிர் தாண்டிய உண்மையில் மனம் ஒளிந்திருக்கிறது என்பது தெரி யவில்லை. உடல் கொடுத்த வரே மிக முக்கியம் என்கிற மாயையில் சிக்கி, 'தாய்', 'தாய்' என்று பிதற்றியது.

பழனிசாமி சகலரையும் பார்த்துக்கொண்டு வெறும் சாட்சியாக இருந்தார். இந்த முள்வேலியை எப்படி பால சுவாமி கடக்கப்போகிறார் என்ற கவலையுடன் அவரையே பார்த்தவண்ணம் அமர்ந்திருந் தார். அந்த இடத்தில் யாரும் யாருக்காகவும் ஆதரவு தெரி வித்துப் பேசக்கூடாது. இது வழக்காடு மன்றமல்ல, வக்கீல்

வைத்து நியாயம் பேச! பெரியோர்களை அழைத்துச் சட்டம் பேசும் இடமல்ல. எது தர்மம் என்று இடதும் வலதுமாய்த் தந்திரம் பேசுகின்ற இடமல்ல. இங்கே நீதிபதி என்று யாருமில்லை; இருக்கவும் முடியாது.

அப்படி வாதாட வருகிறவர்களுக்கு இரண்டு பக்கமும் தெரிந்திருக்க வேண்டும்; நீதிபதியாய் இருப்பவருக்கு இந்த விஷயத்தைச் சீர்தூக்கிப் பார்க்கும் ஞானம் இருக்க வேண்டும். ஒரு தாயின் அலறல், ஒரு தாயின் ஆற்றாமை வக்கீலுக்கும் நீதிபதிக்கும் புரிந்துவிடலாம். ஆனால், பரப்பிரம்மத்தில் லயித் துக் கிடக்கும் ஒரு ஜீவாத்மாவின் நிலையை, எந்த நீதிபதி, எந்த வக்கீல் புரிந்துகொள்ள முடியும்? ஒரு பக்கம் புரிந்து, மறுபக்கம் புரியாமல் எப்படித் தீர்ப்பு வழங்க முடியும்? அந்தத் தீர்ப்பு எந்த லட்சணத்தில் இருக்கும்?

இங்கு தீர்ப்பு உண்மையில் யார் சொல்ல முடியும்? யார் உன்னத நிலையில் இருக்கிறார்களோ, அவர்களே சொல்ல முடியும். யார் உயர்ந்தவரோ அவர்தான் சொல்ல முடியும்.

அழகம்மை சாதாரண பெண்மணி. பிள்ளைகள் பல பெற்று கணவனை இழந்து, புத்திரர்கள் தயவால் தட்டுத்தடுமாறிக் குடித்தனம் செய்துகொண்டிருக்கிற ஓர் அப்பாவிப் பெண்மணி. ஆசாபாசங்கள் நிறைந்த மனுஷி. உடற்கட்டும் உற்சாகமும் நிறைந்த பிள்ளை, உருக்குலைந்திருப்பதைப் பார்க்கிறபோது அவளுக்குள் பேதமை; பதற்றம்; கவலை.

ஆனால், எதிரே உட்கார்ந்திருப்பது பிள்ளையல்ல; பெரும் பேறு பெற்ற ஞானி. பிரம்மத்தில் லயித்த ஜீவன். புகழ்மிகு சூரியன். பூரண சந்திரன். அருகில் வந்து நின்றோர் சிந்தனையை குளிர்விக்கும் குரு. சான்றோன். மகாத்மா. ஆனால், அவளுக்கு இது புரியாது. மாயை கண்களை மறைத்தது.

"தாய் இப்படிக் கதறியும் மௌனமாக இருக்கிறீர்களே!


நீங்கள் மௌன விரதத்தைக் கைவிட வேண்டாம். அவளுக்கு ஆறுதலாக ஏதாவது எழுதுங்கள்!" என்று பேப்பரும், பென்சிலும் எடுத்துக் கொடுத்தார்கள்.

கொஞ்ச நேரம் அமைதியாக இருந்த பாலசுவாமி, நிதானமாக அதில் எழுதத் துவங்கினார்.

'அவரவர் பிராரப்தப் பிரகாரம் அதற்கானவன் ஆங்காங்கிருந்து ஆட்டுவிப்பவன். என்றும் நடவாதது என் முயற்சிக்கினும் நடவாது. நடப்பது என்பதைத் தடை செய்யினும் நில்லாது. இதுவே திண்ணம். ஆதலின் மௌன மாயிருக்கை நன்று!'

'மகனின் மனதை நான் மாற்றி விடுகிறேன். நான் பெற்றவளல்லவா! நீங்கள் அவனை விட்டுவிட்டு வந்து விட்டீர்கள். பெற்ற வயிறு எப்படிக் கொதிக்கும் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. நான் அழைத்தால் என் பிள்ளை வராது போவானா!' என்று சீறிவிட்டல்லவா வந்திருக்கி றாள் அழகம்மை! 'மீட்டுக்கொண்டு வருவேன்' என்று சூளுரைத்து வண்டி ஏறியிருக்கிறாள். அந்த வீம்பு உள்ளே இருந்தது.

அதற்குப் பதில் சொல்வதாய் மிக அற்புதமான வேதாந்த கருத்தை பாலசுவாமி எழுதிவிட்டார்.



ஸ்ரீரமணர்



அழகம்மை

'அவரவர் பிராரப்தப் பிரகாரம்' - இந்த ஜென்ம விஷயங்கள், முன் ஜென்ம வினை காரணமா கத்தான் நடக்கின்றன. அதற்குத் தான் பிராரப்தம் என்று பெயர். திடுமென்று நடக்கக்கூடியது அல்ல! போன ஜென்மத்தின் தொடர்ச்சி இன்றைய வாழ்க்கை. தெரிந்துகொண்டால், 'நான் மாற்றிவிடுகிறேன்' என்ற பேச்சே வராது.

இந்த மாதிரியான தொடர்ச் சியை யார் செய்கிறார்கள்? அதற்கானவன் ஆங்காங்கு இருந்து ஆட்டுவிப்பவன். விதியை நிர்ணயிக்கக்கூடிய ஒரு மாபெரும் சக்தி, ஒரு கட வுள்தன்மை, உன்னிடத்தில் இருந்துகொண்டும், என்னிடத் தில் இருந்துகொண்டும், அவரி டத்தில் இருந்துகொண்டும், இவரிடத்தில் இருந்துகொண் டும் ஆட்டுவிக்கிறது. என் கர்மாவுக்குத் தகுந்தாற்போல் என்னை ஆட்டுவிக்கிறது. என்னை ஓர் இடத்தில் உட்கார வைக்கிறது; உன்னை ஓர் இடத் தில் அமர வைக்கிறது. உன்னை மானாமதுரைக்கு அனுப்புகிறது. என்னைத் திருவண்ணா மலைக்குத் துரத்துகிறது. வந்தது என் செய்கையல்ல; மானாமதுரை போனது உன் செய்கையல்ல; விதியின் வலிய கரங்கள் நடத்துகின்ற நாடகம். எது நடக்காது என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டதோ, அதை எத்தனை முயற்சி செய்தாலும் நடத்தமுடியாது; எது நடக்க வேண்டுமென்றிருக்கிறதோ அதை எப்படியும் தடை செய்யமுடியாது. இதுதான் முடிவு; இதுதான் இறுதிநிலை; இதுதான் சத்தியம்; இதுவே திண்ணம். எனவே, மௌனமாய் இருத்தல் நன்று!

இதைவிட மிக அழகாக வாழ்க்கையின் தன்மையை எடுத்துக்காட்ட எவராலும் இயலாது. இதை மிக இளம் வயதிலேயே, மதுரையிலிருந்து கிளம்பி வந்த வேங்கடராமன் என்கிற பாலசுவாமி, தெள்ளத்தெளிவாக அறிந்திருந்தார். இந்தத் தெளிவே அவரை 'ரமண மகரிஷி' என்கிற நிலைக்கு உயர்த்தியது.

இது வளர்ச்சியல்ல; விடியல். எங்கும் பரவும் சூரியக் கதிர்போல பிரகாசம். முற்றிலும் ஒளிக்கதிராய்த் தோன்றிய அந்த விடியல், பிரமாண்டமாய் வானம் முழுவதும் ஒளி வீசி வருவதுபோல, ஒரு காலகட்டத்தில் பாலசுவாமி, 'ரமண மகரிஷி' என்ற சூரியனாய் வலம் வந்தார்.

ஞான விஷயத்தில் வளர்வதுமில்லை, தேய்வதுமில்லை. எல்லாம் தீர்மானிக்கப்பட்டுவிட்டது. வாழ்வு விதி முன்கூட்டியே எழுதப்பட்டு விட்டது. மாற்றிவிடுகிறேன் என்று எவர் கங்கணம் கட்டினாலும், அது நகைப்புக்குரிய விஷயம். மிகப்பெரிய சக்தியின் கீழ் எந்த வலுவுமற்றுச் சிறு துரும்பாய் அசைந்துகொண்டிருக்கிறோம். கர்வப் படுவதற்கும் கங்கணம் கட்டிக்கொள்வதற்கும் எந்த அவசியமும் இல்லை.

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கை வழியும் எப்போதோ முடிந்த காரியம்!

இதை மனதில் இருத்திக்கொண்டால் எந்தவித கர்வமும் எழாது.

செய்யும் காரியத்தில் விருப்பு- வெறுப்பு இருக்காது. பலன் எதிர் பார்க்காது. அப்போது, அக்காரியம் மிகச் சிறப்பாகச் செய்யப்படும். கர்வமற்ற சீரான செயல்கள் உடைய வாழ்க்கை, உன்னதமாய் இருக்கும். அதுவே வாழ்க்கை. மற்றதெல்லாம் குழப்பங்கள்!

இருபதாம் நூற்றாண்டு பிறக்க ஒரு வருடமே பாக்கியிருந்தது. இந்த இருபதாம் நூற்றாண்டில், உலகம் பல யுத்தங்களைப் பார்க்கப்போகிறது. மனிதர்கள் பூச்சிகளைப் போல மடியப் போகிறார்கள். பஞ்சமும், இயற்கைச் சீற்றமும் உலகைத் தத்தளிக்க வைக்கப் போகின்றன.

அந்த இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பத் தில் 'ஸ்ரீரமண மகரிஷி' என்று பிற்பாடு அழைக்கப்படப்போகும் பாலசுவாமி, பவளக் குன்றை விட்டு விரூபாக்ஷி குகைக்கு நகர்ந்தார்.

திருவண்ணாமலையின் கிழக்குப் பகுதியில் பல குகைகள் இருந்தன. அதில் ஒரு குகைக்கு 'விரூபாக்ஷி குகை' என்று பெயர். கர்நாடகத்தைச் சேர்ந்த விரூபாக்ஷித் தேவர் என்கிற வீரசைவத் துறவி அங்கு வசித்து வந்ததால், அந்த குகைக்கு 'விரூபாக்ஷி குகை' என்று பெயர். பாலசுவாமி அங்கே போக, கூடவே பழனிச்சாமியும் போனார்.

பழனிச்சாமி, கீழே ஊருக்குப் போய் உணவு யாசித்து வர, அதை இருவரும் பங்கிட்டு உண்பார்கள். நாளாக நாளாக அங்கேயும் கூட்டம் அதிகரித்தது. மலையில் ஏறி, பால சுவாமிக்கு எதிரே உட்கார்ந்து, சில நேரம் அவரோடு பேசி, சந்தேகங்கள் தெளிந்து கொள்ள லாயினர். வேறு சிலர் கட்டுச்சாதக் கூடையுடன் அங்கே வந்து உணவு முடித்துவிட்டு, சுவாமியை தரிசித்துவிட்டு, அவர் இருப்பிடத்தில் ஒரு மலர்ச்சியை உணர்ந்து, அந்த மலர்ச்சியோடு ஊருக்குத் திரும்பிப் போனார்கள்.


ஒரு முறை உணர்ந்தவர்கள், அந்த அனுபவச் சிலிர்ப்பு காரணமாக மறுபடியும் வந்து நின்றார்கள். எந்தக் கேள்வியும் இல்லாமல் வெறுமே கைகூப்பி, பணிந்து வணக்கம் சொல்லி, விலகி நின்று அவரையே பார்த்துக்கொண்டிருப்பார்கள். அந்தச் சூழ்நிலையை, சுற்றுப்புறத்தை நன்கு உணர்ந்து, அங்கு மிகுந்த அமைதியை அனுபவித்தார்கள். நெருங்கிய நண்பர்களுக்குச் சொல்லி அவர்களையும் அழைத்து வந்தார்கள். இப்படிச் சொல்லிச் சொல்லியே கூட்டம் பெருகியது. வந்த எல்லோருக்கும் உணவு கொடுப்பது நல்லது என்று பாலசுவாமிக்குத் தோன்றியது. பழனிச்சாமியும் அதற்கேற்றாற்போல உணவை யாசித்து, எல்லோருக்கும் பகிர்ந்து கொடுத்து வந்தார். அப்படி கொடுக்கும்படியாகவே உணவு தாராளமாகக் கிடைத்தது.

'ஆஹா, இது என்ன அதிசயம்' என்று யாரும் கொண்டாடவுமில்லை; அந்த அதிசயத்தை அலட்சியப்படுத்தவுமில்லை. ஒரு ஞானி இருக்குமிடத்தில் எல்லாவித சௌக்கியங்களும் தானாக வந்து சேரும் என்பதை உணர்ந்து அனுபவித்தனர். சிக்கிச் சீரழிகின்ற மனமே பிரச்னைகளிலிருந்து விடுபட்டு மெள்ள வெளியேறி, தன்னையும் தன் பிரச்னைகளையும் பார்க்க ஆரம்பிக்கிறபோது, வயிற்றுக்கு இரண்டு கவளம் சோறு கிடைப்பதா கடினம். சோறு கிடைத்தது; நல்ல தரிசனம் கிடைத்தது; வந்தவர்களுக்கெல்லாம் உள்ளே ஒரு அன்பு மலர்ந்தது.

எல்லா மனிதர்களும் ஒன்று போல உண்டா! கார்த்திகை மாதம் தீபத் திருவிழா நடக்கும்போது கூட்டம் அதிகம் இருக்கும். அந்தக் கூட்டம், 'இந்த மலையில் இவர் இருக்கிறார்', 'அந்தக் குகையில் அவர் இருக்கிறார்' என்று பட்டியலிட்டுக் கொண்டு ஒவ்வொரு கோயிலாக, ஒவ்வொரு குகையாக ஏறி இறங்கி வரும். அப்படி வருகின்ற மக்களிடம் தலைக்குக் காலணா வசூலித்து, பாலசுவாமியை தரிசனம் செய்துவைக்க ஒருவர் மும்முரமானார். விரூபாக்ஷி குகைக்குத் தானே உரிமையாளர் என்று அவர் சொல்லிக்கொண்டார். அதனால் காலணா வசூலிக்கின்ற உரிமையும் தனக்கு இருக்கிறது என்பதாக

நடந்துகொண்டார். வந்த பக்தர்கள் காலணா கொடுத்துவிட்டு, பக்தி சிரத்தையோடு பாலசுவாமியை தரிசித்துவிட்டுப் போனார்கள்.பாலசுவாமி உள்ளே இருந்தபோது, 'காலணா கொடுத்திருக்கிறேனே, சுவாமியை வெளியே வரச் சொல்லுங்கள்' என்றும் சிலர் பேசினார்கள். பால சுவாமிக்கு இது வருத்தம் கொடுத்தது.

குகையில் இருந்தால்தானே அவர் காசு வசூலிக்கிறார் என்று குகையைவிட்டு வெளியே வந்து மரத்தடியில் அமர்ந்துகொண்டார். ஆனால், உரிமையாளர் அப்போதும் காலணா வசூலித்தார். அவரை அதட்டவோ, மறுத்துப் பேசவோ பால சுவாமிக்கு விருப்பமில்லை. இங்கிருப்பதால்தானே கேட்கிறார் என்று, விரூபாக்ஷி குகையிலிருந்து கீழே இறங்கி, குகை நமச்சிவாயம் கோயிலுக்குப் போனார். மக்கள் கூட்டம் அந்தப் பக்கம் திரும் பியது. விரூபாக்ஷி குகைக்கு யாரும் வரவில்லை. உரிமையாளர் திகைத்தார். தன் தவறு புரிந்து, ஓடிப்போய் பாலசுவாமியின் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டு, 'இனிமேல் இப்படி வசூலிக்க மாட்டேன். நீங்கள் அங்கு வந்து தங்கியிருங்கள்' என்று கேட்டுக்கொண்டார்.








'நீ அப்படிச் செய்தாயே! இப்போது புத்தி வந்ததா?' என்றெல்லாம் பாலசுவாமி கொக்கரிக்கவில்லை. 'அப்படியா! இனிமேல் வசூலிக்கமாட்டாயா, சரி!' என்று சொல்லி மறுபடியும் விரூபாக்ஷி குகைக்கு வந்துவிட்டார். இதுதான் ஞானியின் அடையாளம்!

தான் ஒரு பாடம் நடத்தியதாகக்கூட அந்த ஞானிக்கு உள்ளே கர்வம் தோன்றவில்லை. 'எவருக்கோ படிப்பினை நடத்தினோம்' என்ற எண்ணம் கூட எழவில்லை. 'காசு வசூலித்தாயா... நகர்ந்துவிட்டேன்! வசூலிக்க மாட்டாயா... வந்து விட்டேன்.' நெல் முனையளவும் கர்வமில்லாத உத்தம புருஷனாக இருந்தார் பாலசுவாமி.

1899-லிருந்து 1922 வரை 23 வருடங்கள் திருவண்ணாமலையின் கிழக்குப் பக்கம் பல்வேறு குகைகளில் அவர் வாழ்ந்து வந்தார். சம்பவங்களின் அடுக்காய் நகர்ந்த அவர் வாழ்க்கை, இங்கே முற்றுப்பெற்றது. பூரண ஜோதியாய், குளிர் நிலவாய் அவர் அங்கே வீற்றிருக்க, அவர்பால் ஈர்க்கப்பட்ட அன்பர்களில் தெளிவானவர்கள், அவரோடு மெள்ள சம்பாஷணைகளில் இறங்கினர். என்ன கேட்க வேண்டும் என்று தெரிந்தவர்கள், அவரிடம் சிறிது நாட்கள் அமைதியாக வீற்றிருந்து மெள்ள மெள்ளக் கேள்விகளை எழுப்பினர். ஆன்மிகப் புத்தகங்களைக் கொண்டு வந்து கொடுத்து அவரைப் படிக்கச் சொல்லித் தாங்களும் படித்து, இன்னும் அதிகம் தெரிந்து கொள்ள அவரிடம் வினாக்களை எழுப்பினர்.

மிகக் கடினமான ஒரு தத்துவத்தை, மிக எளிதான முறையில் தெள்ளத் தெளிவாக அவர் பதில் சொன்னார். அறிவின் கூர்மையோடு புத்தகங்களைப் படித்து, அனுபவத் தெளிவோடு அவர் தன்னை விளக்கினார். அவர் மேடையேறி பெரிதாய் உரையாடவில்லை. நீட்டி முழக்கி உபந்யாசம் செய்யவில்லை. பல நேரம் அவர் இருப்பும், பார்வையுமே பல கேள்விகளுக்குப் பதிலாக இருந்தன. பல பக்தர்கள் தங்களுக்குத் தெரியவேண்டிய விஷயங்களை, அவரது சந்நிதியில் எதுவும் பேசாமலே தெரிந்துகொண்டார்கள்.

ஆனாலும் சிவப்பிரகாசம் பிள்ளை என்பவர், ரமணரின் உபதேசங்கள் திரும்பத் திரும்ப மனதில் பதிய வேண்டி, மற்றவருக்கு உதவ வேண்டி, இங்கு வர இயலாதவருக்குக் கேள்விகள் இருப்பின் அவர்களுக்குப் பதிலாகத் தர வேண்டி, கேள்விகளாகச் சிலவற்றை எழுதிக் கொடுத்து, அதற்கு ரமணரிடமிருந்து பதிலும் பெற்றார். கேள்வி கேட்ட உடனேயே பதில் வந்து விழுந்திருக்கிறது. 'நான் யார்' என்ற கேள்வியைத் தொடர்ந்து நீண்ட கட்டுரை ஒன்று எழுதப்பட்டது. பிறகு, சிவப்பிரகாசம் பிள்ளை அவர்கள் எழுதிய கட்டுரையையே எளிமையாய் கேள்வி- பதிலாகப் பிரிக்கவும் செய்தார்கள்.



பாலசுவாமியின் வாழ்க்கைச் சம்பவங்கள் அடுக்குகளாய் வருவது இங்கே நின்று, அவருடைய பக்தர்களின்- சீடர்களின் எண் ணங்கள் இனி வெளிவரப் போகின்றன. அவரோடு கலந்துரையாடியவர்கள் உணர்ந்த விதம், மாறிய அற்புதம் இனி சொல்லப்படப் போகிறது. சம்பவங்களும் இருக்கும்; சம்பவங் களுக்கு ஊடே தத்துவ விசாரணைகளும் இருக்கும்.

பகவான் ரமண மகரிஷி என்று அழைக்கப் பட்ட பாலசுவாமியின் வாழ்க்கை, ஓர் அரசரின் கதை அல்ல. இந்தப் படையெடுப்புக்குப் பிறகு அந்தப் படையெடுப்பு, இதற்குப் பிறகு அந்தக் கடல் பயணம் என்று எல்லா வருடமும் புது முயற்சியை மேற்கொள்கிற விஷயமல்ல. அசையாது அமைதியாய், சலனம் இன்றி அமர்ந்த மலை. அந்த மலையிலிருந்து வீசும் மூலிகைக்காற்றாய் அவருடைய வாழ்க்கை விஷயங்கள் இனி வெளிப்படும்.

உலகத்தில் பிறந்த அத்தனை ஜீவன்களும் சுகமாய் இருக்கவே விரும்புகின்றன. ஒவ்வொரு உயிரும் தன்னிடத்திலேயே மிகப் பிரியமாக இருக்கிறது. இந்தப் பிரியம் ஒரு சுகம். அந்தச் சுகத்தை நித்திரையின்போது மனம் நன்றாக அனுபவிக்கிறது. தனக்குள் ஒடுங்கி தன்னை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறது. நன்றாகத்

தூங்கினேன் என்கிற சந்தோஷத்தோடு எழுந்திருக்கிறது. விழித்திருக்கிற நிலையில் தன்னில் தான் ஒடுங்குதல், தன்னை அறிதல் என்பது நிகழ வேண்டும்.

'நான் யார்' என்கிற கேள்வியைக் கேட்டுப் பதில் பெறுவதே இதற்கு எளிமையான வழி. உங்களைக் கேட்டுக்கொள்ளுங்கள்... 'நான் யார்? நான் யார்? உடம்பா? உடம்பு எனில், தூங்கும்போது இந்த உடம்பு எங்கே இருந்தது? அதைப் பற்றிய அறிவு எங்கே இருந்தது? வேறு ஏதோ ஒன்று தூங்கி, வேறு ஏதோ ஒன்று ஒடுங்கி உள்ளே இருந்ததல்லவா! உடம்பைப் பற்றிய நினைவு முற்றிலும் மறந்ததல்லவா?

அப்படியானால் 'நான்' என்பது உடம்பல்ல. எனில், புலன்களாலும், புலன்களின் அனுபவத்தாலும் மூளையின் ஞாபக சக்தியாலும் ஏற்பட்ட மனம்தான் 'நானா'? மனம் என்ன செய்யும்? ஏதாவது நினைத்துக் கொண்டிருக்கும். தூங்கும்போது கனவு காணும்; கனவில் சண்டை போடும்; சந்தோஷப் படும்; ஏறும்; இறங்கும்; அலையும். ஆனால், கனவில்லாத நேரமும் இருந்ததே! கனவில்லாத தூக்கத்தைதானே நல்ல தூக்கம் என்கிறோம்; ஆனந்தமாகத் தூங்கினோம் என்று சொல் கிறோம். அப்படியானால், விழித்திருக்கும் போது அலையும் மனமும், கனவின்போது அலையும் மனமும் நானல்ல. வேறு ஏதோ ஒன்று ஆனந்தமாகத் தூங்கியது. அது எது?

'நான்' யாரென்று தெரியாமல் விழித்து நிற்கிறேனே... அது நானா? இல்லை; அதுவும் நீ இல்லை. அது இல்லை நான்... இது இல்லை நான்... என்று ஒவ்வொன்றாக, எதை நான் என்று நினைத்திருக்கிறோமோ அதையெல்லாம் புறந்தள்ளி, தள்ளமுடியாமல் எது மீதி நிற்கிறதோ, அதுவே 'நான்'.

உன் அறிவால், உன் அனுபவத்தால் இந்த உலகத்தைப் பற்றி ஏதோ நினைத்துக் கொண் டிருக்கிறாய். இந்த உலகம் நல்லது என்றும், கெட்டது என்றும் நீயாக ஒரு முடிவுக்கு வருகிறாய். உண்மை என்ன என்று உன்னால் பார்க்க முடியவில்லை. எந்த விஷயத்திலும் அதன் உண்மையை, அதன் சத்தியத்தை உன்னால் அறியமுடிவதில்லை.


உதாரணமாக, இரவில் ஒரு தாம்புக் கயிற்றைப் பாம்பு என்று நினைத்துப் பதறி ஓடி அலைகிறாய். உன் ஆத்ம நண்பன் உன்னை நிலைநிறுத்தி, அதைப் பார் என்று சொல்லி, தன் கையால் அதைத் தூக்கி, கயிறு என்று காண்பித்த பிறகு, 'பாம்பு' உடனே காணாமல் போய், 'அட, கயிறு!' என்ற நிம்மதி தொற்றிக்கொள்கிறது. எல்லாம் உனது கற்பனை!

பகவான் ஸ்ரீரமணரது சரித்திரம் என்றெழு தும்போது சம்பவக் கோர்வைகள் மட்டுமே விவரிப்பதில் லாபமில்லை. ஸ்ரீரமணரின் 'நானார்' என்கிற விசாரமே மூலப்பொருள். அதை அறிவதே ஸ்ரீரமணரை அறிவது.

ஆத்மாவிலிருந்து தோன்றுகின்ற ஓர் அற்புதமான சக்தியே மனம். மனம்தான் நினைவுகளைத் தோற்றுவிக்கிறது. இவர் நல்லவர், அவர் கெட்டவர், இது சரி, அது தவறு, இது உயர்வு, அது தாழ்வு என்று விதம்விதமான நினைவு அடுக்குகள் இருக்கின்றன. அந்த நினைவுகளை நீக்கினால், மனம் என்ற ஒரு பொருள் அறவேயில்லை. நினைவுகளின் அடுக்குதான் மனம்.

அந்த நினைவுகள் உன்னால் சிருஷ்டிக்கப்பட்டவை. நினைவுகளின் ஊடாகவே நீ இந்த உலகத்தைப் பார்க்கிறாய். ஆழ்ந்த தூக்கத்தில் நினைவுகள் இல்லை. எனவே, உலகமும் இல்லை. சிலந்தி தன்னிடமிருந்து நூலைப் பிரித்து எப்படித் தனக்குள் இழுத்துக்கொள்கிறதோ, அதேபோல உன் நினைவுகளால், உன் மனதால் உலகத்தை சிருஷ்டி செய்கிறாய். பிறகு, நீயே அதை உனக்குள் இழுத்துக்கொள்கிறாய். 'இதுதான் உலகம்' என்று நினைக்கிறாய். அவர்கள் நல்லவர்கள், இவர்கள் கெட்டவர்கள் என்று இரண்டு விதமாகப் பிரிப்பது நீயே! உண்மையில் அவர்கள் யார் என்று நீ பார்ப்பதேயில்லை. நீ தீர்மானிப்பது பல தீர்மானங்களை உருவாக்குகிறது. நல்லவர்- கெட்டவர் என்று சிருஷ்டித்து, இன்னும் பன்மடங்கு பெருகி, இந்த உலகம் அதன் இயல்பாக இல்லாமல் உன் உலகமாக, நீ சிருஷ்டித்த உலகமாக மாறுகிறது. நீ கெட்டவர் என்று தீர்மானித்ததை வேறு ஒருவர் நல்லவர் என்று தீர்மானிக்கிறார். அவருடைய உலகம், நீ நல்லவர் என்று சொல்பவரைக் கெட்டவராகக் கருதுகிறது.

ஒவ்வொரு மனிதரும் ஒவ்வொரு விதமான உலகத்தை சிருஷ்டித்துக் கொண்டு, உண்மையான உலகத்தைப் பார்க்க முடியாமல் அவஸ்தைப் படுகிறார்கள். தன் மனத்தை ஒடுக்கிய ஞானியால் மட்டுமே உள்ளதை உள்ளவாறு பார்க்க முடிகிறது.




இந்த நினைவுகள் எங்கிருக்கின்றன? 'நான்' என்பது எங்கே இருக்கிறது? 'நான்' என்று சொல்லுமிடத்தில்தான் மனம் இருக்கிறது. அந்த 'நான்' ஹ்ருதயத்தில் இருந்து வெளிவருகிறது. இந்த ஹ்ருதயம் வலப்பக்கத்தில் இருக்கிறது. அது தோலாலான துருத்து அல்ல. மார்பின் வலப்பக்கத்தில் சூட்சுமமாய் இருக்கின்ற ஆன்ம இதயத்தில் இருந்து வெளிவருகிறது. மார்புக் குழியிலிருந்து ஒரு விரல் நுனி தள்ளி இருக்கின்ற இடத்தில்தான் 'நான்' என்கிற எண்ணம். 'நான்' என்பதுதான் மனம்.

'நான்' இல்லையெனில் மனம் இல்லை. தன்மை தோன்றிய பிறகே முன்னிலை, படர்க்கை. தன்மை இல்லாமல் முன்னிலை, படர்க்கை இல்லை.

'நான் யார்' என்ற விசாரணையில் மனம் அழியும். மனமே இந்த மனதை நீ யார், என்ன செய்கிறாய் என்று உற்றுக் கவனித்து விசாரித்து, அப்படி விசாரிக்கின்ற நானும் அழிந்துபோகும்.

பிணத்தைப் புரட்டி புரட்டிச் சுடுகின்ற தடி, பிணம் முற்றிலும் எரிந்துபோன பிறகு, அதுவும் நெருப்பில் போடப்படுவது போல, விசாரித்த மனமும் காணாது போகும். எண்ணங்களோடு போகாமல், எண்ணங்களை எப்படிச் செயலாக்குவது என்று சிந்திக்காமல், எண் ணங்களின் விளைவு பற்றி ஆராயாமல், யாருக்கு இந்த எண்ணங்கள் தோன்று கின்றன என்று விசாரித் தால், மனம் தன் ஆரம்ப நிலைக்கு வந்துவிடும். அந்த எண்ணமும் அடங்கும். இவ்வாறு பழகப் பழக, மனம் உதித்த இடத்தில் ஒடுங்கியிருக்கின்ற சக்தி அதிகரிக்கின்றது. 'நான்' என்ற எண்ணம் கிஞ்சித்தும் இல்லாத இடமே அற்புதம். அதுவே மௌனம். அதுவே ஞானதிருஷ்டி. அதுதான் நம் உண்மை இருப்பு. அதுதான் ஆன்ம சொரூபம். மற்றதெல்லாம், அது பற்றி மனம் செய்து கொள்ளும் கற்பனைகளே!

மனத்தை இப்படி அடக்குவதற்கு 'நான் யார்' என்று விசாரிப் பதைத் தவிர, வேறு வழியே இல்லை. வேறு சில தந்திரங்களைக் கையாண்டால், மனம் அடங்கியிருப்பது போல் அடங்கியிருந்து, மறுபடியும் எழுந்துவிடும்.

பிராணாயாமத்தால் மனம் அடங்கும். உண்மைதான். ஆனால், சுவாசக் கட்டுப்பாடு இருக்கும்வரை மனம் அடங்கி, பிறகு அது தாறுமாறாய் ஓடத் துவங்கிவிடும். மனமும் மூச்சும் ஒரே பிறப்பிடத்தைக் கொண்டவை. அகங்காரம், அதாவது 'நான்' எங்கு உற்பத்தியாகிறதோ, அங்குதான் மூச்சும் கிளம்புகிறது.

தூக்கத்தில் மனம் அடங்கியிருந்தபோதிலும், மூச்சு அடங்கவில்லை. இறந்துபோய்விட்டார் என்று நினைத்துக் கொள்ளாதபடிக்கு இயற்கையின் கருணை யால் மூச்சு மட்டும் நகர்ந்துகொண்டிருக்கிறது.மனதில் ஸ்தூல ரூபம் பிராணன். மரண காலம் வரை மனம் பிராணனை உடலில் வைத்துக்கொண்டிருந்து, மரிக்கையில் அதைக் கவர்ந்துகொண்டு போகிறது. பிராணாயாமம் மனதை அடக்க வழியேயன்றி, மனதை முற்றிலும் ஒடித்துவிடாது.

தியானம், மந்திர ஜபம் போன்றவை மனதை அடக்கச் செய்யும் தந்திரங்கள். யானையின் துதிக்கை சதா அலைந்து கொண்டிருக்கிறது. அப்படி அலையும் துதிக்கையில் சங்கிலி கொடுத்தால் யானை அந்தச் சங்கிலியைப் பற்றிக் கொண்டேயிருக்கும். அதேபோல, மந்திர ஜபம் எனும் சங்கிலி, மனம் என்கிற யானைக்குக் கொடுக்கப்படுகிறபோது, அதைப் பிடித்துக்கொண்டு நிற்கிறது. மந்திர ஜபம் நழுவ, மனம் மறுபடியும் அலையத் துவங்கும். ஆனால் மந்திர ஜபம், ஒரு ஏகாக்கிரகத் தன்மையைக் கொடுக்கிறது. மந்திர ஜபத்தால் பலமடைந்த மனதை, 'நான் யார்' என்ற விசாரத்தால் முற்றிலும் அழித்துவிடலாம்.

குறைவான ஆகாரத்தால், அமைதியான குணம் பெருகி அதுவும் மனதுக்குப் பலத்தைக் கொடுத்து, ஆன்ம விசாரத்துக்கு அழைத்துப் போகிறது. காரசாரமான அதிக உணவு உடம்பை அயரவைத்து, கனவுகளாலான தூக்கத்தை ஏற்படுத்துகிறது. பிறகு, ஆன்ம விசாரம் வராது. ஆன்ம விசாரம்தான் மனம் அழியக் காரணமாக இருக்கிறது. இவையெல்லாம் உதவியே அன்றி, 'நான் யார்' என்கிற விசாரமே உண்மையில் மனதை அழிக்கும். எண்ணங்கள் தோன்றும்போதே, அதை ஆழ்ந்து கவனித்துவிட வேண்டும். யாருக்குத் தோன்றுகின்றன என்று ஆழ்ந்து பார்க்க வேண்டும். அப்படி விசாரிக்கிறபோது, மனம் அந்த எண்ணத் தைக் கைவிட்டு வெறுமே நிற்கும்.




கோட்டைக்குள்ளிருந்து எதிரிகள் வெளியே வரவர வெட்டி வெட்டி வீழ்த்துவதுபோல, எந்தவித எண்ணம் வெளியே வந்தாலும், அந்த நினைவுகளை அழித்துக்கொண்டே இருக்க வேண்டும். அப்போது 'நான் யார்' என்கிற தெளிவு நிச்சயம் உண்டாகும்.

மனம் அடங்கி, அதை முற்றிலும் ஒடித்தவரே குரு. கடவுளும் குருவும் வேறல்ல. புலி வாயில் சென்ற மாமிசம் எப்படி திரும்பாதோ, அதே போல குருவின் பார்வையில் பட்டவர்கள் நிச்சயம் ரட்சிக்கப்படுவார்கள். ஆனால், குருவை இறுகப் பற்றிக்கொண்டு, அவர் காட்டிய வழியில் நடக்க முயற்சிக்க வேண்டும்.

பிரபஞ்சத்தின் எந்த விஷயத்திலும் சுகம் என்பது இல்லை. சுகம் என்பது ஆத்மாவை அறிவதே. அந்தச் சொரூபத்தைத் தரிசிப்பதே. உலகிலுள்ள பொருள்கள் சுகமாகத் தெரிவதேன்? அந்தப் பொருள்களை அனுபவிக்கும்போது மனம் ஆத்மாவை தரிசித்துவிட்டு, வெளியே வருகிறது. அதைத் தரிசிக்கிற நேரம் சுகமாக இருக்கிறது. தாகத்துக்கு நீர் குடிப்பதும், பசிக்கு உணவு அருந்துவதும், வெயிலில் இருந்து நிழலுக்குப் போய் உட்கார்ந்து கொள்வதும், கூடலும் அவ்விதமே! ஒரு க்ஷண நேரம் இந்த விஷயங்களில் மனம் ஆத்ம தரிசனம் பெறுகிறது. 'அப்பாடா... என்ன சுகம்!' என்று உணர்கிறது. மறந்துவிட்டு, அந்தச் சுகத்தை விட்டு நீங்கி, மறுபடியும் அடுத்த அனுபவத்தைத் தேடிப் போகிறது. இந்தப் பொருள்களில் சுகமில்லை, ஆத்மாவை உணர்வதிலேயே சுகமிருக் கிறது என்பதை விவேகமுள்ளவன் கண்டுகொண்டு, பொருள்களை உதறித் தள்ளி, விஷயங்களை விலக்கி விட்டு, ஆத்ம தரிசனம் பெறுவதற்கு இடையறாது உழைப்பான்.

எல்லா மதங்களும் இந்த மனம் நாசமடைவதையே, மனமற்றுப் போவதையே விதம்விதமாய்ச் சொல்லு கின்றன. தெரிந்த பிறகு, திரும்பத் திரும்ப புத்தகங்களைப் படிப்பதில் என்ன லாபம்? மனதை அழிக்க 'நான் யார்' என்று விசாரிக்க வேண்டும். எல்லா காலமும் மனதை விசாரித்து ஆன்மாவில் திளைப்பதே 'ஆன்ம விசாரம்.' விசாரம் செய்யாமல் வெறுமே தத்துவங்களை அளந்துகொண்டு இருப்பதில், திரும்ப திரும்பப் பேசிக் கொண்டிருப்பதில் எந்த லாபமுமில்லை. தத்துவப் பேச்சுகள் மேலும் மனதைக் குப்பையாக்கத்தான் உதவும்.

மனம் அழிந்த நிலையில், பிறர் எவ்வளவு கெட்டவர்களாக இருந்தாலும் அவர்களை வெறுக்கத் தோன்றாது. எத்தனைத் துன்புறுத்தினாலும் எதிர்க்கத் தோன்றாது. துன்புறுத்தப்பட 'நான்' இல்லையே என்ற எண்ணம் மேலோங்கி நிற்கும். துன்பப்படாதவரைக் கண்டு உலகம் பயப்படும்.

பிற விஷயங்களில் மனதைச் செலுத்தக்கூடாது; பிறருடைய காரியத்தில் பிரவேசிக்கக்கூடாது. தன்னிடமிருப்பதை பிறருக்குக் கொடுப்பது மிகச் சிறந்தது. பிறருக்குக் கொடுப்பதெல்லாம் தனக்கே

கொடுத்துக்கொள்கிறான் என்றால், யார்தான் கொடாது போவார்கள். எவ்வளவுக்கெவ்வளவு தாழ்ந்து நடக்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு நன்மை உண்டு. மனம் அடங்கியிருந்தால் எங்கேயும் இருக்கலாம்.

| சிவப்பிரகாசம் பிள்ளையின் கட்டுரையின் விஷயங்கள் இவை. விதவிதமான படிப்புகளாலும், பழக்கங்களாலும் மனத்தை நாலாப்புறமும் அலையவிட்டிருக்கின்ற நம் போன் றோருக்கு ரமணருடைய வழி எளிதல்ல. உலக விஷயங்களைப் பற்றிக்கொண்டு துக்கப்படுகிறபோது, ரமணரின் விஷயம் புரிபடுவதற்கு வாய்ப்பிருக்கிறது. ஏன் இந்தத் துக்கம் என்று விசாரிப்பதுகூட, 'நான் யார்' என்கிற விசாரத்திற்கு அருகே கொண்டு போய்விடும். தொடர்ந்து இடையறாது அதில் உறைந்தால், மனம் அடங்கியிருக்க வாய்ப்புகள் அதிகம் உண்டு. வெற்றி தோல்வி, வாழ்க ஒழிக என்று பிரித்துக் கொண்டு கோஷமிடுகிறபோது, மனம் செய்த கற்பனைகளில் மாட்டிக் கொண்டு வெளியேற முடியாமல் தவிக்கிறோம்.

உண்மையைத் தேடுகின்ற ஆவலும், முயற்சியும் எல்லோருக் கும் ஏற்படுவதில்லை. ஆவல் ஏற்படின், முயற்சி செய்ய விருப்பம் இருப்பின், வழிகாட்ட பகவான் ஸ்ரீரமணர் உண்டு.


**க**ம்பீரம் சேஷய்யர் என்பவர், தெலுங்கு அந்தணர். ஹைதராபாத்துக்கு அருகில் உள்ள முலுக்கி நாடு என்ற இடத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்களான அக்கண்ணா, மாடண்ணா ஆகியோர், சுல்தானிடம் மந்திரிகளாக இருந்தார்கள். அவர்களின் சேவையைப் பாராட்டி, ஹைதராபாத் சுல்தான் அவர்களுக்குக் 'கம்பீரம்' என்ற பட்டத்தைக் கொடுத்தார்.

அந்தப் பரம்பரையில் வந்தவர் சேஷய்யர். அவர், ராம பக்தர். இடையறாது ராம நாமம் சொல்பவர். விவேகானந்தரின் சொற்பொழிவுகளாலும் நூல்களாலும் கவரப் பட்டவர். விவேகானந்தர் சொன்னபடி ஹடயோகம் பயின்று, அதில் ஈடுபட்டுவந்தார். ஸ்ரீரமணரால் கவரப்பட்டு, அவரிடம் வந்து தனது ஆன்ம வேட்கையையும், தான் செய்து கொண்டிருந்த பிராணாயாமம் போன்ற விஷயங்களையும் அவரிடம் பரிமாறினார்.

ஸ்ரீரமண மகரிஷி என்று பிற்பாடு அழைக்கப்படும் பாலசுவாமிக்கு, கம்பீரம் சேஷய் யருடைய ஆர்வம் புரிந்தது. சேஷய்யர் தமிழரல்ல; அதனால், அவருக்குக் கவிதை நடையில் சொல்லி வைத்தது புரியாது என்பதால், அவருக்குத் தெளிவாகப் புரிவதற்காக உரை நடையில் சில விளக்கங்கள் சொன்னார். அந்த விளக்கங்கள், கம்பீரம் சேஷய்யரால் எழுதப்பட்டு, ஒன்றாகச் சேகரிக்கப்பட்டு, பிறகு புத்தகமாக வெளிவந்தது.

இதனால், பாலசுவாமியின் அற்புதமான பொருள்செறிந்த உரையாடல்கள், உலகத் தோருக்கு எளிதாக, முழுமையாகக் கிடைத்தன. அறிவும் திறனும் கொண்ட ஞானியருக்கு

அருகே உண்மையும் அன்பும் கொண்ட பக்தர்கள் ஒன்று சேர்ந்துவிடுவர். அவர்களால் ஞானியின் புகழ் நன்கு பிரகாசிக்கும். இந்த முயற்சிகள் எந்தத் திட்டமிடலும் இல்லாமல், உலகத்தின் நன்மைக்காகத் தானாக ஏற்படும். பாலசுவாமியின் இந்த உரையாடல்கள், பிற்பாடு வந்த ஸ்ரீரமண பக்தர் களுக்குப் பேருதவியாக இருந்தன.



ஹடயோகத்தில் பல பிரிவுகள் உண்டு. ஒவ்வொரு இடமாகத் தாண்டி முன்னேற வேண்டிய நியதி உண்டு. ஹடயோகத்தின் உதவியால், தான் யார் என்பதைக் கண்டு கொள்ளலாம். கடவுள் என்ற விஷயத்தை மிக நெருக்கமாக நின்று ஆராய்ந்து, முக்தி பெறலாம் என்று சொல்லியிருக்கிறது. ஹடயோகம், பரத கண்டத்தின் பொக்கிஷம். சனாதன தர்மம் தோன்றிய காலத்திலிருந்தே இந்த ஹடயோகம் பேசப்பட்டு வருகிறது. ஹடயோகத்தில் எட்டு பிரிவுகள் இருக்கின்றன. இதை, யோக அஷ்டாங்கம் என்று சொல்வதுண்டு. அவை என்னென்ன?

முதலில் இயமம், நியமம் என்ற இரண்டு விஷயங்கள். நல்ல நடத்தை, நல்ல குணங்கள்...

இவைதான் இயமம், நியமம். அதிர்ந்து பேசாதது, கோபமான வார்த்தைகளை இறைக்காதது, பொய் சொல்லாதது, புறம் கூறாதது போன்றவற்றோடு உணவுக்கட்டுப்பாடும், குறைவான உறக்கமும், பிரம்மச்சரியமும், கூட்டங்களில் கலந்து கொள்ளாது தனியாக இருப்பது போன்றவையும் இதில் அடங்கும்.

மூன்றாவதாக, ஆசனம் சொல்லப்பட்டிருக்கிறது. உடம்பில் நோயிருப்பின், அது கடவுள் தேடலுக்கு எதிராக முடியும். அதில் ஈடுபட முடியாமல் போகும் தன்னை அறிதல் என்ற கேள்வி எழாது. எங்கு நோயிருக்கிறதோ அந்த நோயையே மனம் பற்றிக்கொண்டிருக்கும். எனவே, நோய் வராது தடுப்பதற்காகப் பல்வேறுவிதமான ஆசனங்கள் பரிந்துரைக்கப் பட்டிருக்கின்றன. ஹடயோகம், இந்த ஆசனங்கள் மிக முக்கிய மானவை என்று கருதுகிறது.

வயிறு சுத்தமாக இருப்பதற்கும், கழுத்து, கை- கால்கள் உறுதியாக இருப்பதற்கும், மூளைக்கு வேண்டிய அளவு ரத்தம் பாய்வதற்கும், உடம்பிலுள்ள எல்லா நரம்புகளும் சீராக வேலை செய்வதற்கும் இந்த ஆசனங்கள் உதவுகின்றன. ஆசன வாயிலிருந்து தலையின் உச்சி வரை பல்வேறு விதமான சக்கரங்கள் இருக்கிறதென்றும், அவற்றைத் தூண்டிவிட, உடம்பின் இயக்கம் மிகச் சீராக இருக்கும் என்றும், அந்த சக்கரங்களைத் தூண்டி விடுவதற்கு இந்த ஆசனங்கள் பேருதவி செய்கிறதென்றும் ஹடயோகம் சொல்கிறது. அலைகின்ற மனத்தை அடக்கவும் இந்த ஆசனங்கள் பெரிதும் உதவுகின்றன.

நான்காவதாக, பிராணாயமம் என்கிற ஒரு வித்தையை ஹட யோகம் கற்பிக்கிறது. மூச்சை இடது நாசியின் துவாரத்தின் வழியாக இழுத்து உள்ளுக்குள்ளே தக்க வைத்து, பிறகு வலது வழியாக விட வேண்டும். பிறகு, மறுபடியும் வலது நாசியின் துவாரத்தின் வழியாக இழுத்து, உள்ளே தக்க வைத்து, பிறகு இடது வழியாக விடவேண்டும். தகுந்த ஆசிரியரின் மூலம், சரியான கணக்குகளோடு இதைச் செய்யவேண்டும் என்று ஹடயோகம் வற்புறுத்துகிறது.

இதனால், அலைகின்ற மனம் நிலைப்படும். சுவாசம், மனதோடு சம்பந்தப்பட்டது. மனம் ஆரவாரித்து ஆடுகிறபோது, சுவாசம் தாறுமாறாக இருக்கிறது. சுவாசம் தாறுமாறாக இருந்தால், மனம் ஆரவாரித்து அலையும். எனவே மனதை நிலைப் படுத்த, சுவாசத்தைச் சீராக்குவது முக்கியம் என்று சொல்லி, பல்வேறு விதமான பிராணாயாமங்களைப் பயிற்றுவிக்கிறது ஹடயோகம். தவிர, சரியான சுவாசத்தினால் ரத்த ஓட்டம் சீராக இருக்கிறது.

ரத்த ஓட்டம் சீராக இருப்பது, படபடப்பைக் குறைத்து, ஒரு பக்குவ நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது.


ஐந்தாவதாக, பிரத்தியாகாரம் என்ற விஷயத்தைச் சொல்லுகிறது ஹடயோகம். இடையறாது மந்திர ஜபம் செய்தல். அப்படிச் செய்வதன் மூலம் மனது அலையாமல் அழுத்தி நிற்க வைத்தல். ஒரு இடத்திலேயே குவிந்திருக்க முயற்சி செய்தல். யானையின் துதிக்கை அலைந்து கொண்டேயிருக்கும். அதனிடம் ஒரு சங்கிலியைக் கொடுத் தால் யானை, அந்தச் சங்கிலியைப் பற்றிக்கொண்டு தும்பிக்கையை அலையவிடாமல் அமைதியாக நின்றிருக் கும். மந்திர ஜபம் என்பது ஒரு சங்கிலியைப் போல; மனம் என்பது யானையின் துதிக்கைபோல! மனதைக் கட்டுக்குள் வைக்க மந்திர ஜபம் பெரிதும் உதவுகிறது. இந்த மந்திர ஜபமும் குருவின் மூலம்தான் கற்றுக்கொள்ள வேண்டும். கோபம், படபடப்பு, ஆத்திரம், பிறர் மீது கொள்கின்ற அசூயை, தனக்குள் தோன்றுகின்ற பேராசை... இவை மட்டுப்படவும், சுத்தமாக நகர்ந்து போகவும் பிரத்தியாகாரம் உதவி செய்யும்.

அடுத்தது, தாரணை. அலைகின்ற மனம் மெள்ள மெள்ளக் கட்டுக்குள் வரும். லேசான அலைச்சல்களோடு, நடுக்கத்தோடு இருக்கும். தொடர்ந்த பயிற்சியின் மூலம், அதுவும் கலைந்து மனம் ஓரிடத்தில் குவிந்து, ஆடாது அசையாது இருக்கும். ஓரிடத்தில் குவிந்து உள்ளே அடங்கி விட்டால், நேரம்போவதே தெரியாது. நேரம் சட்டென்று காணாமல் போய்விடும். மூன்று, நான்கு மணி நேரம் அமைதியாக உட்கார்ந்துகொள்ள

முடியும். அலையாத மனதை ஓர் இடத்திலேயே, குறிப்பாக ஹ்ருதயத்திலேயே நிற்க வைத்திருந்தால், மிக மிக அற்புதமான அனுபவங்கள் கிட்டும்.

'நான்' என்பது வேறு, தன் உடம்பு வேறு என்ற தெளிவு ஏற்படும். தன் உடம்பைத் தானே உற்றுப் பார்க்கின்ற மகோன்னதம் கிடைக்கும். ஆனால், தன்னை மீறி எந்தச் செயலும் இல்லாது, தன்னுடைய ஒவ்வொரு அசைவும் தனது கட்டளையின்கீழ் நடக்கிறது என்ற தெளிவைப் பெறலாம்.

தாரணைக்குப் பிறகு வருவது தியானம். உள்ளே மனம் குவிப்பதல்ல தியானம்; ஒரு புள்ளியில் இருப்பதல்ல. அப்படி ஒரு புள்ளியில் நிற்கும்போது, தாரணை என்ற வழியைப் பின்பற்றும் போது ஏற்படுகிற விகசிப்பே தியானம். இந்த நெடுநாள் பயிற்சியின்போது சட்டென்று மனம் வயப்பட்டு, நான் இன்னது, இப்படித்தான் என்பது தெரிந்துவிடும். மனத்தின் சுமை முற்றிலும் மறந்துபோய், மனம், தான் என்ற இருப்புக்குள் புகுந்து, அங்கேயே கிடக்கும். அப்போது, ஆரம்பத்தில் துவங்கிய மந்திர ஜபத்தின் தேவதையைப் போன்ற வடிவமே தன் வடிவம் என்று உணர்ந்து, அந்த வடிவத்திலேயே லயித்துக் கிடக்கும். அல்லது, வடிவமில்லாத பெரிய வெளிச்சத்தில் மூழ்கிக் கிடக்கும்.



மனம் என்பது அதன் வசத்தில் இல்லாது, இப்போது வேறு ஒரு பெரிய விஷயத்துக்குள் நுழைந்துவிட்டது. ஆன்மா என்ற விஷயத் தைத் தொட்டு உணர்ந்து, அதைக் கட்டிக் கொண்டு கிடக்கிறது. அதிலிருந்து பிரிந்து வந்து உலக விஷயங்களில் ஈடுபடுவதும், பிறகு மறுபடியும் போய் கட்டிக்கொண்டு கிடப்பதும், கணவனோடு அடிக்கடி கூடுவதற்கு ஆசைப்படும் பத்தினிப் பெண்போல, மனம் என்பது அடிக்கடி இந்த ஆத்ம அனுபவத்தை, அதன் அருகில் நிற்பதை மிகவும் விரும்பி அதனோடு இறுக்கமாய்க் கிடப்பதையே முயற்சி செய்யும்.

தியானத்தில் ஆழமாய் ஈடுபட்ட வர்களுக்கு உலக விஷயங்கள் வேறு விதமாகத் தெரியும். அந்த லயிப்பிலிருந்து வெளிவந்து உடுக்கவோ, உண்ணவோ, பிறரோடு பேசவோ செய்து, பிறகு மறுபடியும் உள்ளுக்குள் புகுந்து விட முடியும். அப்படியிருக்க வேறு சில அறிவுகள் விழிக்கத் துவங்கும்.

இயற்கையின் அசைவுகளும், எதிர்ப்பட்ட மனிதர்களுடைய உள்ளும் புறமும் தெளிவாகத் தெரியும். அவஸ்தைப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய, இப்படி ஆழ்ந்த தியானத்தில் இருப்பவர்களால் முடியும். ஆன்ம அனுபவத் தில் ஆழ்ந்து ஈடுபட்டு தியானத்தில் இருக்கின்ற மனிதர், கருணை வடிவாக இருப்பார். அந்தக் கருணை, எதிரே அவஸ்தைப்படுகின்ற மனிதர்களைப் பார்த்து, அவர்களுக்கு மிகுந்த பிரியத்தோடு உதவி செய்யும். இதுவே கருணையைக் கொண்டு கருணையை ஊற வைத்தல். உதவி செய்வதன் மூலம் இன்னும் தியானம் வலுப்பெறுகிறது. அவர்கள் ஆழ்ந்து உள்ளே கிடக்கிறார்கள்.

எட்டாவதாக, 'சமாதி' என்ற நிலை, ஹட யோகத்தில் பேசப்படுகிறது. 'நான், ஆத்மா' என்ற இரண்டு பிரிவே உள்ள நிலை, முற்றிலும் மறந்து தானே அதுவாக மாறுவது 'சமாதி'. இதற்கு மேல் விளக்க முடியாது; சொல்லில் அடங்காத ஒரு சூட்சுமமான நிலை அது. 'நான்' அற்ற நிலை. மறந்த நிலை. ஈடுபட்டோருக்கு, தான் என்ன செய்கிறோம் என்று தெரியாது. எதுவும் ஞாபகத்தில் தங்காது. ஏதோ செய்துகொண்டிருப்பார்கள். ஆனால், எது செய்தாலும், மிகச் சரியாக இருக்கும். இதுவொரு அற்புதமான வித்தை! கடவுளோடு கலந்த நிலை. இந்து மதம் என்கிற சனாதன தர்மம் மிகச் சிறப்பாக, தெளிவாக, மிக நுணுக்கமாக இங்கே சொல்லப்பட்டிருப்பதையும் தாண்டி, மனித குலத்தின் மேம்பாட்டுக்காக வரையறுத்துக் கொடுத்திருக்கிறது. ஹடயோகம் ஓர் அமிர்த கலசம். ஆனால், முற்றிலுமாய் உணர்ந்து ஈடுபட, எல்லோராலும் முடியாது.

நல்ல குருவிடம், கூர்மையான நல்ல சீடர்கள் வந்து சேருவார்கள். இரும்பைக் காந்தம் இழுப்பது போல, அந்தக் காந்தத்தின் அதிர்வுகள் தொலை தூரத்தில் இருக்கும் இரும்பையும் மெள்ள மெள்ளத் தன் பக்கம்

இழுப்பதுபோல, நல்ல சீடர்களை குரு தனது அமைதியான ஆற்றலால் ஈர்த்துவிடுவார். நல்ல சீடர்களெனில் குருமார்களுக்குக் கொண்டாட்டம். மிகச் சரியான கேள்வியும், அந்தக் கேள்விக்கு உண்டான பதிலும், அதைச் சிந்திக்கவேண்டிய அவசியமும் ஒரு குருவுக்கு ஏற்பட்டுவிடும். அதை விளக்கும்போது பேருவகை பொங்கும். சரியான பாத்திரத்தில்தான் பிச்சை இடுகிறோம் என்கிற நிறைவு ஏற்படும்.

கம்பீரம் சேஷய்யருடைய ஹடயோக விஷயங்கள், அதைப் பற்றி அவர் கொண்டிருந்த ஆழ்ந்த திடமான அபிப்ராயங்கள், பாலசுவாமிக்கு நல்ல விஷயமாய் அமைந்தது. தன்னுடைய 'நானார்' (நான் யார்?) என்ற தத்துவத்தை விவரிக்க, இந்த ஹடயோகத்தின்பால் ஈடுபாடு கொண்டிருந்த ஒரு சீடர் தேவையாக இருந்தது.

''ஹடயோகம் தேவை இல்லை. ஆன்ம விசாரமே போதும். 'நானார்' என்ற விசாரிப்பே மிக முக்கியம்'' என்று பாலசுவாமி, கம்பீரம் சேஷய்யரிடம் சொன்னார்.

''ஹடயோகம் என்னுடைய விஷயமில்லையே சுவாமி! அது விவேகானந்தர் கூறியதாக இருப்பினும், அது அவருடைய விஷயமும் அல்ல. சனாதன தர்மத்தின் ஆரம்ப

காலம் தொட்டு இந்த நெறிமுறைகள் மிகத் திறமையாக, தெளிவாக கடைப்பிடிக்கப்பட்டு, வரையறுக்கப்பட்டு, இதற்குள்ளாக பல்வேறு சூட்சுமங்கள் ஏற்படுத்தப்பட்டு, வழிவழியாக நல்ல குருமார்களின் உதவியால் தேசமெங்கும் பரப்பப் பட்டிருக்கிறது.

பிராணாயாமம் என்பது மூச்சை இழுத்து, கும்பகம் செய்து வெளிப்படுத்துவது மட்டுமல்ல. அதில் பல்வேறு முறைகள் இருக்கின்றன. இயமம், நியமம் என்று ஆரம்பித்தால், எதை உண்ணலாம் எதை உண்ணக் கூடாது, எப்போது உண்ணலாம், எப்போது உண்ணக்கூடாது என்ற நியதிகளெல் லாம் நிச்சயம் உண்டு.

எவ்வளவு சாப்பிடலாம் என்கிற கட்டுப்பாடுகள் அதிகம். இவையும் குருமார்களால் மிகத் தெளிவாக சொல்லிக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, ஹடயோகம் வேண்டாம் என்று நீங்கள் சொன் னால், அதைச் சரியான விதத்திலே மறுக்க வேண்டுமே?'' - கம்பீரம் சேஷய்யர் கவலையோடு தெரிவித்தார்.

ஸ்ரீரமண மகரிஷி என்று அழைக்கப்பட்ட பாலசுவாமி, கம்பீரம் சேஷய்யருக்கு உரைநடையாக விளக்கம் அளித்தார். கவிதை எழுதும் ஆற்றல் அவருக்கு இருப்பினும், கவிதையில் பல்வேறு விஷயங்களை வெளிப்படுத்தியிருப்பினும், உரைநடையாக... தெலுங்கு பேசுகின்ற மனிதனுக்குத் தெளிவாகப் புரியவேண்டுமே என்ற அக்கறையோடு சொல்லப்பட்டது. அந்த உரைநடை, இன்றளவும் பல்வேறு சாதகர்களுக்கு, பல்வேறு மொழிகளில் மாற்றப்பட்டு, பலருக்குப் பேருதவியாக இருக்கிறது.

ஆரம்ப கட்டங்களில் இருப்பவர்களுக்கு ஹட யோகம் நல்லதுதான். ஆனால், ஹடயோகத்தின் மூலம் 'நானார்' என்ற விசாரம் முற்றுப் பெறாது; தெளிவு வராது என்று பகவான் ரமண மகரிஷி என்று அழைக்கப்பட்ட பாலசுவாமி தெளிவாகச் சொன்னார்.

ஒரு விஷயத்தை மறுதலிக்கும்போது, தீர்மானமாக மறுப்பதற்கும் ஞானிகளால்தான் முடியும். ஹடயோகம் பற்றிய தனது கருத்துக்களை, பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்று பிற்பாடு அழைக்கப்பட்ட பாலசுவாமி பேசுவதை அறியும்போது, அவரின் நிதானம் ஆச்சர்யமூட்டுகிறது. ஒரு கடினப் பிரயோகம்கூட இல்லை. நெல் முனையளவும் கர்வம் இல்லை. 26 வயது நிரம்பிய இளைஞனாக பாலசுவாமி இருக்கும்போது இதுகுறித்து விளக்கியிருக்கிறார். ஒரு சொல்கூட அநாவசியமாக வந்து விழவில்லை. கனிந்த சிந்தனை சரியான வாக்கியங்களாக வெளிப்படுத்தப்படுகிறது.

'விசார மார்க்கம் என்பது, முரட்டு மாட்டுக்குப் பசும்புல் கொடுத்துத் தடவி வசப்படுத்துதல்போல' என்று அறிஞர்கள் கூறுவர். மிகத் தீவிரமாக ஞானம் தேடுதல் உள்ளவர்களே விசார மார்க்கத்தில் இறங்குவர்; நடுத்தர நிலை உள்ளவர்கள் மனதை ஒருமுகப்படுத்தி தியானத்தில் ஈடுபடுவர்; இன்னும் ஆரம்ப நிலையில்

உள்ளவர்கள், பிராணாயாமம் போன்ற அப்பியாசங்களில் ஈடுபட்டுப் படிப்படியாக முன்னேறி விசாரத்துக்கு வருவர்.

எது ஒருவருக்கு சௌகர்யமோ, அவ்விதமே பயிற்சி செய்யலாம். யோகிகளைவிட பக்திமானே எனக்குப் பிரியமானவன் என்று கீதையில் ஸ்ரீகிருஷ்ணர் சொல்கிறார். ஏதோ வழியில் அலையும் மனதை நிலைநிறுத்தி, தன்னைப் பார்க்கும் பக்குவம் வந்துவிட்டால், வந்த வழி பற்றிக் கவலையென்ன?

இதற்கு சந்நியாசம்தான் வழியா? அப்படியும் சொல்வதற்கில்லை. தன்னை அறியும் முழு முயற்சியில் ஈடுபடுபவரே சந்நியாசி. வெளி விஷயங்களை விடுபவர்தான், பந்தங்களை நீக்கியவர்தான் என்பதல்ல! தன்னையறியும் ஈர்ப்பில் இருந்துவிட்டால் அவர் தனியாக இருந்தாலும், பெரிய சம்சாரியாக இருந்தாலும், இரண்டும் அவருக்கு ஒன்றாகவே தோன்றும். எல்லா விஷயங்களிலும் ஈடுபட்டாலும், ஈடுபடாதவராகவே அந்த முயற்சியுள்ளவர் இருப்பார்.

''நன்றாகப் புரிந்து கொள்! சாத்விகமான ஆகாரத்தை உண்டு, திடமான முயற்சியுடன், 'தான்' என்ற மமதையை, 'நான்' எனும் அகங்காரத்தை நீக்கிவிட்டால், எல்லோராலும் செய்ய முடிந்த காரியம்தான் அது. இயலாதது எதுவுமில்லை. திடமான முயற்சி முக்கியம்'' என்கிறார் பாலசுவாமி.

ஒரு நாள், சிதம்பரத்திலிருந்து வந்த சாஸ்திரி என்பவர், விவேக சூடாமணி என்ற நூலை பாலசுவாமியிடம் கொடுத்தார். அது அற்புதமான புத்தகம். ஆன்ம விசாரம் உள்ளவர், இது தவிர வேறு எதுவும் படிக்கத் தேவையில்லை. பாலசுவாமி, அதை சேஷய்யரிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னார். சேஷய்யருக்கு அந்த மூல நூல் பிடிபடவில்லை. மொழி நடையால் உள்பொருந்திய பொருளை அறிய மிகக் கஷ்டப்பட்டார். 'இதை எளிமையாக்கித் தாருங்கள்' என்று வேண்டினார்.

அதன் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றை பாலசுவாமியின் தொண்டர் பழனிசுவாமி என்பவர் கொண்டு வந்தார். உலகநாத சுவாமிகள் என்கிற ஞானி, விருத்தப்பாக்களில் எழுதிய நூல் அது. பாலசுவாமியும் உரைநடையில் எழுதத் துவங்கினார். அதே நேரம், சேஷய்யருக்கு இன்னொரு தமிழ்ப் பிரதி கிடைக்கவே, பாலசுவாமி தமிழ் உரைநடையில் எழுதுவதை நிறுத்திவிட்டார்.

உத்தண்டி என்ற இன்னொரு அன்பர், தனது சொத்துக்களை விற்று, தான- தருமங்கள் பல செய்து, தன்னிடம் மீதியிருந்த 100 ரூபாயை பாலசுவாமியிடம் கொடுக்க முற்பட, சுவாமி அதை ஏற்கவில்லை (1904-ல் அது மிகப் பெரிய தொகை).

கம்பீரம் சேஷய்யரின் மருமகன் கிருஷ்ணன் ஒரு நாள் விரூபாக்ஷி குகையை சுத்தம் செய்யும்போது, சுவாமி பாதி எழுதிய விவேக சூடாமணி தமிழாக்க உரைநடையைப் பார்த்தார். அந்த 100 ரூபாய் இருந்தால், இதைத் தமிழில் அச்சடிக்கலாமே என்று தோன்றியது அவருக்கு. எனவே, பாலசுவாமியிடம், அதை எழுதி முடித்துத் தருமாறு கேட்டார். அவரது நோக்கம் என்ன என்று பாலசுவாமிக்குத் தெரிந்தது. சில நாட்களில் தமிழாக்க உரைநடை எழுதி முடிக்கப்பட்டது. உத்தண்டி என்கிற அந்த மனிதரின் காசு புனிதமாயிற்று; விவேக சூடாமணி உரைநடை புத்தகமாயிற்று.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்று பிற்பாடு அழைக்கப்பட்ட பாலசுவாமி எழுதிய விவேக சூடாமணி என்ன சொல்கிறது? உலகத்தில் உள்ள எல்லா மனிதர்களும் உடல் உபாதையில்லாது, எந்தவித துக்கமும் தாக்காது, எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் சுகமாக இருக்கவே விரும்புகிறார்கள். சகலருக்கும் தன் மீதே அளவில்லாத பிரியம் இருக்கிறது. சுகமாய் இருத்தலே இப்பிரியத்துக்குக் காரணம். உறங்கும்போது எதுவும் செய்யாது, அதே நேரம் மிகவும் சுகமாக இருக்கிறோமே... அப்படிப்பட்ட சுகம் வேறு எதில் என்று அலைய, எங்கேயும் துக்கமற்ற சுகம் கிடைப்பதில்லை என்று புரிகிறது.

அப்போது, இதற்கு என்னதான் வழி, எப்படித்தான் இதை அடைவது என்று மனிதர்கள் பரிதவிக்க, அதற்கான வழிகாட்டலாகவே... இறைவன், ஆதிசங்கரர் உருவம் பூண்டு வேதாந்தத்தின் அந்தரங்கத்தை, மிகப் பெரிய ரகசியத்தை விவேக சூடாமணி என்னும் நூலால் வெளிப்படுத்தினான்.

பாலசுவாமியின் உரைநடை யில், முன்னுரை இப்படி ஆரம்பிக்கிறது...



'அரிது அரிது... மானிடராய்ப் பிறத்தல் அரிது! இந்த மானிடர்கள், தங்கள் சுபாவ மாகிய ஆனந்தத்தை அடைய வேண்டும். இது ஞானத்தால் வரும். ஞானம், விசாரத்தால் வரும். இதற்கு என்ன செய்தால் நலம்?'

நல்ல குருவை அடைய வேண்டும். யார் நல்ல குரு, யார் நல்ல சீடன் என்று விளக்கி, குரு சேவை எவ்விதம் என்று கூறி, எது இருப்பினும் தன் முயற்சியே இந்த மார்க்கத்துக்கு வழி என்றும் கூறுகிறார் பாலசுவாமி.

நானே பிரம்மம், அஹம் பிரம்மாஸ்மி என்கிற உணர்வை இடையறாது, தரையில் எண்ணெய் ஊற்றப் படுகிற விதமாக, ஒரே வேகத் தில் சீராய் சிந்திக்க, மனம் தெளிவடையும்; சமாதி கைகூடும் என்கிறார்.

இவ்வளவுதான்! இதுதான் சொல்லப்படுகிறதா? இன்னும் விளக்கமாகப் பேசக்கூடாதா? கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டது போலிருக்கிறதே! மனிதர்களின் நலம் கருதி, பாலசுவாமி தொடர்ந்து எழுதுகிறார்...

'மனிதப் பிறவி மிக அரிதான பிறவி. இதில் அறிஞராகப் பிறப்பது மிகவும் அரிது. அந்த அறிஞன் மோட்ச ஆனந்தத்தை அடைய முற்படுவது, பல நெடும் பிறவிகளின் பயனால் கிட்டுகிறது. பண்டிதர்களின் விளக்கத்தைத் தேடி அலையாதே! வீணையில் நாதம் கேட்கும் போது சந்தோஷம். பிறகு, அது எதுவும் தருவதில்லை. அதுபோல், உபந்யாசங்கள் மோட்சத்தைத் தராது!

முயற்சியில்லாது நடக்குமா? அரசன் என்று சொல்லிக் கொண்டிருந்தால் அரசனாகி விடுவாயா? மருந்து என்று சொல்வதாலேயே வியாதி தீருமா? 'நானே பிரம்மம்' என்கிற வார்த்தையால் முக்தி வராது. குருவின் மூலமாக 'நான்' என்பதன் விளக்கம் கேட்டும், அதை இடைவிடாது சிந்தித்தும் நிலைபெற வேண்டும்.

மோகத்துக்குக் காரணம் மூளை, எலும்பு, கொழுப்பு, சதை, அங்கங்கள், ரத்தம், சருமம் ஆகியவற்றுடன் கூடிய உடல். இதுவே 'நான்' என்றால், பிரச்னைகள் வந்துவிடும். உடல் சுகமே முக்கியம் என்கிறவன், முதலையைக் கரை சேரக் கட்டை யாகப் பிடிப்பவன். உடம்பு பற்றிய அபிமானம் வாடுகிற போது, மோகம் அகலும்போது, மோட்சம் அருகே வருகிறது.

உடம்பு அனுபவிப்பதை மனம் பெரிதாக்கி, கற்பனையில் திளைத்து, அந்தச் சுகத் தில் காலம் கழிக்கிறது. கனவுகளில் உடல் ஆட்டங்கள் தோன்றுகின்றன. இதற்கு மனமே காரணம்! ஆனால், சுகத்துக்கு எல்லை உண்டு; கனவுக்கு முடிவுண்டு.

நேற்று நன்றாக அனுபவித் தேனே; இன்று இல்லையே; நாளை எப்படியோ என்று கணக்குப் போடுகிறது மனம். அனுபவித்துவிட்டு சும்மா இருக்கத் தெரியவில்லை. வருகிறபோது அனுபவிப்போம் என்கிற பொறுமை இல்லை. கூச்சல் துவங்குகிறது. 'எனக்கு இல்லாட்டி, எவனுக்கும் இருக்கக்கூடாது; எனக்குக் கிடைக்கலேன்னா, யாருக்கும் கிடைக்கக்கூடாது.' மனம் எனக்கு, நான், என்னுடையது என்கிற அகங்காரத்தில் மாட்டிக்கொள்கிறது. அப்போது, அனுபவிக்கும் தன்மையையும் அது இழக்க நேரிடுகிறது.


உடம்பு சுகத்தை அனுபவிக்க, மனம் அதைப் பெரிதுபடுத்த, உள்ளே இந்த விஷயத்துக்குக் காரணமான, மூலமான ஆத்மா அசைவற்று, வெறுமே காட்சி யாய் இருக்கிறது. அந்த ஆத்மா இல்லையெனில், உடம்பும் இல்லை; மனமும் இல்லை.

மனமற்ற உடம்பு நினைவற்ற ஆழ்ந்த தூக்கத்தின்போது ஆன்மாவுக்கு அருகே இருக்கிறோம். அது பரம சுகமாய் இருக்கிறது. நிரந்தரமாய், தெளிவாய் ஆன்மாவுக்கு அருகே இருப்பது எப்படி?

ஆன்மா இல்லாது, நான் நான் என்று உடம்போ, மனதோ எதைச் சொல்லும்? எப்படிச் சொல்லும்? ஆகவே, நான் நான் என்பது, ஆத்மாவைச் சொல்வதே! ஆனால், மனதின் அகங்காரம், ஆத்மாவை மறந்துவிட்டு தன்னைத் தான் நான் என்று சொல்லும். ஆன்மா நகர்ந்தால், தான் இல்லை என்பது தெரிந்தும், அது அடிமனதில் இருப்பினும், அதை மறந்துவிட்டு, மறைத்துவிட்டு, மனம் தன்னை முன் னிலைப்படுத்திக்கொள்ளும். ஆத்மா சும்மாயிருக்கும்.

கனவில் ஓர் உலகம் எப்படித் தோற்றுவிக்கப்படுகிறதோ, அதேபோல நனவில் ஓர் உலகம் மனதால் தோற்றுவிக்கப் படுகிறது. நான் இன்ன தேகம், இன்ன ஜாதி, இன்ன மதம், இன்ன மொழி என்று நிரந்தரமில்லாத விஷயங்களை மனம் பெரிதுபடுத்திக்கொள்ளும்.

இவற்றையெல்லாம் தாண்டி, நான் ஆத்மா என்கிற எண்ணத்துடன், மனதின் ஆட்டங்களை, ஆசைகளை நிறுத்தி யார் அமைதியாகிறாரோ, அவராலேயே தன்னை உணர முடியும். மனதின் சஞ்சலம் நீங்கும்.



புத்தி, விஷய- ஞான சேகரிப்புக்கான இடம். பல ஜென்மங்களின் விஷயங்கள் இந்த புத்தியில் ஒளிந்திருக்கும். இதன் தூண்டுதலால் புண்ணியங்கள், பாவங்கள் செய்ய நேரிடும். மனம் அடங்க, புத்தியும் ஒரு கட்டில் நிற்கும்.

இவற்றைத் தாண்டி ஆத்மாவை அறிய, நான், நீ, கடவுள் இவர்கள் எல்லாமும் ஒன்றே என்று புரியும். பிறகு, பேதம் ஏது? பேதமில்லாமல் சண்டையேது? பெரிது சிறிது எப்படி? எல்லாமும் ஆத்ம ரூபமானால் எல்லைகள் உண்டா? ஜாதி- மத- மொழி பேதங்கள் உண்டா? ஆத்மா இன்னொரு ஆத்மாவை அறிய மொழி எதற்கு? மதம் என்ன தடை? ஜாதிக்கு என்ன அர்த்தம்? ஏதுமில்லை.

நான் ஆத்மா என்று தெரிந்துவிட்டால், அதுவே நீயாகிறாய் என்பதும் நேர்ந்துவிடும்.

தேகம் பற்றிய ஆசை, உலகப் புகழ் பற்றிய ஆசை, படிப்பு தரும் கர்வம் இருப்பின், ஆத்மா பற்றிச் சிந்திக்கவே முடியாது. இவற்றை விலக்கினால் ஆன்ம தரிசனம் கிட்டும். எப்படி விலக்குவது?

விஷயங்களில் ஆசை வரும்போதே, அந்தச் சிந்தனை தோன்றும்போதே, கவனமாகப் பார்க்க... எண்ணங்கள் தோன்றும்போதே உற்றுக் கவனிக்க... எதிரி வரும்போதே வெட்டி வீழ்த்த... உள்ளே ஆன்மா சுயமாய் பிரகாசிப்பதை உணரமுடியும்.

இங்கே இதற்கு அகங்காரம் பெரிய தடை. நான் இப்படி, இன்ன விதம், இன்ன வழி, இன்ன குணம், இன்ன மொழி, இன்ன குலம் என்கிற அகங்காரம் பற்றி, உள்ளே கேள்வி கேள். ஆன்மா அகன்ற பிறகு, இறந்த பிறகு என்ன மொழி, என்ன இனம், என்ன நிறம், எவ்வளவு உயரம், எத்தனைப் பணம், எவ்வளவு அழகு... எல்லாம் ஒழிந்தது.

மனதை உள்ளே திருப்பு. இவையனைத்துக்கும் காரணமான ஆன்மாவைப் பார்க்க முயற்சி செய். அப்போது அழியாத அழகு, குறையாத தெளிவான அறிவு, உலகாயத நட்பு தோன்றும். குதூகலம் பரவும். பசியிருப்பினும், நோய்ப்படினும் சிரிப்புதான் வரும். அகங்காரம் அழித்தவுடன் போகாது. மறுபடி மறுபடி வரும். கவனமாய் இரு!

நீர்க்குமிழி உடைந்து நீராவதுபோல, மண் குடம் உடைந்து மண்ணாவதுபோல, இப்பிறவி நீங்கி ஆன்ம சொரூபமாவது எளிதில் விளங்கும். மரண பயம் போகும். எது இவ்வுலகை ஆட்டி அலற வைக்கிறதோ, அந்த மரண பயம் ஞானிக்குச் சிறிதும் இல்லை. சரி சரி, கிளம்பு என்கிற தன்மை ஏற்பட்டுவிடும். இது பெரிய விடுதலை.

உண்ணுதலும், உடுத்தலும் ஞானிக்கு எவ்விதம்? ஞானி இவற்றைச் சொப்பனத்தில் செய்வதுபோல, எந்தப் பிடிப்புமின்றிச் செய்வான். எந்த நியமமும் இல்லாது, சர்வ சுதந்திரமாய்ச் சுற்றித் திரிவான். பித்தன், பேயன்போல நடந்துகொள்வான். யாராலும் அறியப் படாதவனாய், பிச்சைக்காரனோடு பிச்சைக்காரனாய்த் திரிவான்.

ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாள் அருளிய இந்த விவேக சூடாமணி, பாலசுவாமியால் உரை நடையாக்கப்பட்டது. புரிந்து அனுபவித்து எழுதப்பட்டது.

அப்போது, ஹடயோகத்தின் உபயோகம் என்ன?

இயம நியமங்கள் தேவையில்லை. மனம் அடங்க, தானாய் இவை வரும். பிரம்மத்தைச் சார்ந்திருப்பது பிரம்மச்சரியம் என்று புரியும். மந்திர ஜபங்கள், பக்தி கீர்த்தனங்கள், மூச்சு இழுத்துவிடும் பிராணயாமம் இவற்றில் மனம் போகாது. மாறாக சுவாசம், மனம் அடங்க தானாய் சரியாகிவிடும். மோகமில்லா மனதில் கூச்சலில்லாத சுவாசம் ஏற்படும்.

ஆடும் மனதை உற்றுப்பார்க்க, மனம் அடங்கி தானே அழியும். அப்போது, ஆத்ம அனுபவம் ஏற்பட்டுவிடும்.

எனவே, மனதை அடக்குவதை விட்டுவிட்டு, அதை உற்றுப் பார்க்கத் தவறிவிட்டு, யம நியமம், பிராணாயாமம் என்று பயிற்சிகளில் ஈடுபடுவானேன்? நேரிடையாய் எதிரியைத் தாக்கலாமே என்கிறார் பாலசுவாமி. ஒரு வேளை, 'எனக்கு இதுதான் சௌகர்யம். ஹடயோகம் பயின்று, மெள்ள மெள்ள தியானத்துக்கு வருகிறேன்' என்பவருக்கும் சரி என்கிறார் மகரிஷி. தலையைச் சுற்றி மூக்கு தொடு; மூக்கு தொடுவதே முக்கியம் என்பது அவர் விளக்கம்.

கரடியாய், குரங்காய், மானாய், முயலாய் விதம் விதமான சர்க்கரை மிட்டாய்களைத் திருவிழாவில் விற்கின்றனர். ஆளுக்கொரு உருவை வாங்கிச் சாப்பிட்டாலும், கடைசியில் கரைந்து மீறுவது சர்க்கரைதான். இனிப்புதான். அதுபோல் மனித லட்சியம், ஆத்மானுபவம்!

பக்தியோ, நாம சங்கீர்த்தனமோ, மந்திர ஜபமோ, யாக விஷயங்களோ, ஹடயோகமோ... மனம் அழித்து ஆன்மாவை தரிசிப்பதே முக்கியம். ஆனால், நேரடியாய்த் தொடு! விசாரம் என்பது சிதறாத வழி. மற்றவை

திசை மாற்றிவிடலாம். லட்சியம் நோக்கிய பயணம் முடங்கலாம். எது நான், நான் யார், எது அது என்று இடைவிடாது சிந்திக்க, உள்ளே ஏதோ ஒரு கணத்தில் ஸ்பூரிக்கும் என்கிறார்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி பற்றிக் கதையாய் எழுத இயலாது; சம்பவங்களாக அடுக்க இயலாது; அவர் தத்துவ சொரூபம். ஞான விளக்கு. பேச்சு தாண்டி, உணர வேண்டிய சத் விஷயம்.

**'**பகவான் ஸ்ரீரமண மகரிஷி' என்று பின்னாளில் அழைக்கப்பட்ட பாலசுவாமியின் இருப்பிடத்தைச் சுற்றி அன்பர்கள் தங்கினர். அவரால் ஈர்க்கப்பட்டு, அவருடனேயே இருந்து, அவரிடம் கற்க வேண்டும் என்று விருப்பத்துடன் தங்கினார்கள்.

'சத்குரு ஸ்ரீரமண மகரிஷியின் சரிதமும், உபதேசமும்' என்கிற ஸ்ரீரமணாச்ரம வெளியீட்டில், இம்மாதிரியான பக்தர்கள் பற்றிய எல்லா செய்திகளும் வெளியிடப்பட்டிருக்கின்றன. எட்டு பாகங்கள் கொண்ட இந்த நூலில், ஒரு பாகம் 750 பக்கங்களைக் கொண்டிருக்கிறது. ஒவ்வொருவர் இல்லத்திலும் இருக்கவேண்டிய சுவையான, உயர்வான நூல் இது. இந்த நூலில் சொல்லப்பட்ட சில பக்தர்களை இப்போது காணலாம்.

பகவானின் அன்பர்களான பெருமாள்சாமி, கந்தசாமி என்ற இருவர், ஒவ்வொரு நாள் காலையிலும் பி¬க்ஷக்குக் கிளம்புவார்கள். அப்படிக் கிளம்பும்போது, மலையிலிருந்து ஒரு முறையும், மலை அடிவாரத்தில் ஒரு முறையும், எந்தத் தெருவில் பி¬க்ஷக்குப் போகிறார்களோ, அங்கு ஒரு முறையும் தங்கள் கையிலிருக்கிற சங்கினால் நீண்ட முழக்க மிடுவார்கள். வீட்டிலுள்ளவர்கள் அந்த ஒலியைக் கேட்டு பாலசுவாமிக்குப் பி¬க்ஷயிடத் தயாராவார்கள்.

திருவண்ணாமலையில், நகரத்தார்களால் நிர்மாணிக்கப்பட்ட பெரிய சத்திரம் இருக்கிறது. 'ஓயா மடம்' என்று அதற்குப் பெயர். ஓயாது அன்னதானம் செய்ததால், இடையறாது சாதுக்களுக்கு உணவு வழங்கியதால் அந்தப் பெயர் வந்திருக்கக் கூடும். பெருமாள்சாமியும், கந்தசாமியும் அந்த அன்னதான சத்திரத்துக் குப் போய் உணவு யாசிப்பார்கள். அங்கு வழங்கப்படும் உணவைக் கொண்டு போய் பாலசுவாமியிடம் தருவார்கள். பாலசுவாமி அதைப் பகிர்ந்தளிக்க, அமைதியாய் உண்பார்கள்.

ஒரு முறை, அவர்களுடன் இன்னும் இரண்டுபேர் சேர்ந்து வர, அன்னதான சத்திரத்தின் நிர்வாகி, ''என்ன நாலுபேர் வந்திருக்கிறீர்கள்?' என்று கேட்டு விட்டார். நால்வரும் திடுக்கிட்டு, வெட்கத்துடன் பின்வாங்கினர்.


இனிமேல், இந்த நிர்வாகியின் தயவை எதிர்பார்த்து இந்த சத்திரத் தில் கையேந்தாமல், தெருத்தெருவாகக் கையேந்தலாம், வீடுகளில் பிச்சை எடுக்கலாம் என்று தீர்மானித்து, முன்பே சொன்னபடி சங்குகள் ஊதி யாசிக்கக் கிளம்பினார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் ஒவ்வொரு விதமான உணவு வகை கிடைக்கும். இனிப்பு, காரம், புளிப்பு என்றிருக்கும். கொண்டுபோய் பாலசுவாமியிடம் அதைச் சேர்த்ததும், அவர் தன் திருக்கரங்களால் அவற்றை ஒன்றாகப் பிசைவார். ஒரு விநோதமான சுவை யுடன் அந்த உணவு இருக்கும். அங்கே தங்கியிருக்கிற அத்தனை பேருக்கும் போதுமானதாகவும் இருக்கும்.

அப்படி வீடுகளுக்குப் போகும்போது வெறுமே போகாமல், பாலசுவாமி இயற்றிய 'அக்ஷர மணமாலை' பாடிக்கொண்டு போவார்கள். நகரத்தார் சத்திரத்தில் நல்ல சோறு. ஒரேவிதமான குழம்பு, கூட்டு, காய் என்று வக்கணை யான உணவு நகர்ந்து போய்... இருபது- இருபத்தைந்து வீடுகளின் விதம்விதமான உணவு பாத்திரத்தில் போடப்பட்டு, ஒன்றாக பிசையப்பட்டு உண்ண கொடுக்கப்பட்டது; உணவின் மீதான ருசி, தேர்ந்தெடுத்து சாப்பிடு கிற தன்மை இதனால் அழிந்தது.

'ஏன் நாலு பேர்' என்று நகரத்தார் சத்திரத்தில் நிர்வாகி கேட்டதால், எந்தக் கெடுதலும் நேரவில்லை. மாறாக, அந்தக் கேள்வி நல்லதற்கே உபயோகமாயிற்று. பாலசுவாமியைச் சார்ந்த சாதுக்கள் எந்தவிதமான உணவை

உண்ண வேண்டுமோ, அந்த விதமான உணவை ருசி பற்றிய அக்கறை யில்லாமல் உண்டார்கள். உண்ணும் சுகத்திலிருந்து அறுபட்டார்கள்.




கடுந்தவத்தால், உள்ளார்ந்த மௌனத் தால் பிறர் மனதை அறியும் சக்தி பால சுவாமிக்கு இருந்தது. திருவண்ணா மலையில், சேஷாத்ரி ஸ்வாமிகளின் சீடரான குழுமணி நாராயண சாஸ்திரி என்பவர் வாழ்ந்துவந்தார். இவர், சேஷாத்ரி ஸ்வாமியின் சரிதத்தை எழுதி பதிப்பித்திருக்கிறார். ஒரு நாள், வாழைப்பழங்களை பாலசுவாமிக்காக எடுத்துப் போனார். போகிற வழியில் அண்ணாமலையார் கோயிலுக்குப் போய், அந்த சீப்பிலிருந்து ஒரு பழத்தை கோயிலிலுள்ள சம்பந்த விநாயகருக்கு மனதால் நிவேதனம் செய்தார். மீதியுள்ள பழங்களை அண்ணாமலையாருக்காக மனதால் நிவேதனம் செய்தார். பிறகு எடுத்துக்கொண்டு மலையேறி பாலசுவாமியை அடைந்தார் அந்தப் பழத்தை அங்குள்ள அன்பர்களிடம் கொடுத்து உள்ளே வைக்கச் சொன்ன போது, பாலசுவாமி சட்டென்று கை நீட்டி, பழத்தை எடுத்துப்போன தொண்டனைத் தடுத்து நிறுத்தினார்.

'சற்று நில்லுங்கள். விநாயகருக்கு நைவேத்தியம் செய்த அந்தப் பழத்தை நாம் எடுத்துக்கொள்ளலாம்' என்றார். குழுமணி சாஸ்திரிக்கு தூக்கிவாரிப் போட்டது. 'சித்த ஸம்ஹித்' என்று சொல்லப்படும், பிறர் மனதை அறியும் பலம் பாலசுவாமிக்கு இருந்ததைத் தெரிந்துகொண்டார்.

'இந்த பலம் இருக்கின்ற நீங்கள், நான் எதற்கு வந்திருக்கிறேனோ, அதைக் கட்டளையிடக்கூடாதா?' என்று மனதுக்குள் பிரார்த்தித்தார். வால்மீகி ராமாயணத்தை சம்ஸ்கிருத உரைநடையில் எழுதியிருந்ததை பால சுவாமியிடம் காண்பிக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது.



உடனே பாலசுவாமி சட்டென்று, 'ராமாயணம் வாசிக்க வேண்டியது தானே' என்று சொல்ல, குழுமணி சாஸ்திரியின் அதிர்ச்சி அதிகமாயிற்று. அந்த அதிர்ச்சியே பணிவையும், பக்தியையும் கொடுத்தது. தன்னுடைய ராமாயண உரைநடையை அவர் பால சுவாமியின் முன்பு அரங்கேற்றினார்.

வந்தவாசிக்கு அருகேயுள்ள குடியாத்தம் என்கிற ஊரிலிருந்து ஒரு பாட்டி, பாலசுவாமியை வந்து சரணடைந்தார். அந்த அம்மையாரின் ஊர் தவிர, மற்ற விவரங்கள் எதுவும் தெரியவில்லை. அவரை எல்லோரும் 'கீரைப் பாட்டி' என்று அழைத்தார்கள். எதற்காக அப்படி அழைக்கிறார்கள் என்ற விவரமும் புரியவில்லை.

அந்த அம்மையாரும் ஊரில் பல பேரிடம் தானியங்கள் கேட்டு வாங்கி, அதைச் சமைத்து பாலசுவாமிக்குக் கொடுத்த பின்னரே, தான் சாப்பிடு வார். மலையடிவாரத்தில் குகை நமச்சிவாயம் என்ற மண்டபம் இருந் தது. அந்த மண்டபத்தில் ஓர் அறையில் அந்தக் கீரைப் பாட்டி குடியிருந்தார். யாசித்து வாங்கிய பொருள்களை அந்த மண்டபத்தில் சேமித்து வைப்பது அவள் வழக்கம். அந்த மண்டபத்துக்குள் வேறு எவரையும் அவள் அனுமதிப்பதில்லை. இருந்த ஒரே பானையில் வெந்நீர் வைத்துக் குளித்துவிட்டு, பிறகு அதே பானையில் சாதம் சமைத்து, சாதம் வடித்த பின்னர், அதே பானையில் குழம்பு, காய் முதலியவற்றை செய்து, அதை அந்த மண்டபத் தூண்களிலுள்ள தெய்வங்களுக்கு நிவேதனம் செய்வாள். பிறகு மலையேறி, பகவானிடம் தான் சமைத்ததைக் கொடுப்பாள்.

ஏழைக் கிழவியிடமிருந்து திருடுவதற்கு ஒரு திருடன் வந்தான். கதவு திறந்து, உள்ளே இருந்த உணவுப் பொருள்களை சோதனை செய்தபோது, பாட்டி விழித்துக்கொண்டு, ''திருடன், திருடன்'' என்று கத்த, உடனே மலையிலிருந்த  பாலசுவாமியின் காதில் விழுந்து, ''இதோ வந்து விட்டேன்'' என்று பதில் குரல் கொடுத்து, பாலசுவாமி அந்த இருட்டில் தட்டுத் தடுமாறி வந்தார்.

கீழே வந்து பாட்டி தனியாக இருப்பதைப் பார்த்து என்னவென்று விசாரித்தனர். அருகே உள்ள நமச்சிவாயர் குகையிலும், மற்ற மண்டபங்களிலும் கீரைப் பாட்டியின் குரல் கேட்கவில்லை. ஆனால் உயரே உள்ள பால சுவாமியின் இருப்பிடத்தில் அந்தக் குரல் கேட்டிருக்கிறது. 'ஏதாவது கனவு கண்டு உளறியிருப்பாய்' என்று மற்றவர் கேலி செய்ய, பாலசுவாமி கதவு திறந்து பார்த்தார். தானியங்கள் இறைந்திருந்ததைப் பார்த்து, திருடன் வந்தது உறுதி செய்யப்பட்டது.

தவசிகளுக்கும், சாதுக்களுக்கும் உணவிடுதலே வாழ்க்கையாகக் கொண்டிருந்த அந்தக் கீரைப் பாட்டி, 1972-ஆம் வருடம் இறைவனடி சேர்ந்தார். அவர் சரீரம் ரமணாச்ரமத்துக்கு அருகேயுள்ள தக்ஷிணாமூர்த்தி கோயிலுக்கு எதிரே இருக்கும் புளியமரத்தடியில் அடக்கம் செய்யப்பட்டது. கீரைப் பாட்டியே, ரமணாச்ரமத்தில் வளர்க்கப் பட்ட பசு- லட்சுமியாக மறு ஜென்மம் எடுத் ததாக ஆஸ்ரமத்தில் பலர் நம்புகிறார்கள்.

இதைப் பற்றி பேசும்போதெல்லாம் பகவான் ரமண மகரிஷி மௌனமாக இருந்துவிடுவார். அந்தப் பசு எங்கிருந்து வந்தது என்று பிறர் விசாரிக்கும்போது, குடியாத்தத்திலிருந்து அருணாச்சலம் பிள்ளை என்பவர் ஓட்டி வந்திருக்கிறார் என்று தெரிய வர, 'அட கீரைப் பாட்டியும் அதே இடத்திலிருந்துதான் வந்தாள்' என்று பகவான் ரமணர் சொன்னது குறிப்பிடத்தக்கது.

ஒரு முறை பாலசுவாமியும், பழனிச்சாமியும் கிரிவலம் முடித்து அண்ணாமலையார் கோயிலுக் குள் அமர்ந்திருந்தபோது, ஈசான்ய மடத்து மடாதிபதி தன் சீடர்களுடன் கோயிலுக்குள் நுழைந்தார். சுவாமி தரிசனம் முடித்து வெளியே வரும்போது, மடாதிபதியும், அவரது சீடர்களும் பாலசுவாமியைச் சூழ்ந்து கொண்டார்கள். தங்களுடன் வருமாறு வற்புறுத்தினார்கள்.

பாலசுவாமி சைகையால் 'வர முடியாது' என்று சொல்ல, மடாதிபதி சீடர்களின் உதவி யோடு குண்டுக்கட்டாய் சுவாமியைத் தூக்கி, தன் வண்டியில் வைத்து மடத்துக்கு அழைத்துப் போனார். வண்டியில் சவாரி செய்வதை முற்றிலும் தவிர்த்த பாலசுவாமி, அன்று வண்டி யில் போகும்படி நேரிட்டது. ஈசான்ய மடத்தில் பாலசுவாமியை அமர வைத்து, எதிரே தலை வாழையிலை போட்டு அதில் விதம்விதமான பதார்த்தங்களுடன் உணவு பரிமாறினார். 'மடத்திலேயே தங்கலாமே' என்று மடாதிபதி வற்புறுத்தினார். அந்த உணவு வகைகளில் சிலதை மட்டும் உண்டுவிட்டு அவர்கள் அன்புப் பிடியிலிருந்து பாலசுவாமி தப்பித்து வந்தார்.

பாலசுவாமி கிரிவலம் வரும்போது, ஈசான்ய மடத்தில் உள்ளவர்கள் வணங்கி, சுவாமியை உள்ளே வரச் சொல்வது வழக்கம். சில நேரம் பாலசுவாமி ஈசான்ய மடத்துக்குப் போவதும் உண்டு. அப்போது இலை பரிமாறி உணவு போடுவார்கள். சுவாமி சிறிதளவு உணவு எடுத்துக்கொண்ட பிறகு, மீதமான அந்த உணவு வகைகளை அங்குள்ளவர்கள் கலந்து 'இது பாலசுவாமியின் பிரசாதம்' என்று உண்ணுவார்கள்.

அதைப் பார்த்த பிறகு, பாலசுவாமி அங்கு இலையில் உண்ணுவதை நிறுத்திவிட்டார். அந்த மடத்தில் வாசலில் போய் கையேந்தி யாசிப்பார். அவர்கள் கையில் சிவபெருமானுக்கு நைவேத்தியம் செய்த அன்னத்தைப் போடுவார்கள். அந்த அன்னம் உப்பில்லாமல் இருக்கும். அதைப் பற்றிய எந்த அக்கறையுமில்லாமல், கையில் விழுந்த உணவைச் சாப்பிட்டுவிட்டு, கைகளைத் துடைத்துக்கொண்டு பாலசுவாமி நகர்ந்து விடுவார்.

பாலசுவாமியைப் போலவே அவருடைய சீடர்களும் வாழ்வு குறித்துத் தெளிவுள்ளவர்களாய் இருந்தார்கள். 'என்ன நாலு பேர்' என்று அன்னம் போடுகிற மடத்து நிர்வாகி அதட்டலாக, அகங்காரமாகக் கேட்டால், உடனே அவ்விடம்விட்டு நகர்ந்து, எந்தக் கேள்வியும் வராத வண்ணம், வீடுகளில் போய் யாசித்து உண்டார்கள். பதிலுக்குச் சண்டை போடவில்லை. 'போட்டா போடு, போடாட்டி போ' என்று கூவவில்லை. எந்தச் சலனமும் இல்லாமல் நகர்ந்துவிடுகிறார்கள்.

இதைக் கற்றுக்கொள்ள வேண்டும். அலங்காரமாய்த் தரப்படுவதைத் தவிர்த்து, எங்கு அன்போடு தரப்படுகிறதோ அங்கு மௌனமாய் ஏற்பது ஒரு பக்குவம். நெல் முனையும் தன்னுள் கர்வமில்லாத விஷயம். ஞானியின் அண்மை, சீடனின் 'தான்' என்ற கர்வத்தை முதலில் அழிக்கும்.

மிகப்பெரிய பண்டிதர், வாழைப்பழம் வாங்கி வந்தார். நேரே மகானிடம் தந்திருக்கலாமே! கடவுள் இன்னும் மேம்பட்டவர் என்று நினைத்து, ஒரு பழத்தை இந்தச் சாமிக்கும், மற்றதை அந்தச் சாமிக்கும் மனதால் நிவேதனம் செய்தார்.

நிவேதனத்தை மகானிடம் எடுத்துச் சென்று கொடுத்தார். சட்டென்று மகான், விநாயகருக்கு நிவேதித்த வாழைப் பழத்தைத் தான் எடுத்துக்கொள்வதாகச் சொன்னார். பண்டிதருக்குத் தூக்கிவாரிப் போட்டது. 'எனக்குள் ஒரு விஷயம் இருக்கிறதே; அதைக் கண்டுபிடித்துச் சொல்லுங்கள்' என்று மானசீகப் பிரார்த்தனை செய்தார். அதுவும் சொல்லப் பட்டது. வந்த விஷயம் நிறைவேறியது.

ஆனால், தனக்கு இந்த வித்தை தெரியும் என்று பால சுவாமி வெளியே காட்டவேயில்லை. அது பற்றிய பேச்சோ சைகையோ இல்லை. இதுதான் ஞானியின் சிறப்பு. வெள்ளை உள்ளம். ஸ்படிக மனம்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்று பிற்பாடு அழைக்கப் பட்ட பாலசுவாமியின் வாழ்க்கையைப் பார்க்கும்போது பெரும் பிரமிப்பு ஏற்படுகிறது. நெல் முனையும் அலட்டாத அந்த குணம் நம்மைத் தாக்கி, நமக்குள்ளும் இந்த புத்தி வரக்கூடாதா என்கிற ஏக்கம் மண்டுகிறது. வரவேண்டும் என்கிற ஆவல் கிளறுகிறது.

ஈசான்ய மடத்தில் உள்ளவர்கள், தான் உண்டதைத் திரட்டி, 'பாலசுவாமியின் பிரசாதம்' என்று உண்பதைப் பார்த்து, இலையில் உண்பதைத் தவிர்த்துக் கைநீட்டி உணவு வாங்குகிறார் பாலசுவாமி.

இலை உணவு, விருந்து. அறுசுவை நிறைந்தது. கையில் போடப்பட்ட உணவோ சிவ நிவேதனம். உப்பில்லாதது. இதுபோதும் என்று தன்னை எளிமையிலும் எளிமையாக்கியதை யோசிக்க, உள்ளே நெட்டுயிர்ப்பு ஏற்படுகிறது; பாலசுவாமியிடம் மிகப் பெரிய மரியாதை ஏற்படுகிறது. எல்லாம் வல்ல ஞானி எளிமையாய் இருக்கிறார். எப்படி? 'எல்லாம் வல்லவரானதால்' என்று எண்ணத் தோன்றுகிறது. எதுவும் தெரியாதபோதுதான் ஆடம்பரம் அவசியமாகிறது. எந்த விளம்பரமும் இல்லாத அந்த எளிமை, நினைக்க நினைக்கப் பரவசம் தருகிறது.


பச்சையம்மன் கோயில்

பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் வாழ்வை ஊன்றிக் கவனித்தால், கற்றுக் கொள்ளப் பலதும் உண்டு.


திருவண்ணாமலை நகரத்தை 1906-ஆம் ஆண்டு கொடிய ப்ளேக் நோய் தாக்கிற்று. அப்போது, அவ்வூரில் உள்ள சுகாதார அதிகாரிகள், பாலசுவாமியை நகருக்கு வெளியே போய்த் தங்கியிருக்கும்படி வேண்டிக் கொண்டார்கள். பாலசுவாமியும் திருவண்ணாமலையில் வடகிழக்குப் பக்கம் உள்ள பச்சையம்மன் கோயிலுக்கு அன்பர்களுடன் சென்று, வசிக்கத் துவங்கினார்.

அந்தக் கோயிலுக்குப் பச்சையம்மன் வருவதை, தான் கண்டதாகச் சுவாமி கூறுவது உண்டு. பார்வதிதேவி தவம் செய்ய திருவண்ணாமலைக்கு வந்து, முதலில் கௌதம முனிவரின் ஆஸ்ரமத்துக்குச் சென்றார். பிறகு ஆஸ்ரமத்துக்கு அருகே இருக்கும் இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தவம் செய்தாள். பார்வதி தவம் செய்த இடமே பச்சையம்மன் கோயில். பார்வதிதேவியின் நிறம் மரகத நிறமாக இருந்ததால், அவளுக்குப் பச்சையம்மன் என்கிற பெயர் வந்தது.

அங்கே உள்ள குளங்களில் நீராடி, தங்களுக் குத் தேவையான நீரை, சுவாமியும் அவரது அன்பர்களும் எடுத்துக்கொண்டார்கள்.

சென்னையைச் சேர்ந்த ரங்கசாமி ஐயங்கார் என்கிற அன்பர், அடிக்கடி சுவாமி யைப் பார்க்க வருவார். அப்படி ஒருமுறை வந்தபோது, உச்சி நேரத்தில் குளத்தில் இறங்கி நீராடத் துவங்கினார்.

பச்சையம்மன் கோயிலுக்குள் இருந்த பாலசுவாமி திடீரென்று வெளியே வந்தார். இயற்கை உபாதைக்காக வெளியே போகிறார் என்று அன்பர்கள் நினைத்தார்கள். ஆனால், அது அல்ல காரணம்.



அந்தக் குளத்துக்கு அருகே உள்ள காட்டுப் பகுதியில் வசித்த சிறுத்தை ஒன்று, கடும் வெயில் காரணமாக ஏற்பட்ட தாகத்தைத் தீர்த்துக் கொள்ளக் குளக்கரைக்கு வந்து கொண்டிருந்தது.

பாலசுவாமி அந்தச் சிறுத்தையைப் பார்த்து, 'நீ சற்று நேரம் கழித்து வா! உன்னைக் கண்டால் ரங்கசாமி பதறுவான்; பயப்படுவான். இப்போது போய்விடு!' என்று மென்மையான குரலில் சொன்னார். சிறுத்தை உடனே நகர்ந்துவிட்டது.

கரையேறிக்கொண்டிருந்த ரங்கசாமியைப் பார்த்து பாலசுவாமி, இம்மாதிரி உச்சி நேரத்தில் குளங்களில் குளிக்கக் கூடாது; காட்டு மிருகங்கள் நீர் குடிக்க வரும் நேரம் இது என்று தெளிவுபடுத்தினார்.

சிறுத்தை வந்தது பற்றி ஒன்றும் சொல்ல வில்லை. காட்டு விலங்குகள்கூட, சுவாமியிடம் அடிபணிந்தன என்று தெரிகிறது.

எளிமைக்கு உதாரணம் பாலசுவாமி. ஒரு மலையாளத் துண்டை ஓர் அன்பர் தர, அதைத்தான் உடம்பு துடைத்துக்கொள்ள உபயோகப்படுத்தி வந்தார். அந்தத் துண்டு நாளடைவில் நார் நாராகக் கிழிந்து விட்டது. ஆனால், பாலசுவாமி அதை ஒருபோதும் மற்றவர் முன் பிரிப்பதில்லை. துண்டை ஒரு பந்தாய்ச் சுருட்டி, உடம்பு துடைக்கப் பயன்படுத்துவார். பாறை இடுக்கில் உலர்த்துவார்.

பாலசுவாமியின் அன்பர் ஒருவர், இப்படி இடுக்கில் இருக்கும் துண்டைக் கண்டு வேதனைப்பட்டார். 'எங்கள் உபயோகத்துக்கென எங்களிடம் பெட்டி பெட்டியாய் துண்டுகள் இருக்க, உங்கள் துண்டு பற்றி அக்கறையில்லாமல் இருந்துவிட்டோமே' என்று வெட்கப்பட்டார்; அழுதார்.



அன்பர் வருத்தப்படுவதைக் கண்டு பாலசுவாமி ஒரே ஒரு துண்டும், ஒரே ஒரு கோவணத் துணியும் எடுத்துக் கொள்ளச் சம்மதித்தார். எளிமை, சுவாமியிடம் இயல்பாய் இருந்தது. எளிமை இங்கு போதிக்கப்படவில்லை; மாறாய், வாழ்வாக இருந்தது.

பாலசுவாமியைத் தங்கள் குழுவோடு சேர்த்துக்கொள்ள பலருக்கும் ஆசை. பகட்டற்ற ஒரு ஞானியின் பேச்சிலும் நடத்தையிலும் மயங்கி, 'இவர் எங்கள் மடத்தைச் சேர்ந்தவர், எங்கள் இனத்தைச் சேர்ந்தவர்' என்று சொல்லிக் கொள்ளும் ஆவல் இருந்தது.

சிருங்கேரி மடத்தைச் சார்ந்த பண்டிதர் ஒருவர் வந்தார். பாலசுவாமியிடம் பல விஷயங்கள் பேசினார். அப்படிப் பேசும்போது, ''உங்களுக்குத் தெரியாததல்ல. நீங்கள் அந்தண குலத்தில் பிறந்தவர்கள். எனவே, தாங்கள் முறைப்படி சந்நியாசம் பெறுவது சிறப்பு அல்லவா! அப்போதுதானே அந்தணருக்குரிய எந்தக் கிரியைகளையும் செய்யாதிருக்கும் உரிமையைப் பெறுகிறீர்கள்! துறவு பூணாது கிரியைகளை நிறுத்துவது பாபமல்லவா? நீங்கள் சம்மதித்தால், என் மடத்துக்குப் போய், தாங்கள் சந்நியாசம் பெறுவதற்கு வேண்டிய வஸ்துக்களோடு வருகிறேன். காவி உடை உடுத்தாது போனாலும் பரவாயில்லை; தங்களுடைய கௌபீனமாவது காவி நிறத்தில் இருக்கட்டும்'' என்று வேண்டினார். பாலசுவாமியைத் தங்களுடைய குரு பரம்பரையில் சேர்த்துக்கொள்ள விரும்புவதாகவும் தெரிவித்தார்.

மதிய உணவுக்கு, மலைக்குக் கீழே போகப் போவதாகவும், மறுபடி மேலே வரும்போது தக்க பதில் சொல்லுமாறும் கேட்டுக்கொண்டார்.

சிருங்கேரி மடத்து அன்பர் போனபிறகு, முதியவர் ஒருவர் மூட்டையோடு மலைக்கு மேலே வந்தார். அவர் முகம், பாலசுவாமிக்குப் பரிச்சய மானதாய் இருந்தது. அந்த மூட்டை புத்தக மூட்டை போல் இருந்தது. வந்தவர், மூட்டையை இறக்கி வைத்துவிட்டு, குளித்துவிட்டு வருவதாகக் கூறிச் சென்றார்.

அவர் சென்றபிறகு பாலசுவாமி அந்த மூட்டை யைப் பிரித்துப் பார்த்தார். மேலே முதன்மையாய் ஒரு புத்தகம் இருந்தது. அது வடமொழிப் புத்தகம். 'அருணாசல மகாத்மியம்' என்கிற தலைப்பில் இருந்த புத்தகம்.

தமிழில் அருணாசல புராணம் உண்டு. ஆனால், வடமொழியில் அருணாசல மகாத்மியமா என்கிற ஆச்சரியத்துடன், புத்தகத்தை பாலசுவாமி பிரித்தார்.

புத்தகத்தில் முதல் ஸ்லோகமாக, ஈஸ்வரனே அருணாசலம் தலத்தைப் பற்றிப் பெருமையுடன் உரைப்பதாக ஒரு ஸ்லோகம் இருந்தது.

'இந்த அருணாசல தலத்தின் மூன்று யோசனை தூரத்துக்குள் (சுமார் 20 மைல்) இருப்பவர்களை, தீ¬க்ஷ ஏதுமின்றி, எல்லா பந்தங்களிலிருந்தும் விடுவித்து, அவர்களுக்கு உயர்ந்த நிலையைக் கொடுப்பேன். இது ஈஸ்வரனான என் ஆணை' என்றிருந்தது.

பாலசுவாமி, அந்த முதியவர் வருவதற்குள் அந்த ஸ்லோகத்தை எழுதி வைத்துக்கொண்டு, அந்தப் புத்தகத்தை இருந்த இடத்திலேயே வைத்துவிட்டார். மறுபடி, அந்த முதிய அந்தணர் வந்தாரா இல்லையா என்பது பாலசுவாமிக்குத் தெரியவில்லை.

ஆனால், மலை இறங்கிப் போன பண்டிதர் வந்தார். அவரிடம் இந்த ஸ்லோகத்தைக் காட்டினார் பாலசுவாமி. படித்தவரான அவர், இதைப் புரிந்துகொண்டு தன்னை மன்னித்து விடுமாறு கூறி, விடைபெற்றார். பின்னர், தம் குருவான ஸ்ரீநரசிம்ம பாரதியிடம் இதுபற்றிக் கூறியபோது, அவரை ஸ்ரீநரசிம்ம பாரதி கடிந்து கொண்டாராம்.

'வந்தவர் யார், சிவபெருமானா?' என்று பிற்பாடு அன்பர் ஒருவர் கேட்டதற்கு, பாலசுவாமி 'ஆம்' என்று தலை அசைத்திருக்கிறார்.

'தான்' என்கிற அகந்தையைத் துறந்த பாலசுவாமிக்கு காவியும் தீ¬க்ஷயும் எதற்கு? சத்தியத்துக்கு எந்த வேடமும் தேவையில்லை.


**தி**ருவண்ணாமலை என்பது ஒரே ஒரு குன்று அல்ல; அது உயர்ந்தும் தாழ்ந்தும் படிப்படியாகப் பல குன்று கள் சூழ்ந்த காட்டுப் பகுதி. இரண்டு மூன்று மலைகள் ஒன்று கூடும் இடத்துக்கு இடையே நேர்க்குத்தான சரிவும், அந்தச் சரிவில் அடர்ந்த வனங்களும் அருவிகளும் சிற்றோடைகளும் இருக்கும். அந்தப் பகுதிகளில் மனித நடமாட்டமே இருக்காது. அந்த மலையில் வசிக்கும்போது, கடவுள் அருளால் பாலசுவாமி பல்வேறு காட்சிகளை உணர்ந்தது உண்டு. ஒருமுறை பாலசுவாமி, தான் கண்ட காட்சியை அன்பர்களுக்கு விளக்கினார்.

''நான் விரூபாக்ஷி குகையில் இருக்கும்போது, இது நிகழ்ந்தது. ஒருநாள் கண்ணை மூடியிருக்கும்போது, மலைக்கு மேல் வடகிழக்கு திசையில், நான் தனியே நடப்பதுபோல் உணர்ந்தேன். மலர்கள் நிரம்பிய தோட்டத்தைக் கண்டேன். அந்தத் தோட்டத்துக்கு நடுவே பெரிய கோயிலும், மதிலும், கல்லில் செதுக்கப்பட்ட நந்தியும் இருந்தன. ஓர் அதிசயமான ஒளி எங்கிருந்தோ வந்தது. அது மிகவும் ரம்மியமாய் இருந்தது. அந்தக் கோயிலில் பூஜைக்கு மணி அடித்தது. மணி அடித்ததும், அந்தக் காட்சி மறைந்துவிட்டது. இன்னொரு முறை, வேறு விதமான காட்சி தோன்றியது. மலையில் நடக்கும் போது, பெரிய குகையைக் காண நேர்ந்தது. அந்த குகைக்குள் நுழைய, அருவிகளையும், கண்ணுக்கினிய பூந்தோட்டங்களையும், பூந்தோட்டங்களின் நடுவில் குளங்களையும், நன்கு பராமரிக்கப்பட்ட பாதை களையும், ஒளி பொருந்திய விளக்குகளையும் பார்த் தேன். நான் பார்த்தவையெல்லாம் மிக ரம்மியமாக இருந்தன. ஒரு பாதையில் செல்லச் செல்ல, சித்தபுருஷர் ஒருவரைக் கண்டேன். தக்ஷிணாமூர்த்தி போல அந்தச் சித்தபுருஷர் ஒரு குளக்கரையில் இருந்த மரத்தடியில் அமர்ந்திருந்தார். அவரைச் சுற்றிப் பல முனிவர்கள் அமர்ந்திருந்தனர். அவர்களின் கேள்விகளுக்கு அவர் பதில் சொன்னார். அந்த இடம் எனக்கு மிகவும் தெரிந்த இடம் போலிருந்தது. அவ்வளவுதான், கண்விழித்துவிட்டேன்.

சில வருடங்களுக்குப் பிறகு, வடமொழி அருணாசல மஹாத்மியத்தில் இருந்து சில வரிகளைப் படித்தேன். அதில் ஈஸ்வரன் சொல்கிறார்...

*'அங்கியுரு வாயுமொழி மங்குகிரியாக*
*தங்களருளால் உலகம் தாங்குதற்கன்றி*
*இங்கு இறைவன் சித்தன் என என்றும் எனதுள்ளே*
*பொங்கி ஒளிரும் குகைபல் போக மொட்டேன் என்று உள்ளே'*

(இது பாலசுவாமியின் தமிழ் மொழிபெயர்ப்பு) வடமொழி அருணாசல மஹாத்மியத்தில் சித்தபுருஷரை அந்தக் குகையில் நான் எப்படிக் கண்டேனோ அவ்விதமாகவே வர்ணிக்கப்பட்டிருந்தது.''



பாலசுவாமி, அண்ணாமலையை தன் சொந்த இடமாகக் கருதியதால், நேரம் கிடைக்கும்போதெல்லாம் மலைச்சாரலில் சுதந்திரமாக நடந்துபோவது வழக்கம். மலையில் அவரது கால்கள் படாத இடங்களே இல்லை. இரவு-பகல் என்று பாராது, நினைத்துக்கொண்டால் தன் இருப்பிடத்தை விட்டுப் புறப்பட்டுவிடுவார். ஒருமுறை, அப்படி மலையில் உலாவும்போது ஒரு குகையைக் கண்டார். அதை அவர் நெருங்கியபோது, அந்தக் குகை பெரிதாகப் போயிற்று. குகைக்குள் சென்றபோது, இன்னும் பெரிதாக வளர்ந்தது. அதன் இருபுறங்களும் சோலைகளும் மரங்களுமாகத் தெரிந்தன. குகையில், தான் சென்ற வழி ஒரு குளத்தை அடைந்தது. அந்தக் குளத்துக்கு நடுவே ஒரு கோயில் இருந்தது.

இவ்வாறு பல காட்சிகளை, பாலசுவாமி தன் அன்பர்களுக்குச் சொல்லியுள்ளார். அப்போது தேவராஜ முதலியார், சுவாமியை நோக்கி, ''இது கனவில்லையா?'' என்று கேட்டார். அதற்கு பாலசுவாமி, ''கனவோ காட்சியோ, எது வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளுங்கள்'' என்றார்.

திருவண்ணாமலை ரகசியம் நிறைந்தது. பல சித்தபுருஷர்கள் தங்கியிருக்கின்ற மலை அது. அதன் ரகசியங்கள், ரகசியங்களாகவே வைக்கப்பட்டிருக்கின்றன. அதை அறிய வெகு சிலரே முயற்சி செய்கிறார்கள். முயற்சி செய்த சிலரும், தான் கண்ட காட்சிகளைப் பிறருக்குச் சொல்லாது வாய்மூடி மௌனியாக இருந்துவிடுகிறார்கள்.

ஆனால், பாலசுவாமியோ, தான் கண்ட அதிசயங்களைப் போலப் பல ரகசியங்களைத் தன் அன்பர்களுக்கு அடிக்கடி சொல்லி வந்தார். அன்பர்கள் நடுவே மதிப்புக்குரிய முனிவராய் ஸ்ரீபாலசுவாமி இருந்தார். அதேநேரம், எளிய மக்களுக்கு மிக எளிமையான நண்பராய், அன்பு மிகுந்த குருவாய், ஆதரவாளராய் வாழ்ந்தார்.

போளூருக்கு அருகே மண்டகுளத்தூர் என்ற ஊரில் வசித்தவள் எச்சம்மாள். லட்சுமி என்பது எச்சுமி என்று திரிந்து, எச்சுமி என்பது எச்சம்மாள் என்று ஆயிற்று. அவளுடைய சொந்த வாழ்வு சபிக்கப்பட்டது போலிருந்தது. இருபது வயதுக்குள் தன் கணவனையும், ஒரே மகனையும், அடுத்துப் பிறந்த பெண்ணையும் ஒவ்வொன்றாகப் பறிகொடுத்தாள். ஒரு சாதாரணப் பெண்ணுக்கு இது பேரிடி! வாழ்வின் ஆதாரங்கள் அத்தனையும் பிடுங்கிப் போட்டு விட்ட நிலை. 'இப்படி அனைத்தையும் இழந்து, தனிமரமாய் நிற்க என்ன பாவம் செய்தேன்' என்று படித்தவர்களே புலம்பக்கூடிய தன்மை. படிப்பறிவில்லாத எச்சம்மாள் ரொம்பவே நிலைகுலைந்து போனாள்.





வீட்டுக்கு எதிரே இருக்கிற பள்ளிக்கூடம்; அதில் தன் குழந்தைகள் விளையாடிய விளையாட்டு என ஞாபகம் வரும். எப்பேர்ப்பட்ட சொர்க்கத்தை இழந்திருக்கிறோம் என்ற வேதனை நெஞ்சைத் தாக்கும். எத்தனை அடித்துக்கொண்டு அழுதாலும், ரணம் ஆறாது. மீண்டும் மீண்டும் துக்கம் பொங்கும்.

வடதேசத்துக்குப் போய், அங்கேயுள்ள சாதுக்களுக்கு உதவி செய்தால், தன் மனம் மாறும்; தான் செய்த பாவங்கள் தொலைந்து, அடுத்த ஜென்மமாவது உருப்படியான ஜென்மமாக இருக்கும் என்ற எண்ணத்தில், அங்கே போனாள். ஆனால், அப்போதும் மனம் நிம்மதி அடையவில்லை. அவள் துயரக் கதையைக் கேட்டுச் சாதுக்களும் துன்பப்பட்டனர். அவளின் துன்பத்தை நீக்க வழி தெரியாது தவித்தார்கள்.

ஒருமுறை எச்சம்மாளின் உறவினர்கள், திருவண்ணாமலை பாலசுவாமி பற்றி எடுத்துரைத்தார்கள். அவரைக் கண்டவர் மன அமைதி பெறுகிறார் என்றனர். எச்சம்மாள் என்கிற அந்த லட்சுமி அம்மாளும், பாலசுவாமியைத் தரிசிக்கவேண்டும் என்று ஆசைப்பட்டாள். காலம் தாழ்த்தாமல் திருவண்ணாமலை சென்று, அங்கே தன் தோழியின் வீட்டில் தங்கிக்கொண்டு, பாலசுவாமியைப் பார்க்கச் சென்றாள். விரூபாக்ஷி குகையில் பாலசுவாமியைத் தரிசித்தாள். ஆனால், அவரிடம் தனது துக்கத்தைப் பற்றி எதுவும் சொல்லவில்லை. பாலசுவாமியும் என்ன விஷயம் என்று கேட்கவில்லை. ஒரு மணி நேரம் அவர் எதிரே நின்றிருந்தாள். பிறகு, மலையை விட்டுக் கீழே இறங்கும்போது, அவளுடைய துக்கமெல்லாம் வடிந்திருந்தது. தோழியிடம் குதூகலமாக அந்தத் தரிசனம் பற்றிச் சொன்னாள். தன் வேதனை அறவே ஒழிந்தது என்று விளக்கினாள். மீண்டும் ஒருமுறை விரூபாக்ஷி குகைக்குச் சென்று பாலசுவாமியைத் தரிசித்தாள். பிறகு, எந்தவொரு மனவேதனையும் இல்லாமல், தன் துயரங்கள் பற்றி அவளால் மற்றவர்களிடம் பரிமாறிக்கொள்ள முடிந்தது.

எப்படி இது சாத்தியமாயிற்று என்று உறவுகள் கேட்டால், ''நான் பாலசுவாமியை வணங்குகிறேன். அவர் மீது பக்தி செலுத்துகிறேன். அதனால், என் துன்பங்கள் தீர்ந்தன'' என்று பதில் சொன்னாள். அன்றிலிருந்து சுமார் 38 வருடங்கள், பாலசுவாமிக்கும் அவரைச் சுற்றியுள்ள அன்பர்களுக்கும் உணவு தயாரித்துத் தருவது, அவளுடைய வேலை ஆயிற்று. அவர்கள் உண்டதுபோக மீதி இருக்கும் உணவை, தான் உண்பதும் வழக்கமாயிற்று. தந்தை இறந்த பின்பு, அவளுக்குச் சேரவேண்டிய பணத்தை அவளுடைய சகோதரர்கள் ரொக்கமாக அனுப்பினர். அந்தப் பணம் முழுவதையும் பாலசுவாமியின் அன்பர்களுடைய சேவைகளுக்காகவே செலவழித்தாள் லட்சுமி அம்மாள்.




நல்லது- கெட்டது எதுவாக இருந்தாலும் பாலசுவாமியிடம் அவள் உடனே அதைப் பகிர்ந்துகொள்வாள். பாலசுவாமியும் அவளிடம் மிகுந்த கருணையுடன் இருந்தார். அவளுக்குக் குழந்தைகள் இல்லாததால், சகோதரன் மகள் செல்லம்மாளைத் தத்தெடுத்துச் சீராட்டி வளர்த்தாள். பருவ வயது வந்ததும், மணமுடித்துக் கொடுத்தாள். ஒருநாள், செல்லம்மாள் இறந்துபோனதாக அவள் வாழ்க்கைப்பட்ட கிராமத்திலிருந்து தந்தி வந்தது. செல்லம்மாள் நோயுற்றிருந்தாள் என்று இதற்கு முன் எந்தத் தகவலும் வந்திருக்கவில்லை. திடுமென, இறந்துபோனாள் என்ற செய்தியே வந்தது. அதை பகவானிடம் தெரிவித்துக் கண்ணீர் விட்டாள், லட்சுமி அம்மாள். அவள் நிலைக்கு இரங்கி, பாலசுவாமியும் கண்ணீர் விட்டு அழுதார். பாலசுவாமியின் கண்ணீர், அந்தப்


பெண்மணிக்கு ஆறுதல் தந்தது. 'வாழ்க்கையென்றால் இப்படித்தான் இருக்கும்' என்ற சமாதானம் ஏற்பட்டது.

பாலசுவாமி அவளுடைய துன்பத்தைத் தான் தாங்கி, அவளைப்போலவே கண்ணீர் விட்டு, அவளுக்கு ஆறுதலைச் சொல்லாமல் சொன்னார். இதுவே கருணையைக் கொண்டு கருணையை ஊறவைத்தல். தான் நேசிக்கின்ற, தெய்வாம்சம் பொருந்திய ஒருவர், தனக்காக அழுவதைப் பார்க்கும்போது, யாரால் அந்த அழுகையைத் தொடர முடியும்!

'எனக்காகவா அழுகிறீர்கள்? இல்லை, நான் சமாதானமாகிவிட்டேன். இதோ பாருங்கள், நீங்கள் கண்ணீர் சிந்தாதீர்கள். முற்றிலும் இந்த விஷயத்தை மறந்துவிட்டு, இனி தினசரி காரியங்களில் ஈடுபடுவேன்' என்று மன உறுதியைச் சொல்லாமல் சொல்லி வெளிப்படுத்துகிறபோது, அங்கே கம்பீரம் வந்துவிடுகிறது. தன் துக்கத்துக்காக, தன்னை நோக்கிக் குருவின் அன்பு, வெள்ளமென வரும்போது, உள்ளுக்குள் துக்கம் மறைந்து, உற்சாகம் வந்துவிடுகிறது.

எச்சம்மாள் பாலசுவாமியைச் சிக்கெனப் பிடித்துக் கொண்டாள். அவரே குரு என்று ஒவ்வொரு அசை விலும் வெளிப்படுத்தினாள். வெறுமே சமையல் மாமியாக இல்லாமல், யோக சாதனையும் செய்து வந்தாள். ஒரு வட இந்தியத் துறவி சொல்லிக் கொடுத்தது போல, புருவமத்தியில் தன் கவனத்தை வைத்து, ஆழ்ந்த மௌனத்தில் இருப் பாள். இதனால் அவள் பல நாட்கள், தன் நெற்றியினுள் ஓர் அதிசய ஒளியைத் தரிசித்து வந்தாள். உடம்பு பற்றிய பிரக்ஞையைவிட்டுப் பல மணி நேரம் அசையாது கிடப்பாள். நீண்ட நேரம் தியானத்தில் உட்கார்ந் திருப்பாள்.

பகவானின் அன்பர்கள் பலர், அவளது நிலையைப் பகவானுக்குச் சொன்னபோது அவர் எதுவும் எதிரொலிக்கவில்லை. ஒருமுறை, எச்சம்மாளே தன் உள் காட்சிகளைச் சொன்னபோது, ''இந்த உள்காட்சிகள் தேவையில்லை. நீ உன்னை அறியவேண்டும். அதுவே முக்கியம்'' என்று சொன்னார்.



சேஷாத்ரி சுவாமிகள் படத்துக்கும், பாலசுவாமியின் படத்துக்கும் ஒரு லட்சம் வில்வ இலைகளால் பூஜை செய்வதாக எச்சம்மாள் சங்கல்பம் செய்துகொண்டாள். அதைப் பாலசுவாமி யிடமும் தெரிவித்தாள். பாலசுவாமி அதற்கு மறுப்பு ஏதும் சொல்லவில்லை. தினமும் பூஜை நடந்தது. ஒருநாள், வில்வ இலை கிடைக்கவில்லை. பாலசுவாமியிடம் இதுகுறித்து எச்சம்மாள், ''இன்று பூஜையில் கிள்ளிப்போட ஒரு வில்வ இலைகூடக் கிடைக்க வில்லை'' என்று குறைப்பட்டுக்கொள்ள, ''உன்னையே கிள்ளி பூஜை செய்யவேண்டியதுதானே?'' என்று கேட்டார் சுவாமி.

''என்னையே கிள்ளிக்கொள்வதா! வலிக்குமே?'' என்று குழந்தை போல் எச்சம்மாள் சொல்ல, ''உனக்கு வலிப்பது போல, மரத்துக்கும் வலிக்குமில்லையா? ஏன் இலைகளைக் கிள்ளுகிறாய்?'' என்று கேட்டார் பாலசுவாமி.

''இதை ஏன் என்னிடம் முன்பே சொல்ல வில்லை? இதை நான் செய்யாதிருந்திருப் பேனே!'' என்று எச்சம்மாள் பதற, ''உன்னைக் கிள்ளினால் வலிக்கும்; இலைகளைக் கிள்ளினால் வலிக்காது என்று நினைக்கிறாயா? இதைச் சொல்வதற்கு உனக்கு ஆள் வேறு வேண்டுமா?'' என்று பாலசுவாமி சிரிக்க, எச்சம்மாள் அன்றோடு பூஜையைக் கைவிட் டாள். பூஜை என்பது இலைகளைக் கிள்ளியும், பூக்களைப் போட்டும், மாலைகள் அணிவித்தும், நைவேத்தியம் செய்தும் படைப்பதல்ல; உள்ளுக்குள்ளே தன்னை உற்றுக் கவனித்து, தன் எண்ணங்கள் எங்கு தோன்றுகின்றன, யார் உள்ளே இருப்பது என்று கவனிக்காதவரை இந்தச் செயல்கள் எல்லாம் வீண் என்பது பாலசுவாமியின் தெளிவான சித்தாந்தம்.

இதை அவர் பறையறிவித்துச் சொல்லவில்லை; கட்டளை யாகப் பிறப்பிக்கவில்லை. தானே அவ்விதம் வாழ்ந்தார். தனக்கு அருகேயிருந்து தன்னைப் புரிந்துகொண்டு, தன்னைப் போலவே தன்னை இடையறாது அவதானித்தல்தான் உத்தமமான விஷயம் என்பதைச் சொல்லாமல் சொன்னார். நீண்ட நெடிய பிரசங்கங் களைவிட, பாலசுவாமியின் இந்த வாழ்க்கை, சொல்லாமல் சொன்ன இந்த மௌனம், பல பேர் நெஞ்சைத் தொட்டது. மலர்வித்தது.

'உபதேசம் செய்கிறேன்' என்று கிளம்பிய பலர் காணாது போனார்கள். ஆனால், தன்னிலிருந்து கதிரொளியாக உபதேசத்தை அனுப்பிய பாலசுவாமி, 'ஸ்ரீரமண மகரிஷி' என்கிற அற்புதமான பெயருடன், இன்னும் தன் அன்பர்களைத் தொட்டுக்கொண்டிருக்கிறார். அவர் சொல்லாமல் சொன்ன விஷயங்கள், பல பேரைக் குளிர்வித்து நல்ல வழிக்குத் திருப்பி இருக்கின்றன.

**கா**ரைக்காலுக்கு அருகே உள்ள ஊர் தில்லையாடி. அங்கே, அலங்காரத்தம்மாள் என்பவர் தன் மகனோடும் மருமகளோடும் வசித்து வந்தார். அங்கே உள்ள முதிய துறவி ஒருவருக்குத் தொண்டு செய்து கொண்டிருந்தார். அந்தத் துறவிக்கு இறுதிக் காலம் வந்தது. 'உங்களுக்குப் பிறகு எங்கள் கதி என்ன?' என்று கவலையுடன் அவர்கள் மூவரும் கேட்க, ''என்னிலும் ஞானமான முனிவர், திருவண்ணாமலையில் வசிக்கிறார். பாலசுவாமி என்று அவரை அழைப்பார்கள். அவரிடம் போய் சேவை செய்யுங்கள். அந்த பாக்கியம் உங்களை முக்தி நிலைக்கு அழைத்துப் போகும்'' என்றார்.

அந்தத் துறவி சமாதியானதும், அலங்காரத்தம்மாள் மகன் சுப்பையா மற்றும் மருமகளுடன் திருவண்ணாமலைக்கு வந்தார். பாலசுவாமியைத் தரிசித்தார். உள்ளே ஆனந்தம் பொங்கியது. திரும்பக் காரைக்காலுக்கு வந்து, தன் சொத்துக்களை வேறு ஒருவரிடம் ஒப்படைத்து, அவர் தந்த பணத்துடன் திருவண்ணாமலைக்கு வந்து, வாடகை வீட்டில் தங்கி, தினமும் பாலசுவாமியைத் தரிசித்து வந்தார். அலங்காரத்தம்மாள் உணவு தயாரித்து பாலசுவாமிக்கு எடுத்துப் போவார். அதே நேரம், எச்சம்மாளும்உணவு எடுத்து வந்தார். அன்பர்கள் வருகையால், இருவர் உணவும் அங்கே தேவையாக இருந்தது. காரைக்காலில் இருந்து வரும் தொகை, வர வர குறைந்து போயிற்று. நித்தியப் படி குடும்பம் நடத்துவதே சிரமமாக இருந்தது. சுப்பையா திடீரென திருப்பனந்தாள் மடத்துக்குப் போய் சந்நியாசம் வாங்கி, துறவியாகி, ஊர்ஊராகச் சுற்றி வந்தார். இதையடுத்து, அலங்காரத்தம்மாளும் அவர் மருமகளும் நல்லெண்ணெய், அப்பளம் விற்று, அந்தப் பணத்தில் பாலசுவாமிக்கு உணவு அளித்து வந்தனர். உத்தமமான ஒரு ஞானியை, ஒருவணிகர் குடும்பத்துப் பெண்மணியாய் இருந்து சரணடைந்தார். என்ன நேரிடினும் கவலையற்று, அவர் சேவையே முக்கியம் என வாழ்ந்தார். வறுமை காரணமாக இடம் மாறி, மடத்துக்குப் போய் துறவறம் பூணுகிற பொய்மையை அவர் விரும்பவில்லை. 'தன்னை வருத்திக்கொண்டு குரு எவ்வளவு எளிமையாக வாழ்கிறார். அவரைவிட எளிமையாக வாழ்வதல்லவா சிறப்பு!' என்று அவருக்குத் தெரிந்திருந்தது.

எத்தனைக் கஷ்டம் வந்த போதும், பாலசுவாமிக்கு உணவு தருவதை நிறுத்தவே இல்லை. உணவை பெரிய உருண்டையாக்கி, அலங்காரத்தம்மாள் பாலசுவாமியின் கைகளில் போடுவாள். ''பாட்டி, நீங்கள் தரும் சோற்று உருண்டை, வர வர பெரிதாகிக்கொண்டே போகிறது'' என்று சுவாமி சொல்ல, ''பெரிசு, சிறுசு எல்லாம் நம் மனதில்தான் இருக்கிறது'' என்று அலங்காரத்தம்மாள் சொன்னார். ''அடடா, நான் சொல்லிக் கொடுத்ததையே பாட்டி, என்னிடம் திருப்பிப் போடுகிறார்'' என்று பாலசுவாமி சிரித்தபடியே, அவரைக் கொண்டாடி இருக்கிறார்.

மலைக்கு கீழே ஆஸ்ரமம் உருவான நேரம். அலங்காரத்தம்மாளுக்கு உணவு தருவதில் மீண்டும் கஷ்டம் ஏற்பட்டது. தள்ளாமை அதிகரித்தது. ''எதற்கு சிரமம்? பாலசுவாமியை ஆஸ்ரமம் பார்த்துக்கொள்ளும். உங்களை..?'' என்று பலர் சொல்ல, ''என் கடைசிக் காலம் வரை அவருக்கு உணவு தரும் சேவையைச் செய்வதே என் வேலை. காசு இல்லாவிட்டால் என்ன, உடம்பு தள்ளாடினால் என்ன, தடி ஊன்றி நடந்து, பிச்சை எடுத்து உணவு சேகரிப்பேன்'' எனச் சூளுரைத்தாள் அலங்காரத்தம்மாள்.

பாலசுவாமிக்கு ஆஸ்ரமத்தில் உணவு பரிமாறும் போது, அலங்காரத்தம்மாளின் உணவில் சிறிது அவருக்கு வைக்கப்படும். ஆனால், அன்று வைக்கப்பட வில்லை. சுவாமி அந்த உணவைச் சாப்பிடவில்லை. 'ஏன்? என்ன?' என்று பதறி யோசித்தபோது, அலங்காரத்தம்மாள் கொண்டு வந்த உணவு வைக்கப் படாதது தெரிந்து,

உடனே வைக்கப்பட்டது. பிறகு, சுவாமி மௌனமாக அந்த உணவை ஏற்றார். இதைவிட உத்தமமான மரியாதை, அந்த சிஷ்யைக்கு வேறு என்ன இருக்கக்கூடும்!

குருவுக்கும் சிஷ்யைக்கும் உண்டான உணர்வு பூர்வமான உறவு, அங்கே வெகு கெட்டியாக இருந்திருக்கிறது. தன்னைச் சரணடைந்தவர்களைச் சுவாமி கைவிட்டதே இல்லை. ஆடம்பரம் சிறிதும் இல்லாத வாழ்க்கையைத் தானும் வாழ்ந்து, தன்னை அண்டியவருக்கும் அதனை அருளியிருக்கிறார். அவரின் அடியவர்களும் இதனை உணர்ந்து, எளிமையின் இருப்பிடமாக வாழ்ந்திருக் கின்றனர். இப்போது இந்த விஷயத்தை யோசித்தால், வியப்பிலும் வியப்பாக இருக்கிறது.

ஒருநாள், பாலசுவாமி விருபாக்ஷி குகையிலிருந்து கீழே இறங்கி, மலையைச் சுற்றத் துவங்கினார். பிறகு, குறுக்கு வழியாக விருபாக்ஷி குகைக்கு ஏற ஆரம்பித்தார்.

அது அடர்ந்த வனப் பகுதி. மனித நடமாட் டமே இல்லாத இடம். விருபாக்ஷி குகை எங்கு இருக்கிறது என்று அடிக்கடி மேலே பார்த்து, நிதானித்து நடக்கவேண்டிய நிலை. அப்போது, பெரிய ஆல இலை ஒன்று காற்றில் பறந்து வந்து, அவர் மேல் விழுந்தது. பொதுவாக, ஆல இலை, உள்ளங்கை அகலமிருக்கும். அதிகபட்சம் இரண்டு உள்ளங்கை அகலமிருக்கும். இந்த ஆல இலையோ, பல இலைகள் வைத்துத் தைத்த பெரிய தையல் இலை போல் இருந்தது. அதைப் பார்த்ததும், அண்ணாமலையார், அருணகிரி யோகி எனும் சித்தர் வடிவில், ஆல மரத்தின் கீழ் அமர்ந்திருக்கிறார் என சொல்லும் வடமொழிப் பாடல் ஞாபகம் வந்தது. அப்படியெனில், அந்த ஆலமரம் அருகேதான் இருக்க வேண்டுமோ என நினைத்து, அதைத் தேடி, மலைமீது ஏறினார். தரையில் விழாது, காற்றில் மிதந்து, ஆல இலை வந்திருக்கிறது எனில், அந்த ஆலமரம் மிக அருகில்தானே இருக்கவேண்டும்! அந்த அருணகிரியோகி என்ற சித்த புருஷர் அங்கேதான் இருக்கவேண்டும். காணப் போகிறோமா, கண்டுபிடித்துவிட்டோமா என ஆவலுடன் வேகமாக மலையேறினார் பாலசுவாமி. அப்போது, அவரது இடது கால், அங்கே ஒரு புதரின் உள்ளே இருந்த தேன்கூட்டை இடித்துச் சிதைத்தது.


அலங்காரத்தம்மாள்

இதைக்கண்டு வருத்தப்பட்டார் சுவாமி. இவற்றுக்கு ஊறு செய்துவிட்டோமே என வேதனைப்பட்டார். தேனீக்கள் எகிறிப் பறந்தன. வட்டமடித்தன. எந்தக் கால் இடித்ததோ, அந்தக் காலை நோக்கி முட்டிமோதிக் கொட்டின. வேறு எந்த மனிதராக இருப்பினும் உதறி, அந்த இடம் விட்டு விலகி ஓடியிருப்பார்கள். தேனீக்கள் துரத்தும்போது, துணியை விசிறியடித்துக் கொன்றிருப்பார்கள். 'நான் வேணும்னு செய்யலையே! தெரியாமல்தானே கால் பட்டுடுத்து!' என்று சமாதானம் சொல்லியிருப் பார்கள். இரண்டு கொட்டுக்கள் வாங்கியதும் சீறி, 'என்னையா கொட்டினாய்! உன் குலத்தையே நாசம் செய்கிறேன் பார்' என்று தீயிட்டு, மொத்தத் தேன் கூட்டையும் பொசுக்கியிருப்பார்கள்.

ஆனால், சுவாமி அப்படியெல்லாம் செய்ய வில்லை. 'தவறு என்னுடையது. தெரியாமல் செய்தாலும், தவறு தவறுதான். அவை வசிக்கும் இடத்தை, தேன்கூட்டைச் சிதைத்துவிட்டேன். அங்கு எவ்வளவு நட்டம் ஏற்பட்டது என்று யாருக்குத் தெரியும். அவற்றுக்கு எத்தனை வேதனை என்று யார் அறிவார். அவை கோபமுற்றுக் கடிக்க வருகின்றன. வெறுமே நடந்தபோது துரத்தவில்லையே, இடித்ததால்தானே கோபம் கொண்டன! தருமத்தோடுதான் அவை நடந்து கொண்டிருக்கின்றன.

நான் மட்டும் எப்படி ஓடி ஒளிவது? செய்த தப்பிலிருந்து எப்படித் தப்பிப்பது? உங்கள் கோபம் சரியானதுதான். கொட்டுங்கள்; கோபம் தீரும் வரை கொட்டுங்கள்!' என்று அசையாது, அங்கேயே நின்றிருக்க, வலது காலைத் தொடாது, கூட்டை இடித்த இடது காலில் தேனீக்கள் கொட்டித் தீர்த்தன.

பிறகு, ஒரு தேனீயும் சுற்றவில்லை என்று தெரிந்ததும், பாலசுவாமி மெள்ள நடந்தார். சரியான வலி; கடுக்கின்ற வேதனை; ஊசி நுனியில் உள்ள விஷத்தால், உள்தசையில் தீயிட்டுப் பொசுக்குவது போன்ற வலி. ஆல மரமும், அதன் கீழே இருந்த சித்த புருஷரும், பறந்து வந்து மேலே மோதிய ஆல இலையும் மறந்து

விட்டன. திசைமாறி, முலைப்பால் தீர்த்தத்துக்கு அருகேயுள்ள ஜடைசுவாமி குகைக்குப் போனார் சுவாமி. அங்கே அவருக்குப் பாலும் பழமும் கொடுக்கப்பட்டது. கொஞ்சம் ஆசுவாசப்படுத்திக் கொண்டு, மறுபடியும் விருபாக்ஷி குகைக்கு வந்தார். தொடை மேலும் வீங்கிவிட்டது. நகர்த்த முடியாதபடி கடும் வேதனை ஏற்பட்டது. இதனை எவரும் கவனிக்கவில்லை.

ஆனால், வீக்கத்தைக் கண்டு தொண்டரான பழனிச்சாமி கலங்கிப்போனார். 'இது என்ன' என்று பதறிக் கேட்க, விவரித்தார் சுவாமி. மறுநாள், நல்லெண்ணெய் வாங்கி வந்து, தொடையில் தடவ, உள்ளுக்குள்ளே கொடுக்குகள் சிக்கியிருப்பதை விரல்களால் உணர்ந்து, அவற்றை அப்புறப்படுத்தினார் பழனிச்சாமி. அடுத்த இரண்டு மூன்று நாட்களில் வீக்கம் வடிந்து விட்டது.

'தற்செயலாய் நேர்ந்த விஷயம்தானே! இதற்காக, தேனீக்களின் கடியை யாராவது வாங்குவார்களா! ஏதோ வேண்டுமென்றே செய்ததைப் போல, ஏன் தண்டனையைப் பெறவேண்டும்?' என்று பாலசுவாமியின் அன்பரான முருகனார் என்பவர் ஒரு கவிதையில் வினவ, அதற்குப் பாலசுவாமி கவிதையாய் பதில் சொன்னது உண்டு.

*'பச்சையிலை தூறு படர்ந்தபுத ரென்றெண்ணி*
*வைச்சிடுகால் வீங்க வரிக்க தண்டு கொட்டலுமே*
*நிச்சயமாய் வேங்கட நின் னெஞ்சொப்பி செய்தாற்போல*
*தற்செயலாய் நேர்ந்த தவற்றுக் கிரங்க லென்னே'*

- என்று அந்த அன்பர் கேட்க, பகவான் அதேவிதமாகக் கவிதை நடையில் பதில் சொன்னார்.

*'பச்சையிலைகட் படர்ந்தங் கூடுலைய*
*வைச்சிடு கால் வீங்க வரிக்கதண்டு கொட்டிடினும்*
*தற்செயலாய் நேர்ந்த தவறேனுந் தானிரங்கும்*
*அச்செயலு மின்றே லவன்மனதின் தன்மையென்ன'*

இது தற்செயலாய் நேர்ந்ததுதான். ஆனாலும், தவறு தானே; தண்டனை உண்டுதானே? அதை ஏற்க மறுத்து ஓடி ஒளிந்தால், அது என்ன தன்மை? (அது நியாயம்தானா?).




தண்டனையில் இருந்து தப்பித்துக் கொள்வதுதான் மனிதர்களின் இயல்பு. தண்டித்தவரையே தண்டிப்பது தான் பழக்கம். இந்த ஞானி, உலகில் எல்லா உயிரினங்களோடும் ஒரேவிதமான பார்வையை, ஒரேவிதமான உறவைக் கொண்டு இருக்கிறார். தேனீக்கள் அற்பமானவை அல்ல; அவற்றின் வாழ்விடம் சாதாரணமானதல்ல. தெரியாமல் ஊறு விளைவித் திருந்தாலும், அவற்றின் கோபத்தை ஏற்று, தண்டனையை வாங்கிக்கொள்வதே சரி!

ஞானத்தின் உச்சகட்டம் பாலசுவாமி என்று உணரும் போது, நம் உடம்பு சிலிர்க்கிறது; கிடுகிடுக்கிறது.

வடவாலம் என்று சொல்லப்படுகிற அருணகிரிசித்தர் வாழ்கின்ற அந்த இடத்தை மறக்கடிக்கத்தான் ஒருவேளை இந்தச் சம்பவம் நிகழ்ந்ததா? பிற்பாடு வெகுநாள் கழித்து, 'அப்படியில்லை’ என்று பகவான் ஸ்ரீரமணர் மறுத்திருக்கிறார்.


''ஒரு பாறை மீது பெரிய ஆலமரம் இருந்தது. அதை அருகில் பார்ப்பதற்காக, ஒரு சிற்றோடையைக் கடந்து, மறுபக்கம் போக விரும்பினேன். அதற்குள் தேனீக் கூட்டைக் கலைத்துவிட்டேன். ஆலமரம் போகிற எண்ணம் மறந்துவிட்டது. அவ்வளவே!'' என்று சொல்லியிருக்கிறார்.

ஆலமர அதிசயம் இங்கு முக்கியமில்லை. சகல உயிர்களையும் மதித்தல் என்பதே இங்கு சொல்லப்படுகிற விஷயம். எந்த உயிருக்கும் தீங்கிழைக்காத அஹிம்சைத் தன்மையே இங்கு முக்கியம். இந்த வலியை நாலு பேரிடம் சொல்லி, பரிதாபம் தேட முயற்சிக்கவில்லை சுவாமி. கண்டுபிடிக்கப்பட்டபோதும், இது இது நடந்தது என்று சாதாரணமாகச் சொல்கிறார்

பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் ஒவ்வொரு செயலும் பொருள் பொதிந்தவை; தர்மம் சார்ந்தவை!

ஏதோ ஒன்றை அடையவேண்டும் என்ற ஆவல் மனிதர்களுக்கு வந்துவிட்டால், அவர்களுக்கு கண்மண் தெரியாத ஓர் அவசரம் வந்துவிடும். உணவு உண்பதும், உறங்கப் போவதும் அவசர கதியில் நடக்கும். ரயிலில் இடம் பிடிக்கவும், கோயிலில் ஸ்வாமி தரிசனம் செய்யவும், மளிகைக் கடையில் அரிசி வாங்கவும் முண்டியடித்து, தங்கள் பதற்றத்தை வெளிப்படுத்தி, சூழ்நிலையையே பரபரப்பாக மாற்றிவிடுவார்கள்.

என்ன செய்கிறோம் என்கிற பூரண உணர்வு கொள்ளாது, பாதி யோசிக்கும் மனநிலையில் ஒரு விஷயத்தைச் செய்துகொண்டே, அந்த விஷயத்தால் வருகிற லாபத்தில், மனம் அடைப்பட்டுக் கொண் டிருக்க, செய்யும் விஷயத்தில் முழு ஈடுபாடு இல்லாதிருப்பார்கள். அந்த விஷயம் செய்து முடித்த பிறகுதானே லாபம்; ஒன்றில் பூரணமாக ஈடுபட்டுவிட்டு, பிறகுதானே பலன் என்று அவர்களுக்குத் தெரியாது. ஏற்படுகின்ற பலன், முன்கூட்டியே மனதில் உட்கார்ந்திருக்க, செய்யும் விஷயத்தில் ஈடுபாடு குறைந்து போய், என்ன செய் கிறோம் என்று தெரியாமல் ஒரு தூக்க நிலையி லேயே அவர்கள் பறந்துகொண்டு இருப்பார்கள்.




ஸ்வாமி தரிசனத்தைக்கூட அவர்கள் இப்படிச் செய்வது வழக்கம். 'ஆறு மணிக்குக் கிளம்பினோம்னா, ஏழு மணிக்கு இந்தக் கோயில். இந்தக் கோயிலை அரை மணி நேரத்தில் முடிச்சோம்னா, எட்டரைக்கு அந்தக் கோயில். அந்தக் கோயில் முடிச்சு பஸ் புடிச்சோம்னா, பத்தரை மணிக்கு இந்தக் கோயில். இதைவிட்டா 12-க்கு சங்கராச்சார்யர் மடம்.

அங்கு சாமிக்கு நமஸ்காரம் பண்ணிட்டு, நேரா சமையல்கட்டு போனோம்னா சாப்பாடு. பிறகு மண்டபத்திலேயே கொஞ்சம் தூக்கம். அப்புறம் இந்தக் கோயில்...’ என்று பிசாசு நடையாக, யாரையோ துரத்தும் வேகத்தில், அவர்கள் கோயில் கோயிலாகப் பயணப்படுவார்கள்.

எந்தக் கோயிலிலும் மனம் ஒன்றாது. அந்த கோயிலில் என்ன விசேஷம் என்றும் தெரியாது. அந்த மூர்த்தியை கண்குளிரப் பார்த்து உள்வாங்கிக்கொள்கிற சுபாவம் அறவே இருக் காது. 'அந்த மூர்த்தி என்ன சொல்கிறது, அந்த கோயிலின் தாத்பரியம் என்ன’ என்பது பற்றி நெல்

முனையளவும் லட்சியம் இருக்காது. இப்படிக் கோயில் கோயிலாகப் போனால் நல்லது என்று யாரோ சொல்ல, அதை எந்தவித விசாரணையும் இல்லாமல் இவர்கள் நடத்துவர். அதுமட்டுமல்ல, 'ஒரே நாள்ல பன்னண்டு கோயில் முடிச்சேன்ப்பா! சூப்பர் ரவுண்டு' என்று அடுத்த ஆளிடம் தங்களுடைய வேகத்தைக் கொண்டாடிக் கொள்வார்கள். இதனால் என்ன லாபம் என்று அவர்கள் தங்களைக் கேட்டுக்கொள்வதும் இல்லை; எந்த லாபத்தையும் அனுபவிப்பதும் இல்லை.

கோயிலுக்கு இப்படிப் போகும் மனிதர்கள், ஞானிகளை நெருங்கும் போதும் இதே வேகத் துடனேயே இருக்கின்றனர். 'எதற்கு இந்த பிச்சைக்காரன் கிட்ட வந்தே?' என்று ஒரு ஞானி கேட்டால், அவர்கள் மிகப் பெரிய பட்டியல் தயார் செய்துவிடுவார்கள். தனக்கு காசு- பணம், வீடு- கார், மனைவிக்கு நகை நட்டு, பிள்ளைகளுக்கு படிப்பு, ஆடு- மாடு, வயல்வெளி என்று பல்வேறு விஷயங்களை அந்த ஞானியிடம் கேட்டுப் பெறத் துடிப்பார்கள். அந்த ஞானி அத்தனையும் கேட்டுவிட்டு, 'என் தகப்பன் உன்னை ஆசீர்வதிக்கிறான்' என்று சொன்னால் போதும், உடனே மனம் குளிர்ந்து, எல்லாம் கிடைத்துவிட்டது என்ற நினைப்பிலேயே, துண்டை உதறித் தோளில் போட்டுக் கொண்டு நடந்துவிடுவார்கள்.

பாலசுவாமி, விருபாக்ஷி குகைக்கு வெளியே திண்ணை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந் தார். சிறு சிறுகற்களை அடுக்கி, அதன் மீது செம்மண் கொட்டி, கெட்டிப்படுத்திய பிறகு, மேலே செம்மண் குழம்பை மெள்ளத் தடவி, திண்ணையை நிதானமாக உருவாக்கிக் கொண்டிருந்தார். அப்போது அங்கு ஒருவர் வேகமாக வந்து, 'சுவாமி எங்கு இருக்கிறார்?' என்று அவரின் பின்பக்கம் நின்று கேட்டார். அப்போது அங்கே பாலசுவாமி தவிர, வேறு எவரும் இல்லை. 'சாமி இப்போதுதான் வெளியே போனார்' என்றார் பாலசுவாமி. 'எப்போது வருவார்?' என்று வந்தவர் கேட்க, 'எனக்குத் தெரியாதே' என்றாராம் பால சுவாமி. வந்தவருக்குக் காலில் சக்கரம். சாமி வருவதற்கு நேரம் பிடிக்கும் போலிருக்கிறது என்று தானாகவே நினைத்துக் கொண்டு, வேகமாக அந்த இடம் விட்டு நகர்ந்தார். இந்தச் சாமியை தரிசித்த பிறகு, வேறொரு சாமியைத் தரிசிக்கிற அவசரம் இருந்திருக்கக் கூடும். கீழே இறங்கியபோது, லட்சுமியம்மாள் என்கிற எச்சம்மாள் மேலே வந்துகொண்டிருந்தார். எச்சம்மா வைப் பார்த்ததும் மேலே இருந்து கீழே இறங்கியவர், 'மேலே சாமி இல்லையே' என்று சொல்ல... எச்சம்மாவுக்கு சுவாமி எங்கு இருக்கிறார் என்று நிச்சயமாகத் தெரியும். எனவே அவரை, 'வாருங்கள், மறுபடியும் மேலே போவோம், அங்கு சுவாமியைக் காண்பிக்கிறேன்' என்றார். வந்தவரும் திரும்பினார்.

'இவர்தான் சுவாமி' என்று, திண்ணையை மொழுகிக் கொண்டிருந்தவரைக் காண்பித்தார். வந்தவருக்கு ஆச்சரியம். இவர்தானே, சாமி இல்லையென்று சொன்னார். இவர்தானே, எப்போது வருவார் என்று தெரியாது எனச் சொன்னார் என்று அதிசயித்து, விழுந்து வணங்கி, எழுந்து நின்றார். எச்சம்மாவிடம் 'இவரைக் கேட்டபோது, சுவாமி எங்கு இருக்கிறார் என்று தெரியாது, எப்போது வருவார் என்றும் தெரியாது என்றாரே, இவரை நம்பித்தானே கீழே இறங்கினேன்!' என்று அலுத்துக்கொண்டார். அவர் நகர்ந்ததும், எச்சம்மாள் மெள்ள சுவாமி யிடம், 'ஏன்அப்படிக்கூறினீர்கள்?' என்று விசாரிக்க, 'அப்போ, கழுத்தில் ஒரு பலகையைக் கட்டிக்கொண்டு, நான்தான் சாமி என்று கூற வேண்டுமோ?' என்று கேட்டார். எச்சம்மாள் பதில் சொல்லவில்லை, எதற்காக பாலசுவாமி இப்படிச் சொன்னார் என்ற கேள்வி நமக்கும் இருக்கும். கருணை உள்ளம் கொண்ட, பகவான் ரமண மகரிஷி என்று அழைக்கப்பட்டவர், ஒரு பெரியவரை ஏன் இப்படி நகர்த்திவிட்டார் என்று கேள்வி வரும்.



தன்னை அறிந்தவர் மட்டுமே மரணத்தை அஞ்சாமல் வரவேற்கிறார்.
அவரால் மரணத்தைத் தள்ளி வைக்கவும் கூடும்.

வந்தவருக்கு இது பாடம். பறக்கப் பறக்க வந்து, சுவாமி எங்கே என்று கேட்டு, இல்லை என்றதும், உடனே திபுதிபுவென கீழே இறங்குகிற தன்மை தவறு என்று சொல்லுகிற பாடம். அதேநேரம், அவருக்குத் தரிசனம் தர வேண்டும் என்ற கருணையும் உள்ளுக்குள் இருந்திருக் கிறது. எனவே, எச்சம்மாவிடம் அவரைப் பேச வைத்து, அனுசரணையாக அழைத்துவரச் செய்து, அவரை வணங்க வைத்து, கருணைக் கண்களால் ஆசீர்வதித்து விட்டு, அவர் பணியைத் தொடர்ந்து செய்கிறார்.

எந்த ஞானியும் தன்னை ஞானி என்று சொல்லிக் கொள்வதில்லை. ஞானியைத் தேடுகிற அமைதி இல்லாதவருக்கு ஞானி தேவையில்லை. அதேநேரம், அந்தப் படபடப்பை, ஞானி சற்று அனுமதித்து விட்டு, பிறகு அமைதியாக்கி, மறுபடியும் தன்னிடம் இழுத்துக்கொள்கிற வலிமையும், அன்பும் உடையவர். இதுதான் அங்கு நடந்தது. ஆனால், ஞானியின் மனதில் என்ன இருந்தது என்று யாருக்குத் தெரியும்.

அண்ணாமலையார் கோயிலுக்கு அருகே ஒரு பெரிய புளியந்தோப்பு இருந்தது. அதை ஓர் இஸ்லாமியர் குத்தகைக்கு எடுத்திருந்தார். தோப்பில் உள்ள குரங்குகள், புளியம் பிஞ்சைக் கடித்துத் தின்றுவிடும். புளியைப் பறித்து, உறித்துப் போட்டுவிடும். இதனால் இஸ்லாமியருக்கு பெரிய நட்டம் ஏற்படும் என்ற கவலை. எனவே, குரங்குகளை விரட்ட அவர் கவண்கல்லுடன் சுற்றி வந்தார். குரங்குகளை விரட்ட, கவண்கல்லை வைத்து வேகமாக வீசுவார். குரங்குகள் அலறி அடித்துக்கொண்டு தோப்பைவிட்டு வேறு பக்கம் போகும். இஸ்லாமியர் அயர்ந்த நேரம் பார்த்து, மறுபடியும் வரும். மறுபடியும் கவண்கல்லால் தாக்க, குரங்குகள் சிதறி ஓடும். இஸ்லாமியருக்குக் குரங்குகளைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் ஒருபோதும் இல்லை; விரட்ட வேண்டும் என்ற நோக்கமே இருந்தது.

ஒரு முறை, கவண்கல்லைச் சுழற்றி வேக மாக வீச, ஒரு குரங்கின் தலையில் கல் பட்டு, குரங்கு செத்து விழுந்தது. இஸ்லாமியர் பயந்துபோனார். மற்ற குரங்குகள் அந்தக் குரங்கைத் தூக்கிக்கொண்டு, பாலசுவாமியிடம் வந்து, ஓலமிட்டு அழுதன. பாலசுவாமி கருணையுடன் அவற்றைப் பார்த்தார். 'பிறந்தவர் இறப்பதும், இறந்தவர் பிறப்பதும் மாறி மாறி நடப்பது. இதைக் கொன்றவரும் ஒருநாள் இறக்கத்தான் போகிறார். ஏன் வருத்தப்பட வேண்டும்?' என்று சமாதானம் சொல்ல, குரங்குகள் இறந்த குரங்கைத் தூக்கிக் கொண்டு அகன்றன.


இஸ்லாமியருக்கு அன்று இரவு ஜுரம் கண்டுவிட்டது. என்ன வைத்தியம் செய்தும், குணமாகவில்லை. குரங்குகள் பாலசுவாமியிடம் போய் முறையிட்டதை யாரோ அவரிடம் சொல்ல, அவர் மேலும் பயந்தார். அவருடைய உறவினர்கள் பாலசுவாமியை நோக்கி ஓடிவந்தனர். அவர் கையால் விபூதி கொடுக்க வேண்டுமென்று கெஞ்சிக் கேட்க... தான் யாருக்கும் விபூதி தருவதில்லை என்று அவர் சொன்ன போதும், அவர்கள் விடவில்லை. விபூதி கொடுத்தே ஆக வேண்டும் என்று கெஞ்சி அழு தனர். அருகில் உள்ள அடுப்பில் இருந்து சிறிதளவு சாம்பல் எடுத்து, அதை வந்தவர்களிடம் பாலசுவாமி கொடுத்தார். அன்று இரவே இஸ்லாமியருக்கு நோய் நீங்கிவிட்டது.

ஒரு ஞானியை சரியான விதத்தில் அணு கினால், அமைதியாக மன்றாடினால், வெகு நிச்சயம் அவர் ஆறுதல் தருவார். பல துக்கமும் அவர் சந்நிதியின் முன்பு காணாமல் போகும்.

அன்புதான், ஞானியின் மிகப் பெரிய மந்திரம். அன்புக்கு எதிரானது பதற்றம். பதற்றம் தன்னைப் பற்றியே நினைக்குமே தவிர, மற்றவரைப் பற்றி நெல்முனையளவும் நினைக்காது. தன்னைப் போல் மற்றவரை நினைக்கும்போது, உள்ளே நெகிழ்வு ஏற்பட்டு, அன்பு கிளர்ந்து எழுகிறது.

1911-ஆம் வருடம். ஒரு நாள்  பாலசுவாமி, வாசுதேவர், பழனிச்சாமி என்ற இரண்டு அன்பர்களுடன் பச்சையம்மன் கோயில் குளத்துக்குப் போய் எண்ணெய் தேய்த்துக் குளித்துவிட்டு, திரும்ப மலையேறி ஆமைப் பாறை வழியே வந்துகொண்டிருந்தார். திடீரென தலைசுற்றி மயக்கம் வந்து, தள்ளாடினார் பாலசுவாமி. நடக்க முடியாமல் மூச்சுத் திணறி நின்றார். அந்தப் பாறை மீது உட்கார்ந்தார். தனக்கு என்ன நேர்ந்தது என்பதை பாலசுவாமி பிற்பாடு வெளிப்படுத் தினார். மரண அனுபவத்தை, அவருடைய வாக்கினாலேயே விவரித்தார்.

''திடீரெனப் பார்வை மங்கியது. வெள்ளையாக ஒரு திரை மெள்ளப் படிந்து, எதிரே உள்ள மரம், செடி- கொடிகள் மறை யத் துவங்கின. மீண்டும் ஒரு வெள்ளைத் திரை வந்தது. காட்சிகள் முற்றிலும் மறைந்தன. வெறும் வெள்ளையில் நான் பிரவேசித்துக் கொண்டிருந்தேன். ஓய்வெடுக்க உட்கார்ந்திருக்க, இந்த வெள்ளைத் திரை அகன்றது. காட்சிகள் தெரிந்தன. மரம், செடிகள் கண்ணுக்குப் புலப்பட்டன. ஆனாலும், உடலில் வலுவில்லை. மீண்டும், சட்டென்று வெள்ளைத் திரை என்னைக் கவிழ்ந்துகொண்டது.



ஆமைப்பாறையின் மீது சாய்ந்து கொண் டேன். ஓய்வெடுக்க... மறுபடியும் காட்சிகள் தெரிந்தன. மூன்றாவது முறையும், வெள்ளைத் திரை கவிழ்ந்தது. ஆமைப்பாறையில் உட்கார்ந்தேன். என் இதயத்துடிப்பு பலவீன மாகி, ரத்த ஓட்டம் தடைப்பட்டு, இதயம் அறவே துடிப்பதை நிறுத்தியதை உணர்ந்தேன். என் உடல் நீலநிறமாக மாறியது. அப்போது, உடன் வந்த வாசு, வயதில் சிறியவர்.

அவருக்கு மரணம் பற்றித் தெரியவில்லை. நான் செத்து விட்டேன் என நினைத்து, என்னைக் கட்டிக்கொண்டு அழ ஆரம்பித்தார். பழனிச்சாமி வயதில் பெரியவர். அவர் பேசுவது எனக்குக் கேட்டது.

நண்பர்கள் இருப்பதை உணர்ந்தேன். இதயத் துடிப்பு நின்றதையும் அறிந்தேன். ஆனால், துளிக்கூட பயமில்லை. பாறை மீது, சம்மணமிட்டு அமர்ந்தேன். மரணத்தை மிகக் கவனமாக, எந்தவித சலனமும் இன்றிப் பார்த்துக்கொண்டிருந்தேன். 15 நிமிடங்கள் பத்மாசன நிலையிலேயே இருந்தேன். அப்போது ஒரு சக்தி, என் உடம்பின் வலப்புறத்திலிருந்து இடப்புறத்துக்கு வேகமாகப் பாய்ந்தது. இதனால், எனது இதயம் மீண்டும் துடிக்க ஆரம்பித்தது. ரத்த ஓட்டம் சீரானது. உடலும் சிறிது சிறிதாக, தனது இயல்பு நிறத்தை அடைந்தது.

நான் வியர்வையில் குளித்திருந்தேன். மெள்ள உடம்பில் சக்தி ஏற்பட்டதும், 'வாருங்கள் போகலாம்' என்று எழுந்து நின்றேன். தானாக ஏற்படுத்திக் கொண்ட நிலையல்ல. இப்படி நடக்கும் என்பதை வேடிக்கை பார்க்கும் ஆசையும் எனக்கு இல்லை. மனசு எப்படி இருக்கும் என்ற விளக்கம் என்னிடம் இல்லை. அதுமாதிரி அடிக்கடி ஏற்படுவது உண்டு. இந்த முறை, சற்று நீடித்த அனுபவமாக இருந்தது.''

பாலசுவாமி எழுந்து நடந்ததும், வாசுதேவர் சந்தோஷத்தில் எகிறி குதித்தார். மற்றவர்களும் முகம் மலர்ந்தனர். சந்தோஷத்தில் அழுதனர். 'எதற்கு இந்த அழுகை, நான் செத்துவிட்டேன் என்று நினைத்தீர்களா? அப்படி இறந்து போயிருந்தால், உங்களுக்கு அதை முன்னரே தெரிவித்து இருக்கமாட்டேனா?' என்று பாலசுவாமி அன்பர்களிடம் சொன்னார்.

இது, மாரடைப்பு போன்ற விஷயம். இவர் விவரிக் கின்ற அத்தனையும் இதய நோய் சம்பந்தப்பட்டது. இதயம் நிற்கும்போது ஏற்படுகிற அவஸ்தையை ஒட்டியிருந்தது. வியர்வை கொப்பளிப்பது என்பது மாரடைப்பின் முக்கிய அறிகுறி. மரணம் போன்ற இந்த அனுபவம் வரும்போதும், உள்ளே நெல்முனையளவும் பதற்றமில்லாமல் இருந்ததுதான் பெரிய விசேஷம். ஆனால், உடம்பின் ஈர்ப்பு பற்றி அக்கறைப்படாமல், அதிலிருந்து விலகி, தன்மயமான ஓர் இடத்தில் எப்போ துமே பாலசுவாமி இருந்திருக்கிறார் என்பதற்கு இந்த மரண அனுபவம் ஒரு சாட்சி. இதன் மூலம் மரணம் பயமுறுத்தாத ஓர் உச்ச இடத்தில் அவர் சௌகரியமாக இருந்திருக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

சகலரும் சாகப் பயந்துதான் சாகிறார்கள். தன்னை அறிந்தவர் மட்டுமே மரணத்தைக் கண்டு அஞ்சாமல் வரவேற்கிறார். அவரால் மரணத்தைத் தள்ளி வைக்கவும் கூடும்.

நரசிம்ம சாஸ்திரி என்கிற ஆந்திர தேசத்து அந்தணர், காசி யாத்திரை செல்லும்போது, காசியில் உள்ள ஒரு விநாயகரை மனம் ஒருமித்து வணங்கினார். அப்போது, அந்த விநாயகரிடமிருந்து குழந்தை போன்ற உருவம் ஒன்று நடந்து வந்து, அவருக்குள் புகுந்துகொண்டது. விசாகப் பட்டினத்துக்கு அருகில் உள்ள தன் ஊருக்கு

வரும் வரைக்கும், நரசிம்ம சாஸ்திரி அந்த கணபதி உருவத்தையே மனதில் நினைத்துக்கொண்டிருந்தார். அந்த வருடம் அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு, காசியில் தரிசித்த விநாயகரின் நினைவாக 'கணபதி' என்று பெயரிட்டார்.

மூன்று வயது வரை, கணபதிக்கு அழ மட்டும்தான் தெரியும்; பேசத் தெரியாது. உடம்பில் ஏகப்பட்ட உபாதைகள். குழந்தை நோயாளியாக, எப்போதும் அழுது கொண்டிருக்கும் குழந்தையாகவே இருந்தது. பலவித நோய்களும் குழந்தையைத் தாக்குகிறதே, என்ன செய்வது என்று யோசித்து, அந்தக் கால வைத்திய முறைப்படி உடம்பிலே ஒரு இடத்தில் சூடு போட்டனர். அதற்குப் பிறகு, கணபதி மெள்ள மெள்ள உடல்நலம் தேறினான். மிக கெட்டிக்கார குழந்தையாக இருந்தான். ஒரு விஷயத்தை ஒரு முறை சொன்னால், உடனே மனதில் தேக்கிவைத்துக்கொண்டான். படிப்பில் மிக சூட்டிகையாக இருந்தான். விரைவில் மனனம் செய்கிற யோக்கியதையைப் பெற்றான். பதினாறு வயதுக்குள் வடமொழியிலும் தெலுங்கிலும் மிகச் சிறந்த பண்டித னாக மாறினான். 18 வயதில் திருமணம் நடந்தது.

வடமொழியில் வித்தகரானதால் புராண- இதிகாசங் களும், அதில் வரும் தபஸ்விகளின் வாழ்க்கையும் அவர் மனத்தை அசைத்தன. வேத விஷயங்களை ஆழ்ந்து படித்தபோது, ஜபதபங்களே வாழ்க்கையை உன்னத நிலைக்கு அழைத்துப் போகின்றன எனும் நம்பிக்கை ஏற்பட்டது. உடம்பைத் தூய்மையாக்கி, மூச்சை சீராக்கி, அசையாமல் உள்ளுக்குள்ளே ஆழ அமர்ந்து, ஜபம் செய்வது கடவுள் தரிசனத்தைக் கொடுக்கும் என்று தெளிவாக நம்பினார். பஞ்சாட்சர ஜபம் செய்தார். நேரம் கிடைக்கும்போதெல்லாம் எழுதியும் பார்த்தார். பிறகு, வேலூரில் பள்ளி ஒன்றில், வடமொழி ஆசிரியராகச் சேர்ந்தார். நல்ல மாணவர்களைத் தயார் செய்து, பாரதத்தின் சக்தியைப் பெருக்க வேண்டும், உலகில் ஆன்ம விழிப்பு ஏற்பட வேண்டும் என விரும்பினார்.


மூன்று வருடங்கள் ஆசிரியராக இருந்த பிறகு, அதுவும் அலுத்துப் போய், திருவண்ணாமலைக்கு வந்து சேர்ந்தார். நிருதி லிங்கத்துக்கு அருகே அமர்ந்து, அண்ணாமலையாரைப் பற்றி பாடல்கள் எழுதியும், இடைவிடாது மந்திர ஜபம் செய்தும் கடவுளை அடையும் முயற்சியில் ஈடுபட்டார். அவர் படித்த விஷயங்கள் எதுவும் அவரை அமைதிப்படுத்தவில்லை. கடவுள் தரிசனத்தை கொடுக்கவில்லை. கடவுளை அடைய முடியும் என்கிற நம்பிக்கை மெள்ளத் தளர்ந்தது. பலகோடி ஜபம் செய்தும், மனம் ஒருமைப்படவில்லையே என்ற கவலை எழுந்தது. இன்று இல்லை, நாளை தெரிந்துவிடும், நாளையில்லை இன்னும் சில நாட்களில் புரிந்துவிடும் என்று காலம் நகர்ந்துகொண்டிருந்ததே தவிர, துருவனுக்குக் கிடைத்த இறைத் தரிசனம், அனுமனுக்கு கிடைத்த அனுபவம், வேடுவப் பெண்ணான சபரிக்குக் கிடைத்த மோட்சம் தனக்கு கிடைக்கவில்லையே என ஏங்கினார்.

படிப்பு கொடுத்த மேதைமை, குழப்பத்தைத்தான் கொடுத்தது. கடவுள் என்ற விஷயம், முயற்சியால் அடைவது அன்று என்று புரியவே வெகு நாளாயிற்று. எங்கு முயற்சி, முற்றிலும் நின்று போகிறதோ, எங்கு எந்த முயற்சியும் இல்லையோ, அங்கே அமைதி பரிபூரணமாகக் குடியேறுகிறது என்பதைப் புரிந்து கொள்ளவே நாளாயிற்று. திருவண்ணாமலையில் கூடியிருந்த ஒரு திருவிழா நாளில், அவர் துண்டு உதறி எழுந்தார். மலையில் ஒரு பாலசுவாமி இருக்கிறாராமே, அவரைத் தரிசித்து வருவோம் என்று கிளம்பினார். அவரைக் கண்டால் மனம் அமைதியாகிறது என்று சொல்கிறார்களே, அதை அனுபவிப்போம் என்று மலையேறினார்.



**"இது ரமணம். இது ரம்மித்திருப்பதால், ரமணம். இவர் சாதாரணர் அல்ல. இவர் ரமணர்... ஸ்ரீரமணர்."**

வெள்ளை கௌபீனம் உடுத்தி, விருபாக்ஷி குகையில் அமைதியாக அமர்ந்திருந்த பால சுவாமியைப் பார்த்ததும், உள்ளே நெகிழ்ந்தார். 'இதுவே கணபதி. இதுவே விநாயகம். நான் கணபதியல்ல; கணபதி இங்கே உட்கார்ந்திருக்கிறது' என்று புரிந்துகொண்டார். பிள்ளையாருக்குத் தலையில் குட்டிக் கொள்வதுபோல, 'சுக்லாம் பரதரம் விஷ்ணும் சசிவர்ணம் சதுர்புஜம் ப்ரஸன்ன வதனம் த்யாயேத் ஸ்ர்வ விக்னோப சாந்தயே' என்று தலையில் குட்டிக்கொண்டு, பாலசுவாமியை நமஸ்கரித்தார். விநாயகருக்குச் சொல்லுகின்ற இந்த ஸ்தோத்திரம், பாலசுவாமிக்கு முற்றிலும் பொருத்தமாக இருந்தது. வெள்ளை உடை அணிந்தவரும், எல்லாம் அறிந்தவரும், பூப்போன்ற முகத்தை உடையவரும், நான்கு கைகளை உடையவரும், அதாவது மன, புத்தி, ஸித்தி, அகங்காரம் என்ற நான்கையும் உள்ளடக்கியவரும், புன்னகையான முகத்தைக் கொண்டவரும், தன்னை அண்டியவர்களின் வினையைத் தீர்த்து, நல்வழிக்குக் கொண்டு செல்பவருமான விநாயகரை வணங்குகிறேன் என்கிற அந்த வடமொழி ஸ்லோகம், கச்சிதமாக பாலசுவாமிக்குப் பொருந்தியது.



ஆனால், கணபதி சாஸ்திரி பாலசுவாமியிடம் எதுவும் கேட்கவில்லை; எதுவும் பேசவில்லை; வெறும் தரிசனத்துடன் திரும்பிவிட்டார். தொடர்ந்து பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டும், கடவுளை அடைந்துவிடலாம், தவம் தீவிரமாக செயல்படுத்தப்பட வேண்டும் என்று எண்ணினார்; திட்டமிட்டார்; செயலாக்கினார். படிப்பு, ஞானம் தராது என்பது படித்தவர்களுக்குத் தெரிவதில்லை. 'படிப்பதை மறந்துவிடு' என்று பல ஞானியர்கள் சொல்வது உண்டு. வெறுமே நூலால் எந்தப் பயனும் இல்லை என்று தபஸ்விகள் பேசுவது உண்டு. அறிந்ததிலிருந்து விடுதலை என்று உத்தமர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

ஆனால், இதைப் புரிந்துகொள்வதற்கு வெகு தாமதமாகிறது. படிக்கப் படிக்கச் சகலமும் தெரிந்துவிடும் என்று திடமாக நம்புகிறார்கள். படிப்பு என்பது உலக வாழ்க்கையுடன் சம்பந்தப் பட்டது. பொருளாதார வளர்ச்சிக்கு உதவுவது. சுற்றுச்சூழலுக்காகவும், அதிகாரங்களுக்காகவும், மற்றவர்களிடமிருந்து பாராட்டுக்கள் பெறுவதற்காக வும், வெற்றி என்கிற இலக்கு நோக்கி அழைத்துப் போவது. ஆனால், உலகாயத வெற்றிகள், பாராட்டுகள் நிறைவைக் கொடுப்பதே இல்லை.

வெற்றி பெற்றவர் யாரும் அமைதியாக வாழ்வதே இல்லை. வெற்றிக்கு அடுத்ததாக என்ன செய்வது, இன்னொரு வெற்றி என்றுதான் போக வேண்டியிருக்கிறது. பாராட்டு வாங்கிய பிறகு என்ன செய்வது, மேலும் பாராட்டுக்கள் வாங்க வேண்டும் என்று ஆவல்தான் எழுகிறது. உலகாயத வெற்றிகளாலோ, சொத்து பத்து சுகங்களாலோ, பாராட்டுக்களாலோ, அதிகார மேன்மையினாலோ ஒருபோதும் அமைதி கிடைப்பது இல்லை. அமைதி கிடைக்காதவரை, திருப்தி ஏற்படுவதில்லை.

எது மனிதருக்கு நிறைவு கொடுக்கிறது.... பணமா, பாராட்டா, தாம்பத்திய சுகமா, பிள்ளைப்பேறா, அதிகாரமா? இல்லை. இவை எதுவும் தருவதில்லை. அமைதி என்பது உள்ளே, நம்முடைய இயல்பாய் இருக்கிறது. அதைத் தேடிக் கண்டுபிடிக்க வேண்டும். அதற்கு இடைஞ்சலாக என்ன இருக்கிறது என்று யோசித்து அப்புறப்படுத்த வேண்டும். இன்றைய தேதிக்கு நாலு கோடி ரூபாய் இருந்தால் போதும், நான் நிம்மதியாகிவிடுவேன் என்று எவர் நினைத்தாலும், ஒருநாளும் நிம்மதியடைய முடியாது. பணம் இல்லை என்பது ஒரு துக்கம். பணம் சம்பாதிக்கக் கஷ்டப்படுவது ஒரு துக்கம். பணம் சம்பாதித்த பிறகு அதை கவனமாகப் பாதுகாக்க வேண்டுமே என்று ஒரு துக்கம். அதைச் செலவு செய்யும்போதும் துக்கம். எனவே, எல்லாக் காலத்திலும், எல்லா விதமாகவும் பணம், துக்கம்தான். உலக சுகங்கள், பணத்தால் வருகின்றன. ஆனால், உலக சுகங்களால் மன அமைதி வருவதில்லை.


கணபதி சாஸ்திரி

சுகம் அனுபவித்தவரும் அனுபவிக்காதவரும், சுகம் எது என்று கேள்வி கேட்பவரும், அமைதியை நோக்கித் திரும்புகிறார்கள். தன் படிப்பு தன்னைக் காப்பாற்றும் என்று நினைத்து, கணபதி சாஸ்திரி வாழ்ந்தார். காவியங்கள் பலவற்றை மிக எளிதாகச் செய்ததால், அவருக்குக் 'காவிய கண்டர்' என்கிற பட்டப் பெயரும் கிடைத்தது. ஆனாலும், உள்ளுக் குள்ளே மனம் அமைதி பெறவில்லை. தன்னால் இயலாது, தன் படிப்பால் முடியாது, தன் முயற்சி யில் இது நடக்காது என்பதைப் புரிந்து கொள்ளவே அவருக்குப் பல வருடங்கள் ஆயின.

திடீரென்று ஒரு நாள், அவர் தவத்தில் இருந்து எழுந்தார். மலை நோக்கி நடந்தார். 'என்னால் இயலவில்லை; என்னால் அடைய முடிய வில்லை' என்று உள்ளுக்குள் கதறியபடியே பால சுவாமியின் கால்களில் விழுந்து, அந்தக் கால்களை இறுகப்பிடித்துக் கொண்டார்.

''படிப்பு அகங்காரத்தைதான் வளர்த்தது. என் படிப்பு அமைதியைத் தரவில்லை. கற்றவை, கர்வத்தை தான் கொடுத்தன. அவை ஒருபோதும் உள்ளே சாந்தமாகச் செய்யவில்லை. என்னை நான் அமைதியாக வைத்துக் கொள்ளாத வரையில், இறைவன் அங்கு வந்து எப்படிக் குடியேறுவார்? இறைத் தரிசனம் எனக்கு எப்படிக் கிடைக்கும்? நான் மந்திர ஜபத்தின் எண்ணிக்கையில் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்; நான் இன்றைக்கு இத்தனை முடித்து விட்டேன் என்று கர்வப்பட்டுக் கொண்டிருக்கிறேன். மற்றவரோடு இந்தக் கர்வத்தைப் பகிர்ந்து கொண்டிருக்கிறேன். என் கர்வம் என்னை நோக்கித்தான் இருக்கிறது. மந்திரஜபத்தின் எண்ணிக்கை, என்னை நோக்கித்தான் இருக்கிறது. இறைவனை நினைப்பதற்கு மந்திரஜப எண்ணிக்கையோ, என் செயலோ உதவவில்லை. எனவே, எந்த அமைதியும் எனக்குக் கிடைக்கவில்லை.

என்னுள் இருக்கிற இந்த கர்வங்கள் எல்லாம் தொலைந்து, நான் அமைதியாக உட்கார்ந்து, உள்ளுக்குள்ளே என்னை இனம் கண்டுகொள்ள வேண்டும். தயவுசெய்து, சத்குரு, ஞானச்செல்வரே! எனக்கு இந்த உதவியைச் செய்யுங்கள். உங்கள் கால்களை இறுகப் பிடித்துக்கொள்கிறேன். நீங்கள் அமைதியை அடைந்து விட்டீர்கள் என்று உங்களின் ஒவ்வொரு அசைவும் சொல்கிறது. உங்கள் முகம் சொல்கிறது. உங்கள் பேச்சு சொல்கிறது. உங்கள் பார்வை சொல்கிறது. எனக்குள் அந்த அமைதியில்லை. அதனால் என் பார்வை, என் பேச்சு, என் அசைவு எதுவும் சரியாக இல்லை. அவை எனக்கே அருவருப்பாக இருக்கின்றன.

சத்குரு, நான் உங்களைச் சரணடைந்தேன்; உங்கள் கால்களை இறுகப் பிடித்துக்கொண்டேன்; நான் உங்கள் காலடியில் முற்றிலும் என்னை இழந்து உங்கள் வசமானேன்; நான் என்ற வஸ்து இங்கு இல்லை; சத்குரு, என்னை உங்கள் கால்களில் பொசுக்கி, அழித்து வெறுமே நிற்கிறேன். நான் எதுவும் இல்லை. நீங்கள் என்னுள் புகுந்து, எனக்குள் அமைதியை ஏற்படுத்துங்கள்'' என்று வாய்விட்டுக் கதறினார்.

அவர்கள் இரண்டு பேரும் சந்தித்த அந்த நேரம், விருபாக்ஷி குகையில் எவரும் இல்லை. மகத்தான ஒரு அமைதி மட்டுமே அங்கு நிலவியது. எழுந்து முகம் துடைத்துக்கொண்டு கணபதி சாஸ்திரி பாலசுவாமியையே பார்த்துக்கொண்டிருந்தார். பாலசுவாமியின் கருணைக் கண்கள், காவியம் கண்ட கணபதி சாஸ்திரியின் கண்களை கருணையோடு நோக்கின. 'என்னுள் இருப்பதே உன்னுள்ளும்' என்று சொல்லாமல் சொல்லின. தன்னுள் இருக்கின்ற அந்தப் பரம்பொருளை, தன் கண்களின் வழியே, எதிரே இருக்கின்ற பரம்பொருளை நோக்கி, பாலசுவாமி செலுத்தினார்.

இது ஓர் அற்புதமான நயன தீட்சை. தான்தான் எங்கும் இருக்கிறோம் என்ற நினைப்பினுடைய விகசிப்பு. அந்தக் கண்கள் வழியே பொங்கி, கணபதி சாஸ்திரி கண்களைத் தாக்கி, அவருக்குள்ளே இருக்கிற அந்தப் பரம்பொருளைத் தொட்டு அசைத்தது. மனம் விரிந்தது. அமைதி குடியேறிற்று. இறைவன் எங்கிருக்கிறார்? எல்லா இடத்திலும் இருக்கிறார். என்னை, நான் மறைத்துக் கொண்டிருக்கின்றேன். என் கண்களை, நான் மூடிக்கொண்டிருக்கிறேன். என் கர்வம், என்னைப் பிணைத்துக் குப்புறப் போட்டிருக்கிறது. என் திமிர், என் கண்களை மறைத்துவிடுகிறது. நான் பார்க்க இயலாதவனாக, பேச இயலாதவனாக, உணர இயலாதவனாக வெறுமே பல்வேறு கலைகளில் கட்டுண்டு கிடக்கிறேன். அந்தக் கட்டுகளை அறுத்துவிட்டு நிமிர, எதிரே இறை இருப்பது தெரிகிறது.

இறைவன் பார்வை உன்னைத் தாக்குகிறது. எல்லா இடத்திலும் இருக்கிற இறைவன், உன்னை மிகுந்த கவனத்தோடு, பிரியத்தோடு அணைத்துக்கொள்கிறார். இறை என்பது உனக்கும் எனக்கும் நடுவில், எல்லோருக்கும் மத்தியில், எல்லோர் நெஞ்சிலும் உறைகின்ற ஒரு விஷயம். தெரிந்துகொள்ளத்தான் எவரும் முயற்சி செய்வது இல்லை. அப்படித் தெரிந்தவர், உன்னுள் இருக்கின்ற இறைவனை, அதோ அங்குதான் என்று சுட்டிக்காட்ட, உனக்குத் தெரிந்துவிடுகிறது. அவர் சுட்டிக் காட்டத் தயாராக இருக்கிறார். பார்க்க, உனக்கு ஒரு யோக்கியதை வேண்டும்; பார்க்க, உனக்கு ஒரு பணிவு வேண்டும்; ஒரு ஏக்கம் வேண்டும்; பார்ப்பதற்கு, உனக்கு உண்மையிலேயே ஒரு ஆசை வேண்டும்.

காவியம் கண்ட கணபதி சாஸ்திரிக்கு அந்த ஏக்கம், அந்த ஆசை வந்தது. என்ன காவியம் எழுதியிருந்தாலும், என்ன உயர்ந்திருந்தாலும், உள்ளுக்குள்ளே அமைதி ஒரு சத்குருவால் ஏற்பட வேண்டும் என்று அவர்

காலடியைப் பற்றிக் கதறியபோது, உள்ளே அமைதி தோன்றியது. இது யார், எதிரே அமர்ந் திருப்பது யார் என்று மிகப் பெரிய வியப்போடு அவர் பார்க்கத் துவங்கினார். இதுவரை இல்லாத பார்வையாக அது இருந்தது. இது ரமணம். இது ரம்மித் திருப்பதால், ரமணம். இவர் சாதாரணர் அல்ல. இவர் ரமணர். ஸ்ரீரமணர். சாதாரண ஸ்ரீரமணர் அல்ல; இவர் பகவான்; கடவுளின் உருவம்; கடவுளின் அவதாரம்; தன்னுள்ளே கடவுளைக் கண்டு தானே கடவுளாக இருப்பவர். இவர் பகவான். இவர் மிகப் பெரிய தபஸ்வி.

பல ஜென்மங்களில் செய்த தபத்தின் பயனாக, இப்போது எளிதில் தனக்குள் இறைவனைத் தேக்கி வைத்திருப்பவர். இவர் ரிஷி. மகரிஷி. பகவான் ஸ்ரீரமணர் என்று அவரை காவிய கண்ட கணபதி சாஸ்திரி கொண்டாடினார். அவர் அன்று சொன்ன ஸ்ரீரமணர் என்ற வார்த்தை வேங்கடராமன் என்ற, திருச்சூழியில் இருந்து வந்த அந்த இளைஞனுக்கு மிகச் சரியான பட்டமாக அமைந்தது. அதன்பின் அவரை வெறுமே சாமி, ஐயா என அழைக்காமல், பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்று எல்லோரும் அழைக்கத் தொடங்கினார்கள்.

இமயமலை தன் சிரசில் குளிர் மேகத்தைச் சூட்டிக் கொண்டதுபோல, சத்தியம் தனக்கு ஒரு பெயரைச் சூட்டிக் கொண்டது. அவரைச் சுற்றியுள்ளவர்கள் பாக்கியவான்கள். அன்று சூட்டிய பெயரைத் திரும்பத் திரும்பக் கூப்பிடு பவர்கள் பாக்கியவான்கள்.


பகவான் ஸ்ரீரமண மகரிஷியால் உற்றுப் பார்க்கப்பட்ட, நாயனா என்று அன்புடன் அவரால் அழைக்கப்படும் காவிய கண்ட கணபதி சாஸ்திரி, நயன தீட்சையை மட்டும் பெறவில்லை; பகவான் தன்னுள்ளே பொங்குகிற அந்தப் பெரும் சக்தியை, கண்களின் மூலம் காவிய கண்ட கணபதி சாஸ்திரியின் கண்களை நோக்கி, உள்ளுக்குள்ளே செலுத்துவதோடு நின்றுவிடவில்லை; 'என்ன செய்ய வேண்டும்' என்பதை மிகத் துல்லியமாக, எளிதான இரண்டு வாக்கியங்களில் தெளிவுபடுத்தினார்.

'நான் நான்' என்பது எங்கிருந்து புறப்படுகிறதோ, அதை கவனித்தால், மனம் அங்கே லீனமாகும். அதுவே தபஸ்.

லீனம் என்கிற வார்த்தைக்குக் கரைதல் என்று அர்த்தம். கரைந்து காணாமல் போகுதல் என்று அர்த்தம். அந்த வாக்கியத்தை ஆழ்ந்த குரலில் மெல்லியதாக, பகவான் ஸ்ரீரமண மகரிஷி, சாஸ்திரிக்கு எடுத்துச் சொன்னார். ஒரு மந்திரத்தை ஜபம் செய்தால், அந்த மந்திர ஜபம் எங்கிருந்து புறப்படுகிறது என்று கவனித்தால், மனம் அங்கே லீனமாகிறது. அதுதான் தபஸ். மீண்டும் சொன்னார்.

இங்கே விஷயம் மந்திரத்தில் இல்லை; அந்த வாக்கியத்தில் இல்லை; அந்த வாக்கியம் சொல்லப்படுகிறபோது, உங்கள் மனம் என்ன செய்கிறது என்பதைக் கவனிக்க வேண்டும். வாய் அந்த வாக்கியத்தை சொல்லிக் கொண்டிருக்கிறபோது, மனம் நாலாபக்கமும் அலைந்து கொண்டிருந் தால், மனம் அலைதலும் நின்றபாடில்லை; வாக்கியத்துக்கும் அர்த்தமில்லை.

''என்ன மந்திரம் ஜபிக்கவேண்டும்?'' என்று வேடன் கேட்டான். என்ன சொல்வது என்று முனிவருக்குத் தெரிய வில்லை. அருகே இருந்த மரத்தைப் பார்த்தார். அது மரா மரம். 'மரா மரா என்று சொல்லு' என்று அந்த வேடனுக்குச் சொல்லிக் கொடுத்தார். அவன் உடனே உட்கார்ந்து 'மரா, மரா, மரா' என்று சொல்ல ஆரம்பித்தான். இப்போது 'மரா' என்ற சொல்லில் அர்த்தம் ஏதுமில்லை. ஆனால், அது உள்ளே மிகப் பெரிய விளைவை ஏற்படுத்தியது. சொல்லை உற்று நோக்கி, சொல்லின் வழியாக மனம் அடைந்து, மனதையும் உற்று நோக்கி, மனதைக் காணாமல் அடிக்கின்ற மிகப் பெரிய வித்தை அங்கு நடந்தது. மனம் லீனமாகும் என்கிறார் பகவான். மெள்ள மனம் படிந்து, அமைதியாகி, அசையாமல் நின்று, பிறகு உறைந்து, அதன் பிறகு காணாமல் போகும்.



இப்படிச் செய்வதற்கு வேறு என்ன தகுதிகள் வேண்டும்? பணிவு வேண்டும். முழுநம்பிக்கை வேண்டும். பணிவும் முழுநம்பிக்கையும் அடுத் தடுத்து வருவன. தனக்கு ஏதோ சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள் என்று பணிவுடன் அதை ஏற்பது மிகச் சிறந்தது எனக்கு சொல்லிக் கொடுத்ததை, நான் முழு நம்பிக்கையோடு இடைவிடாது சொல்வேன் என்று ஏற்பது இன்னும் சிறந்தது.

பப்பா ராமதாஸ் அவர்களிடம், 'நான் என்ன செய்யவேண்டும் குருவே' என பகவான் யோகி ராம்சுரத்குமார் மனமுருகிக் கேட்டார். 'இடைவிடாது இருபத்து நாலு மணி நேரமும் ராம நாமம் சொல்லிக்கொண்டிரு' என்று பப்பா ராமதாஸ், யோகி ராம்சுரத்குமாருக்கு உத்தரவிட்டார். அந்த க்ஷணமே ஜபம் துவங்கியது. இடைவிடாது தொடர்ந்தது. மனம் முற்றிலும் அங்கே ஜபத்தின்மீது படிந்தது; கரைந்தது; காணாமல் போயிற்று. பல கால இல்லற வாசியாக இருந்த ராம்சுரத்குமார், யோகி என்ற உன்னத நிலையை அடைந்தார். எந்நேரமும் கடவுளோடு இருந்தார். பலரின் குறைகளை எளிதாகக் களைந்தார்.வாழ்வின் உய்தலைக் கொடுக்கும் இந்தத் தந்திரத்தை பகவான் ஸ்ரீரமண மகரிஷியைத் தவிர, இத்தனை எளிதாக வேறு எவரும் சொல்லித் தரவில்லை.



காவிய கண்ட கணபதி முனி

பூஜைகளும், பிரார்த்தனைகளும், ஜபதபங்களும், மூச்சுப் பயிற்சியும், யோக நிஷ்டையும், ஹோமமும், யாகமும், யாவை யும் துறந்துவிட்டு ஊர் ஊரான பயணமும், இந்த வித்தையை சொல்லித் தரும் என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்; பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள். எல்லாம் செய், தவறு இல்லை. ஆனால், இவையெல்லாம் எதற்கு? மனம் ஒரு மந்திர ஜபத்தைப் பற்றி, அதை இறுகப் பிடித்துக் கொள்வதன் மூலம் 'நான்' என்கிற எண்ணம் எங்கு தோன்றுகிறது என்பதைக் கண்டுபிடித்து, எங்கு தோன்றுகிறதோ அங்கே உட்கார்ந்து, உறைந்து போய், பிறகு கரைந்து காணாமல் போகிற வித்தை தானாக ஏற்படும்.

ஒரு தள்ளு, உள்ளுக்குள் போய் விழுந்துவிட வேண்டும்; அங்கேயே கிடக்கவேண்டும். ஆனால், வாழ்வின் சுகபோகங்கள் தள்ள விடாது. மனதின் அடியில் அதைப் பற்றிய நாட்டம் இருக்கும். அப்படி ஜபம் செய்தால் என்ன செய்யலாம்; பெரிய சாமியாராகலாம்; சாமியாராகி விட்டால் என்ன செய்யலாம்; பல ஏக்கர் நிலம் வாங்கலாம்; பலவிதமான கட்டடங்கள் கட்டலாம்; உலகம் முழுதும் இருக்கிற மக்களைக் கவரலாம்; பேச்சு சாமர்த்தியத்தில் ஜெயிக்கலாம்; தன்னில் ஒருமுகப்படுவதன் மூலம் வருகின்ற ஸித்தியால் சில நோய்களை குணம் செய்யலாம்; அல்லது, குணம் செய்வது போலக் காட்டலாம்; காசு பறிக்கலாம்; 'என் வயிற்று வலி ஒரே தடவையில் தீர்ந்துவிட்டது' என்று இரண்டு பேர் சொன்னால் போதும், இரு நூறு பேர் கேட்பார்கள். இரண்டாயிரம் பேர் நாடி வருவர். அப்போது உலகம் முழுவதும் நிலம் வாங்க வேண்டியதுதான் வேலையாகப் போய்விடும். இது பேய் ஆட்டம்; அரக்க குணம்; மாயையில் சிக்கிச் சீரழியும் வரலாறு.

உள்ளே கனிந்து கரைந்து காணாமல் போன மனம் என்ன செய்யும்? திகைத்துக் கிடக்கும். ஒரு வேளை சோறு, குடிநீர், உடுத்த ஒரு கோவணம், படுக்கக் கட்டாந்தரை போதுமே என்று அசையாது நின்றுவிடும். ஆனால், அப்படிப்பட்டவரின் காலடியில் சகலமும் கொட்டப்படும். உலகில் உள்ள எல்லாச் செல்வங்களும் அவருக்கு அருகே வந்து நிற்கும். கைகட்டிச் சேவகம் செய்யும். ஆனால், அவற்றின் மீது அந்த ஞானிக்கு நெல்முனையளவும் ஈடுபாடு இருக்காது. அந்தச் செல்வம் அவருக்கு அருகே இருக்கும்; ஆனால், அவருக்குப் பயன்படாது. பயன்பட வேண்டிய அவசியம் இருக்காது. அவருக்கு நிலம் இருக்கும், கட்டடம் இருக்கும். ஆனால்... இருந்தா லும் இல்லாது போனாலும் ஒன்றுதான் என்ற நிலை இருக்கும். கையேந்தி உணவு வாங்கி உண்ட நினைப்பிலேயே, இலையில் சோறு போட்டு, குழம்பு பிசைந்து சாப்பிடுவார். 'பகவான், பேரீச்சைப் பழம்'... 'அப்படியா, ஒன்று கொடு', 'பகவான், கடலைப் பருப்புப் பாயசம்'... 'ஆஹா! ஒரு டம்ளர்'...கொடுப்பவரின் சந்தோஷத்துக்குத்தான் அவை உண்ணப்படுகிறதே தவிர, உண்ணப்பட வேண்டும் என்ற ஆசையில் அந்த ஞானி ஒருபோதும் இல்லை. ஒரு நாளைக்கு ஒரு கவளம் உணவு என்ற


நிலையிலேயே மனம் அடங்கிய பின்னும், அந்த ஞானி இருக்கிறார். இதுவே உண்மையான அடக்கம். இதுவே ஞானியின் லட்சணம்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் வாழ்க்கை, சம்பவங்கள் நிறைந்தது அல்ல; சம்பவங்களின் அடுக்கு அல்ல; வெறும் சம்பவங்களும் அல்ல; அந்த சம்பவங்களுக்குள்ளே புகுந்து, அவர் வாழ்க்கை என்ன சொல்கிறது என்பது நமக்குப் புரியவேண்டும். அந்த வாழ்க்கையின் மெல்லிய வாசனையாவது, மெல்லிய தன்மையாவது நம் மீது பரவ வேண்டும். தவம் செய்தலைப் பற்றி நாம் சிந்திக்க வேண்டும். எது தபஸ் என்று கேட்க வேண்டும். அந்தத் தபஸை பின்பற்ற முயற்சி செய்ய வேண்டும். கதை படித்து முடித்ததுபோல, பகவான் ஸ்ரீரமணரின் வாழ்க்கை வரலாறு அமையாது. அது உள்ளே உங்கள் நெஞ்சுக்குள் தைத்து, உங்கள் புத்தியை மாற்ற வேண்டும். உங்கள் எண்ணத்தில் ஒரு வளர்ச்சி ஏற்பட வேண்டும்.

சநாதன தர்மம் என்று அழைக்கப் படும் இந்து தர்மம், சாதாரண விஷயம் அல்ல; அப்படி மனதை ஒருமைப் படுத்துவதற்கே பல்வேறு கால கட்டங் களில், பல்வேறு ஞானிகள், பல்வேறு உத்திகளைக் கையாண்டு அந்த இடம் நோக்கி நகர்ந்திருக்கிறார்கள். பஜனையும் பக்தியும், தேரும் திரு விழாவும், பண்டிகையும் விக்கிரக ஆராதனையும், இதிகாச புராணங்களும், வேத கோஷங்களும், ஹோம யக்னங்களும் நமது மனதை ஒருநிலைப்படுத்துவது குறித்தே செய்யப்படுகின்றன.

விதம்விதமாக பட்டுப்புடவை உடுத்தியாகிவிட்டதல்லவா, போதும் என்ற ஒரு நிலை வரவேண்டும். 'எனக்கு இப்போதைக்குப் போதும் என்கிற நிலையே வராது. எனக்கு இருக்கிறதே நாலு பட்டுப் புடவை, இது போதும் என்று எப்படிச் சொல்வது?' என்கிறீர்களா? கவலைப்படாதீர்கள், அடுத்த ஜென்மத்தில், இந்த போதும்

என்ற நிலை நிச்சயம் வந்துவிடும். உங்கள் தபஸ் இந்த ஜென்மாவோடு முடிவது அல்ல என்றுதான் சநாதன தர்மம் என்கிற இந்து மதம் சொல்கிறது. இது ஜென்ம ஜென்மமாய்த் தொடருகிற விஷயம் என்கிறது.



பதினாறு வயது பாலகனான வேங்கடராமனுக்கு, மதுரையில் மல்லாக்கப் படுத்துக்கொண்டிருக்கும்போது உள்ளே ஏற்பட்ட அந்த அற்புதமான மாற்றம், கற்றுக் கொண்டு வந்தது அல்ல; யாரோ கொண்டு வந்து கையில் கொடுத்ததும் அல்ல; அது ஜென்ம ஜென்மாந்திரத் தொடர்பு. போன ஜென்மத்து தபஸின் விளைவு. ஸ்ரீரமணரைப் படிக்கிற மாத்திரத்திலேயே உள்ளுக்குள் மாற்றம் ஏற்பட்டுவிட வேண்டும். ஸ்ரீரமணரின் கண் களைப் பார்க்கின்ற மாத்திரத்திலேயே, உள்ளுக்குள் அசைவு ஏற்பட்டுவிட வேண்டும்.

ரமண ஆஸ்ரமத்தில் கைகூப்பி நிற்கிறபோது தன்னந் தனியனாய் எவர் துணையும் இன்றி உள்ளே மனம் கனிந்து, கசிந்து, உருகி கண்களில் நீர் வர வேண்டும். எவர் உறவு; யார் நண்பர்; யார் துணை; யார் வழிகாட்டி; எவருமிலர். நான் தனி. என்னுள் இருக்கின்ற பரப்பிரம் மமே எனக்கு வழிகாட்டி; எனக்குத் துணை, அதுதான் நான்; நான்தான் அது என்று அடைந்துவிட வேண்டும். ஒரு ஆனந்த அழுகையில் திளைக்க வேண்டும். அளவற்ற அமைதியில் உட்கார்ந்துவிட வேண்டும். மாற்றத்தை உபதேசத்தால் இன்னொருவருக்குக் கொண்டுவர முடியாது; ஞானிகளால்தான் கொண்டுவர முடியும். ஞானியர் உடலானவர்கள் அல்ல; உடலாக இருக்கும் போதே, உடலைத் தாண்டி, உள்ளுக்குள் இருக்கிற அதி அற்புத சொரூபத்தைக் கண்டு, அதன் ரூபமாகவே இருப்பவர்கள். அவர்களுக்கு மரணம் என்பது இல்லை. மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்கிறவர் கள். எல்லா இடத்திலும், எல்லா நேரத்திலும் இருப்பவர்கள். ஜோதி வடிவானவர்கள். ஜோதி வடிவு என்றவுடன் விளக்கை நினைத்துக் கொள்ளக் கூடாது. அந்த நினைப்பே நமக்கு ஒளியைத் தரும்; அந்த நினைப்பே நமக்கு வழிகாட்டும். அந்த நிலையே நமக்கு அகல் விளக்கு; இருளைக் கிழித்துக் கொண்டு, அந்த அகல்விளக்கு வழிகாட்ட, நாம் நடக்க வேண்டும். குரு என்ற வார்த்தைக்கு இருளை விலக்குபவர் என்று அர்த்தம்.

காவியத்தில் கரை கண்டவர் கணபதி முனி.

ஆனால், அவர் பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் பாதங்களைப் பற்றிக் கொண்டதால் உள்ளுக் குள் மாற்றம் ஏற்பட்டது. ஆனால், கணபதி முனிக்குச் சைவ சித்தாந்தம் பற்றி எதுவும் தெரியாது. திருவண்ணாமலையில் உள்ள சைவ சித்தாந்தக் குழுவினர், அவரை சைவ சித்தாந்தம் பற்றிப் பேச அழைத்தனர். அவரும் ஒப்புக் கொண்டார். ஆனால் தனக்கு அதுபற்றி எதுவும் தெரியாதே என்று, பகவான் ஸ்ரீரமணரிடம் முறையிட் டார். பகவான், 'சிவஞான போதம்' என்கிற ஒரு நூலை கொடுத்து, அதில் உள்ள செய்யுள்களை படிக்கச் சொல்லி, அதைப் பற்றி கணபதி முனிக்கு விளக்கி னார். கூர்மையான புத்தியும், விசாலமான படிப்பும் உள்ள கணபதி முனிக்கு  சைவ சித்தாந்தம் முற்றிலும் புரிந்தது. அவர் மேடை ஏறி, தன்னை மீறிய சக்தியில் சைவ சித்தாந்தம் பற்றி மிக விளக்கமாக உரையாற்றி, கைதட்டல்கள் பெற்றார்.




தன்னால் நடந்தது அல்ல என்பதை உணர்ந்தார். தன்னை மறந்து, ஆழ்ந்து, தனக்குள் அமிழ்கிறபோது, சில சிக்கல்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறது. அசைந்து நடக்கவேண்டிய உடம்பு, அசையாது இருப்பதில், சில வேதனைகள் வர சாத்தியம் இருக்கிறது. மனம் எதுபற்றியும் நிற்காமல், ஓரிடத்திலேயே நிலைத்து நிற்பதில், மூச்சு சம்பந்தமானதாகவும் ரத்த ஓட்டம் சம்பந்தமானதாகவும், வேதனைகள் வரக் காரணங்கள் இருக்கின்றன. வேகமாக யோசித்தால், வேகமாக மூச்சு வரும். கோபத்தில் ஒரு விதமாகவும், காமத்தில் ஒரு விதமாகவும், ஆத்திரம்- அசூயையில் ஒருவிதமாகவும், புலம்ப லில் ஒரு விதமாகவும் மூச்சு திசைமாறும். எதுவுமற்று மௌனமாகி விட்டால் மூச்சு மெல்லியதாகிவிடும். சுவாசம் ஒரு இழை போல ஓடும். நுரையீரல்களில் அசைவு மிகக் குறைவாக இருக்கும். அப்போது, ரத்த ஓட்டம் தளர்வாக இருக்கும். விறுவிறுப்பாக ஓட வேண்டிய ரத்த ஓட்டம், தளர்வாக ஓடுகிறபோது, ரத்தம் உச்சிக்குப் போய் திரும்பி வருவதில் சிக்கல் ஏற்படும். ரத்தம் திரும்பாது; மெள்ளத் தயங்கித் தயங்கிக் கீழிறங்கும். அப்போது தலைக்குள் மிகப் பெரிய வேதனை ஒன்று தோன்றும்.

உடல் வேறு, மனம் வேறு என்று உற்றுப் பார்ப்பவர்கள் இதைப் புரிந்துகொள்வர். ஆனாலும், இந்த வேதனையைத் தாங்கமுடியாது தவிப் பார்கள். காவிய கண்ட கணபதிமுனி, தன் தவத்தின் உச்சியில் தவித்தபோது, என்ன செய்வது என்று தெரியாமல், தன் அன்பர் ஒருவரை, பகவான் ஸ்ரீரமண மகரிஷியிடம் அனுப்பினார். தன் வேதனையை அவர் மூலம் விளக்கினார்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி உடனே கிளம்பி, கணபதி முனிவரின் இடத்துக்குப் போய், அவர் உச்சியில் தன் வலது கையை வைத்து அழுத்தினார். கணபதி முனியின் வேதனைகள் உள்ளேயிருந்து அகன்றன. நாடிகள் தெளிவாயின. மூச்சு ஆழ்ந்து வெளிப்பட்டது. துவண்ட உடல் நிமிர்ந்தது. இருட்டு நகர்ந்து முகம் மலர்ந்தது. இதுவொரு சிடுக்கு; சின்னச் சிக்கல். வேகமாக நடந்து போகின்ற போது ஏற்படுகிற இடறல். தெரிந்து தெளிவான வல்லவர் ஒருவர், உள்ளுக்குள்ளே தன் மனதை நுழைக்கும்போது இது சீர்படுகிறது.

தன் விஷயத்தை உள்ளே செலுத்து கிறபோது, அசைவு அதிகமாகிறது. காவிய கண்ட கணபதி முனி சுயத் துக்கு வந்தார். இதுபற்றி இன் னொரு சந்தர்ப்பத்தில் பகவான் ஸ்ரீரமண மகரிஷி பேசும்போது, ''இவர் என்னிடம் முறையிட்டார். நான் யாரிடம் போய் முறையிடுவது?'' என்று மெல்லிய குரலில் பேசினாராம்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி, தானே பற்றி எரிந்த தழல்; தன்னையே குருவா கக் கொண்டிருந்த குணக்குன்று; தானே பொங்கி, தானே அமைதியாகி, தன்னையே பற்றிக்கொண்டு மலர்ந்த தாமரை. பகவான் ஸ்ரீரமண மகரிஷி ஒரு அவதாரம்!

பகவான் ஸ்ரீரமண மகரிஷி, நாயனாவின் வாழ்க்கையில் இன்னொரு அற்புதத் தையும் நிகழ்த்தினார்; புத்திக் கூர்மையும், கல்வி அறிவும், பேச்சுத் திறனும் கொண்டிருந்த அந்த ஆன்மிகவாதியின் வாழ்வில், தன்னை மிக உறுதியாய் பதியவைத்தார்.

'நான்... நான்' என்று எங்கு நினைப்பு எழுகிறதோ, அங்கேயே மனதைக் கவனித்தால், மனம் லீனமாகும் என்று சொன்னதுடன் மட்டுமின்றி... உற்றுப் பார்த்துத் தனது அற்புத சக்தியை அவருக்குள் இறக்கியதோடு மட்டுமின்றி... அவர் தவத்தில் தவிக்குங்கால் தலையில் கை வைத்து, அந்த உச்சிச் சூட்டை இறக்கியதோடு மட்டுமின்றி... இன்னொரு அற்புதத்தையும் நிகழ்த்தினார்.

1908-ஆம் ஆண்டு, பகவான் ஸ்ரீரமண மகரிஷியிடம் இருந்து விடைபெற்று, காவிய கண்ட கணபதி சாஸ்திரி திருவெற்றியூருக்குப் பயணமானார். அங்கே, விநாயகர் கோயிலில் தங்கிக்கொண்டு, தன் தவத்தைத் தொடர்ந்தார். பிற்பகல் ஒன்றில் விழித்தபடி படுத்திருந்த போது, அவருக்கு அருகே யாரோ அமர்வதுபோல் இருந்தது. யார் என்று பார்க்கையில், பகவான் ஸ்ரீரமண மகரிஷி தனது உள்ளங் கையை, காவிய கண்ட கணபதியின் தலையில் அழுத்தி வைத்திருந்தார்.

பகவானின் உள்ளங்கை பட்டதும், கணபதி சாஸ்திரிக்கு மின்சாரம் பாய்ந்ததுபோல் உணர்வு ஏற்பட்டது. 1908-ஆம் வருடம் நடந்த இந்த விஷயத்தை, 1929-ஆம் வருடம் அன்பர் ஒருவர், ''கணபதி சாஸ்திரியாருக்கு திருவெற்றியூர் வந்து அஸ்த தீட்சை கொடுத் தீர்களாமே?'' என்று கேட்கையில், பகவான், ''ஆமாம், ஒரு நாள் திடீரென்று எங்கோ இந்த இடம் விட்டு மேலே பறப்பது போல் தோன்றியது. மேலே எழுந்ததும், காட்சிகள் மறைந்தன. இடம் முழுவதும் வெள்ளையாயிற்று, ஏதோ ஓர் இடத்துக்கு நகர்கிறோம் என்ற உணர்வு இருந்தது. பிற்பாடு மெள்ள காட்சிகள் தெரிந்தன. நான் கீழே இறங்கி நின்றேன். அந்த இடம் ஒரு நெடுஞ்சாலையாக இருந்தது. அந்த இடத்தில், நான் நடந்து போனேன். அங்கே ஒரு விநாயகர் கோயில் இருந்தது. உள்ளே போய் சிறிது நேரம் யாரோடு பேசினேன்,

என்ன பேசினேன் என்று தெரியவில்லை. ஆனால், அந்த இடம் திருவெற்றியூர் என்றும், சிவன் கோயிலுக்கு அருகே இருக்கிற விநாயகர் கோயில் என்றும் மனசுக்குத் தோன்றியது. மறுபடியும் கண் விழித்துப் பார்த்தபோது, திருவண்ணாமலையில் இருந்தேன்'' என்று சர்வ சாதாரணமாக, எந்தவிதக் கர்வமுமின்றி அந்த விஷயத்தை வெளிப்படுத்தினார்.

வான் மார்க்கமாகப் போய், தன் அன்பருக்குக் கொடுத்த அஸ்த தீட்சையைத் தான் தந்ததாக ஒருபோதும் அவர் சாதித்துக்கொள்ளவில்லை. தன்னால் அவ்விதம் செய்ய முடியும் என்று பறைசாற்றிக் கொள்ளவில்லை. அதுபற்றி அவராக வாய் திறக்கவும் இல்லை. காவிய கண்ட கணபதி, இதுபற்றி அன்பர்களிடம் சொல்லி, அந்த அன்பர்கள் வினவிய பின்பு, அதாவது கிட்டத்தட்ட 21 வருடங்களுக்குப் பிறகு, 'ஆமாம், அப்படி நடந்தது' என்று மறுக்காமல் ஒப்புக்கொள்கிறார். அதை மறைக்கவும் இல்லை; தன்னால் அப்படிச் செய்யமுடிந்தது என்று கொண்டாடிக் கொள்ளவும் இல்லை. என்னவோ அப்படி நடந்தது என்று மிக எளிமையான விஷயமாக அதைச் சொல்கிறார்.

சின்னஞ்சிறு விஷயங்களுக்கெல்லாம் நாம் நம்மை எவ்விதம் கொண்டாடிக்கொள்கிறோம் என்று யோசிக்கிறபோது, ஸ்ரீரமணரின் இந்தச் சம்பவம் ஞாபகம் வருகிறது. அப்படி ஞாபகம் வருகையில், நம்மைப் பற்றி வெட்கமாக இருக்கிறது. சத்தியத்தின் இயல்பு சாந்தம். சாந்தம் என்பது நெல்முனையளவும் கர்வம் இல்லாது இருத்தல். கர்வம் இல்லாது இருக்க, ஒரு மனிதர் தன்னுள்ளேயே, தன் ஆன்மாவிலேயே ஒடுங்கி இருக்கவேண்டும். அப்படி ஒடுங்கி இருந்தவர்தான் பகவான் ஸ்ரீரமண மகரிஷி.

மனிதர்களால் அப்படியரு யோக நிலையை அடைய முடியும் என்று நமக்குச் சமீபமாய் வாழ்ந்து காட்டியவர், ஸ்ரீரமண மகரிஷி. பகவானே தனக்கு எல்லாம்; ஸ்ரீரமணரே தன் வாழ்க்கையின் ஆதாரம் என்று தெள்ளத்தெளிவாக உணர்ந்த காவிய கண்ட கணபதி, இப்படிப்பட்ட குருவை தனக்குக் கொடுத்ததற்காகப் பார்வதிதேவியை நமஸ்கரித்து, ஆயிரம் பாக்கள் எழுத ஆரம்பித்தார். அவர் சாக்த உபாசகர்; சக்தியைக் கொண்டாடுபவர். எழுநூறு பாக்கள் எழுதியாகிவிட்டது. தேதி குறித்து, அரங்கேற்றத்துக்கு எல்லா ஏற்பாடுகளும் நடந்துகொண்டிருந்தன. ஆனால், தொடர்ந்து பாக்கள் எழுத முடியவில்லை. ஏனோ தட்டிப் போயிற்று.

மறுநாள் அரங்கேற்றம். ஆயிரம் பாக்கள் எழுதாது, எழுநூறு பாக்களை வைத்துக்கொண்டு எப்படி அரங்கேற்றுவது? காவிய கண்ட கணபதி குழம்பினார். அவர் படிப்பறிவும், புத்தி கூர்மை யும் உதவி செய்யவில்லை. மறுபடியும் ஞானக் கொழுந்தின் கால்களைப் பற்றிக்கொண்டார். 'எடுத்துக்கொண்ட காரியத்தை என்னால் முடிக்க இயலவில்லையே' என மருகினார். தனது அன்பர் மீது பெருங்கருணையுள்ள பகவான், 'இன்று இரவு உட்காருவோம்' என்று சொன்னார்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷியும், காவிய கண்ட கணபதியும் எதிரும் புதிருமாய் உட்கார, காவிய கண்ட கணபதியின் சீடர்கள், தங்கள் கைகளில் நோட்டுப் புத்தகங்களுடன் அமர்ந் தனர். பகவான் ஸ்ரீரமண மகரிஷி காவிய கண்ட கணபதியை ஊடுருவி நோக்கினார். கணபதியின் உள்ளுக்குள்ளே கவிதை பிரவாகம் எடுத்தது. எழுநூறு, எண்ணூறு ஆனது. எண்ணூறு, தொள்ளாயிரம் ஆனது. தொள்ளாயிரம், ஆயிரம் ஆனது. காவிய கண்ட கணபதி சொல்லச் சொல்ல அவருடைய சீடர்கள், அந்த வரிகளை எழுதிக் கொண்டார்கள். எழுதி முடித்ததும், அந்த இடத்தில் ஓர் அமைதி படர்ந்ததை அங்கிருந்த அனைவரும் உணர்ந்தார்கள். ''நாயனா, நான் சொன்னதை எல்லாம் எழுதிக் கொண்டாகிவிட்டதா?'' என்று பகவான் வினவினார். நாயனா 'ஆம்' என்று அடக்கத்தோடு தலையசைத்தார். பிற்பாடு ஒருமுறை, இதைப் பற்றிக் கேட்டதற்கு, ''அந்தப் பாடல்களை எல்லாம் நான் எழுதியதாகவே எனக்குத் தோன்றியது. அதனால்தான் அவ்விதம் கேட்டேன்'' என்று பகவான் பதில் சொன்னார். மீண்டும் அதே விஷயம் நடந்திருக்கிறது. அது கொண்டாடப்படவும் இல்லை; அதே நேரத்தில் மறுக்கப்படவும் இல்லை. அது அவரால் நடந்தது என்று சொல்லப்பட்டுவிட்டது. அதே நேரம், 'நான் செய்தேன்' என்ற கர்வம் அங்கு இல்லை.



அரங்கேற்றம் விமரிசையாக நடந்தது. அரங்கேற்றத்துக்குப் பிறகு நாயனா, தான் முதலில் எழுதிய எழுநூறு பாக்களில் பலவற்றைத் திருத்தி எழுதினார். ஆனால், பின்பு எழுதிய முந்நூறு பாக்களில் ஒரு திருத்தமும் செய்யவில்லை; செய்யும் படியான தேவை இருக்க வில்லை. படித்தவர்களுக்குப் படிப்புதான் பிரச்னை. அந்தப் படிப்பு மீண்டும் மீண்டும் கேள்விகளையே எழுப்பும். படிப்பை மிகவும் அதிகமாக நெருக்கிக் கட்டிக்கொண்டால்,

சந்தேகங்கள் விதம்விதமாக எழும். தெள்ளத் தெளி வாக, தீர்மானமாக சொல்லிக் கொடுத்த பிறகும், இது சரியா, அது சரியா என்ற சந்தேகங்கள் வந்துவிடும்.

'நான் என்ற எண்ணம் எழும் இடத்தில் மனது இருப்பது முக்கியமா அல்லது மந்திர ஜபத்தைப் பற்றிக்கொண்டு போக லாமா?' என்று மறுபடியும் பகவான் ஸ்ரீரமணரைக் கேட்டார் நாயனா. 'எது என்னுடைய குறிக்கோளை அடைய எளிய வழி?' என்று விசாரித்தார். 'மறுபடியும் பாலபாடத்துக்கு நாயனா வந்துவிட்டாரே' என்று பகவான் கோபிக்கவில்லை. ''நான் என்ற விஷயம் எழும் இடத்தில் மனம் லயித்திருந்தால் போதும்; வேறு எதுவும் செய்யவேண்டியதில்லை'' என்று மறுபடியும் திட்டவட்டமாகச் சொன்னார்.

''உங்கள் பாரத்தையெல்லாம் கடவுளிடம் கொடுத்துவிடுங்கள்; அவர் பார்த்துக்கொள்வார். நடக்கவேண்டியது எல்லாம் இங்கு சரியாக நடக்கும்'' என்று தொடர்ந்து பேசினார். இந்த விஷயம் எழும்பும் இடத்திலேயே மனம் லயித்திருந்தால், குறிக்கோள் அற்ற நிலை அற்புதமாக உருவாகும். 'நான் இருக்கிறேன்' என்ற விஷயம் கூடக் கரைந்துபோகும். அப்படிக் கரைந்துபோன பிறகு, குறியாவது? கோளாவது? நம்மால் நிறைவேற்ற வேண்டியது அனைத்தும் அப்போது வெகு இயல்பாக, சர்வ சாதாரணமாக, ஒரு பூ மலர்வதைப் போல நிகழும். விஷயத்தை முன்னிலைப்படுத்தினால், தான் கடுமையாக உழைத்தது போலவும், கெட்டிக் காரத்தனமாகச் செய்தது போலவும், சாமர்த்திய மாகச் செய்தது போலவும், உலகம் அதைத் தூக்கிப் பிடித்துக்கொண்டாடுவது போலவும், யாரோ சிலர் அதை எதிர்ப்பது போலவும் தோன்றும். நம்மால் விளைந்தது எதுவுமே நம்மால் விளைந்தது அல்ல என்ற ஒரு விடுதலையான உணர்வு வர, செய்ததைக் கொண்டாடிக் கொள்ளத் தோன்றாது.

நாயனாவும் பகவான் ஸ்ரீரமண மகரிஷியும் சில முறை விவாதத்தில் ஈடுபடுவது உண்டு. 'மூளையே உடம்பில் முக்கியமான ஸ்தானம்' என்று விவாதித் தார் நாயனா. பகவான் ஸ்ரீரமண மகரிஷி அதை மறுத்து, 'இதயமே மிக முக்கியமான விஷயம்' என்று சொன்னார். 'புத்தியை விட இதயமே முக்கியப் பங்கு வகிக்கிறது' என்றார். இந்த விவாதத்தைச் சுற்றியிருந்த பலர் கேட்டார்கள்.

அந்தக் கூட்டத்தில் என்.எஸ்.அருணாசலம் என்ற மாணவனும் இருந்தான். ஸ்ரீரமணருக்கும் நாயனாவுக்கும் நடந்த இந்த உரையாடலை ஓர் அழகிய ஆங்கிலக் கவிதையாக எழுதிக்கொண்டு வந்தான்.

சூரியனிலிருந்து கிளம்பிய ஒலி, எப்படி சந்திரனை யும், நட்சத்திர மண்டலத்தில் உள்ள மற்ற கிரகங் களையும் ஒளிர்விக்கின்றதோ, அதேபோல இதயம் புத்தியையும், புத்தியின் மூலமாக மற்ற அவயங் களையும் இயங்கத் தூண்டுகிறது. இதயத்தில் உள்ள சக்தியும், ஒளியுமே புத்தி இயங்கக் காரணம்.

புத்தியின் வலிவு புலன்களைத் தூண்டுதல். புலன் களினால் வாழ்க்கை அனுபவங்கள் ஏற்படுகின்றன. வாழ்க்கை அனுபவங்கள் மனதில் பதிந்து, ஒரு மாயத் தோற்றத்தை உருவாக்குகின்றன. இந்தத் தோற்றங்களுக்கு, இந்த அனுபவங்களுக்கு, புலன் களின் சக்திக்கு, புத்தியின் வலுவுக்கு இதயமே காரணம். இப்போது இதயத்திலிருந்து தோன்றுகின்ற சக்தி, ஒளி எங்கிருக்கிறது, என்ன என்று பார்க்கும் போது, மனம் அமைதி அடைகிறது.

எதனால் இந்த வாழ்க்கை மொத்தமும் அர்த்தப் படுகிறதோ, அந்தச் சக்தியை நோக்கி நகர்ந்து, அதை உணரும்போது, மற்றதெல்லாம் கனவுகள் போன்று காட்சியளிக்கின்றன. இந்த நிலையில், இங்கே வாழ்வதற்கு இந்தப் புலன்கள் உதவி செய்கின்றன. ஆனால், மாயையில் சிக்கிக்கொள்வதில்லை. புத்தியால் நினைவுகளைத் தேக்கி வைத்துக்கெள்ள முடிகிறது. இன்னார் என்று புரிகிறது. ஆனால், விருப்பும் வெறுப்பும் கொள்வதில்லை. இன்பமும் துன்பமும் ஒரேவிதமாக அனுபவிக்கப்படுகிறது. ஏனெனில், எங்கு சக்தி பீறிட்டு எழுகிறதோ, எங்கு மூளையை இயக்குகிற ஒளி துவங்குகிறதோ, அங்கு மனம் அமைதியாய் உட்கார்ந்துவிட, அதை உணர்ந்துவிட, அதைப் பற்றிக்கொண்டுவிட, அதை அணைத்துக்கொண்டு கிடக்க, மற்றவை அனைத்தும் அர்த்தம் இல்லாமல் போகின்றன.

அருணாசலம் என்கிற அந்த இளைஞன் எழுதிய ஆங்கிலக் கவிதையை ஸ்ரீரமணர் தமிழில் மொழி பெயர்த்தார் யார் எழுதியது, எந்த மொழியில் என்பது முக்கியமில்லை. அந்தச் செய்தியே முக்கியம். அது எல்லோருக்கும்

போய்ச் சேர வேண்டியது அவசியம். ஸ்ரீரமண மகரிஷியின் வாழ்க்கையில் பங்கேற்ற இன்னொரு அற்புத மான மனிதர் ஸ்ரீசேஷாத்திரி சுவாமிகள்.

திருவண்ணாமலையில், அற்புதங்கள் பல நிகழ்த்திய சித்த புருஷர், இவர்!

இரண்டு ஞானிகளும் மிக உன்னதமான நிலையில் இருந்தவர்கள். ஒருவரை ஒருவர் பாராட்டிக் கொண்டாடியவர்கள். நேரடி யாகச் சந்தித்து, முகமன் கூறிய தருணங்கள் மிகக் குறைவு என்றாலும், அவர்கள் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கொண்டிருந்தார்கள். அவரை அறிந்தவர் என்று இவரும், இவரை அறிந்தவர் என்று அவரும் மிகச் சிறப்பாக மனத்துக்குள் இருத்தி, பரஸ்பர நலன்களை அக்கறையோடு கவனித்து வந்தார்கள்.

''சேஷாத்திரி சுவாமியைப் பைத்தியம் என்கிறார்களே..?'' என அன்பர் ஒருவர் ஸ்ரீரமண மகரிஷியிடம் விசாரித்தார்.


''ஆமாம், திருவண்ணாமலையில் மூன்று பைத்தியங்கள் இருக்கின்றன. ஒன்று, அண்ணாமலையார் என்கிற பைத்தியம்; இன்னொன்று சேஷாத்திரி சுவாமிகள் என்கிற பைத்தியம்; மூன்றாவது இந்தப் பைத்தியம்!'' என்று ரமண மகரிஷி பதில் சொன்னதாக ஒரு செய்தி உண்டு.

ஸ்ரீசேஷாத்திரி சுவாமிகள், பகவான் ரமண மகரிஷியைப் பற்றி வேறு விதமாகச் சொல்கிறார். அதிலும் சந்தோஷமும் அன்பும் கொப்பளிக் கின்றன. ''எங்கே, மலைக்கா? விருபாக்ஷி குகைக்குப் போகிறாயா? வேண்டாம், போகாதே! அங்கு ஒரு கொலைகாரன் இருக்கிறான்'' என்று போகிறவரை பயமுறுத்தியிருக்கிறார். ''அங்கு போனால், உன்னைக் கொலை செய்துவிடுவான்'' என்றும் சொல்லியிருக்கிறார்.

பகவான் தன் அகந்தையைக் கொன்றதையே கொலை என்று சொல்லி, அங்கு போனால் உன் அகந்தையும் கொலையாகும், அதாவது, அகந்தை அகன்று போகும் என்பதைத்தான் அவர் இப்படி சூட்சுமமாக எடுத்துரைத்தார்.

'சேஷாத்திரி சுவாமிகள் யார்?' என்று அந்த அன்பர் பகவான் ரமண மகரிஷியிடம் கேட்டிருக்கலாம். அப்போது இன்னும் தெளிவாக, ரமண மகரிஷி சொல்லியிருப்பார். அல்லது, மௌனத்தில் உணர்த்தியிருப்பார். அதை விடுத்து, 'சேஷாத்திரி சுவாமிகள் பைத்தியம் என்கிறார்களே?' என்கிறபோது, அதை ஒட்டியே அவர் பேச்சும் இருந்தது. புரிந்துகொண்டவர்கள் பாக்கியவான்கள்.

சாக்த உபாசக வழியில் அதாவது சக்தி உபாசக வழியில் பலவித மந்திர ஜபங்களைக் கிரமமாகக் கற்று, ஜபித்து, இடையறாத ஜபத்தின் மூலம் ஒரு பக்குவத்தை அடைந்தவர் ஸ்ரீசேஷாத்திரி சுவாமிகள். இதன் பலனாக அவர் பல ஸித்திகளைப் பெற்றிருந்தார். 'அதோ, விட்டோபா போகிறார், விட்டோபா போகிறார்' என்று ஒரு மகான் ஸித்தி அடைந்ததை, வானத்தில் நகர்ந்ததை திருவண்ணா மலையில் இருந்து பார்த்து உரக்கக் கத்தினார். திருவண்ணாமலையிலிருந்து தொலைவில் இருந்த போளூரில் இறந்த ஒரு மகானை உடனடியாகக் கண்டு வியக்க அவரால் முடிந்தது.




எதிரே உள்ளவர்களின் எண்ணங்களை அறியும் மகத்துவமும் அவரிடம் இருந்தது. எதிரே இருப்பவர் மனதில் என்ன மாதிரியான எண்ண ஓட்டங்கள் ஓடுகின்றன என்பதைச் சரியாகச் சொல்லிச் சிரிப்பதும் வழக்கமாக இருந்தது. சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ரமண மகரிஷியின் எதிரே வந்து கண்களையே பார்த்துக்கொண்டிருந்தார். சில நிமிடங்கள் உற்றுப் பார்த்தும், பகவான் ஸ்ரீரமண மகரிஷி யார் என்று சேஷாத்திரி சுவாமிகளால் அறிய முடியவில்லை. 'இது என்ன நினைக்கிறதோ, தெரியவில்லையே!' என்று பகவானைப் பார்த்துக் கூறினார். பகவான் பதில் சொல்லவில்லை. மௌனமாக இருந்தார். அந்த மௌனம், சேஷாத்திரி சுவாமிகளுக்குத் தாங்கவில்லை.

'ஒருவன் அருணாசலேஸ்வரரை வழிபட் டால், அருணாசலேஸ்வரர் அவனுக்கு முக்தி கொடுத்துவிடுவார்' என்று உரக்கச் சொன்னார். அதற்கு பகவான் மெல்லிய குரலில், 'வழிபடுபவர் யார்? வழிபடுவது எதை?' என்றார். சேஷாத்திரி சுவாமிகள் வாய்விட்டுப் பெரிதாகச் சிரித்தார். 'இதுதானே புரியமாட்டேன் என்கிறது' என்று பதில் சொன்னார். இரண்டு ஞானிகளும் மிக அற்புதமான ஒரு விஷயத்தை, தங்கள் நிலையை மிக அழகாகப் பரிமாறிக் கொண்டார்கள்.

சேஷாத்திரி சுவாமிகள், பக்தி என்கிற சிகரத்தின் உச்சி யில் இருப்பவர். அவரது பக்தியின் வழிபாடாக, மந்திர ஜபம் அவருக்கு இருந்தது. அலகு குத்திக்கொள்வது, தேர் இழுப்பது, திருவிழாக்களுக்குப் போவது, கோயிலில் வழிபாடு செய்வது, அபிஷேக- ஆராதனைகள் செய்வது, வீட்டுக்குள்ளேயே விக்கிரகம் வைத்து, அதற்கு மூன்று வேளை பூஜை செய்வது, ஸ்லோகங்கள் சொல்வது, தேவார- திருவாசகங்கள் ஓதுவது, ஹோமங்கள், யக்ஞ கதிகளைச் செய்வது... இவையெல்லாம் பக்தி மார்க்கங்கள். இப்படியான மார்க்கங்கள் மாற்றங்களைக் கொண்டு வரும்; உச்சகட்டமாக உள்ளும் புறமும் தெரியும்; நேற்றும், இன்றும், நாளையும் அறிய முடியும். கடவுளைக் காண முடியும்; கடவுள் தன்மையை அடைய முடியும்.

ஆனால், ஸ்ரீரமணர் வேறு வழி. சொடுக்கு நேரத்தில் உள்ளே ஒரு மாற்றம் ஏற்பட்டுவிட்டது. அதுதான் இது என்று புரிந்துவிட்டு, இதுதான் எங்குமிருப்பது என்பது தெரிந்துவிட்டது. எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்திருக்கிற ஒன்றே என்பது தெளிவாகப் புரிந்துவிட்டது.

இனி உண்பதும், உடுத்துவதும், உறங்குவதும், பேசுவதும், சிரிப்பதும் வெறும் நாடகமே என்கிற நினைப்பு தங்கி விட்டது. என்றோ ஒரு நாள் நாடகம் முடிந்து, வாழிய வாழியவே எனப் பாடப்போகிறார்கள் என்று தெள்ளத் தெளிவாகத் தெரிந்து, பார்ப்பதைக் கனவு என்று நினைத்து, அமைதியாக இருக்க முடிந்தது.

எல்லோருக்கும் எளிதில் கிடைக்காதது; பூர்வ ஜென்ம தொடர்ச்சி. ஆனால், மிகப் பெரிய சத்தியத்தோடு வாழும் வாழ்க்கை அது. பரம பக்தர்களும், பாகவதர்களும் வணங்க வேண்டிய தெய்வ சொரூபம் அது. கடவுளைத் தேடுகின்ற விஷயமில்லை; கடவுளைக் கண்டுவிட்ட சந்தோஷம் இல்லை;

கடவுளாகவே மாறிய அற்புதமான சொரூபம் அது!

இந்த இரண்டில் எந்த வழியை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்? தேர்ந்தெடுக்கிற சக்தியெல்லாம் உங்களுக்கு இல்லை. விதி வலியது. விதி எந்தப் பக்கம் இழுத்துப் போகிறதோ, அந்தப் பக்கம்தான் போகவேண்டும். போகின்ற பக்கத்தில் கடவுள் வாழ்க்கையாக, கடவுளைத் தேடுகின்ற வாழ்க்கையாக அமையுமானால், அதுவே மிகப் பெரிய பாக்கியம். அது மாதிரி பாக்கியம், இம்மாதிரியான மகான்களை சந்திக்கும்போது வெகு எளிதில் ஏற்படும்.

இவர்கள் பார்ப்பதற்கு மிக எளிமையாக இருப்பார்கள். வெறும் கோவணத்தோடு உட்கார்ந்துகொண்டிருக்கின்ற பகவான் ஸ்ரீரமண மகரிஷி, பரட்டைத் தலையும், அழுக்குத் துண்டும், இடுப்பு வேட்டியுமாய் அலைகின்ற சேஷாத்திரி சுவாமிகள் இருவரும் தோற்றத்தில் ஒருவரே!

தன்னைச் சுற்றியுள்ளவர் களைக் கடிந்து, கேலி செய்து, விரட்டுவதில் சேஷாத்திரி சுவாமிகள் குறியாக இருப்பார். யாருக்கு உண்மையான தாக்கமும், வலியும் இருக் கிறதோ, யாருக்கு உண்மையான தாகம் இருக்கிறதோ, அவர்கள் மட்டுமே இந்தத் துரத்தலைத் தாண்டி, இந்த மிரட் டலைத் தாண்டி, அவர் அருகே போய் ஒட்டிக்கொள்வார்கள்.

பகவானும் அதே மாதிரி மௌனமாக இருந்து, மற்றவரைச் சோதனைக்கு உள்ளாக்குவார். அந்த மௌனத்தைப் புரிந்துகொண்டு, அந்த மௌனத்தின் மூலம் பகவானிடம் பேச முடிந்தவரே, அவருக்கு அருகில் இருக்க முடியும்.



மற்றபடிக்கு இது வேண்டும், அது வேண்டும், இப்படி இருக்க வேண்டும், அப்படி இருக்க வேண்டும் என்று வேண்டுகோள்களோடு அங்கு போனால், அவர்கள் அதை விரும்பமாட்டார்கள். ஆனால், சாதாரண மக்களுக்குப் பொருள் தேவையாயிற்றே, என்ன செய்வது?

கடைக்குள் நுழைந்து கொத்துக் காசு எடுத்துத் தெருவில் வீசி எறிகிறபோது, கடைக்காரனின் விதி மாற்றப்பட்டு விடுகிறது. வீசியவரைத் தடுத்து, கோபம் கொண்டு அவரை விரட்ட முற்பட்டால், நஷ்டம் ஏற்படுகிறது. வீசியெறியப்பட்டது தனக்கு வேண்டாத வினைகள்தான் என்பதைப் புரிந்துகொண்டவர் ஜெயித்தார்; பைத்தியம் என்று விரட்டியவர் நஷ்டம் அடைந்தார்.

உச்சி வெயிலில், திருவண்ணாமலை வீதியில் சேஷாத்திரி சுவாமிகள் ஓர் எருமையைப் பார்த்துக் கொண்டிருக்கிறார். தன்னை மறந்து நிற்கிறார். 'என்ன பார்த்துக் கொண்டிருக்கிறீர்?' என்று, வழியோடு போகும் அந்தணர் ஒருவர் அவரைப் பார்த்துக் கேட்கிறார்.

'அது என்ன?' - சுவாமிகள் கேட்கிறார்.

'எருமை.'

'அது எருமையா? நீதான் எருமை. அது பரப் பிரம்மமடா, பரப்பிரம்மம்!'

எருமையின் அருகில் சென்று தடவி, தழுவிக் கொள்கிறார் சுவாமிகள். அந்தணர் வாயடைத்துப் போகிறார். சரியான பைத்தியம் என்று நினைத்துக் கொள்கிறார். ஆனால், அது சத்தியப் பிரகாசம். வெளியே பார்க்கத்தான் பைத்தியம்.

'சேஷாத்திரி, இங்கே வா!'

'என்னம்மா?' - மரணப் படுக்கையில் உள்ள அம்மாவின் அருகே அந்த இளைஞர் உட்கார்ந்து, வாஞ்சையோடு கேட்கிறார்.

'திருவண்ணாமலை, திருவண்ணா மலை, திருவண்ணாமலை நினைக்க முக்தி!' - அம்மா மெல்லிய குரலில் கண்களில் நீர் வழியப் பேசுகிறார். அது தான் அவளின் கடைசிப் பேச்சு! திருவண்ணாமலையை நினைத்து முக்தி அடைந்துவிட்டாள். பிள்ளைக்கும் உள்ளுக்குள்ளே கத்தி இறக்கிவிட்டாள்.

அந்த மகா வாக்கியம் அந்த இளைஞர் நெஞ்சில் தைத்துவிட்டது; தங்கிவிட்டது. கல்யாணம், குடும்பம் வேண்டாம் என்று இருந்தவர், ஊரும் வேண்டாம் என்று உதறி, திருவண்ணாமலைக்கு வந்துவிடுகிறார்.

காஞ்சிபுரத்தில் கற்ற பாலாதிரிபுரசுந்தரி மந்திரத்தை காமாட்சி அம்மனின் கோயிலில் சொல்லி... ஆற்றங்கரை, புல்வெளி, மயான பூமி எனப் பல இடங்களில் சொல்லிச் சொல்லி, உள்ளே ஓர் உன்மத்தம் ஏற்பட்டுவிட்டது.

'கல்யாணம் பண்ணி வை, சரியாயிடும்!' - ஊர் அவர் குடும்பத்துக்கு உபதேசித்தது. 'வேணாம்!' என அவர் தீர்மானமாக மறுத்தார்.

'மயானத்துக்குப் போயிட்டு, அப்படியே வீட்டுக்குள்ளே வரயே, அது தப்பில்லையா?' - உறவுகள் கண்டித்தன.

'சரி, இனிமேல் வரலை!' - அவர் வீடு உதறினார். எவராலும் தடுக்க இயலவில்லை. திருவண்ணா மலையில் முன்னும் பின்னும் அலைந்தார். பிச்சைக்காரன் மாதிரி காட்சியளித்தார்.

'பாதாள லிங்கேஸ்வரர் கருவறையில் ஒரு பிள்ளை நினைவில்லாமல் உட்கார்ந்திருக்கு. பொறுக்கிப் பசங்க அதும் மேல கல்லு எறியறாங்க!' - யாரோ குரல் கொடுக்க, சீறி எழுந்தார்.

''டேய்..!'' | கோயில் அதிர்கிறது. பூப்பந்து போல பிள்ளையைத் தூக்கி வருகிறார். உடம்பெல்லாம் எறும்புகள், கரையான் அரிப்பு; ரத்தமும், சீழும் வழிகிறது. ஆனால், அந்தப் பிள்ளைக்கு எதுவும் தெரியவில்லை. உள்ளே வெகு ஆழத்தில் அமர்ந்து கிடக்கிறது.

சேஷாத்திரி சுவாமிகளுக்கு அது என்ன என்று புரிகிறது. எடுத்துச் சுத்தம் செய்து, வேறு இடம் மாற்றுகிறார். பிள்ளை தொடர்ந்து தவம் செய்கிறது. அந்தப் பிள்ளை பகவான் ஸ்ரீரமண மகரிஷி.

'அன்றைக்கு அப்படிக் காப்பாற்றி னேனே, இப்படி உதவி செய்தேனே' என்று என்றைக்கும், எந்த இடத்திலும் சுவாமிகள் சொல்லிக் கொண்டது இல்லை.

''ஓய்! முதலியார் மலையில் இருப்ப வருக்குப் பத்தாயிரம் ரூபாய் சம்பளம். எனக்கு ஆயிரம் ரூபாய் சம்பளம். நீ நூறு ரூபாயாவது சம்பாதிக்க வேண்டாமா?'' - அதட்டுகிறார்.

இது ரூபாய் அல்ல; இது சம்பளம் அல்ல. மலையில் இருக்கின்ற பகவான் ஸ்ரீரமண மகரிஷியை எடைபோட்டு வைத்திருக்கின்ற கனிவு. தன்னைவிடப் பத்து மடங்கு அதிகம் என்கிற தெளிவு. 'நூறு ரூபாயாவது சம்பாதிக்க வேண்டாமா' என்று, மகான்களைச் சுட்டிக்காட்டி, தன்னை அண்டியவரை வழிப்படுத்தும் அன்பு.

பகவான் ரமண மகரிஷி, சிவசொரூபம். மிக அமைதியாக இருக்கவேண்டும். சுற்றுப்புறம் எந்தச் சந்தடியும் இல்லாது இருக்க வேண்டும். தனக்கு அருகே இருப்பவர்கூட, தேவையற்று நடமாடாதிருக்க வேண்டும். செய்கின்ற காரியத்தில் மிகப் பெரிய கவனமும் சிதறாத பாங்கும் இருக்க வேண்டும்.

ஆனால், சேஷாத்திரி சுவாமிகள் சக்தி ரூபம். ஆனந்தக் களி நடனம். உரத்த சிரிப்பு. 'அடடா! என் மீது எத்தனை அன்பு!' எனத் தனக்குச் சிறிய உதவி செய்தவரையும் கட்டித் தழுவிக் கொள்கிற குணம். 'கிட்டே வராதேன்னு சொல்லியிருக்கேனில்லையா? மீறி வந்தா, பிச்சுப்புடுவேன் படவா!' என்று எகிறி, தன்னைத் தேடி வரும் அன்பர்களை விரட்டுகிற ஆக்ரோஷம். 'என்கிட்ட ஏன் வர்றே? போ, போ... மேலே போ! மேலே ஒருத்தன் இருக்கான். அவன் பார்த்துக்குவான், போ!' என்று திருவண்ணாமலை விருபாக்ஷி குகையைச் சுட்டிக்காட்டுகிற குதூகலம்.

இரண்டு பேருக்கும் சாதி, மதம் வேறுபாடில்லை. இரண்டு பேருமே காவியங்கள் செய்வதில் வல்லவர்கள்; வடமொழியில் தேர்ந்து தெளிந்தவர்கள்; பிறர் வியக்கும் வண்ணம் தத்துவங்கள் பேச வல்லவர்கள்; அதே நேரம் அதை வெளிக்காட்டிக் கொள்ளாத சுபாவம் உள்ளவர்கள். இருப்பினும்... ஒன்று சிவம்; மற்றொன்று சக்தி. ஒன்று சிவன் கை உடுக்கை; இன்னொன்று, சிரசின் மேல் பொங்கும் கங்கை. அது ஒரு வழி; இது ஒரு வழி!

சேஷாத்திரி ஸ்வாமிகள் ஒரு மடத்தில் போடப்பட்ட சாப்பாட்டை நாலு பக்கமும் இரைத்தார். சாப்பாடு போட்டவர் அருகே வந்து, 'இப்படிப் போடாதீங்க. யாசகம் வாங்கிக் கொடுக்கிற இந்த உணவை இப்படி வீசலாமா?' என்று கேட்டார். 'அப்படியா, இனி இரைக்காமல் உண்கிறேன், பார்! ஒரு பருக்கைகூட நகராது' என்று மிகச் சமர்த்தாக உண்டார். அவரால் இப்படியும் இருக்க முடியும்; அப்படியும் இருக்க முடியும்.

1914-ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட ஒரு மாதம் சேஷாத்திரி சுவாமிகள், பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் விருபாக்ஷி குகைக்குப் போய் உணவு உண்பதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அங்கேயும் சோறு உண்ணும்போது, நாலாப்புறமும் சோற்றை இரைத்தார். பகவானின் அன்பர் கந்தசாமி. 'இதோ பாருங்கள், இப்படி சோற்றை இரைத்தால், இனிமேல் உங்களுக்கு உணவு தரமாட்டேன்' என்று கண்டித்தார். அதிலிருந்து சேஷாத்திரி சுவாமிகள் அங்கு உணவுக்குச் செல்லவில்லை. சேஷாத்திரி சுவாமியிடம் அப்படிப் பேசியது தவறா சரியா என்று பேச்சு வந்தது. அப்போது, 'பின்னே, இப்படி உணவை வீணடித்தால் என்ன செய்வது? அதனால்தான் கண்டித்தோம்' என்று விருபாக்ஷி குகையில் இருந்த பகவானின் அன்பர்கள் சொன்னார்கள்.

இது சேஷாத்திரி சுவாமிகளின் காதுக்கு எட்டியது. தனது நடத்தை பகவானுக்கு எதிரானதாக இருக்குமோ, அவரை அலட்சியப்படுத்தியதாக நினைத்துவிடுவாரோ என்று பயந்து, ''நான் செய்தது சரியே! ஒருவன் இலையில் இருக்கும் சோற்றை முழுவதும் சாப்பிடக்கூடாது. சுற்றிலும் கண்ணுக்குத் தெரிந்தும் தெரியாமலும் பல ஜீவன்கள் உள்ளன. சூட்சும சக்திகள் உள்ளன. அவர்கள் பசியோடு காத்திருப்பார்கள். அவர்களுக்கும் உணவு வேண்டும். இது பல நூல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. இப்படிச் சாப்பிடுவது சரி என்றும் விவரிக்கப்பட்டிருக்கிறது'' என்று தெளிவுபடுத்தினார்.

சுப்பிரமணி சாஸ்திரி என்ற நண்பர் ஆழ்ந்த தியானத்துக்காக, பூரணாதி லேகியம் எனும் லேகியத்தைச் சாப்பிடுவது வழக்கம். அதில் கஞ்சா கலந்திருக்கும். இது, மனதை அடக்குவதற்குப் பதிலாக, சில தருணத்தில் கிளறி விட்டுவிடும். உண்ணுபவர் பேரவஸ்தைப்படுவார். உளறுவார். தான் உளறுகிறோம் என்று தெரிந்து வருத்தப்படுவார். ஆனால், உளறலைத் தடுக்க முடியாமல் தவிப்பார். ஒருமுறை அப்படித் தவிப்பில் இருந்த சுப்பிரமணி சாஸ்திரி, சேஷாத்திரி சுவாமிகளின் காலில் விழுந்தார். காப்பாற்றும்படி கெஞ்சினார். ''ஏற்கெனவே, இந்த மருந்தைச் சாப்பிடாதே என்று பலமுறை கூறினேன். ஆனால், நீ மீண்டும் அதை எடுத்துக்கொண்டு அவஸ்தைப் படுகிறாய்'' என்றார்.

உண்மையில் சேஷாத்திரி சுவாமிகள், சுப்பிரமணி சாஸ்திரி யிடம் இப்படிச் சொல்லியதே இல்லை. பகவான் ரமண மகரிஷி தான் இப்படிக் கண்டித்திருக்கிறார். அது சேஷாத்திரி சுவாமிகளுக்குத் தெரியாது. ஆனால், இந்த

வார்த்தைகளைச் சொன்னதன் மூலம் பகவான் ஸ்ரீரமணரும் தானும் ஒன்றே என்பதை மறைமுகமாக அன்பர்களுக்கு உணர்த்தினார் சேஷாத்திரி சுவாமிகள்.



1921-ஆம் ஆண்டு, ஒரு குளிர் காலத்தில், அவருடைய அன்பர்கள் பலர் அவருக்கு ஆனந்தமாக அபிஷேகம் செய்தார்கள். அவர் குளிக்காமல், சடையோடு, உடம்பில் சில இடங்களில் நமைச்சலோடு அவஸ்தைப் பட்டதை அறிந்து, இதைச் செய்ய எண்ணினார்கள். ஆனால், பசியாலும் தவத்தாலும் மெலிந்திருந்த உடம்புக்கு, இந்த அபிஷேகம் தாங்கவில்லை. கடும் ஜுரம் கண்டது. ஜுரத்தோடு அண்ணாமலை சந்நிதி போய், கை கூப்பி வணங்கி விட்டு, மறுபடி வந்து, ஒருவரது வீட்டுத் திண்ணையில் படுத்தவர், அப்படியே முக்தி அடைந்துவிட்டார்.

சேஷாத்திரி சுவாமிகள் இறைவனுடன் இரண்டறக் கலந்து விட்டார் எனும் தகவல் திருவண்ணாமலையில் உள்ள எல்லோருக்கும் தெரிந்தது.

ரமணாஸ்ரமத்துக்குக் கிழக்குப் பக்கம், சேஷாத்திரி சுவாமிகளுக்கு திருச்சமாதி வைக்கப்பட்டது. அந்தச் சமாதி வைபவத்தில், ஸ்ரீரமண மகரிஷி அருகில் இருந்து கவனித்துக் கொண்டார். ஒரு மகானின் இளம் பிராயத்தில், அவருக்கு நேர இருந்த பல துன்பங்களில் இருந்து காப்பாற்றி, அவருக்கு உறுதுணையாக சிம்மம் போலிருந்த சேஷாத்திரி சுவாமிகளை, ரமண சரித்திரம் படிக்கும் போது மறக்க இயலாது.

தாய் தன் பிள்ளையைத் துன்பத்தில் இருந்து நீக்கி, சுகப்படுத்தி, அதன் போக்கில் விட்டு, எப்படி மலர்விப்பாளோ, அப்படி சேஷாத்திரி சுவாமிகள் நடந்துகொண்டார். குழந்தையின் ஞான சொரூபத்தைக் கண்டு வியந்தார். மற்றவர்களுக்கும் எடுத்துச் சொன்னார். செய்தேன் என்ற கர்வத்தை எவருக்கும் வெளிக்காட்டது மறைந்தார்.

அம்மையார் ஒருவர், சேஷாத்திரி சுவாமிகள் பற்றி அறிந்து, அவரை வணங்கவேண்டும் என ஆவல் கொண்டார். பகவான் ஸ்ரீரமணரைக் காணச் செல்லும்போதெல்லாம் சுவாமியைத் தேடினார். காணக் கிடைக்கவில்லை. திடீரென ஒருநாள், சேஷாத்திரி சுவாமிகளை அவர் பார்க்க நேரிட்டது. மிகுந்த பணிவுடன், அவர் காலில் விழுந்து வணங்கி, ''உங்களைத் தரிசிக்க இத்தனை நாளாயிற்று'' என்று ஏங்கிக் கை கூப்ப, ''இங்கே என்றால் என்ன, அங்கே என்றால் என்ன... இரண்டும் ஒன்றுதான்!'' என்றார் சுவாமி.

ஒரு ஞானியே, இன்னொரு ஞானியை அடையாளம் காண முடியும்.

வேதாந்த நூலான 'கைவல்லிய நவநீதம்' என்ற புத்தகம், 'உண்மையான ஞானி என்பவர் யார்?' என்று கேள்வி கேட்கிறது. அதற்கு அந்த புத்தகமே பதிலும் சொல்கிறது. எவர் ஒருவர் எல்லாக் காலத்திலும் நடுநிலையில் நிற்கிறாரோ, அவரே ஞானி! நடுநிலையில் நிற்றல் என்றால் என்ன? தாமரை இலைத் தண்ணீர் போல, இந்த உலகத்துடன் ஒட்டியும் ஒட்டாமலும் வாழ்பவர். தன்னை ஒரு சாதாரண மனிதர் என்று வெளிக்காட்டிக் கொள்வார். தன்னுடைய பண்டிதத் திறமையை ஒருபோதும் வெளியே பறைசாற்ற மாட்டார். எந்நேரமும் பலருக்கு உபகாரமாகவே இருப்பார்.

இந்த ஞானிகள் தவம் செய்பவர்களாக இருப்பார்கள்; அல்லது, வாணிபம் செய்பவர்களாக இருப்பார்கள்; உலகத்தை ஆளும் மன்னர்களாக இருப்பார்கள்; இரந்து உண்ணும் பிச்சைக்காரர்களாக இருப்பார்கள். கடந்த காலத்தைப் பற்றி ஒருபோதும் நினைக்கமாட்டார்கள். எதிர்காலம் எப்படி இருக்கும் என்று சிந்திக்க மாட்டார்கள். இடையறாது நிகழ்காலத்திலேயே இருப்பார்கள். உணவு ருசியற்று, எந்த உணவு எதிரே வைக்கப்பட்டதோ, அதை மௌனமாக உண்பார்கள். வானம் கீழே விழினும், சூரியன் நிலவாக மாறினாலும், பிணம் எழுந்து வந்தாலும், அதைப் புதுமையாகப் பார்க்கமாட்டார்கள். நன்மைக்கும் தீமைக்கும் நடுவே சாட்சியாக இருப்பார்கள்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷியும் இப்படித்தான் ஞானியாக, ஜீவன்முக்தராக வாழ்ந்திருந்தார். இவை பல்வேறு நிகழ்ச்சிகளாக வெளிப்படுகின்றன. ஒருவரது மோசமான குணம், அடுத்தவருடைய வாழ்வைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வது. தன்னால் பிறருக்கு என்ன உபயோகம் என்று பார்க்காமல், பிறரால் தனக்கு என்ன உபயோகம் என்று இடையறாது சிந்திப்பது. இப்படி யோசிப்பதில் தன்னுடைய யோக்கியதை என்ன என்பது மறந்துபோகும். தன் யோக்கியதையை வளர்த்துக் கொள்வது என்பது குறைந்து போகும். அப்படிப்பட்ட மனம், இடையறாத தந்திரத்தில் ஈடுபடும். தந்திரத்தில் ஈடுபட்ட மனம், அமைதியாக இருக்காது. அமைதியாக இல்லாத மனம், தன் குற்ற உணர்ச்சியை மறைக்க, ஆரவாரமாகப் பேச ஆரம்பிக்கும். ஆரவாரமாகப் பேசுவது மிக எளிதாக அடுத்தவருக்குப் புரிந்துபோய், அது மிகப் பெரிய ஆபாசமாக காட்சியளிக்கும். தான் ஆபாசமாகக் காட்சியளிக்கிறோம் என்பதுகூடத் தெரியாமல், தொடர்ந்து அவர்கள் ஆரவாரமாக இருப்பார்கள்.



மாமனார் வாங்கித் தந்த மோட்டர் சைக்கிளைத் தானே சிரமப்பட்டு வாங்கினது போல் நண்பர்களிடையே பறையடித்துக்கொள்வது; அவர்கள் மோட்டர் சைக்கிளைப் பாராட்ட, அதைக் கொண்டாட, மாமனாரிடம் கார் கேட்கலாமே என்று தோன்றும்; கேட்கவும் செய்யும். கேட்கிறபோது கார் கிடைக்கலாம். கூடவே, 'ஏன் இப்படிக் கேவலமாக இருக்கிறான் இவன்' என்ற அவச்சொல்லுக்கும் ஆளாகலாம். அவச்சொல்லுக்கு ஆளாகிறோம் என்பது, அமைதியாக இருந்தால்தான் புரியும். அப்போதுதான் அதில் இருந்து மீள முடியும்.

1908-ஆம் வருடம், பகவான் ஸ்ரீரமணர், விருபாக்ஷி குகையில் வாழ்ந்து வந்தார். அந்த குகைக்கு அருகே, பாலானந்தா என்கிற இன்னொரு சாதுவும் இருந்தார். பாலானந்தாவுக்குப் பல மொழி அறிவுகள் உண்டு. பல நூல்கள் கற்றவர். சாமர்த்தியசாலி. தனக்குப் பலவிதமான சக்திகள் இருப்பதாக, எதிராளியை எளிதில் நம்பச் செய்கிற தந்திரசாலி. முக்காலம் அறியும் ஞானம் இருக்கிறது என்பதை, தன்னைத் தேடி வருபவர்களுக்குச் சொல்லி, அவர்களிடமிருந்து காசோ பொருளோ வாங்கிக் கொள்ளுகிற எண்ணம் உடையவர். அதை மிகப் பெரிய சாமர்த்தியம் என்று கருதிக்கொள்பவர்.

விருபாக்ஷி குகைக்கு பகவான் ரமண மகரிஷி வந்தார். அப்போது அவரை பிராமண சாமி என்றுதான் மக்கள் அறிவார்கள். திருவண்ணாமலைக்கு வந்து, ஆலய தரிசனம் முடித்து, மலைக்கு மேலே பக்தர் கூட்டம் வரும். மலையில் உள்ள சாதுக்களை நமஸ்கரித்துவிட்டு, தங்களால் இயன்ற உணவுகளையும் பணத்தையும் கொடுத்துவிட்டுப் போகும். இதற்காக, அந்த மலையில் வாழ்கின்ற பல சாதுக்கள் ஆவலாகக் காத்திருப்பார்கள். மலையேறி வருபவர்களை மடக்கி, 'இங்கு வா, என்னிடம் வந்து பேசு' என்று வலியப் போய் உட்கார வைப்பார்கள்.

பிராமண சாமி என்று அழைக்கப்பட்ட பகவான் ரமண மகரிஷி வந்த பிறகு, இந்த மாதிரியான சாதுக்களுக்கு வரும் கூட்டம் குறையத் துவங்கியது. தங்களுக்குக் காசு குறைவாக வருகிறதே என்ற வருத்தத்தைவிட, பிராமண சாமிக்கு அதிக வருமானம் வருகிறது என்ற ஆதங்கத்தில் பொசுங்கினார்கள்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷிக்கோ... வரும் பொருட்கள் பற்றியும், பணம் பற்றியும் எந்தச் சிந்தனையும் இல்லை. இந்தப் பற்றற்ற தன்மையையும், அவருடைய ஆழ்ந்த மௌனத்தையும், பாலானந்தா அருமையாக உபயோகப் படுத்திக்கொள்ளத் தீர்மானித்தார். ''உள்ளே இருக்கிற குழந்தை என்னுடைய சிஷ்யன்தான்; அதற்கு வேண்டுவன கொடுங்கள். குழந்தாய், அவர்கள் கொடுப்பதைத் தட்டாதே! நான் சொல்கிறேன், வாங்கிக் கொள்!'' என்று உத்தரவு இடுவதைப்போல அலட்டுவார்.

பகவானுக்கு வந்த பொருள்களைத் தாராளமாகக் கையாளுவார். பகவானுக்கு இந்தச் சாதுவின் பலகீனம் தெரிந்தே இருந்தது. ஆனாலும், அதைப் பற்றிய எந்த விமர்சனமும் இல்லாமல், அதற்கும் தனக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பதுபோல மௌனமாக இருந்து விடுவார். இந்த மௌனத்தை இன்னும் அதிக அளவில் தனக்குச் சாதகமாக உபயோகித்துக்கொள்ளத் தீர்மானம் செய்தார் பாலானந்தா.

'வருபவர்களிடம் உன்னை வைத்து நான் பணம் பண்ணப் போகிறேன். அதனால் உனக்கு ஒரு நஷ்டமும் இல்லை. எனவே, என்னைத் தடுக்காதே! நீ என்னுடைய சீடன்; புரிந்ததா?'' என்று பாலானந்தா சொல்ல... பகவான், சரி என்றும் சொல்லவில்லை; தவறு என்றும் சொல்லவில்லை. அமைதியாக உட்கார்ந்திருந்தார்.

பாலானந்தாவுக்கு இது போதுமானதாக இருந்தது. ஊர் எல்லாம் சுற்றி மலைக்கு வந்து, அங்கே இருப்பவரிடம், 'அடேய் பையா! என் சட்டைப் பையில் இருக்கிற நூறு ரூபாயை எடுத்து, வெளியே வைத்துவிடு. பணத்தை நான் என் கையாலும் தொடுவதில்லை. யாரோ ஒரு அன்பர் கெஞ்சிக் கூத்தாடி, என் பைக்குள் பணத்தைச் சொருகிவிட்டார். என்ன செய்வது!' என்று அலுத்துக் கொள்வார். ஆனால், அந்த பணத்தை டாம்பீகமாகச் செலவழிப்பார். ஒரு இடத்தில், ஒரு விஷயத்தில், வாழ்க்கையில் தந்திரம் நுழைந்தால், அடுத்தடுத்து பல்வேறு விஷயங்களில் அந்தத் தந்திரம் கிளைவிட்டு வளரும். வாழ்வு முழுவதுமே தந்திரமாக மாறிவிடும். தந்திரம் என்பது உண்மைக்குப் புறம்பானதுதானே! இயல்பில்லாத நடிப்புதானே! அந்த நடிப்பு விஸ்வரூபம் எடுக்கத் துவங்கிவிடும்.

தந்திரம் தலைகாட்டிய உடனே, அதைக் கிள்ளி எறிவதுதான் விவேகிகளின் வழக்கம். விவேகமற்றவர் தொடர்ந்து ஆட ஆரம்பிப்பார்; காவிக்கு ஜனங்கள் கொடுக்கிற மரியாதையைக் கெடுத்துக் குட்டிச்சுவராக்குகிற கபட நாடகங்களில் ஈடுபடுவார். மதம் க்ஷீணமடைவதும், இறை நம்பிக்கை பாழ்பட்டு நாத்திகம் வளர்வதும், உண்மையான சாதுக்களையும் மக்கள் சந்தேகிக்கத் துவங்குவதும், இந்த மாதிரி கபடர்களால் ஏற்படும் அபாயங்கள். ஆனால், அதுபற்றி எல்லாம் அவர்கள் கவலைப்படுவதே இல்லை. பாலானந்தாவும் அதைத்தான் செய்தார். விருபாக்ஷி குகை வாசலில் அசுத்தம் செய்தார்.

சுவாமி ஒன்றும் சொல்லவில்லை. மௌனமாக நகர்ந்துவிட்டார். ஆனால், பகவானின் அன்பரான பழனிச்சாமி இதைப் பார்த்துவிட்டு, இடத்தைச் சுத்தம் செய்து, பாலானந்தாவின் உடைமைகளை எல்லாம் தூக்கி வெளியே எறிந்தார். தன்னுடைய பட்டுச் சட்டை, பட்டு வேட்டி எல்லாம் தெருவில் கிடப்பதைப் பார்த்துவிட்டு, பாலானந்தா வாய்க்கு வந்தபடி கத்தினார். ''இதையெல்லாம் நீ பார்த்துண்டிருந்தியா? பழனிச்சாமி மறுபடியும் மேலே வந்தான்னா, அடிச்சுப் பல்லை பேர்த்துப்புடு! வெச்சு வாங்கு வாங்குன்னு வாங்கு'' என்று எகிறினார். ஆனால், இதற்கும் பகவான் பதில் ஒன்றும் சொல்லாமல் மௌனமாக இருக்க, பாலானந்தாவுக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்தது.



'தூ'வென்று பகவானின் முகத்தில் துப்பினார். பிராமண சாமி என்று அழைக்கப்பட்ட பகவான் இந்த அவமரியாதையை மௌனமாக ஏற்றார். அருகே உள்ள அன்பர்களும் பொறுமை காத்தனர். ஆனால், எல்லோராலும் பொறுமையாக இருக்கமுடியுமா? கீழே திருவண்ணா மலையில் வசிக்கும் முத்துசாமி என்பவர் நடந்ததை அறிந்து, விறுவிறுவென்று மலைக்கு மேலே ஏறி, விருபாக்ஷி குகைக்கு வந்து, ''யாரடா அது, எங்கள் சுவாமியின் மீது துப்பியது? நீதானா... நீதானா? என்ன தைரியமடா உனக்கு! எவரும் கேட்பார் இல்லை என்று ஆடுகிறாயா! நீ என்னவெல்லாம் செய்கிறாய் என்று எங்களுக்குத் தெரியாதா!'' என்று சொல்லி, பாலானந்தாவின் கையை முறுக்கி, பளீர் பளீர் என்று அடித்தார். மற்றவர்களும் சீறி எழுந்தனர்.

எதிர்ப்பு வலுப்பது கண்டு, பாலானந்தா மலையைவிட்டு இறங்கி, 'திருவண்ணாமலை நான் இருக்கத் தகுந்த இடம் அல்ல' என்று உரக்கச் சொல்லிவிட்டு, ரயில் ஏறினார். அங்கேயும் கெட்ட புத்தி விடவில்லை. ஏதோ ஒரு தம்பதியிடம் வம்பாகப் பேச, அவர்களும் நையப் புடைத்தனர். அந்த அடி, அந்த அவமானம், பலமாக இருந்ததுபோலும்! தளர்ந்து போனவராக மீண்டும் மலைக்கு வந்து, 'என்ன நடந்ததுன்னு தெரியுமா' என்று பகவானிடம் அழாக்


குறையாகக் கேட்டார். பகவான் ஒரே வார்த்தையில், 'தெரியும்' என்று சொன்னார்.

''இந்தப் படிப்பினை எனக்குத் தேவை. உன் மீது துப்பியது தப்பு. அதனால்தான் இந்த வேதனை. முத்துசாமிக்கு சரியாக அடிக்கத் தெரியவில்லை. கீழே பயணம் செய்த மனிதன் நன்கு அடிக்கத் தெரிந்தவன் போலிருக்கு. கண்டு கண்டாக வீங்கிவிட்டது. நீ பதிலுக்கு என் மீது துப்பிவிடு!' என்று பிராயச்சித்தம் செய்வதுபோல பகவானிடம் பேசினார். விருப்பு வெறுப்பு இல்லாத நடுநிலையை அடைந்த பகவான் அப்போதும் மௌனமாக இருந்தார். வாங்கின அடியால் பாலானந்தாவின் மனம் சற்று தளர்வடைந்ததே தவிர, அந்தத் தளர்வினால் மன்னிப்பு கேட்க முடிந்ததே தவிர, உண்மையில் அவர் மனம் மாறவில்லை. மறுபடியும் அகங்காரமும் அலட்டுதலும் தலைவிரித்து ஆடின.

பகவானைத் தரிசிக்க வரும் பெரியவர்களையும் அவர் அவமரியாதையாக நடத்தினார். பெரியவர்கள் வந்து, மௌனமாக அமர்ந்திருக்கும்போது, இவர் நடுவே புகுந்து உட்கார்ந்து கொள்வார். 'குழந்தாய்! இப்போது உனக்கு நிர்விகல்ப சமாதி சொல்லித் தருகிறேன். வா, என் கைகளைப் பிடித்துக்கொள், என் கண்களையே பார்!' என்று நாடகம் நடத்துவார். 'ஒரு முக்கியமான விஷயம் நடந்துகொண்டு இருக்கிறது. பெரியவர்கள் இருக்குமிடத்தில் மற்றவர்கள் யாரும் இருக்கக்கூடாது, கிளம் புங்கள்!' என்று மற்றவர்களை அதட்டுவார். 'என் கண்களைப் பார்! விடாதே! தொடர்ந்து என் கண்களையே பார்த்துக்கொண்டு இரு. ஏன் மூச்சைப் பிடிக்கிறாய்? மூச்சை விட்டுவிடு. என் கண்களைப் பார்' என்று பல்வேறு விதமான உத்தரவுகள் போடுவார். அப்படி ஒருமுறை, வந்தவரின் கண்களைப் பார்த்துக்கொண்டே இருந்த பாலானந்தா சாய்ந்து உறங்கிவிட்டார். பொய்மை, வெகு நேரம் தாக்குப்பிடிக்காது; அலட்டல், வெகு சீக்கிரம் அயர்ச்சியைக் கொடுக்கும்.

பாலானந்தாவின் தொந்தரவு இடையறாது இருந்தது. 'இன்றைக்கு இவர் என்ன ஆட்டம் ஆடப் போகிறாரோ!' எனும் கவலை, சுற்றியுள்ள அன்பர்களுக்கு இருந்தது. ஆனால், பகவான் கற்சிலையென உட்கார்ந்திருந்தார்.

விருபாக்ஷி குகையை விட்டுவிட்டு, இன்னும் மலைக்கு மேலே போய் விடலாமா என யோசித்தார். அப்போது, யோகானந்தா என்கிற சாது, பகவானை முற்றிலும் அறிந்தவர், அங்கு வந்ததால், அப்படிப் போகும் எண்ணத்தை ஒதுக்கிவிட்டார். ஆனால், பாலானந்தாவை பகவானின் அன்பர்கள் விதம் விதமாக எதிர்த்தனர்; அவமரியாதை செய்தனர்; 'பல் துலக்க வேப்பங்குச்சி கொண்டு வா' என்று ஒருவரை ஏவ, அவர் ஒரு பெரிய கிளையை உடைத்து வந்தார். 'என்ன இது' என்று பாலானந்தா அதட்ட, 'நீங்கள் பெரியவர், உங்களுக்குப் பெரிய குச்சிதானே தேவை!' என்று கிளையைத் தூக்கித் தரையில் போட்டார்.




அதேபோல, புகை பிடிக்க நெருப்பு கொண்டுவரும்படி ஒருவரை ஏவ, அவர் பெரிய தீவட்டியைக் கொண்டு வந்தார். 'எதைப் பற்ற வைக்க வேண்டும்' என்று கேட்க, பாலானந்தாவுக்கு மிரட்சி ஏற்பட்டது. பகவான் ஸ்ரீரமண மகரிஷி அமைதியாக இருந்தாலும், அவருடைய அன்பர்கள் அமைதியாக இருக்கமாட்டார்கள்; நீண்ட

நாள் பொறுமையாக இருக்கமாட்டார்கள் என்று தெரிந்தது. 'மலையை விட்டுப் போறேன். என் சக்தி இங்கிருந்து போயிடுச்சுன்னா, நீ வெறும் ஆள்!' என்று பகவானை பயமுறுத்திவிட்டுக் கீழே இறங்கினார். பகவானுக்கு சாபம் கொடுத்ததாக, திருவண்ணாமலையில் உள்ள ஒரு கடைக்காரரிடம் பெருமை யாகச் சொல்லிக் கொண்டார். அந்தக் கடைக்காரர் பகவானுடைய அன்பர். அவர் இதைக் கேட்டுக் கொண்டு சும்மா இருப்பாரா? பாலானந்தாவின் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்.

எல்லோராலும் நேசிக்கப்படுகிற பகவானுக்கு எதிராக தன்னால் ஒன்றும் செய்ய முடியாததை நினைத்து, அவர் திருவண்ணா மலையை விட்டுவிட்டு, வேறு ஒரு மலையில் நகர்ந்தார். பிறகு, அவர் திருவண்ணாமலைக்குத் திரும்பவே இல்லை.

இன்னொரு சாது, மலையில் ஒரு வசதியான இடத்தைத் தேர்ந்தெடுத்து, அங்கே உட்கார்ந்துகொண்டு இருந்தார். தன் இடத்துக்குப் பக்கத்தில் வேறு எவரேனும் வந்தால், தந்திரம் செய்து அவரை வெளியேற்றிவிடுவார்; பயந்து ஓடச் செய்துவிடுவார். விருபாக்ஷி குகைக்கு பகவான் வந்ததும், அவருக்கு பிராபல்யம் அதிகரித்ததும், இவருக்கு எரிச்சல் உண்டு பண்ணின. தன்னுடைய இடத்துக்கு அருகே இல்லாது போனாலும், தன்னைவிடப் பிரபலமாகி விட்டார் என்பதாலேயே, அவரை உடனே அகற்றக் கருதி, வழக்கமாக மற்ற சாதுக்களை பயமுறுத்திய விதமாகவே, இரவில் மலையுச்சிக்குப் போய், அங்கிருந்து கற்களை உருட்டி, கலவரப்படுத்தினார். அப்படி உருட்டப்பட்ட கற்கள், பகவானுக்கு அருகே வராமல், விலகி ஓடின. இப்படி மலையிலிருந்து கற்கள் உருட்டுவது தினமும் தொடர்ந்தது. ஒருநாள் பகவான், பின்னாலே ரகசியமாகப் போய், அவர் கற்கள் உருட்டும்போது பார்த்துவிட்டார். அந்தச் சாதுவுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. 'கண்டுபிடித்து விட்டீரா?' என்று பேய்ச் சிரிப்பு சிரித்து, 'சும்மா ஒரு விளையாட்டுக்குச் செய்தேன்' என்றார். பகவான் அதைப் பொருட்படுத்தவில்லை. மௌனமாகத் திரும்பி தன் இடத்துக்கு வந்துவிட்டார். பிறகு அந்த சாது அம்மாதிரியான விஷயங்களில் ஈடுபடவில்லை.

இன்னொருவர், உபநிஷதத்தில் தேர்ந்தவர். மலையில் வசித்தவர். திடீரென வெளியூர்களுக்குச் சென்று, சில நாட்கள் கழித்துத் திரும்ப வந்து, பகவானின் எதிரே உட்கார்ந்து, ''உனக்கு தத்தாத்ரேய மந்திரத்தை உபதேசிக்கிறேன்'' என்று வற்புறுத்தினார். பகவான் பதில் சொல்லவில்லை. ''சிறிய மந்திரம்தான்; குறைந்த அக்ஷரம்தான்; நான் சொல்லித்தருகிறேன்'' என்று மீண்டும் நச்சரிக்க, பகவான் வேண்டாம் என்று மறுத்தார். ''உனக்கு தத்தாத்ரேய மந்திரம் உபதேசிக்கும்படி சிவபெருமானே என்னிடம் சொல்லியனுப் பினார். அதனால், மறுக்காமல் வாங்கிக் கொள்'' என்று மறுபடியும் அதட்டினார் அவர்.



''உங்களிடம் சொன்ன சிவபெருமான், என்னிடம் வந்து இந்த மந்திரத்தைக் கற்றுக் கொள் என்று சொன்னால், அப்போது கற்றுக் கொள்கிறேன்'' என்று பகவான் சொல்ல, அந்தச் சாதுவுக்குக் கோபம் வந்துவிட்டது. மலைக்கு வருவோரிடம் எல்லாம், ''அந்த பிராமண சாமியிடம் போகாதீர்கள்; அவருக்கு ஒன்றும் தெரியாது. அவரிடம் போவதால் எந்தப் புண்ணியமும் இல்லை; அவரிடம் எந்த ஞானமும் இல்லை'' என்று தூற்றத் தொடங்கினார்.

ஒருமுறை, திருவண்ணாமலையில் உள்ள வாழைத்தோட்டத்தில் அவர் கண்மூடி உட்கார்ந்துகொண்டிருந்தபோது, திடீரென்று அவர் மனதுக்குள் பிராமண சாமி தோன்றி, 'மோசம் போகாதீர்கள்' என்று எச்சரித்தார். அவருக்கு தூக்கிவாரிப்போட்டது. கனவா நனவா என்று தெரியாமல் விழித்தார். ஓடிப்போய் பகவானிடம், 'இம்மாதிரி தனக்கு ஏற்பட்டது' என்று சொன்னார். ''அந்த மாதிரியான சித்து வேலைகள் எதுவும் நான் செய்வதில்லை. இது

நான் செய்தது அல்ல; இது உங்களின் மனத் தோற்றம்!'' என்று பிராமண சாமி சொல்ல, சாது சமாதானமானார். ஆனால், ஸ்ரீரமண மகரிஷிக்கு 'பிராமண சாமி' என்று விலாசமிட்டு வரும் கடிதங்களை, தானே வாங்கிப் பிரித்துப் படிப்பார்; பதிலும் எழுதுவார். கேட்டால், 'நானும் மலைமேல் இருக்கிற பிராமண சாமிதானே?' என்று கேலியாகப் பதில் சொல்வார். இதையும் பகவான் ஸ்ரீரமண மகரிஷி பொருட்படுத்தவில்லை.


குகை வாசலில் அசுத்தம் செய்தபோதும், முகத்தில் எச்சில் துப்பியபோதும், கடுமையான சொற்களைப் பலர் முன்பு வாரி இரைத்தபோதும், 'இவன் என் சிஷ்யன்' என்று அகங்காரமாகப் பேசிய போதும், கற்பாறைகளை உருட்டிய போதும், தத்தாத்ரேய மந்திரத்தை உபதேசிக்கிறேன் என்று வற்புறுத்தி வம்புக்கு இழுத்த போதும் எந்தவித முகச்சுளிப்பும் இல்லாமல், எந்த எதிர்ப்பும் இல்லாமல், அவர்களை மிக நிதானமாக பகவான் விலக்கினார்.

அந்த சாதுக்கள் இப்போது எங்கே? என்ன ஆனார்கள்? அவர்களைப் பற்றி உலகத்துக்கு என்ன தெரியும்? அவர்களின் தலைமுறைகளின் வழித் தோன்றல்கள் என்ன ஆனார்கள்? ஆனால், பகவான் ஸ்ரீரமண மகரிஷியை உலகம் வெகு விரைவில் கண்டுகொண்டது. உலகம் முழுவதும் அவர் புகழ் பரவியது. அவர் சொன்ன அற்புதமான தத்துவத்தை உள்வாங்கிக்கொண்டு, கடைத்தேற முயற்சித்தது. சத்தியம் ஒருபோதும் மரணமடைவதில்லை; ஒருபோதும் ஒளி குறைவதில்லை; 'நான்' என்ற மமதையை முற்றிலும் துறந்தவரை, எந்த வேதனையும் எதுவும் செய்யாது; வேதனைக்கு ஆட்படுத் தியவர்கள்தான் வெந்து மடிகின்றனர்; விதவிதமாய் வேதனைப்படுகின்றனர்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி வெறும் உபதேசம் செய்பவர் அல்ல; தான் சொன்னது என்னவோ, அதேபோல் வாழ்ந்து காட்டியவர்; நடுநிலையில் நின்றவர்; விருப்பு வெறுப்பு அற்றவர்; மனிதர்களால் இம்மாதிரி அமைதியாய், அடக்கமாய், ஆணவமின்றி வாழ இயலும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் இருந்தவர். ஸ்ரீரமணரை ஆழ்ந்து படிக்கப் படிக்க மனம் பக்குவப்படுவது நிச்சயம்.

தன்னை அறிந்த ஞானியர்கள், எல்லோருக்கும் பொதுவானவர்கள். பிடித்தவரோடு மட்டுமே பேசுவது, பணக் காரர்களோடு மட்டுமே உறவாடுவது என்பது அவர்களிடம் இல்லை. எந்த பிரிவினையுமின்றி, எல்லோரிடமும் அவர்கள் ஒரே விதமான பிரியத்தை உடையவர்கள்.

விருபாக்ஷி குகையிலிருந்து மேலே உள்ள மாமரத்து குகைப் பக்கம் போய் விறகு பொறுக்கி வரும் பெண்கள், கீழே இறங்கும்போது, விறகுச் சுமையை கீழே போட்டுவிட்டு, பகவானைப் பார்த்துக் கையெடுத்துக் கும்பிடுவார்கள்; விழுந்து வணங்குவார்கள். முட்கள் கிழித்து, வெயிலால் கறுத்துத் தடித்த மேனியில் வலியும் அரிப்பும் இருக்கும். பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் பார்த்து, 'சுவாமி! முதுகுல கொஞ்சம் தண்ணி ஊத்துங்க சாமி' என்று சொல்வார்கள். பின்பு, தாகம் தீர தண்ணீர் அருந்திவிட்டு, அங்கே சற்று நேரம் உட்கார்ந்து இளைப்பாறிவிட்டுப் போவார்கள்.



அன்பர் கொண்டு வந்த தானியங்களை ஒரு பானையில் போட்டு, மோர் விட்டுக் கரைத்துக் கஞ்சியாக்கி, அதை அந்தப் பெண்களுக்குக் குவளை குவளையாக பகவான் கொடுப்பார். அமுதம், அமுதம் என்று அந்தப் பசி வேளைக்கு அவர்கள் அதை உண்டுவிட்டு, விடை பெற்றுப் போவார்கள்.

மழையானது வஞ்சனையின்றி எப்படி எல்லா இடத்திலும் பாய்கிறதோ, அதே போல பெரியவர்களது கருணை இன்னார், இனியார் என்று பார்க்காது; உயர்வு, தாழ்வு

பார்க்காது; காசு, பண வித்தியா சங்கள் பார்க்காது; சகலரிடமும் ஒரே விதமாகப் பொழியும்.

உயர்ந்த தத்துவம் பேசுவதும், பாமரர்களுக்கு ஓடி ஓடி உதவுவதும், ஒரே விதமாகவே ஞானியர்களிடம் நடைபெறும். பகவான் ஸ்ரீரமண மகரிஷியிடம் அவ்விதமே அமைந்து இருந்தது. பகவானின் சித்தப்பா நெல்லையப்பர், பகவான் விருபாக்ஷி குகையிலிருக்கும்போது, வந்து ஒருமுறை தரிசித்துவிட்டுப் போனார். பகவான் அவரிடம் ஒன்றும் பேசவில்லை. அவரும் ஒரு நாள் தங்கிவிட்டு, ஊருக்குக் கிளம்பிப் போனார். விருபாக்ஷி குகைக்கு அடிக்கடி வரும் ஓர் இளைஞன், தட்சிணாமூர்த்தி ஸ்லோகத்தைத் தனக்கு விளக்கிச் சொல்லுமாறு, பகவானிடம் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தான். வழக்கமாக பகவான் விருபாக்ஷி குகையின் வாசலைப் பார்த்தபடி அமைதியாக அமர்ந்திருப்பார். ஆனால், அன்று அந்த இளைஞனை எதிரே உட்கார வைத்து, தான் வாசலுக்கு முதுகு காட்டியபடி அமர்ந்து கொண்டிருந்தார். அப்போது, நெல்லையப்பர் மீண்டும் ஒருமுறை பகவானை தரிசிக்க வந்தார்.

ஒன்றுமே பேசாமல் இருக்கும் தன் அண்ணன் மகன், அன்று ஏதோ ஒரு வேதாந்தப் பொருளை விளக்கமாகச் சொல்வதைப் பார்த்து, அவர் பகவானுக்குப் பின்னால் நின்று, அதைச் செவிமடுத்தார். பகவான் ஸ்ரீரமண மகரிஷிக்கு நெல்லையப்பர் வந்தது தெரியவில்லை. அவர் வரும்போது, நான்காவது ஸ்லோகத்தை பகவான் விளக்கிக்கொண்டிருந்தார். தனது அண்ணன் மகன் வேங்கடராமனின் எதிர்காலம் குறித்து கவலைப்பட்டுக் கொண்டிருந்த நெல்லையப்பர், இந்த விளக்கத்தைக் கேட்டதும், பகவான் சிறந்த ஒரு தத்துவச் சுடராக ஜொலிப்பதைப் புரிந்து கொண்டார்.

ஆதிசங்கரரின் தட்சிணாமூர்த்தி ஸ்தோத்தி ரத்துக்கு, பகவான் ஸ்ரீரமண மகரிஷி அளித்த விளக்கம் அற்புதமானது. தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்துக்கு முன்னுரை போன்ற அவதாரிகையை அவர் எழுதியிருக்கிறார்.

'உலக சிருஷ்டிகர்த்தரான பிரம்மதேவரின் மானசீக புத்திரர்களான சனகர், சனந்தனர், சனத்சுஜாதர், சனத்குமாரர் எனும் நால்வரும், சகசிஷ்யாதி காரியங்களுக்காக தாம் பிறப்பிக்கப்பட்டமையைப் பிதாவால் கேட்டு, அதில் விரக்தியுற்றவராய், உபசாந்தியை நாடி, அதனைத் தெளிவிப்பாரைத் தேடி வர... அதிதீத பக்குவர்களின் பொருட்டு, பரம காருணிகளான சாட்சாத் பரமேஸ்வரன், ஆலின் கீழ் தட்சிணாமூர்த்தமாக, மௌனமாய், தன்னிலையிற் சின்முத்திரையோடு இருக்கக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் கவரப்பட்டவர்களாய், அவர் அருகில் உண்மை நிலையில் அமர்ந்தனர்.

இந்த மௌனமாம் தன்னிலை உண்மையை உணரும் சக்தியில்லா உத்தம அதிகாரிகட்குத் தடை யாய்க் காணப்படும் உலகமாய் காண்பானாய், காட்டும் ஒளியாய், விரித்தொடுங்கும் சக்தி தன்னை யன்றி, இன்மையின் எல்லாம் தன்மயம் என்னும் தர்ம தத்துவத்தைத் தொகுத்து, இந்த ஸ்தோத்திரத்தால், ஆச்சரிய சங்கரர் அறிவிக்கலாயினர்!' - இது பகவான் ரமணருடைய முன்னுரை.

இது என்ன சொல்கிறது? பிரம்மதேவரின் மானசீக புத்திரர்களான சனகர், சனந்தனர், சனத்சுஜாதர், சனத்குமார் நால்வரும், தாங்கள் இந்த உலகில் படைக்கப்பட்டது உலகாயத காரியங்களுக்காகத்தான் என்று தங்கள் தந்தை சொல்ல, அதில் நம்பிக்கையில்லாமல், விரக்தியுற்று, உண்மை என்ன என்று தேடி, மனம் சாந்தி அடைவதற்காக, யார் நமக்குத் சொல்லித் தருவார்கள் என்ற எண்ணத்தோடு அலைந்துகொண்டிருந்தபோது, சாட்சாத் பரமேஸ்வரனே, தன்னைத் தேடி வருகின்ற இந்தத் தீவிரமான மனிதர் களின் பொருட்டு, ஆலமரத்தின் கீழ், சின்முத்திரையோடு அமர்ந்திருந்தார். அவரைப் பார்த்ததும், காந்தம் கண்ட இரும்பு போல, அவருக்கு அருகே போய், அவரையே பார்த்தபடி, அந்த நால்வரும் அமர்ந்தார்கள்.

தட்சிணாமூர்த்தியின் மௌனம் அவர்களைத் தாக்கி, அவர்களுக்குள்ளும் புகுந்து, அவர்களையும் மௌனமாக இருக்க வைத்தது. எது உலகம்? யார் பார்ப்பது? பார்ப்பதற்கு உண்டான சக்தி எங்கிருந்து வந்தது? இது எல்லாம் தன்மயம் என்னும் தத்துவம். தன்னுடைய ஆன்மப் பேரொளியே உலகமாக, மற்ற எல்லா விஷயங்களுமாக, பார்ப்பவனாக, பார்ப்பதற்குண்டான சக்தியாக இருக்கிறது என்பதைச் சொல்லாமல் சொல்லி உணர்த்தினார்.

நெல்லையப்பர் வந்தபோது, பகவான் சொன்ன நாலாவது பாடல் என்ன? 'எவனது உண்மைப் பிரகாசமே, பொய்யாய் தோன்றும் புலன்களில் விளங்குகிறதோ, எவன் தன்னை அடுத்தவர்களைத் தத்துவமசி என்னும் வேத வாக்கால் நேராக அறிவிக்கின்றானோ, எவனைப் பிரத்யட்சமாகக் கண்டால், இந்தச் சம்சார சாகரத்தில் படுவதில்லையோ, தவத்தினரை அடையும் அந்தக் குரு தட்சிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.' இது பகவானின் மொழி பெயர்ப்பு.

என்ன சொல்கிறார் இங்கே? தன் மனதிலே இருக்கின்ற உண்மை பிரகாசம், அவனைச் சுற்றியுள்ள புலன்களில்கூட வந்து விழும். அந்த இடம், அவனைச் சுற்றியுள்ள மனிதர்கள், அவனைச் சுற்றியுள்ள பொருள் கள் எல்லாமுமே அந்த உண்மைப் பிரகாசத்தால் மேலும் சிறப்புற்று விளங்கும். விருபாக்ஷி குகையில் அமர்ந்தாலும் சரி, வேறு ஒரு இடத்தில் இருந்தாலும் சரி, அந்த இடத்தினால் மகிமை இல்லை; உண்மைப் பிரகாசமாக ஒருவர் உட்கார்ந்திருக்கிறாரே, அவரால் தான் அந்த இடம் மகிமை பெறுகிறது. சத்தியமானவர் குகையில் அமர்ந்திருப்பதால், குகைக்கு சிறப்பு இருக்கிறது.

இதுவரை எந்தவித உபதேசங்களும் இல்லாமல், எடுத்த எடுப்பிலேயே, 'தத்துவமசி, நீ அதுவாக ஆனாய்' என்ற அற்புதமான ரகசியத்தை எவர் சொல்லித் தருகிறாரோ, எவரைக் கண்ணால் கண்ட பிறகு, இந்தச் சம்சார பந்தத்தில் மனம் படிவதில்லையோ, பார்த்த மாத்திரத்திலேயே உள்ளுக்குள் மனம் இளகி, கண்ணீர் பெருக்கி, யார் இந்த தெய்வ சொரூபம், எங்கிருந்து வந்தது, இதற்கு இப்படி இருக்கிறதே, நான் இப்படி இருக்கிறேனே என்று நிலை கண்டு வருந்தி இரங்கி, அந்தத் தெய்வச் சாந்நித்தியத்தில் மனம் ஒடுங்கி நிற்கும்படியாக எவர் செய்கிறாரோ, அந்தக் குருவுக்கு என் நமஸ்காரம்.' இந்த விளக்கம்தான் அங்கு நடந்தது.



உடனே, தன் அண்ணன் மகன் என்கிற எண்ணம் அகன்று, இங்கே மிகப்பெரிய தத்துவ சொரூபம் அமர்ந்திருக்கிறது என்று பார்த்த மாத்திரத்திலேயே நெல்லையப்பருக்குப் புரிந்து விட்டது. இங்கு நீண்ட உபதேசங்கள் எதுவும் நடைபெறுவது இல்லை. கேள்வி கேட்டு, பதில் சொல்லி... என்பதெல்லாம் வருவதில்லை. இங்கு தவம் செய்தவர், இம்மாதிரியான சத்திய சொரூபத்தைக் கண்டால், மனம் ஒடுங்கி நிற்கிறார். அத்தகைய வலிமை அந்த சத்திய சொரூபத்துக்கு இருக்கிறது. ரமண மகரிஷி சத்திய சொரூபம்.

'தேகம், பிராணன், இந்திரியங்கள், புத்தி இவை ஒடுங்கிய சூன்யம்... இவற்றையே தானாக, பெண்டுகள், குழந்தைகள், கிழவர்கள் போல உணரும் மூடவாதிகளின் பெரும் மயக்கத்தைப் போக்கும், மயக்கமில்லாத ஞானகுருவான அந்தத் தட்சிணாமூர்த்திக்கு நமஸ்காரம்.

நான், நீ, பெண்டுகள், ஆண்கள், மூடர், குருடர், அவர், இவர் என்று பல்வேறு விஷயங்களாக, பல்வேறு பொருள்களாக நாம் நினைத்துக்கொள்கிறோம். ஆனால், எல்லாம் என்ன?

தேகம், பிராணன், இந்திரியம், புத்தி இவையெல்லாம் ஒடுங்குகின்ற பெருவழி என்பது புரிந்துவிட்டால், இந்த அத்தனைப் பொருள்களிலும் இவைதான் இருக்கின்றன என்பது தெரிந்துவிட்டால், பிரிவினை வருமா? இதை உணர்த்துகின்ற குருவுக்கு, தட்சிணாமூர்த்திக்கு என் நமஸ்காரம்.'

தட்சிணாமூர்த்தி ஸ்தோத்திரத்துக்கு விளக்கம் எழுதியது போல, ஸ்ரீகுரு ஸ்துதி என்பதற்கும் பகவான் ஸ்ரீரமண மகரிஷி மிக அழகாக விளக்கம் எழுதியிருக்கிறார்.

ஆதிசங்கரர் பரத கண்டம் முழுவதும் பயணம் தொடங்கிய போது, வடதேசத்தில் மாயிமதி நகரத்தில் வசிக்கும் கர்ம காண்டத்தில் தேர்ச்சி பெற்றவரான மண்டல பண்டிதரை வாதத்தில் ஜெயித்தார். அப்போது அவருடைய மனைவி, ''என்னையும் வாதத்தில் ஜெயித்தாலன்றி இந்த வெற்றி முழுமை பெறாது'' என்றாள். சரஸ்வதி ரூபமாக உள்ள அந்த பெண்மணியுடன் வாதம் செய்ய... காமசாஸ்திரம் தெரியும் என்று சொன்னால், சத்குருவினுடைய சந்நியாசம் பொய் என்று ஆகும். காம சாஸ்திரம் தெரியாது என்று சொன்னால், அதைத் தெரிந்த அந்தப் பெண்மணி வெற்றி பெற்றவள் ஆவாள். எனவே, 'இதைத் தெரிந்துகொண்டு வந்து பேசுகிறேன்' என்று ஒரு மாதம் அவகாசம் கேட்டு, மலைக் குகையில் தன்னுடைய உடம்பை வைத்து, உடம்பிலிருந்து வெளிப்பட்டு, உடம்புக்குச் சீடர் காவல் இருக்க, இறந்துபோன ஓர் அரசனுடைய உடம்புக்குள் புகுந்து, அந்த உடம்பின் மூலம், அவருடைய மனைவிகளுடன் கலந்து, காம சாஸ்திரத்தைத் தெளிவுபடுத் திக் கொண்டார். சொன்ன காலத்துக்குத் தாமதமானதால், சீடர்கள் பாடகர்கள் போல அரண்மனைக்குச் சென்று, ஸ்ரீசங்கரராய் இருக்கின்ற அந்த அரசன் முன்பு பாடத் துவங்கியதே குருஸ்துதி.

பகவான் மொழிபெயர்த்த குரு ஸ்துதியின் முதல் பாடல்... இதுவல்ல, இதுவல்ல என்று கூறும் உபநிஷத்தின் வழியில், ஸ்தூல ரூபங்களையும், சூக்ஷ்ம ரூபங்களையும் விளக்கி, பிறகு எதுவுமே தள்ளுவதற்கு இல்லாத சொரூபத்தைத் தனது சுயம் சொரூபமாக எவர் கொள்வாரோ, சொல்லுக்கு அடங்காத பெருமையுடைய ஞானிகள், எதை தங்களது இதயத்தில் இருத்துவார்களோ, ஆதியாபியாகிய அந்தச் சச்சிதானந்த பரவஸ்துவாகிய பிரம்மம் நீதான் அன்றோ என்று கூறுகின்றனர்.

'இதுவா கடவுள்? இல்லை; விக்கிரகமா கடவுள்? இல்லை; ஆசார அனுஷ்டானங் களா கடவுள்? இல்லை; கோயில்களா கடவுள்? இல்லை;  சின்னமா கடவுள்? இல்லை; கட்டடமா கடவுள்? இல்லை...' இப்படி ஒவ்வொன்றாக விலக்கி, எதை விலக்க முடியவில்லையோ... 'அடடா, இதுதான்!' என்று எந்த இடத்துக்குப் போய் நிற்கிறாரோ... ஞானியர்கள் எல்லாம் விளக்கமுடியாத அந்த வஸ்துவை எப்படி நெஞ்சில் இருத்துவார்களோ, அதுவே கடவுள். அறிவாகிய, உடம்பின் உள்ளுக்குள்ளே பிரகாசிக்கின்ற பிரம்மம் நீதான் என்று குருவைக் கொண்டாடுகிறார்கள்.

'குரு என்பவர் எதை விளக்க முடியாதோ, எது தன்னுள் மிகப் பிரகாசமாய் பொருந்தியிருக்கிறதோ, அதை உணர்ந்தவர்' என்று இந்தப் பாடல் சொல்கிறது.

முதலும், பிறகு கடைசிப் பாடலு மாக எட்டு பாடல்கள் கொண்ட இந்த குரு ஸ்துதி விளக்கத்தை பகவான் எழுதி வைத்தார்.

ஸ்ரீசங்கர ஜெகத்குரு மேற்கு திக்கில் பயணம் செய்தபோது, ஸ்ரீவல்லி எனும் கிராமத்தில், பிரபாகர் எனும் அந்தணர், சங்கரரின் வரவை அறிந்து,

தன் 13 வயது புத்திரனை அழைத்துக்கொண்டு போய், அவனை நமஸ்காரம் செய்ய வைத்து, தானும் நமஸ்கரித்து, சின்ன வயது முதல் பேச்சு வராதவனாய், எதிலும் நாட்டம் இல்லாதவனாய், விருப்பு- வெறுப்பு இல்லாதவனாய், எதிலும் பக்குவம் இல்லாதவனாய் இருக்கின்றவனுடைய நிலைமையைச் சொல்ல...

ஸ்ரீசங்கரபகவத்பாதாள் அந்த பாலகனை அணைத்துக்கொண்டார். ''குழந்தாய், நீ யார், யாருடைய மைந்தன் நீ, எங்கே சென்று கொண்டிருக்கிறாய், உன் பெயர் என்ன, நீ எங்கிருந்து வந்திருக்கிறாய் என்று மிகக் கூர்மையான பெரிய கேள்விகளைக் கேட்டார்.

அவரிடம் அந்த பாலகன், தன் நிலைமையைப் பற்றிச் சொல்வதற்காக வாய் திறந்து சொன்ன ஸ்லோகங்களே, 'அத்தாமலக ஸ்தோத்திரம்'. வடமொழியில் அமைக்கப்பட்ட இந்த ஸ்தோத்திரத்தை தமிழில் மொழி பெயர்த்திருக்கிறார், பகவான் ஸ்ரீரமணர்.

நான் மனிதன் அல்ல. தேவனோ, யட்சனோ, அந்தணனோ, அரசனோ, மனிதனோ அல்ல; நான் பிரம்மச்சாரியும் அல்ல; கிரகஸ்தனும் அல்ல; பால பிராயனும் அல்ல; கிழவனுமல்ல; ஒட்டுமொத்த சந்நியாசியும் அல்ல; யார் ஒருவனும் நான் அல்லேன்; நான் சத்தியபோத ஞானசொரூபமானவன். இதுவல்ல இதுவல்ல என்று சொல்லி, தான் ஆன்மா என்பதை மிக அழகாக, அந்த குழந்தை ஸ்லோகங்களாகப் பேசினான்.

மண்ணாலான பல பானைகளில் உள்ள நீரில், பல பிரதிபிம்பங்களாக சூரியன் காணப்பட்டாலும், எல்லாம் ஒரே சூரியன்தான். அதுபோல, பல சரீரங்களில் உள்ள பல்வேறு ஜீவர்களாக பிரகாசித்தபோதிலும், அவை அனைத்தும் ஒரே விஷயம்தான். இப்படிப்பட்ட ஒருவனாக, எவன் சுடர் விட்டு பிரகாசிக்கின்ற ஆன்மாவாக இருக்கின்றானோ, அந்த ஆன்மா நான். நான் இன்னது; அவர் இன்னது; இவள் இன்னது; அது இன்னது என்று பிரிவு என்பது மிக அபத்தம். ஒன்றே, பல விஷயங்களாக இந்த உலகம் முழுவதும், இந்த பிரபஞ்சம் முழுவதும் பரவிக் கிடக்கிறது. அதுவே வெவ்வேறுவித ரூபமாக இருக்கிறது. அப்படிப்பட்ட ரூபமாக நான் இருக்கிறேன் என்பதை ஒருவன் புரிந்துகொண்டால், அவன் மற்றவரை எப்படி அணுகுவான்? அவருக்கும், மற்றவருக்கும் என்ன வேற்றுமை? எல்லா வேற்றுமைகளையும் உடைத்து எறிந்துவிட்டு, எல்லாமுமாக ஒருவன் பிரகாசிக்க முடியும் என்றால், அந்த ஆன்மா நான்... என்று மிக அழகாக, ஒரு கடினமான விஷயத்தை எளிதாக ஸ்ரீரமண மகரிஷி சொல்லித் தருகிறார்.

'மேலே இருக்கின்ற சந்திரன், காற்றில் அசையும் அலைகளால் ஆடுவது கண்டால், சந்திரன் ஆடுவது போல இருக்கும். ஆனால், சந்திரனா ஆடுகிறான்? இல்லை; இது கண் கொண்ட மயக்கம். இதே மயக்கம்தான் புத்திக்கு இருக்கிறது. புத்தி, எதிரே இருப்பவர் அந்நியர் என்று நினைத்துக்கொள்கிறது. புத்தி, எதிரே இருப்பவர் வேறு மதத்தவர், வேறு இனத்தவர், வேறு குலத்தவர் என்று நினைத்திருக்கிறது. உயர்வு என்றும், தாழ்வு என்றும் பிரித்துக் கொள்கிறது. இது புத்தியினுடைய ஆட்டம். மாயையான பார்வை. ஆனால், எல்லா உயிர்களுக்குள்ளும் இருக்கின்ற அந்த விஷயம் பேதமற்றது. அதுதான் உன்னிலும் சகல இடத்திலும் பரவியிருக்கிறது. இதைத் தெரிந்து கொண்ட ஆன்மா நான்.'

**ஞானியர்கள் நமக்கு நல்வழி காட்டி உதவி செய்ய, கடவுள், ஞானியருக்கு உதவி செய்கிறார்.**

பையன் சொன்ன ஸ்லோகங் களைப் பார்த்து, தந்தை பிரமித்து, புதல்வனை வெளிக் கொண்டு வந்த குருவை நோக்கிக் கைகூப்பி நிற்க, ''இவனை மகனாக நீங்கள் அடைந்தது பாக்கியம். இவனால் உங்களுக்கு எந்தப் பிரயோஜ னமும் இல்லை; இவன் என்னோடு இருக்கட்டும்' என்று அவனை அழைத்துக் கொண்டு போய்விட்டார். பகவத்பாதாளுடைய சீடர்கள், 'குழந்தை ஏன் இப்படி இருந்தது? ஏன் இப்படி ஆயிற்று?' என்று கேட்க, ''இந்தக் குழந்தையினுடைய தாய் கங்கையில் குளிக்கப் போகும்போது, ஒரு சாதுவின் இடத்திலே, இந்தக் குழந்தையைக் கொஞ்சம் நேரம் பார்த்துக்கொள்ளும்படி, ஒப்படைத்துவிட்டுப் போனாள். அவர் பார்த்துக் கொண்டிருக்கும்போதே, அந்த குழந்தை கால் இடறி, கங்கையில் விழுந்து, மரணமடைந்து விட்டது. குழந்தையை வாரி எடுத்த சாது, என்ன செய்வது, பெற்றவளுக்கு என்ன பதில் சொல்வது என்று கலங்கினார். பெற்றவள் அழக்கூடாது என்று தீர்மானித்து, தன் உடம்பைவிட்டு, இந்த குழந்தைக்குள் புகுந்துகொண்டார். அந்தச் சாதுவே, இந்தக் குழந்தை'' என்று பகவத்பாதாள் சொன்னார்.

இந்த விஷயத்தை பகவான் ஸ்ரீரமண மகரிஷி மிக நுணுக்கமாக மொழிபெயர்த்தார்.

கோமணதாரியாக, மலை மேலே இருக்கின்ற ஒரு குகையில், குறைந்த சௌகரியங்களோடு வாழ்ந்து வருகின்ற பகவான் ஸ்ரீரமண மகரிஷி, மிகத் தெளிவு மிக்க தத்துவப் பாடல்களுக்கு எளிமையாக விளக்கம் சொல்லி, தன்னிடம் விளக்கம் கேட்டு வருகின்ற, யோக்கியதை உடைய நபர்களுக்குத் தெளிவாக்கவும் செய்தார்.

யாரோ கொடுக்கின்ற உணவை உண்டு. வாழ்கின்ற பகவான் பிச்சைக்காரரா அல்லது செல்வந்தரா? மிகப்பெரிய செல்வம் அவரிடம் இருந்தது. அதனால், அதை நாடி எண்ணற்ற மக்கள் வறியவர்கள் போல... ஏன், பணக்காரர் களும் கைகூப்பி, வறியவர்கள் போல அவரை நோக்கி வந்தவண்ணம் இருந்தனர். பகவான்


ஸ்ரீரமண மகரிஷியின் இந்த மொழி பெயர்ப்புகள் பழந்தமிழில் ஆனவை. படிக்க கடினமானவை. ஆனாலும், பதம் பிரித்துப் படித்துவிட்டால், உள்ளுக்குள் பதிந்துவிட்டால் மிகப் பெரிய வெளிச்சத்தை அது நமக்கு காட்டும். ஸ்ரீரமண மகரிஷி என்ன சொல்கிறார் என்று தெரியாமல், அவருடைய வாழ்க்கையைப் படிப்பதில் லாபமில்லை.

ஞானிகளுக்குத் தேவையென்று எதுவும் இருக்காது. ஆனால், தேவை வரின், அவர்கள் எந்த முயற்சியும் செய்யாமல், வெகு எளிதாக அவர்கள் தேடிய பொருள் அவர்களை நோக்கி வரும். பகவான் ஸ்ரீரமணர், திடகாத்திரமான சரீரம் உள்ளவர் அல்ல; சரிவர உணவு எடுத்துக்கொள்ளாததாலும், எடுத்துக் கொள்ளும் உணவைப் பற்றி நாட்டம் ஏதும் இல்லாததாலும், வெகு நேரம் அசையாது உள்ளுக்குள் ஆழ்ந்து உட்கார்ந்திருப்பதாலும், அவருக்கு மலச்சிக்கல் ஏற்படுவதுண்டு.

உடம்பு சூட்டால் இருமலும் ஏற்படும். மேலும், பாறை சூழ்ந்த இடத்தில் இருப்பதால், உடல் வெப்பம் எப்போதும் அதிகரித்தே இருக்கும். இதனால், கடுக்காயை பகவான் வாயில் அடக்கிக்கொள்வது வழக்கம். ஊற வைத்து மெள்ளத் தின்றுவிடுவதும் உண்டு. கடுக்காய் நல்ல மலமிளக்கி. இருமலையும் கண்டிக்கும். உடல் சூட்டைத் தணிக்கவல்லது. விருபாக்ஷி குகையிலிருந்த கடுக்காய் தீர்ந்து விட்டது. பகவானைக் கண்ணும் கருத்துமாய் கவனித்துக்கொள்ளும் பழனிச்சாமி, திருவண்ணா மலையில் வசிக்கும் சேக்ஷய்யரிடம், பகவானுக்கு கடுக்காய் வேண்டுமென்று சொன்னார். பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றும் சேக்ஷய்யர். எதனாலேயோ அதை விட்டுவிட்டார்.

பகவானுக்கு இது மட்டுமல்லாது எக்ஸிமா, ஆஸ்துமா, இடையறாத தலையாட்டம் என்பது போன்ற தொந்தரவுகளும் இருந்தன. சில நாட்களில், பல் வலியும் அவ்வப்போது வந்து போனது. ''மதிய உணவுக்கு சத்திரத்துக்குப் போகும்போது, சேக்ஷய்யரிடம் கடுக்காயை நினைவுபடுத்து'' என்று பகவான், பழனிச்சாமி யிடம் சொன்னார். மலையிலிருந்து பழனிச்சாமி கீழே இறங்கிப் போவதற்கு முன்பாக, ஆதிமூலம் என்ற அன்பர் வந்தார். சத்திரத்துக்கு அருகே இருக்கும் கிராமத்திலிருந்து அவர் அடிக்கடி திருவண்ணாமலை வந்து போவார். அப்படி, திருவண்ணாமலை வந்து சாமி தரிசனம் செய்கிற போது, விருபாக்ஷி குகைக்கு வந்து, பகவான் ரமண மகரிஷியையும் நமஸ்கரித்துவிட்டு போவார். தன்னுடைய நண்பர் களுடன் அப்படி அன்று வந்திருந்து, பகவான் எதிரில் சிறிது நேரம் அமர்ந்துவிட்டுப் போகும்போது, பழனிச்சாமியிடம், ''உங்களுக்கு கடுக்காய் வேண்டுமா'' என்று கேட்டார்.

மெள்ளத் திகைத்த பழனிச் சாமி, ''ஆமாம்'' என்று கூற, ஒரு பை நிறைய கடுக்காய் கொண்டு வந்து, வைத்துக்கொள்ளுங்கள் என்று சொன்னார். பழனிச்சாமி தேவையான கடுக்காய்களை வைத்துக் கொண்டு, மற்றவற்றை ஆதி மூலத்திடமே கொடுத்துவிட்டார்.



''கடுக்காய் எப்படி கிடைத்தது?''

''கீழே சிதறிக் கிடந்தது சாமி, முன்னே போன மாட்டு வண்டி யிலிருந்து மூட்டை பிரிந்து, கடுக்காய் கீழே கொட்டி இருக்கும். கீழே சிதறிக் கிடைந்தவற்றை நானும் நண்பர்களும் பொறுக்கி, ஒரு பையில் போட்டுக்கொண்டு வந்தோம். இங்கு வந்ததும், உங்களுக்கு கடுக்காய் தேவைப்படும் என்று தோன்றியது அதனால்தான் அப்படி கேட்டேன் என்றார்.'' பகவானுக் குத் தேவையான அந்தப் பொருளை கொடுத்தது யார்? ஆதிமூலமா, மூட்டை அவிழ்ந்து விழ வண்டி ஓட்டிக்கொண்டு போனவனா, அல்லது வேறு யாராவதா? இது கடவுளுடைய அனுக்கிரகம் என்றுதான் சொல்ல வேண்டும். ஞானியர்கள் நமக்கு நல்வழி காட்டி உதவி செய்ய, கடவுள், ஞானியருக்கு உதவி செய்கிறார். திருவண்ணா மலையில் வாழும் சேக்ஷய்யர் மட்டும் அல்லாது, சேக்ஷய்யருடைய சகோதரரும் பகவான் மீது அன்பு கொண்டவர். மலையிலிருந்த பகவான், திடீரென்று பழனிச்சாமியிடம் ''சாப்பிட கொஞ்சம் உலர்ந்த திராட்சை இருக்கிறதா?'' என்று கேட்க, பழனிச்சாமி ''இல்லை'' என்று சொன்னார்.



சென்னையில் இருக்கும் சேக்ஷய்யருடைய சகோதரர், வழக்கமாக உலர்ந்த திராட்சை கொண்டு வந்து கொடுப்பார். எப்போதும் அவருக்குக் கொஞ்சம் ஈரம் கனிந்த மூன்றாம் தரமான திராட்சைதான் கிடைக்கும். அன்று கடைகள் எல்லாம் மூடிவிட்ட படியால், எல்லா இடங்களிலும் தேடி, ஒரு கடை திறந்து இருக்க, அவர் போனதும், அந்தக் கடைக்காரன், ''நல்ல உலர்ந்த திராட்சை இருக்கிறது, வாங்கிக் கொள்கிறீர்களா?'' என்று தானாகக் கேட்டான். சந்தோஷத் துடன், ஒரு வீசை உலர்ந்த திராட்சை வாங்கிக்கொண்டு, விருபாக்ஷி குகைக்கு வந்தார். பகவான் விரும்பிக் கேட்ட அன்றே, உலர்ந்த திராட்சை விருபாக்ஷி குகைக்கு வந்துவிட்டது.


பல் வலி தொந்தரவு செய்தது. என்ன செய்வது? புகையிலை இருந்தால், அங்கு அழுத்தினால் கிருமிகள் செத்துவிடும் என்று சொல்லப்பட்டது. ஆனால், யாரிடமும் புகையிலை இல்லை. பகவானை வந்து தரிசித்த ஓர் அன்பரிடம், மூக்குப் பொடி இருந்தது. அந்தப் பொடியை எடுத்து, பல்லில் வைத்து அழுத்த, பல் வலி நின்றது. ஆனால், சொத்தை பெரிதானது. அந்த சொத்தையை எடுக்க, சென்னையிலிருந்து ஒரு பல் டாக்டர் வந்து, 300 ரூபாய் வாங்கிக் கொண்டு, பல்லைப் பிடுங்கிவிட்டுப் போனார். எல்லோருக்கும் வருவது போல பிரச்னைகள் பகவான் ஸ்ரீரமண மகரிஷிக்கும் வந்தன. ஆனால், பிரச்னைகள் வந்த சுவடு காணாமல், யாராலோ தீர்த்துவைக்கப்பட்டது போல மறைந்து போயின.

மனிதர்கள் எல்லோருக்கும் உள்ளது போல ஞானிகளுக்கும் வலியும் பசியும் இருக்கின்றன. பின், எந்த வகையில் ஞானி உயர்த்தி? கேள்வி கேட்பவர் உண்டு. வலியும் பசியும் சரீரம் சம்பந்தப்பட்டது. ஞானியிடமும் அவஸ்தை உண்டு. ஆனால் புலம்புவதில்லை. நாலாபுறமும் அவர்கள் முறையிடுவது இல்லை. உள்ளதை ஏற்பது என்பது சாதாரணவர்களால் இயலாது; அது ஞானியின் இயல்பு.

**க**வனிக்கும் வண்ணம் கவனித்தால், உலகில் உள்ள எல்லா மொழியும் புரியும். விலங்குகள் மொழிகூட புரியும். விலங்குகள் நேரிடையாய்ப் பேசும் தன்மை கொண்டவை. சுற்றி வளைத்துச் சொல்லாது. கோபமோ காதலோ, கெஞ்சலோ மிஞ்சலோ... எதையுமே பயமில்லாமல் செய்யும் தன்மை கொண்டவை அவை.

விருபாக்ஷி குகையில் அமர்ந்து குரங்குகள் போடும் கூச்சலையும் சண்டைகளையும் பகவான் ஸ்ரீரமணர் கவனிப்பது வழக்கம். குரங்குகள் தனித்தனிக் குழு வாகச் சுற்றும். ஒரு குழுவுக்கும் மற்றொரு குழுவுக் கும் அடிக்கடி சண்டை நடக்கும். குரங்குகள் பலப் பரீட்சை செய்துகொள்ளும். இப்படிச் செய்வ தற்கு முன்னால், ஒரு குரங்கை மற்றொரு குழுவுக்குத் தூது அனுப்பும். தூது அனுப்பும் குரங்கை விரட்டித் துரத்தினால், உடனே சண்டை துவங்கிவிடும். குரங்குகள் சண்டை யிட்டு ஓய்ந்துபோய், ஸ்ரீரமணரிடம் வந்து நின்று, தங்களது குறைகளைச் சொல்லும். பகவான் சமாதானம் செய்வார். 'நீ தவறு... நீ சரி' என்று சுட்டிக்காட்டுவார். குரங்குகள் அதை மௌனமாக ஏற்கும். சண்டைகளை அப்போதைக்குத் தவிர்த்து விடும். ஒருமுறை, வாலிபமான ஓர் ஆண் குரங்கை, அரசன் குரங்கு கடுமையாகத் தாக்கிக் கடித்தது. காயம் பட்ட குரங்கு, விருபாக்ஷி குகை வாசலில் மயங்கிக் கிடந்தது. ஸ்ரீரமணர், அதற்கு மருந்து இட்டு, முதுகு தடவி குணப்படுத்தினார். குரங்கு பிழைத்தது. ஆனால், அடிபட் டதால், அதன் ஒரு கால் முடமானது. பகவான் அதற்குச் செல்லமாக 'நொண்டிப் பையன்' என்று பெயரிட்டார். மற்ற குரங்குகள் வாசலிலேயே நிற்க, இந்த நொண்டிப் பையன் மட்டும் விருபாக்ஷி குகையில் நுழைந்து, பகவானுக்கு எதிரே உட்கார்ந்து, சரிசமமாகச் சாப்பிடும். இதை மற்ற குரங்குகள் வியப்புடன் கவனிக்கும். தனியாகச் சாப்பிடத் தெரியாத நொண்டிப் பையன், உணவைக் கீழே இரைக்கும். பகவான் அதைப் பார்த்து, ''உணவை கீழே இரைக்கக்கூடாது'' என்று கண்டிப்புடன் சொல்ல, கீழே இரைத்த உணவை முதலில் சாப்பிட்டுவிட்டு, பிறகு மறுபடியும் தட்டில் இருப்பதை எடுத்து உண்ணும். பகவான் மடியில் கொஞ்சி விளையாடும்; சுற்றிச் சுற்றி வரும்; முதுகில் ஏறிக் கொள்ளும். இதனால், மற்ற குரங்குகளுக்கு நடுவே அதற்குப் பெரிய மதிப்பு இருந்தது.

என்னதான் இருந்தாலும் விலங்கு விலங்குதானே. ஒருமுறை, எந்தக் காரணத்தினாலோ, கையிலிருந்த உணவு தட்டை வீசியது. உணவு தரையில் சிதறியது.



''ஏன் உணவை வீணடிக்கிறாய்?'' என்று பகவான் அதட்ட, பளீரென்று அவரது கன்னத்தில் அடித்துவிட்டது. பகவான் அதையே உற்றுப் பார்க்க, குரங்கு பயந்து வெளியேறியது. இனிமேல் உள்ளே வரக்கூடாது என்று பகவான் சொல்லி விட, அது என்ன செய்வது என்று தெரியாமல் முழித்தது. இடதும் வலதும் அலைந்தது. வாசல் படியிலிருந்து கெஞ்சியது. பகவான் காலைத் தொட்டு விட்டு நகர்ந்தது. பகவான் முகத்தைத் திருப்பிக்கொண்டார். திரும்பிய பக்கம் வந்து நின்று, மறுபடியும் கெஞ்சியது. பகவான் அதட்ட, மறுபடியும் வெளியே வந்து அமர்ந்தது.

மூன்று நாட்கள் பகவான் அதனோடு பேசவில்லை. அதைத் திரும்பி பார்க்கக்கூட இல்லை. குரங்கு மிகவும் பதறி, குழம்பியது. 4-ஆம் நாள், பகவான் அதை மன்னித்தார். குரங்கு ஓடிவந்து மடியில் உட்கார்ந்து கொண்டது. கழுத்தைக் கட்டிக்கொண்டு கொஞ்சியது. முதுகிலும் மார்பிலும் ஏறி விளையாடியது. ஆனால், நொண்டிப் பையன் மறுபடியும் தவறு செய்தது. சூடான பாலை தட்டில் ஊற்றி வைக்க, அது ஆவலாகப் பருகக் காத்திருந்தது.

உடனே குடிப்பதற்கு பரபரத்தது. பால் சூட்டில் வாய் வைத்துவிடப் போகிறதே என்று எண்ணி, பகவான் அந்தத் தட்டை எடுத்து ஊதி, பாலை ஆற்ற முயற்சிக்க, அதை அவர் குடித்துவிடுவார் என்று எண்ணி, மறுபடியும் பட்டென்று பகவான் கன்னத்தில் அறைந்தது. ஆனால், அடி பலமில்லை. பகவான் பாலை அதனிடம் கொடுத்துவிட்டார். மறுபடியும் குரங்கு கெஞ்சியது. மன்னிப்புக் கேட்டது. பகவானும் மன்னித்தார். பகவானது நெருக்கத்தால், மற்ற குரங்குகளிடத்தில் தனித்த மதிப்பு பெற்ற நொண்டிப் பையன், பிறகு அந்தக் கூட்டத்துக்கு தலைவனாகவும் விளங்கினான்.

கோடையில் ஒருமுறை, கிரி பிரதட்சணம் செய்யும்போது, எல்லோருக்கும் கடும் தாகம் ஏற்பட் டது. அருகில் கிணறோ குளமோ இல்லை. தொலைதூரம் போக வேண்டும். அப்போது திடீரென்று குரங்குக் கூட்டம் ஒன்றுவந்தது. ஒரு நாவல் மரத்தில் ஏறி கிளைகளை உலுக்கியது. கீழே நாவல் பழங்கள் விழுந்தன. ஒரு பழத்தைக்கூட, அந்த குரங்குக் கூட்டம் தொடவிலை. பகவானும் அன்பர்களும் நாவல் பழங்களை உண்டு, தாகம் தணிந்தனர்.

குரங்குகளுக்கு எப்படி இவர்களது தாகம் தெரிந்தது? எங்கிருந்து வந்தன? ஏன் ஒரு பழம்கூட எடுக்காமல் திரும்பின? நாம் அன்பு செய்தால், நமக்கு அன்பு செய்யாதார் உண்டோ? நாம் மற்றவருக்குச் சரியான நேரத்தில் உதவி செய்தால், நமக்குத் தேவையான நேரத்தில் வேண்டிய உதவி கிடைக்காமல் போய்விடுமா என்ன? எனும் எண்ணத்தில் மனிதர்களை வாழக் கற்றுக் கொடுக்க, மகான்கள் இடையறாது முயற்சிக்கின்றனர். பகவான் ஸ்ரீரமணர், அதைத் தெள்ளத் தெளிவாகச் சொல்லித் தருகிறார்.



குரங்குகள் மட்டுமல்ல; சில நாய்களும் ஆஸ்ரமத்தை சுற்றியே வந்தன. அவை, ஏனைய விலங்குகள் போல் இல்லாமல், வித்தியாசமாக நடந்துகொண்டன. முற்

பிறவியில் மனிதராக இருந்து, அப்போது தீர்க்க முடியாத கடனை, இந்த விலங்குப் பிறவி எடுத்து தீர்க்கும் விதம் போல, செயல்பட்டன. எல்லா நாய்களையும் போல ஊளையிடுதலோ, உரத்த குரைப்போ, வாலாட்டும் நைச்சியமோ, திருடித் தின்கிற எண்ணமோ இல்லாமல், நற்குணங்களுடன் வலம் வந்தன.

ஸ்ரீரமணரிடம் அளப்பரிய பிரியத்தைக் காட்டின. அவருடைய விழி அசைவுக்கும், விரல் அசைவுக்கும், பேச்சுக்கும் உடனே கட்டுப்பட்டன. விலங்குகளுக்கு உண்டான அசுத்தப்படுத்தும் அற்பமான குணம் அவற்றிடம் அறவே இல்லை. அந்த நாய்களில், சின்ன கருப்பன் எனும் நாயைப் பற்றி பகவான் உயர்வாகக் கூறுவது வழக்கம். சில நேரத்தில், ஏதோ ஒன்று ஆஸ்ரமத்து வாசலில் இடதும் வலதுமாக நகரும்; ஏதோ விலங்கு என்று தெரியும். ஆனால், அது நாய் என்று தெரிவதற்குச் சில நாட்கள் ஆயிற்று.

புதருக்கு நடுவில் இருந்து தலையை நீட்டி, ஆஸ்ரமத் தையே சின்னகருப்பன் பார்த்தபடி இருப்பான். யாரேனும் உணவு வைத்தால், அவர்கள் போகும் வரை காத்திருந்து, போன பிறகே, அருகில் போய் உண்பான். எவரேனும் வந்துவிட்டால், உணவை அப்படியே விட்டுவிட்டுப் போய்விடுவான். ஆஸ்ரமத்துக்கு அருகில் இருக்கவேண்டும்; ஆனால், ஆஸ்ரமத்தில் உள்ளவர்களுடன் எந்தவித சங்காத்தமும் கூடாது என்பது போல், ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தான். இந்தச் செய்கையே விநோதமாக இருந்தது. ஒருமுறை, ஸ்ரீரமணர், தனியே நடந்து சென்று கொண்டிருக்க... சட்டென்று சின்னகருப்பன் வழிமறித்து, கால்களைத் தூக்கி அவர் மடியில் வைத்து, கொஞ்சி, வாலாட்டிச் சுற்றி வந்தான். பகவானை தனிமையில் சந்தித்தபோது, தனது உள்ளத்து அன்பையெல்லாம் கொட்டியது போல அது இருந்தது. அதன்பிறகு, ஆஸ்ரமத்து அன்பர்களுடன் வலம் வந்தான். பிரியமாகப் பழகினான்.

ஆசாரமான பிராமணர் ஒருவர், ஜபம் செய்யும் போது நாய் அருகில் வருவதை விரும்பாது, உரத்த குரலில் அதட்டி, விலக்கினார். ஆனாலும் அவருக்கு அருகே சுற்றிச் சுற்றி வர, வேறொரு அன்பர், சிறு கட்டையால் நாயைச் சுள்ளென்று அடிக்க, நாய் ஊளையிட்டு ஓடியது. பிறகு, சில நாட்கள் வரவேயில்லை. அடுத்து, மறுபடியும் வந்து சேர்ந்தது. இப்படியரு ரோஷத்தை நாய் கொண்டிருப்பது ஆச்சரியம். அங்கேயுள்ள நாய்கள் மிக ரோஷமானவை. ஒரு குட்டி நாயை, அன்பர் ஒருவர் கடுமையாகத் திட்ட, அந்த நாய் ஓடிப் போய் சங்கு தீர்த்தத்தில் குதித்துவிட்டது. சிறிது நேரத்துக்குப் பிறகு, அதன் உடல்தான் மேலே வந்தது.

இதேபோல் குரங்கு ஒன்றும் தன் உயிரை மாய்த்துக்கொண்ட சம்பவமும் நடந்தது உண்டு. சின்னகருப்பனைத் தவிர சிகப்பன், கமலா போன்ற நாய்களும் ஆஸ்மரத்தைச் சுற்றியே வந்தன. ''கமலா, இவருக்குக் கிரிவலப்

பாதையைச் சுற்றிக் காட்டு'' என்று பகவான் கட்டளையிட, கமலா அந்த நண்பரை அழைத்துக்கொண்டு கிரிவலப் பாதை வழியே போகும். பகவான் ஸ்ரீரமணருக்குத் தொண்டு செய்யும் விதமாகவே அந்த விலங்குகள் இருந்தன. வீட்டு விலங்குகள் மட்டுமின்றி, காட்டு விலங்குகளும் பகவானின் கடைக்கண் பார்வைக்கு ஏங்கின.

மலைக்கு அருகே இரண்டு சிறுத்தைகள் ஒன்றோடு ஒன்று சீறிச் சினந்து விளையாடிக் கொண்டிருந்தது. அதைப் பார்த்துக் கொண் டிருந்த பகவானிடம், வாசுதேவ சாஸ்திரிகள் என்பவர், ''உள்ளே போய்விடலாம்! இவை எந்நேரமும் தாக்கக்கூடும்'' என்று பயந்து சொல்ல, பகவான் வர மறுத்தார். ''உங்களுக்குப் பயமாக இல்லையா?'' என்று கேட்டதற்கு, ''நாம் ஏன் பயப்பட வேண்டும்? நாம் 'ஐயோ புலி' என்று கத்தினால்தான், அவையும் 'ஐயோ மனிதன்' என்று பயந்து, ஏதேனும் செய்யும். நாம் நம் வேலையைப் பார்த்தால், அவை வந்த வழியே போய்விடும்'' என்றார் பகவான்.

பயம்தான் பாதி சண்டைகளுக்குக் காரணம். பயமற்ற தன்மை ஞானிக்கு மட்டும்தான் இருக்கும். விலங்குகள், பறவைகள், மனிதர்கள் என எல்லா உயிரையும் நேசிக்கின்ற தன்மை ஞானிகளிடம் இருக்கும்.

பகவான் ஸ்ரீரமணரிடம் இந்த அன்பு, அளவற்று இருந்தது. அவருக்கு அருகே இருந்த அத்தனை உயிரினங்களும் அவரின் அன்பை அனுபவித்தன. எந்த ஒரு இடம் எல்லா உயிர்களையும் நேசிக்கிற இடமாக இருக்கிறதோ, அது நிரந்தரமாகும். அந்த இடம் கோயிலாகும்.

பகவானால் வளர்க்கப்பட்ட 'நொண்டிப் பையன்' என்கிற அந்தக் குரங்கு, தன் கூட்டத்துடன் ஆஸ்ரமத்துக்கு வந்தது. ஒருமுறை, அவை சிறிது நேரம் காத்திருந்துவிட்டு, பகவான் இல்லை என்ற கோபத்தால், மரக்கிளைகளை உலுக்கியும், குச்சிகளைப் பிடுங்கியும், கூச்சலிட்டும் கோபத்தை வெளிப்படுத்தின. சிதறிக் கிடந்தவற்றைப் பார்த்துவிட்டு, 'குரங்குகள் ஏன் இப்படிச் செய்தன' என வியந்தார் பகவான். மறுநாள், மறுபடியும் குரங்குகள் வந்தன. அந்தக் கூட்டத்துக்கு 'நொண்டிப் பையன்' தலைவனாகிவிட்டான்; அவனுக்கு முடிசூட்டு விழா நடத்த வேண்டும்; அந்த விழா, பகவானின் முன்னிலையில் நடத்தப்பட வேண்டும் எனும் ஆசையால் வந்தன. நொண்டிப் பையனுக்கு உணவு கொடுக்கச் சொன்னார் பகவான்.

உணவு கொடுக்க வந்தவரை, நொண்டிப் பையன் அழைத்துப் போனான். சற்றுத் தொலைவில் மூன்று குரங்குகள் இருந்தன. அவை அவனுடைய அரசிகள். அவற்றுக்கு நடுவே அமர்ந்து, உணவை 'நொண்டிப் பையன்' சாப்பிட்டான். பகவானின் பிரசாதம் அவன் மனைவியருக்கும் கிடைத்தது. அவர்கள் மூலம், அவனுக்குப் பல குட்டிகள் பிறந்தன. அந்தக் குட்டிகளும், பகவானிடம் உணவு வாங்கிச் சாப்பிடுகிற பேறு பெற்றன. இன்னொரு கூட்டம், இன்னொரு குரங்கு. அதற்கு 'மொட்டைப் பையன்' என்று பெயர். அவனை, அங்குள்ள வலிமையான குரங்குகள் இழிவாக நடத்தின. அலற வைத்தன. இதனால், 'மொட்டைப் பையன்' பயத்தோடும் பதற்றத்தோடும் இருந்தது. ஒருநாள், திடீரென காணாமல் போயிற்று. சில நாட்கள் தனிமையில் இருந்தது. மெள்ள, தனிமையை விட்டு வந்து, துரத்தியவர்களைத் தேடித் தேடித் துரத்தியது. தன் பலத்தைக் காட்டியது. தனிமைத் தவம், பெரிய பலத்தைக் கொடுத்திருக்க, அது அந்தக் கூட்டத்தின் அரசனாகியது. அதைத் துரத்திய குரங்குகள், அடிமையாயின. தனிமையின் சக்தி அத்தகையது என்று பகவான் இந்த நிகழ்ச்சியைக் குறிப்பிட்டுச் சொல்வது உண்டு.

பகவானைச் சுற்றிப் பாம்புகளும் வரும். குறிப்பிட்ட பாம்பு ஒன்று அடிக்கடி அவருக்கு அருகே ஊர்ந்து வந்து நிற்கும். சற்று நேரம் இருந்துவிட்டு நகரும். தவிர, ஆஸ்ரமத்துக்கு அருகில் ஆண் மயில் ஒன்றும், பெண் மயில் ஒன்றும் அடிக்கடி சுற்றி வந்தன. பெண் மயில் ஆஸ்ரமத்தைவிட்டு அகலாது. ஆண் மயில் கொத்தினாலும் போகாது. பகவான் மடியில்கூட அது படுத்துக்கொண்டிருக்கும். ஒருமுறை, ஆண் மயில், அந்தப் பெண் மயிலைத் துரத்திக்கொண்டு போயிற்று. பிறகு, பெண் மயில் திரும்பி வரவே இல்லை. ஆண் மயில் மட்டும் சிறிது காலம் ஆஸ்ரமத்துக்கு அருகே சுற்றி வந்தது. ஒருநாள் பகவானின் மடியில் உயிர் நீத்தது. இவர்கள் எல்லாம் சாதாரணப் பிறவிகள் அல்ல' என்று பகவான் சொல்வது உண்டு. உறுமுகிற சிறுத்தை கண்டு ஆஸ்ரமவாசிகள் பயந்தனர். ''பயம் வேண்டாம்; 'நான் வந்திருக்கிறேன்' என்று அந்தச் சிறுத்தை சுருக்கமாகச் சொல் கிறது. தண்ணீர் குடித்துவிட்டுப் போய்விடும். இந்த மலையில் பல சித்த புருஷர்கள் உள்ளனர். அவர்கள் வேறு வடிவங்களில் என்னைப் பார்க்க வருகிறார்கள்'' என்று பகவான் அனைவரையும் அமைதிப் படுத்தினார். ஞானிகளுக்கு நட்பு என்கிற விஷயம்தான் முக்கியம். யாருடன் என்பது பற்றி அவர்களுக்கு எந்த அபிப்ராயமும் இல்லை. எல்லா வகை உயிரினங்களோடும் அவர்கள் பேதமின்றி ஸ்நேகமாக நடந்துகொள்வார்கள்.

ஸ்ரீரமணருடன் மனம் ஒன்றிய சில உயர்ந்த மனிதர்களைப் பற்றிச் சொல்லவேண்டியிருக்கிறது. சக மனிதர்கள் மீது அவர் காட்டிய அன்பு, தன்னைச் சரணடைந்தவர்களிடம் அவர் காட்டிய அக்கறை அற்புதமானது. ஆனால், ஸ்ரீரமணரின் அன்பையும் ஆதரவையும் அறிவதற்கு முன், யார்யாரெல்லாம் இம்மாதிரி மகான்களிடம் வருகிறார்கள் என்பதை யோசித்துப் பார்க்க வேண்டும்.








ஆன்மிக நாட்டத்துக்கு எது ஆரம்பம்? தேடல்தான்! என்ன தேடல்? தான் யார் என்கிற தேடல். தான் யார்? முகமா, முறுக்கு மீசையா, பேச்சா, சிரிப்பா, ஞாபக சக்தியா, தந்திரசாலித்தனமா, திண் தோள்களா, மிரட்டுகிற வலிமையா, இவை எல்லாமுமா? என யோசிக்க வேண்டும். எது உண்மையான 'நான்' என்று தேட வேண்டும். ஆனால், இது எளிதான காரியம் அல்ல. 'வருங்கால முதலமைச்சர் வாழ்க' என்று பத்து பேர் சேர்ந்து கத்தினால், மனம் குதூகலம் அடையும். புத்தி கிறுகிறுத்துப் போகும். 'உண்மையிலேயே நாளையிலேர்ந்து நாம் முதல்வராகி விட மாட்டோமா' என்று ஏக்கம் எழும். பெரிதாய்ப் பரவும். தான் யார் என்பதை முற்றிலும் மறந்து, கண்ணைக் கட்டி காட்டில் விட்டது போல ஆகும் மனம் தடுமாறும். நடை துவளும். இடது, வலது என்று அலைய நேரிடும். ஏகப்பட்ட தந்திரங்கள் மனதில் உருவாகும். இவர் எதிர்த்தால் என்ன செய்வது, அவர் மடக்கினால் எப்படிப் பேசுவது என்று திட்டங்கள் ஏற்படும்.

உயர்வு தாழ்வு பார்க்கத் துவங்கும். மனிதர்களைப் பிரித்துப் பிரித்து, மூளைக்குள் பல ஏற்பாடுகள் கட்டங் கட்டங்களாக உருவாகிவிடும்.

என்ன அழகு, என்ன சிரிப்பு! இவள் கலகலவென்று சிரித்தால், நின்ற இடத்திலேயே நாலுபேர் மயங்கி விழுகிறார்கள். அவரை கொம்பன் என்றாயே, உறைந்து போய்க் கிடக்கிறார். மிகப் பெரிய மனிதர்கள் எல்லாம், இவளை வாய் நிறையச் சிரித்து வரவேற்கிறார்கள். ஆள் ஆளுக்கு கார் பரிசாகத் தரப் போகிறார்களாம். என்ன கார்... அதில் என்னென்ன வசதிகள் என்று மனம் கேள்விகள் கேட்டு அலைபாயும்.

இன்னும் அழகாய் இருப்பது எப்படி; ராத்திரி பசும்பால் ஏடு போட்டுக் கொள்; பகலில் வெள்ளரிப்பிஞ்சு, மேலும் பப்பாளிச் சாறு, பயத்த மாவை உடம்பு முழுவதும் தடவி, ஊற வை. பிறகு, மெள்ள வழித்து எடு. அதன் மீது சந்தன சோப்பு, க்ரீம்கள், திரவங்கள்... இந்த உடுப்பு எடுப்பாக இருக்குமா, அந்த ஆபரணம் அழகாக இருக்குமா என்று பலரையும் ஆலோசித்து, எடுத்து, உடுத்தி, உலவி, முன்னும் பின்னும் அலைந்து, எல்லோரும் விழிப்பதை அனுபவித்துப் பார்த்து, ஒருநிலையில் நிற்காமல் மனம் ஆடும். உண்டதில், ஒரேயரு சொத்தை வேர்க்கடலை.வயிற்றைக் கலக்கி, நாசம் செய்துவிடும்.



மூன்று பேர் கையைக் குலுக்கியதில், எந்த கையில் வைரஸ் ஜுரம் இருக்கிறது என்று தெரியவில்லை பற்றிக்கொண்டால்,

இரண்டு நாளில் சகலமும் வாடிவிடும். ஊருக்கு நடுவே, நடனம் நன்றாகவே இருந்தது. ஆனால், நடனமாடியவருக்கு மூச்சுத் திணறி விட்டது. உடம்பு முழுவதும் வலி. இருமல், தும்மல், உட்கார முடியவில்லை; நிற்க முடியவில்லை; பிறகு, எங்கே வெளியே போவது? எல்லாம் போயிற்று. நீங்கள் உடம்பல்ல; சதையின் திமிர் அல்ல; மேனியின் நிறமல்ல; அந்த கம்பீரம் கொடுத்த கர்வம் அல்ல;

அந்த கர்வம் கொடுத்த அதிகாரம் அல்ல; அந்த அதிகாரம் கொடுத்த தந்திரம் அல்ல; அந்த தந்திரம் ஏற்படுத்திய பாகுபாடுகள் அல்ல. உள்ளுக்குள்ளே இருந்து உங்களை ஏதோ ஒன்று இயக்குகிறது; உங்களை கர்வப்பட வைக்கிறது. எது இருந்தால் நீங்கள், எது உங்களை இயக்குகிறது, எங்கே இருக்கிறது அது, எல்லாக் கர்வங்களையும் களைந்து, உள்ளுக்குள்ளே எது இருக்கிறது என்று பார்ப்பதற்கு, மிகப் பெரிய பிரயாசை வேண்டும். சலிப்புற்ற மனம் எளிதாக இதைப் பார்க்கும். தினசரி வாழ்வில், இந்த கர்வம் கொடுத்த அவஸ்தைகளை, அபத்தங்களை, அவலங்களைப் பார்க்கிறபோது, எதற்கு இதெல்லாம் என்று எவருக்கேனும் சலிப்பு ஏற்பட்டால், அவர் உண்மையில் 'நான் யார்' என்ற கேள்விக்கு எளிதாக வருவார். சலிப்பு ஏற்படாத வரையில், முதல்ல இது, அப்புறம் அது, அதுக்கு அப்புறம் அது என்று திட்டங்கள் இருக்கும்போது, நான் யார் என்ற கேள்வி எழாது. திட்டங்களை நோக்கியே மனம் போகும். போகட்டும். அதில் தவறில்லை. ஏதேனும் ஒரு கணத்தில் திட்டங்கள் தவிடுபொடியாகி முகத்தில் அறையும்போது, அவருக்கும் அந்தக் கேள்வி வரும். எல்லா நேரமும் வெற்றி என்பது, எந்த மனிதரின் வாழ்க்கையிலும் இல்லை. வாழ்வில் குறிக்கோள் என்பது உண்டெனில், குறி பிசகுவதும் உண்டு. பிசகுகிற நேரம் மனம் சலிக்கத் துவங்கும். அந்தச் சலிப்பு உள்ளுக்குள்ளே, நான் யார் என்று பார்க்கத் துவங்கும். கேட்கத் துவங்கும். கேட்கும் போது, பிடித்துக் கொண்டால் போயிற்று. இல்லையெனில், மறுபடியும் மனம் மற்ற திட்டங்களுக்கு தாவத் தொடங்கிவிடும்.

45 வயது வரை என்ன கூத்தெல் லாம் ஆடியிருக்கிறேன், என்னவெல்லாம் எகிறியிருக்கிறேன், என்னவெல்லாம் அலட்டி யிருக்கிறேன் என்று எண்ணம் ஏற்பட, அதை இறுகப் பிடித்துக்கொள்ள வேண்டும். யார் என்ற தேடுகின்ற கேள்வி, தன்னுடைய அபத்தமான நிலையை, ஆவேசமான நிலையை, மறுபடியும் சீர்தூக்கிப் பார்க்கத் துவங்க, மற்றவரை என்ன பாடுபடுத்தியிருக்கிறோம் என்று எண்ணம் வரும். அந்த எண்ணம் பிறர் மீது நேசத்தை ஏற்படுத்தும். தன் மீதும் ஒரு மதிப்பு வரும். தேவையின்றி மனைவியைக் கடிந்துகொண்டிருக்கிறேன்; தாயை உதாசீனப்படுத்தியிருக்கிறேன்; என் வேகத்துக்கு வரவில்லை என்று நண்பர்களை இடித்துத் தள்ளியிருக்கிறேன்; குற்றம் சொல்லிப் பிரிந்திருக்கிறேன்; ஏமாற்றியிருக்கிறேன் என்ற உண்மைகளெல்லாம் வெளிப்பட்டு, அதன் விளைவாக, பிறர் மீதும், தன் மீதும் ஒரு காதல் ஏற்படும். தேடலோடு கூடிய காதல் மெள்ள கேட்கத் துவங்கும். சரியாகப் பார்க்கத் துவங்கும். 'அட, இவர் சரியாகப் பேசுகிறாரே, நான் நினைக்கிறபடி இவரும் நினைக்கிறாரே, இவரும் வாழ்க்கை என்பது என்ன என்று கேட்கிறாரே, 'நான் யார்' என்ற எண்ணம் இவருக்கும் வந்திருக்கிறதே, இவர் சொன்ன வழிமுறை நன்றாக இருக்கிறதே, இவர் யார்?' என்று மகான்களின் அண்மையைத் தேட, அந்த நெருக்கத்தில் அந்த மகான்களின் மீது ஒரு நம்பிக்கை உருவாகும்.

ஸ்ரீரமணர், அவ்விதம் வந்தவருக்கு மிக எளிதாய் தன்னை உணர்தலைச் சொல்லித் தருகிறார். யோக வித்தைகள் இல்லை, மந்திர ஜபங்கள் இல்லை. கோயில்-குள பரிகாரம் இல்லை. நேரிடையாய் உடனே நெஞ்சு தொட்டு கேள்வி கேள் 'நான் யார்?'. உண்மையாய் கேள்வி கேள். உன்னோடு பேசு. சத்தியமாய் வினா எழுப்பு என்கிறார்.

வழி இருக்கிறது. போக பலருக்கு மனமில்லை. ஆனால், குரு விடமாட்டார்.

பகவான் ஸ்ரீரமணரிடம் போனால், அமைதியாக இருக்கிறது. ஏதோ ஒரு நிம்மதி ஏற்படுகிறது. மலையைவிட்டுக் கீழே இறங்கினால், பிரச்னைகள் வந்து விடுகின்றன. நோய் ஆட்டம் போடுகிறது. ஆனால், அந்த இடத்தில் எதுவுமே இல்லையே, ஏன் அப்படி? பசி கூட எடுக்கவில்லையே, ஏன் அப்படி? ஆச்சரியமாக இருக்கும். அந்த மகான் மீது ஆழ்ந்த நம்பிக்கை ஏற்படும். தேடுதலின் விளைவாக காதல் அல்லது அன்பு; அதன் பின்விளைவாக நம்பிக்கை; மகான்களின் மீது நம்பிக்கை ஏற்பட, அவர்களின் உபதேசம் உள்ளுக்குள் மெள்ள மெள்ள இறங்கும். அவர் அண்மையில் இருந்தது, அவரின் அதிர்வைப் பெற்றது, அவர் தொடலில்

ஆனந்தம் கண்டது, அவர் பார்வையில் உள்ளுக்குள் திரும்பியது என்றெல்லாம் நடக்க, மனம் உள்நோக்கி நிற்க, ஓர் அமைதி ஏற்படும்.



இப்போது மனம் வெற்றி- தோல்விகளைப் பற்றி, குடும்பச் சூழல் பற்றி, தன் உடல்நிலை பற்றி, அடுத்தவரின் துரோகம் பற்றி, தனது அடுத்த நடவடிக்கை பற்றி எந்தக் கவலையும் படாது. 'ஆற்றில் போகின்ற சருகுகளில், நானும் ஒரு சருகு. இத்தனை காலம் அற்புதமாகத் தாண்டி வந்திருக்கிறேன். இனி, சொச்ச காலமும் தானாகத் தாண்டும்' என்ற எண்ணம் ஏற்பட, உள்ளே அமைதி கெட்டிப்படும். அந்த அமைதி, எந்த எதிர்பார்ப்பும் இல்லாத நிலைக்குக் கொண்டுபோய், உள்ளுக்குள்ளே 'நான் யார்' என்ற கேள்வியை பலமாக எழுப்பும். அப்போது அது வெறும் கேள்வியாக, தேடலாக இருக்காது. மிகச் சரியான பாதையில் முன்னேறி, எங்கு எண்ணங்கள் தோன்றுகின்றனவோ, எங்கு நான் என்கிற எண்ணம் மிக பலமாக இருக்கிறதோ, அந்த இடத்தைப் போய் ஆக்கிரமித்துக் கொள்ளும். இங்கிருந்துதானே எல்லாம் வருகிறது; இங்கிருந்துதானே நான் என்ற எண்ணம் தோன்றுகிறது; இங்கிருந்துதானே என் செயல்களெல்லாம் வடிவு பெறுகின்றன என்று அந்த எண்ணத்தை முழுவதுமாய்ப் பற்றி நிற்க... உள்ளே மெள்ள மெள்ளப் பற்றி நின்றது, பற்றியதால் இழுக்கப்படும். பற்றியதும் பற்றப்பட்டதும் இரண்டறக் கலக்கும். இதைச் சொல்லால் விளக்க முடியாது. மிகப் பெரிய உண்மை. சத்தியம். இது கணிதம் அல்ல; 16 நாட்கள் இந்தப் பயிற்சி, அடுத்த 16 நாட்கள் அந்தப் பயிற்சி என்கிற ஆட்டமெல்லாம் இங்கு கிடையாது. எந்தக் கணக்கு வழக்கிலும் இது அடங்காது. இது உங்கள் தலை எழுத்து. முன்ஜென்ம வினை. மூத்தோர் புண்ணியம். இவை கலந்து திரட்சியாகி உள்ளுக்குள்ளே இறங்கவேண்டும். அப்போதுதான் 'நான் யார்' என்று தேடலை ஆரம்பிக்கவே முடியும்.

அப்படி ஆரம்பித்தவர்கள், இதுபற்றி தெளிவாகப் பேசுவர்களிடம் போய் நிற்கிறார்கள்; ஈர்க்கப்படுகிறார்கள். மகான்களிடம் சாதகர்கள் ஈர்க்கப்படுவது இவ்விதமே! சாதகருடைய உண்மையான தேடலைப் பொறுத்து, மகான் அவருக்கு ஸ்பரிச தீட்சையோ, நயன தீட்சையோ அளிக்கிறார். மனிதர்களும், பறவைகளும், மிருகங்களும் அமைதியாக உலவும் அந்த மகானின் சந்நிதியில், மனித மனம் அடங்குகிறது; என்ன கேட்க வந்தோம் என்று தெரியாமல் திகைக்கிறது; என்ன கொடுத்தாலும் சரி, என்ன செய்தாலும் சரி, என் துணை நீயே என்று கைகூப்பி முழுவதுமாய் சரணாகதி அடைகிறது.

சரணாகதி என்பது கர்வம் அழித்தல்; அகந்தை அகற்றுதல்; அகந்தையைத் துறப்பதே துறவு. மற்றதெல்லாம் வெளி வேடங்கள். அந்தத் துறவு காவி உடுத்தாது. தங்க ருத்ராட்சம், வெள்ளியில் கோத்த துளசி மாலை, சிவப்புக் கல் சுற்றி வைரம் பதித்த ப்ரேஸ்லட், பொங்கும் முடி, கட்டைச் செருப்பு என்றெல்லாம் அணியாது. துறவு என்பது தோற்றமல்ல; அது உள் நடப்பு. சொத்துக் குவிப்பு அல்ல; எல்லாம் விட்ட சுகம்; அது, பெண் கூடலுக்குப் பறக்கிற தன்மை அல்ல; இடையறாத பரம சந்தோஷம் உள்ளே மிதந்து கொண்டிருக்கும் நிலை.



மகான்களின் தீண்டலால் உள்ளே பல கதவுகள் திறக்கும்; உள்ளே பல இடங்களில் தீப்பற்றி எரியும். 'அடடே... இதுதான் விஷ யமா!' என்று உண்மைகள் தெரிய வரும். 'இப்படித்தான் மரணம் நிகழப்போகிறதா, இங்கிருந்து இடம் மாறுவதுதானா, இந்த இடத்திலிருந்துதான் நகருமா, இதுதானா' என்று மிகப்பெரிய விடையைத் தரும்; பெரிய நிம்மதி ஏற்படும். தன்னை அறிந்தவருக்கு மரண பயம் இல்லை. அந்த விடுதலை அடைந்தவரின் முகம், ஆனந்த பரவசத்தில் மின்னும். கண்களில் ஒளி மிகும். அவர்கள் தொடர்ந்து அந்த நிலையிலேயே இருப்பர். ஏதேனும் தொழில் செய்வர்.

இல்லறம் நடத்துவர். இல்லறமே இல்லாது தனியே திரிவர். பிச்சைக்காரனாய் இருப்பர். பெரும் செல்வந்தராய் இருப்பர். சிற்றின்பத்தில் ஈடுபடுவர்; சமைத்துச் சாப்பிடுவர். சாப்பிடாமலும் இருப்பர். கிழிந்த உடையுடன் இருப்பர். சீராக உடுத்துவர். பேசுபவர்களாக இருப்பார்கள்; பேசாதவர்களாகவும் இருப்பார்கள். எப்படியிருப்பினும் அந்த முகத்திலிருந்து, அந்த உடம்பிலிருந்து சத்தியம் மிக அற்புதமாய் வெளிப்பட்டுக்

கொண்டிருக்கும். புலி, புலிக்குட்டியை நக்கித்தான் புலியாக்கும். புலிக்குட்டி பெரிய புலியான பிறகு, இன்னொரு குட்டியைப் பேணத் துவங்கிவிடும். ஞானப் பரம்பரை இப்படித்தான் உருவாகும். உலகில் உள்ள எல்லா ஜனங்களுக்கும் இந்த லட்சணம் வந்து விடாது. கோடியில் ஒருவருக்கே இந்த உத்தம ஞானம் கிடைக்கும். இது ஒரே ஜென்மத்தில் முடியும் விஷயம் அல்ல; இந்த ஜென்மத்தில் உள்வாங்கி, உள்ளே உரமிட்டு வளர்த்து, இறந்த பிறகு, அடுத்த ஜென்மத்தில் பிறக்கும்போதே வீரியத்தோடு பிறப்பவர்கள் உண்டு. உள்ளே என்னது என்று புரிந்து மௌனமாகி, தன் மௌனத்தை ஞானமாக மாற்றி, குடும்பத்தோடு ஒட்டி இருந்து, மடிந்து போவாரும் உண்டு. அப்பா இறந்து போனார் என்று மகன் சொல்வான். அப்பா ஞானியானார் என்பது சுற்றியுள்ளவருக்கே தெரியாது போகும். பகவான் ஸ்ரீரமணரின் அண்மையை நாடிய அன்பர்களின் வாழ்க்கையைக் கேட்கிறபோது, உங்களுக்குள் உள்ளே ஏதோ ஒன்று புலப்படும். தேடல் என்பது என்ன என்பதும், எப்படித் தேட வேண்டும் என்பதும் தெரிய வரும். அந்த அன்பர்களின் வாழ்க்கை ஒரு வரைபடம். அந்த வரைபடத்தைப் படித்துப் புரிந்துகொண்டு, வழிநடப்பது நம்முடைய சாமர்த்தியம்.

மனவாசி ராமசாமி ஐயர் என்பவர் தன் நண்பருடன், விருபாக்ஷி குகைக்கு வந்திருந்தார்.ராமசாமி ஐயர் பொதுப்பணித் துறையில் ஓவர்சீய ராகப் பதவி வகித்து வந்தார். பொறுப்பான பதவி.

பதற்றமான வாழ்க்கை. ஆனாலும், மனம் அமைதியைத் தேடி, நேரம் கிடைக்கும் போதெல்லாம் மகான்களை தரிசிக்கிற ஆவலுடன் இருந்தது. சிறிதுநேரம் அங்கிருந்துவிட்டுத் திரும்புகையில், அவருடன் வந்த நண்பர், 'எனக்கொன்றும் புதிதாகத் தெரியவில்லை. இங்கு வந்தது வீண்; இனிமேல் வரப்போவதில்லை' என்பது போலப் பேசினார். ராமசாமி ஐயர் பதிலேதும் சொல்லவில்லை. அமைதியாக வெளியேறினார். அடுத்த முறை எவர் துணையுமின்றி, அவர் மட்டும் தனியே வந்தார். உள்ளார்ந்த தேடல் என்பது யாரோடும் கைகோத்துக்கொண்டு வருகிற விஷயம் அல்ல; கும்பலாக தியானத்தில் ஈடுபடுவதும், ஆன்ம விசாரம் செய்வதும் தொந்தரவைத் தரும். இது அவரவர் கர்மாவின்படி நடக்கிற விஷயம். எனவே, தனித்துதான் இருக்க வேண்டும். தனிமைதான் இன்னும் சரியான கோணத்தில் உள்ளே திருப்பும்.அடுத்த முறை வந்தபோது, ராமசாமி ஐயருக்கு மனம் லேசாயிற்று. உள்ளுக்குள் புதிதாக அமைதி தோன்றி யது. உடல் உபாதைகள் குறைந்ததுபோல நினைப்பு ஏற்பட்டது. இது சந்தோஷமான இடம் என்பதாக தீர்மானித்தார். அடிக்கடி விருபாக்ஷி குகைக்கு வந்து, பகவான் எதிரே உட்கார்ந்து கொள்கிற விருப்பத்தை வளர்த்துக் கொண்டார். நடத்தியும் காட்டினார்.



பல இடங்களில் சுற்றியதன் காரணமாக சரியான வேளையில், சரியான உணவு சாப்பிடாததால், ராமசாமி ஐயருக்கு வயிற்றுக் கோளாறு இருந்தது. அந்த உபாதை அவரைச் சரியாக தூங்க ஒட்டாமல் செய்தது. அதனால், உடல் சோர்வு கண்டது. அடிக்கடி தலைவலியும் மற்ற உபத்திரவங்களும் ஏற்பட்டன. வேலைகளில் முழுமூச்சாக, உற்சாகமாக ஈடுபட முடியாமல் போயிற்று.

அவருக்குக் கொடுக்கிற சம்பளம் தண்டம் என்று மேலதிகாரி சொல்லும் நிலை ஏற்பட்டது. உபாதை, மச்சோர்வு, சுற்றியுள்ளோரின் கடுமை, வீட்டில் தன் அலுப்பைக் காட்டுகிறபோது, அதை எதிர்கொள்ளாத மனைவி... எவருமே என் நிலைமையைப் புரிந்து கொள்ளவில்லையே என்ற ஏக்கம் அவரை வாட்டி எடுத்தது. ஸ்ரீரமணர் இதற்கு விடிவு தருவார் என நம்பி, தொடர்ந்து வந்து கொண்டிருந்தார்.

ஒரு நாள், ஸ்ரீரமணர், விருபாக்ஷி குகைக்குள் நுழைய முற்பட்டபோது, ஓடிப் போய் வழிமறித்தார் ராமசாமி ஐயர். ''உங்களையே நம்பி எத்தனை முறை வந்திருக்கிறேன்! உங்களையே சரண் அடைந்திருக்கிறேனே, எனது நோய்களைத் தீர்க்கக் கூடாதா?'' என்று கதறினார். ''நான் என்ன, வைத்தியரா, மந்திரவாதியா? எனக்கு ஒன்றும் தெரியாது!'' என்று ரமணர் சொல்ல, ''இல்லை. உங்களைச் சரண் அடைந்துவிட்டேன். உங்கள் பாதங்களில் விழுந்துவிட்டேன். உங்களையே முழுதாக நம்பி, என்னை ஒப்படைத்துவிட்டேன். நீங்கள்தான் காப்பாற்ற வேண்டும்'' என்றார் ராமசாமி ஐயர். பகவான் ஸ்ரீரமண மகரிஷி, வெகு நேரம் அவரை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தார்.

''உனக்கு ஒண்ணும் தொந்தரவு இல்லை. எல்லாம் சரியாயிடுத்து, போ!'' என்று கைகளை ஒருவிதமாக வீசினார். ராமசாமி ஐயருக்குள் சட்டென்று ஏதோ சரியானது போல் இருந்தது.

மறுநாள் ஆடிப்பெருக்கு. எச்சம்மாள் என்கிற அன்பர் விதவிதமான கலந்த சாதங்களைக் கொண்டு வர, 'அவற்றை யெல்லாம் சாப்பிட முடியாது; செரிக்காது; எனக்குக் கரைத்த சாதம் போதும்.

கஞ்சியாகக் குடித்தால் போதும்' என்று ராமசாமி ஐயர் சொன்னார். அவரை வற்புறுத்தி உட்கார வைத்தார்கள். ரமணரும் அவரை அழைத்து, தனக்கு எதிரே உட்கார வைத்தார். அவர் சாப்பிடுவதைப் பார்த்தார். புளியஞ்சாதம், எலுமிச்சை சாதம், தேங்காய் சாதம் என்று ஒவ்வொன்றையும் மிக வேகமாக, ராமசாமி ஐயர் ருசித்து உண்டார்.

புதிதான ஓர் உணவை உட்கொண்டா லும், வயிறு பெரிதும் வேதனைப்படுத்துகிற நேரத்தில், இத்தனை விதவிதமான உணவைச் சாப்பிட்டும், எந்தச் சிரமமும் இல்லை. அன்றிரவு, மிக நிம்மதியாகத் தூங்கினார். அந்த அன்பரின் உடல் உபாதை, பகவானால் எளிதாக நீக்கப்பட்டது. நோயிருப்பின் உள்ளே பார்ப்பது கடினம்; நோய் தடுக்கும். நோய் அகன்ற பிறகு, அவர் மனம் லேசாயிற்று. ஒரு நாள் புளியமரத்தடியில் அமர்ந்திருந்த போது, ஸ்ரீரமணர், அவரை உற்றுப் பார்க்க, அவருக்குள் ஏதோ புகுந்தது. ஏதோ ஒரு விஷயம் நடந்தது. என்ன நடந்தது என்று தெரியவில்லை. பிற்பாடு மெள்ள மெள்ள தன் மனம் தன்னிலிருந்து நழுவி, உள்ளுக்குள் போய், தான் யார் என்பதைப் பார்த்தது என்பதை ராமசாமி ஐயர் உணர்ந்தார். படிப்படியாக முன்னேற வேண்டிய விஷயத்தை, மிக எளிதாக ஒரே வீச்சில், ஒரே பார்வையில் துளை போட்டு உள்ளுக்குள்ளே இறக்கிவிட்டார் குரு.

குரு என்பவர், நல்ல சீடனை அமைதியாக உட்காரவைத்துவிட்டு, அவன் மனத்தை உள்முகமாகத் திருப்பி, தானே தன்னை அவதானிக்கும் படியாகச் செய்வார். குருவின் மீது நம்பிக்கையும் நம்பிக்கையால் ஏற்பட்ட சரணாகதியும் இதற்குப் போதும்.

**நோ**யையும் நீக்கி, உள்பார்வையையும் கொடுத்தவரை, குரு என்று அழைக்காமல் வேறு என்னவென்று அழைப்பது? இருட்டிலிருந்து ஒளிக்கு அழைத்து வந்தவரை, குரு என்று அழைக்காமல் வேறு என்ன சொல்லி அழைப்பது? ராமசாமி ஐயர் மனம் கனிந்து விதம் விதமான பாடல்கள் எழுதினார். நேரம் கிடைத்தபோதெல்லாம், திருவண்ணா மலை வந்து ஸ்ரீரமணரைத் தரிசித்தார். இரண்டு மூன்று நாட்கள் அவருடன் இருப்பார். பொதுப்பணி வேலையாக ஒரிஸாவில் இருந்தபோது, கால் எல்லாம் கொப்புளங்களாகிவிட்டன. நடக்க முடியவில்லை. கடுமையான வலி இருந்தது. ''ரமணரே! நீரே சரணம்... நீரே சரணம்'' என்று மனதுக்குள் புலம்பி, அவரைச் சரணமடைந்ததாக ஒரு பாட்டு எழுதினார்.

மறுநாள், திருவண்ணாமலையில் இருந்து நண்பர்கள் சிலர் வந்தனர். அவர்கள் காசிக்குப் போகிறவர்கள். 'வழியில் ராமசாமி ஐயரைப் பார்த்து விட்டு போங்கள்' என்று பகவான் கட்டளையிட, அதனால் இவரைப்

பார்க்க வந்திருந்தனர். இவர் படும் துன்பத்தைப் பார்த்து, கையிலிருந்த ஒரு களிம்பை எடுத்து, இவருடைய காலில் தடவினர். களிம்பைக் கொடுத்துவிட்டுப் போனார்கள். மறுநாளே, கொப்புளங் கள் அடங்கிவிட்டன.

குருவுக்கும் சீடனுக்கும் இடையே தூரம் என்பதே இல்லை. சீடன் மனதால் நினைக்க, குரு அங்கு தோன்று வார்; நிச்சயம் உதவி செய்வார். ''உனக்குக் கொடுக்கிற நூற்றைம்பது ரூபாய் சம்பளமே தண்டம் என்று உன் மேலதிகாரி சொன்னதாகச் சொன் னாயே, இப்போ இருநூறு ரூபாய் சம்பளம் வந்தால் என்ன சொல்வார்?''. இருநூறு ரூபாய் சம்பளம் வந்தது. உடல் குறை நீக்கி, மனக் குறை நீக்கி, பொருளாதாரக் குறை நீக்கி, சீடரை உள்முகப்படுத்துவது குருவின் வேலை. இருட்டில் இருந்து ஒளிக்கு அழைத்துச் செல்லுதல் என்பது இதுதான்.

இது மட்டும்தானா? லௌகீக வாழ்வில் ஏற்படுகிற சின்னச் சின்ன இடைஞ்சல்களைக் கூட, குரு மிக அழகாக விலக்குவார். பி.கே.சுந்தரம் ஐயர் என்பவரின் மகள் லக்னோவில் அடுக்குமாடிக் குடியிருப்பில், தன் புருஷனுடன் குடியிருந்தாள். 3-வது மாடியில் தண்ணீர் வருவது அரிதாக இருந்தது. அவள் கணவர், பல படிகள் கீழே இறங்கிப் போய், தண்ணீரைச் சுமந்தபடி ஏறி வருவார். அவளுக்குத் தண்ணீர்க் குடத்தைச் சுமந்து வருகின்ற வலிவு இல்லை என்பதால், அத்தனை குடங்களிலும் அவரே நீர் நிரப்பி வைப்பார்; பார்க்கவே பரிதாபமாக இருந்தது.

புருஷன் படும் வேதனையைக் காணச் சகிக்காதவளாய், அவள் உள்ளுக்குள் குமுறினாள். இந்தப் பிரச்னைக்கு என்ன செய்வது எனத் தெரியவில்லை. ராமசாமி ஐயர் எழுதிய சரணாகதிப் பாடலை, குழாய்க்கு முன் உட்கார்ந்து பாடினாள் ஸ்ரீரமணரின் அன்பர்களிடையே பிரபலமாகி இருந்த பாடல் அது. அவள் மனமொன்றிப் பாட, திடீரென்று குழாயிலிருந்து பெருத்த சத்தத்துடன் காற்று வந்து, பிறகு நீரும் பொங்கி வந்தது. எல்லாக் குடங்களிலும் மகிழ்ச்சியோடு நீர் சேமித்து வைத்தாள்.

'எப்படி இது' என்று கணவர் வியக்க, தான் ஸ்ரீரமணரை நினைத்துச் சரணாகதிப் பாடல் பாடியதாகவும், குழாயிலிருந்து நீர் வந்ததாகவும் சொன்னாள். 'மறுபடியும் பாடு' என்று அவள் கணவர் கேட்க, மறுபடியும் பாடினாள். அப்போதும் குழாயில் நீர் வந்தது. ஆனால், வேறு பாடல்கள் பாடியபோது குழாயில் நீர் வரவில்லை. இந்த அதிசயத்தை விருபாக்ஷி குகையில், அந்தப் பெண் குதூகலத்துடன் சொன்னபோது, எல்லோரும் முழுமனதாக நம்பினார்கள்.

சரணாகதிப் பாடல் எழுதிய ராமசாமி ஐயரின் புதல்வி, வரலட்சுமி படம் ஒன்றை வரைந்து பகவா னிடம் காட்டினாள். 'இதை ஏன் அச்சடிக்கக் கூடாது?'

என்று பகவான் கேட்க, பலரிடம் அங்கே இங்கே கடன் வாங்கி, அதை அச்சடித்துப் பலருக்கும் கொடுத்தாள். அந்தக் குழந்தை, பகவானுக்கு நெருக்கமாகப் பழகி வந்தாலும், ஸ்ரீரமணர் கடவுளைப் போன்றவர் என்ற தன்மை அவளிடம் தெளிவாக இருந்தது. அந்த மரியாதையோடே பழகினாள். ராமசாமி ஐயரை குணப்படுத்தியது மட்டுமல்ல, அவரின் பொருளாதாரச் சுமையை நீக்கியது மட்டுமல்ல, அவர் மனதை ஒருமுகப்படுத்தியது மட்டுமல்ல... அவரின் குழந்தைகளையும் பகவான் ஸ்ரீரமணர்தான் காப்பாற்றி வந்தார். தன்னை அண்டிய அன்பர்களின் குடும்பத்தையும் அணைத்துக்கொள்வது மகான்களின் இயல்பு.




தத்துவ விளக்கம் பெற, வாழ்வில் தெளிவு பெற, மகான்களுடன் பேச வேண்டுமா? உரையாடலை கவனித்துத்தான் உள்ளுக்குள் பக்குவப்பட வேண் டுமா? அப்படி ஒன்றும் இல்லை. அரசாங்கத்தில் மேலாளராக வேலை பார்த்த ராகவாச்சாரி என்பவர், தன் மனதுக்குள் மூன்று கேள்விகளுடன் பகவான் எதிரே

அமர்ந்திருந்தார். வேலை நேரம் போக, மற்ற நேரங்களில் எல்லாம், அவர் ஸ்ரீரமணரைத்  தேடி வருவது வழக்கம். அங்கே கூட்டத்துக்கு நடுவில், எதுவும் பேசாது மௌனமாய் இருப்பார். ஆனால், மனதுக்குள் கேள்விகள் இருக்கும்.

ஒரு முறை, 'இந்தக் கேள்விகளுக்கு, தயவுசெய்து நீங்கள் விடை அளிக்க வேண்டும்' என்ற எண்ணத் துடன் பகவான் எதிரே அமர்ந்திருந்தார். ''உங்களைச் சில நிமிடங்கள் நான் தனியாகச் சந்திக்க இயலுமா? தியஸாஃபிகல் சொஸைட்டியைப் பற்றி பகவான் என்ன நினைக்கிறார்? எனக்கு தகுதியிருந்தால், தங்களுடைய உண்மை யான ரூபத்தை எனக்கு காண்பிப்பீர் களா?'' என்கிற வினாக்களோடு உட்கார்ந் திருந்தார். அதுவரை சுற்றியிருந்த கூட்டம் எதனாலேயோ சட்டென்று கலைந்து போயிற்று. ஒவ்வொருவராய் வெவ்வேறு காரணங்களை முன்னிட்டு, அந்த இடம் விட்டு நகர்ந்தனர். ஸ்ரீரமணரும் ராகவாச்சாரியும் தனியே அமரும் நிலை வந்தது. ''உங்கள் கையிலிருக்கும் புத்தகம் என்ன? பகவத் கீதையா? நீங்கள் அதில் உறுப்பினரா? அந்த சொஸைட்டி நல்ல விஷயங்களைச் செய்து வருகிறது'' என்று யாரும் எதுவும் கேட்காமலேயே தானாகப் பேசினார், ரமணர். 'ஆஹா, இரண்டு கேள்விகளுக்குப் பதில் கிடைத்துவிட்டது. அப்படியானால், மூன்றாவது கேள்விக் கும் பதில் கிடைக்கும் அல்லவா? பகவானின் உண்மையான சொரூபம் என்னவென்று காண ஆவலாக இருக்கிறேன்' என்று குதூகலத்துடன், பகவான் கண்களையே உற்றுப் பார்த்தார், ராகவாச்சாரி.

அப்போது பகவான், சுவரோடு ஒட்டியதொரு மேடையில் அமர்ந்திருந் தார். அவருக்கு அருகே தட்சிணாமூர்த்தி படம் மாட்டப்பட்டிருந்தது. பகவானைப் பார்க்கும் போது, தட்சிணாமூர்த்தி படம் கண்ணில் படாமல் இருக்காது. ஆனால், உற்றுப் பார்க்கப் பார்க்க, உள்ளுக்குள் ஒரு மாற்றம் ஏற்பட்டது. ராகவாச்சாரியின் கண்களிலிருந்து பகவான் மெள்ள மறைந்தார். எதிரே இருந்த சுவர்கூட இல்லாமல், வெறும் வெட்டவெளியாக இருந்தது. பிறகு, ஒரு வெளிச்சம் தோன்றியது. வெளிச்சம் வந்த பிறகு தட்சிணாமூர்த்தி படம், பகவான் உருவம் எல்லாம் தோன்றின. மறுபடியும் கண்களுக்கு எல்லாம் புலப்பட்டன. அதேநேரம் தட்சிணாமூர்த்தி திருவுருவ மும் பகவானின் திருவுருவமும் மிகப் பெரிய பிரகாசத்தோடு ஒளி மயமாகக் காட்சியளித்தன.  இந்தக் காட்சியை வெகு நேரம் காணமுடியாமல் ராகவாச்சாரி கண்களை மூடிக்கொண்டார். சிறிது நேரம் கழித்து எழுந்து, பகவானை நமஸ்கரித்து, மலையை விட்டு அகன்று, வீட்டுக்குச் சென்றார். அடுத்த ஒரு மாதம் வரை, பகவானை அவர் சந்திக்கவில்லை. அன்று கண்ட காட்சியே மனதில் மிகப் பிரமாதமாக ஆக்கிரமித்துக் கொண்டு இருந்தது. அந்தக் காட்சி கலைந்துவிடுமோ என்று பகவா னைச் சந்திக்காமல் இருந்தார். பிறகு, மெள்ள மனம் தேறி, மறுபடியும் பகவானைத் தரிசிக்கச் சென்றார். ''நான் உங்களிடம் சில விஷயங்களைக் கேட்டேன். கேட்டது எனக்குக் கிடைத்தது'' என்று பணிவாகச் சொன்னார்.



பகவான் மறைந்து வெட்டவெளி தோன்றியதையும், பிறகு மெள்ள தட்சிணாமூர்த்தி படமும் பகவா னும் தோன்றியதையும், பிரகாசமாய் இருந்ததையும் விவரித்தார்; 'இது என்ன?' என்று வினவினார். 'நீ என் உண்மை உருவத்தைக் காண விரும்பினாய். நான் அரூபி. எனக்கு உருவமில்லை. நீ பகவத் கீதை படிப்பவன். அந்தத் தூண்டுதலால் தட்சிணாமூர்த்தி ஒளியாகவும், நான் ஒருவித ஒளியாகவும் உன் கண்ணுக்குத் தோன்றியிருக்கலாம். இதுபற்றி நீ கணபதி முனிவரிடம் கேட்டுத் தெரிந்துகொள்' என்றார் பகவான். ஆனால், மேற்கொண்டு இதை விசாரிக்க ராகவாச்சாரி விரும்ப வில்லை. இந்த அற்புதக் காட்சியே, அவருக்குள் மிகப் பெரிய நிறைவைக் கொடுத்துவிட்டது. குருவின் கருணை மிகப் பெரியது. எந்த உரையாடலும் இல்லாமல், எந்தப் பெரிய விவாதமும் இல்லாமல், மிக அமைதியாக, வந்தவரைத் தனிமைப்படுத்தி, தான் யார் என்று அவருக்குக்

காட்டிக்கொடுத்து, அது பற்றிய விளக்கத்தையும் மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். எது கேட்டாலும் கிடைக் கின்ற இடம்தான், குருவின் சந்நிதி.

உத்தியோகம் பார்த்துக்கொண்டு, அந்த உத்தி யோக இடைவெளியில் ஓடி வந்து, பகவானைத் தரிசிப்பவர் சிலர் இருக்க, உத்தியோகத்தை உதறிவிட்டு ஒட்டுமொத்தமாய் பகவானிடம் சரணடைந்த அன்பர்களும் உண்டு.

ஐயாசாமி என்பவர், தென் ஆப்பிரிக்காவில் ஐரோப்பியரின் கீழ் பணியாற்றி, நன்றாகச் சம்பாதித்து, சம்பாதித்த பொருளுடன் நேரே பகவானிடம் வந்து சரணடைந்துவிட்டார். பணம் இருப்பினும், மலையிலிருந்து கீழே இறங்கி, யாசகம் கேட்டு உண்பதையே வழக்கமாகக் கொண்டிருந்தார். யாசகம் கேட்கும்போது, பகவானுடைய அன்பர்கள் ஏதேனும் பாட்டு பாடிக்கொண்டு போவது உண்டு. ஆனால், ஐயா சாமிக்குப் பாட்டுகள் தெரியாது.

ஒரு வீட்டில் பெண்மணி ஒருத்தி, சிவபுராணம் சொல்லச் சொன்னார். ஐயாசாமிக்குத் தெரியவில்லை.

பிறகு, அந்தப் பெண்மணியே சிவ புராணம் சொல்லி, அவருக்கு உணவு பரிமாறினார். ஐயாசாமிக்கு வெட்கம் வந்து விட்டது. சிவ புராணத்தை கவனமாகக் கற்றார். 'ஐயாசாமி எதற்கு யாசகத்துக்கு போக வேண்டும்? அவரிடம் இல் லாத பொருளா!' என்று பகவான் வேடிக்கையாகச் சொன்னார்.


இது ஒருவகையான பாராட்டு. கையில் காசு இருந்தாலும், யாசகம் எடுத்துச் சாப்பிடும் மனப் பக்குவம் வந்து விட்டது என அங்கீகரிக்கும் சொல். 'நீ சரியான வழியில்தான் போகிறாய்' என்று உணர்த்தும் விதம். மரக்கிளைகளை அளவாக உடைத்துக் கைத்தடிகளும், தேங்காய் சிரட்டையை உலர வைத்துத் தேய்த்துக் கிண்ணங்களும் செய்வதில் வல்லவர் ஐயாசாமி. கவனத்துடன் கிண்ணங்களைப் பளபளவென்று செய்து, பல சாதுக்களுக்குக் கொடுப்பது அவருக்குச் சந்தோஷமான விஷயமாக இருந்தது. எந்தவித எதிர்ப்பார்ப்பும் இன்றி, 10 வருடம் பகவானுடைய அண்மையில் இருந்து, பிறகு தன் கிராமத்துக்குப் போய், அங்கே காலமானார் ஐயாசாமி. தென் ஆப்பிரிக்காவில் உழைத்துச் சேமித்ததைவிட மிகப் பெரிய சேமிப்பு, ஐயாசாமிக்குப் பகவான் சந்நிதியில் கிடைத்தது.

குரு தன்னைப் பற்றி மற்றவரிடம் பேச மாட்டார். ஆனால் அந்த உத்தம குருவின் சீடர்கள் பேசுவார்கள். ஸ்ரீரமணரின் வாழ்வும் வாக்கும் அவரின் அற்புதமான சீடர்களாலேயே உலகுக்கு அறிவிக்கப்பட்டன. பூவை தொட்டுவந்த தென்றலே பூவின் நறுமணம் சொல்லும்; அந்தப் பூ எங்கே என்று தேடவைக்கும்.

ஒரு முறை, பகவான் ஸ்ரீரமண மகரிஷியைத் தரிசிக்க, மாவட்ட ஆட்சியாளரும் (கலெக்டர்), உதவி மாவட்ட ஆட்சியாளரும் வந்து அமர்ந்தனர். அதிகாரம் இருக்கும் இடத்தில், பிறருக்கு உபதேசம் செய்யத் தனக்குத் தகுதி உண்டு என்கிற எண்ணம் உடனே குடியேறிவிடும். தன்னை முன்னிலைப்படுத்த மனம் மிகவும் துடிக்கும். 'நான் யார் தெரியுமா?' என்கிற அலட்டல் மிக வேகமாக வெளி வரும். அந்த கலெக்டர் தன்னுடைய ஆன்மிக சாதனைகளையும், தான் படித்தவற்றையும், படித்ததில் பிடித்தவற்றையும் பற்றியெல்லாம் மிகச் சரளமாக பகவானிடம் வேகமாகப் பேச ஆரம்பித்தார். நீண்ட நேரம் பேசினார். பிறகு, உதவி கலெக்டர் தன்னுடைய ஆன்மிக அனுபவங்களை, மெய்சிலிர்ப்புகளை பகவானிடம் விவரித்தார். அவரும் நீண்ட நேரம் பேசினார்.

அவர்கள் பேசி முடிக்கும் வரை பகவான் வாய் திறக்கவே இல்லை. எந்த மறுமொழியும் சொல்லவே இல்லை. அவர்கள் பேசுவதை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தார். பகவான் மௌனமாக இருப்பதைப் பார்த்து, அவர்கள் திகைத்தார்கள். இன்னும் தெளிவாகச் சொல்ல வேண்டுமோ என்ற எண்ணம் ஏற்பட்டது. மறுபடியும் பேசத் துவங்கினார்கள்; விவரித்தார்கள். முற்றிலும் பேசி, இனி பேசுவதற்கு ஒன்றுமில்லை என்பதுபோல ஒருவாறு அடங்கினார்கள். அப்போதும் பகவான் மௌனமாக அவர்களைக் கவனித்துக் கொண்டிருந்தார். அவர்கள் பேசி, நிறுத்தி, மலங்க முழிப்பதையும் பார்த்துக்கொண்டிருந்தார்.

''இவ்வளவு நேரம் நாங்கள் பேசினோம். நீங்கள் எதற்கும் ஒரு மறுமொழியும் சொல்லவில்லையே சுவாமி, ஏன்?'' என்று கலெக்டர் கேட்க, பகவான் மெள்ள வாய் திறந்து பேசினார். ''நான் என் மொழியில் உங்களோடு பேசிக்கொண்டிருந் தேன். உங்களுக்குத்தான் கேட்கத் தெரியவில்லை.'' புத்திசாலியான அந்த கலெக்டருக்கு பகவான் சொன்னது சட்டென்று புரிந்தது. செய்ததைவிட அதிகம் பேசுகிறோம் என்பது தெளிவாயிற்று. மாளாது பேசிக்கொண்டிருந்தால் தெளிவு வராது என்பது புரிந்து போயிற்று. அவர்கள் மெள்ள விலகினார்கள்.



திருவண்ணாமலை வேத பாடசாலையில் படித்துக்கொண்டிருந்த, ராமநாத பிரம்மசாரி என்கிற மெலிந்த உருவமுள்ள இளைஞர், ஒரு முறை விருபாக்ஷி குகைக்கு வந்து பகவானைச் சந்தித்தார். பார்த்த முதல் பார்வையிலேயே, ராமநாத பிரம்மசாரி ஸ்ரீரமண மகரிஷியின்பால் ஈர்க்கப்பட்டார். மிகப் பெரிய விஷயத்துக்கு முன்பு நின்றுகொண்டிருக்கிறோம் என்பதைப் புரிந்துகொண்டார். அவருக்கு அண்மையில் இருப்பதும், அவருக்கு உதவி செய்வதும் தமது பூர்வ வினைப் பயன் என்று சந்தோஷம் கொண்டார்.

குடும்பப் பாரம் தாங்காமல் நிம்மதி தேடி, பொருளாதார விடிவு தேடி, பகவானிடம் வருபவர்கள் உண்டு. நிறையப் பணம் சம்பாதித்து, வாழ்க்கையை உறுதிப்படுத்திக்கொண்டு, தத்துவ விசாரம் ஏற்பட்டு, அதன்பால் வருபவர்களும் உண்டு. ஒருபக்கம் வேலை செய்து கொண்டே, மறுபக்கம் விசாரத்தில் ஈடுபடுகின்ற அன்பர்களும் பகவானிடம் வருவதுண்டு. ஆனால், ராமநாத பிரம்மசாரி எந்த எதிர்பார்ப்பும் இல்லாமல், 'இது ஓர் அற்புதமான இடம், இது ஞானியின் சந்நிதி, இங்கு இருப்பது தன் பிறவியின் பயன்' என்பதாய் அந்த இடத்

தைச் சுற்றிச் சுற்றி வந்தார்.

பகவானின் அருகே இருந்தபடி பல உதவிகள் செய்தார். வேத பாடசாலை யில் உணவு போடுவார்கள். ஆனால், ராமநாத பிரம்மசாரி அந்த உணவை மறுத்து விட்டு, திருவண்ணாமலையில் வீடு வீடாக ஏறி யாசகம் கேட்டு, உணவு வாங்கிக் கொண்டு வந்து, பகவானி டம் கொடுப்பார். ஸ்ரீரமண மகரிஷியும் அதனை ஏற்றுக்கொள்வார்.

ஒருமுறை, அப்படி யாசகம் வாங்கிய உணவை எடுத்துக்கொண்டு மலைக்குப் போகும்போது, ராமநாத பிரம்மசாரியின் தந்தை எதிர்ப்பட்டார். தனக்கு உணவு கொடுக்கும்படி வேண்டினார். ஆனால், ராமநாத பிரம்மசாரி மறுத்துவிட்டு, மலையேறிச் சென்று பகவானிடம் அந்த உணவை நீட்டினார்.

''உன் தந்தைக்கு உணவு கொடுத்துவிட்டு வந்தால்தான், நான் உணவு உண்பேன்'' என்று பகவான் சொல்ல, என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்தார். மறுபடியும் பகவான் வற்புறுத்த, ராமநாத பிரம்மசாரி மலையிலிருந்து கீழே இறங்கி தன் தகப்பனாரிடம் போய், ''வா... மலைக்கு மேலே போய், நீயும் சாப்பிடலாம்; பகவானும் சாப்பிடுவார்'' என்று அழைத்தார்.




ஆனால், மலைக்கு வர ராமநாத பிரம்மசாரியின் தந்தை மறுத்துவிட்டார். மேற்கொண்டு என்ன செய்வது என்று தெரியாமல், மறுபடியும் மலைக் குப் போய், ''தந்தை உணவு எடுத்துக்கொள்ள வரமாட்டேன் என்கிறாரே, என்ன செய்வது?'' என்று பகவானிடம் சொன்னார் ராமநாத பிரம்மசாரி. ''அதெல்லாம் எனக்குத் தெரியாது. உன் தந்தைக்கு உணவு கொடுத்துவிட்டு வா. அப்போதுதான் உண்பேன்'' என்று தீர்மானமாகச் சொல்லிவிட்டார் பகவான். வேறு வழியில்லாமல், மீண்டும் தன் தந்தையிடம் சென்று, அவருக்கு உணவு கொடுத்துவிட்டு, மீதம் இருந்ததை எடுத்துக் கொண்டு வந்து பகவானிடம் கொடுத்தார். பகவானும் அதை விருப்பத்தோடு உண்டார். தந்தைக்கு உணவு மறுத்துவிட்டு, குருவுக்குக் கொண்டு வந்து கொடுத்தால், அவர் உத்தமராகி விட முடியுமா? முடியாது. அதைத்தான் ராமநாத பிரம்மசாரிக்குப் புரிய வைத்தார் பகவான்.

'மாதா, பிதா, குரு, தெய்வம்' இந்த வரிசை யில், தனது இடம் எது என்று ஞானிக்குத் தெள்ளத்தெளிவாகத் தெரியும். தாய்க்கும் தந்தைக்கும் முதலிடம் அளிக்காமல், குருதான் முக்கியம் என்று அலட்டிக்கொண்டால், அதை குரு ஒருநாளும் ஏற்க மாட்டார். எது சரியான வழி என்பதைச் சிஷ்யனுக்கு சூட்சுமமாகப் புரிய வைப்பார். அதைத்தான் பகவானும் செய்தார். அன்றிலிருந்து தந்தைக்கு உணவு கொடுத்த பிறகே, ராமநாத பிரம்மசாரி, பகவானுக்கு உணவு எடுத்து வந்து கொடுப்பது வழக்கம்.

ராமநாத பிரம்மசாரி என்கின்ற அந்த இளைஞர் சூட்சுமமானவர். குருவுக்குச் செய்வதாக மட்டும் இல்லாமல், குருவின் அன்பர்கள் அனைவருக்கும் செய்வதே குரு சேவை என்பதைத் தெளிவாக உணர்ந்து, பகவானை நாடி வரும் அன்பர்களுடைய இடத்துக்குப் போய், அங்கே சுத்தம் செய்து, அவர்களுக்கு வேண்டிய உணவு கொடுத்து, நீர் எடுத்து வந்து கொடுத்து, மருத்துவ உதவி தேவையிருந்தால் அதையும் செய்து, பிறகு பகவான் ஸ்ரீரமணருடைய சந்நிதானத்துக்கு வருவது அவரது வழக்கம்.

இங்கு தத்துவ விசாரமோ, குருவின் எதிரே அமர்ந்து உள் முகமாகத் திரும்புதலோ முக்கியமாக இல்லை. குருவின் சேவைதான்... ஓடி, ஆடி சகலருக்கும் உதவி செய்வதுதான் மிக முக்கியமாக இருந்திருக்கிறது.



ஒருமுறை, பகவானுடன் அவரின் அன்பர் கள் எல்லாம் கிரி பிரதட்சணம் செய்ய வந்தார்கள். அப்போது, குரு பக்தி என்பதைப் பற்றி யாரேனும் சில மணித்துளிகள் பேச வேண்டும் என்கிற கட்டளை, அன்பர்களால் பிறப்பிக்கப்பட்டது. சிலர் பேசினார்கள். ராமநாத பிரம்மசாரி, தானும் பேச விரும்புவ தாகக் கை தூக்கினார். அவருக்கு அனுமதி அளிக்கப்பட்டது.

குரு பக்தி என்பதைப் பற்றி வடமொழி ஸ்லோகங்கள் என்ன சொல்கின்றன, தனது அனுபவங்கள் என்ன

உணர்த்துகின்றன என அரை மணி நேரத்துக்கு ராமநாத பிரம்மசாரி பேசினார். நேரம் முடிந்துவிட்டது என அன்பர்கள் சொன்னபோது, 'இன்னும் சிறிது நேரம் பேசுகிறேன்' என்று அனுமதி கேட்டு, மேலும் ஒரு அரை மணி நேரம் பேசினார். மறுபடியும் நேரத்தை நினைவுபடுத்தியபோது, இன்னும் கொஞ்சம் பேச வேண்டும் என்று கெஞ்சினார். இப்படியாக, இரண்டு மணி நேரத்துக்கு வடமொழி ஸ்லோகங்களிலிருந்தும், தமிழ்மொழிப் பாடல்களிலிருந்தும், மற்றவர் சொன்ன அனுபவங்களிலிருந்தும் தனது அனுபவங்களைக் கொண்டும் குரு பக்தியைப் பற்றி விரிவாகப் பேசினார். அதிகம் பேசாத அந்த இளைஞரை குரு பக்தியைப் பற்றித் தனது முன்னிலையில் பேச வைத்தவர் அந்த குருவேதான்.


பகவானுக்கும், பகவானின் அன்பர்களுக்கும் சேவை செய்த ராமநாத பிரம்மசாரிக்கு பிளேக் நோய் பற்றிக்கொண்டது. உடம்பில் கட்டிகள் தோன்றின. கட்டிகள் உடைந்து ரத்தமும், சீழும் பெருகின. ராமநாத பிரம்மசாரி தலையைத் தூக்க முடியாமல் துவண்டு கிடந்தார்.

அந்த இடத்தில் இருந்தால், பிளேக் நோய் தங்களுக்கும் பரவிவிடும் என்று பயந்து, அன்பர்கள் பச்சையம்மன் கோயிலுக்குப் போகத் தீர்மானம் செய்தார்கள். பகவானிடம் அவ்விதமாகவே சொன்னார்கள். ''ராமநாத பிரம்மசாரிக்குத் தவறாமல் உணவு அனுப்பி விடலாம்'' என்றும் விவரித்தார்கள்.

''நல்லது. ராமநாத பிரம்மசாரிக்கு உணவு அளிக்கும்போது, எனக்கும் உணவு அனுப்பி விடுங்கள். நான் இங்கேயே இருந்து ராமநாதனைப் பார்த்துக் கொள்கிறேன்'' என்றார் பகவான்.

அன்பர்களால் தட்டமுடியவில்லை. சிலர் விருபாக்ஷி குகையிலேயே இருந்தார்கள். சிலர் பச்சையம்மன் கோயிலுக்குப் போனார்கள். பகவானின் அருகில் இருந்ததால், ராமநாத பிரம்மசாரி உடல்நலம் தேறினார்.

வைத்திய வசதி அதிகமில்லாத அந்த நாட்களில், கொடும் நோயான ப்ளேக்கிலிருந்து தப்பிப்பது மிகக் கடினம். பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் அருகில் இருந்ததால், ராமநாத பிரம்மசாரி உயிர் பிழைத்தார்.



ஸ்ரீரமணர், மலையிலிருந்து கீழிறங்கி ரமணாஸ்ரமத்தில் வசிக்கத் துவங்கியபோது, ராமநாத பிரம்மசாரியும் தொடர்ந்து சேவை செய்யலானார். ஆஸ்ரமத்துக்குப் புதிதாக வருபவர்களுக்கு, படுத்துக்கொள்ள ஓலைப் பாயும், தலையணையாக ஒரு கட்டையும் தருவார். தானே தக்ளியில் நூல் நூற்று, அந்த நூலைக் கொண்டு நெய்த வேட்டியை மகாத்மாகாந்திக்குப் பரிசாகக் கொடுத்துவிட்டு வந்தார்.


ரமணாஸ்ரமத்துக்கு அருகில் உள்ள உள்ள பலாக் கொத்தில் வெங்கடராமையா, விஸ்வநாத சுவாமி, குஞ்சு சுவாமி போன்ற வர்கள் குடில் அமைத்து வசித்தனர். இந்த இருப்பிடங்களைச் சுத்தம் செய்வது ராமநாதரே. இப்படி ஓடியாடி சேவை செய்த ராமநாத பிரம்மசாரிக்கு 'பலாக் கொத்து சர்வாதிகாரி' என்று பெயரிட்டார்கள். இது பகவான் வரை போய் அவராலும் அங்கீகரிக்கப்பட்டது.

எந்த எதிர்பார்ப்பும் இல்லாத சேவைக்கு, மிகப் பெரிய மரியாதை கிடைத்தது. ஒருநாள் ராமநாதன் உணவு எடுத்துக் கொள்ளாமல் இருக்க, விசாரித்தபோது தந்தையார் திவசம் என்று பதில் வந்தது. 'அப்படியா... கூட இரண்டு இட்லி அவனுக்குப் போடு' என்று பகவான் உபசரித்தார். இதைக் கண்ட ராஜகோபாலன் என்பவர், 'இனி நானும் திவசம் செய்யப்போவதில்லை' என்றார். இது பகவானுக்குப் போயிற்று. 'ராமநாதன், எல்லாம் விட்டு இங்கு வந்துவிட்டான். ராஜகோபாலன் எதை விட்டார்?' என்றார். இப்படி, ஸ்ரீரமணர் போலவே எல்லாம் விட்டவர் என்று புகழப்பட்ட ராமநாதன் பிரம்மசாரி, 1942-ல் சென்னையில் உயிர்நீத்து பரமபதம் சேர்ந்தார். குருவின் அணுக்கத் தொண்டர்களுக்குப் பணி செய்து கிடப்பதே குருவுக்கான பூஜை என்று வாழ்ந்து காட்டிய ராமநாத பிரம்மசாரி, ஓர் அதிசயப் பிறவி. அவரை யோசிக்க யோசிக்க, உத்தமராய் வாழ்வது எப்படி என்று விளங்கிவிடும்.




ஸ்ரீரமணரின் இன்னொரு தொண்டர் மஸ்தான் சுவாமிகள். இஸ்லாமியர். வந்தவாசிக்கு அருகில் உள்ள தேசூரைச் சேர்ந்தவர். முற்பிறவி புண்ணியத்தால் இவருக்கு அடிக்கடி சமாதி நிலையில் ஆழ்ந்துவிடும் பாக்கியம் இருந்தது. ஆனால் சிலர், இதைப் புரிந்து கொள்ளவில்லை. பகவானின் மற்றொரு அணுக்கத் தொண்டரான அகிலாண்டம் அம்மையார், அவரின் நிலை தெரிந்து திருவண்ணாமலைக்கு அழைத்து வந்தார். மஸ்தான் சுவாமிகள், முதன்முதலாய் பகவானைப் பார்த்தபோது, பகவான் அசையாது சிலைபோல வீற்றிருந்தார். அவரது கண்கள் கருணை மழை பொழிந்தன. கணநேரம் எதிரே நின்ற மஸ்தானை அவை தொட்டுவிட்டு அகன்றன. மஸ்தானின் மனதுள் மாற்றம் உண்டாயிற்று. சுமார் எட்டுமணி நேரம் நின்ற நிலையிலேயே அசைவற்று ஆழ்ந்த நிலைக்குச் சென்றார். பகவானிடம் வருகிற அன்பர்களில் சிலரே, மிகப் பக்குவ நிலையில் இருப்பார்கள். முதல் சந்திப்பிலேயே, முதல் பார்வையிலேயே, மேலும் கனிந்து, தானே நழுவி விழும் பழத்தைப் போலிருப்பார்கள். மஸ்தான், இத்தகைய நிலையைச் சேர்ந்தவர் என்று பகவான் ஸ்ரீரமணரே கூறியிருக்கிறார். விருபாக்ஷி குகைக்கு வந்து, குகை நெருங்கும்போதே ஆழ்நிலைக்குப் போய்விடுவார் மஸ்தான். தன் நிலை பற்றிப் பேசுவதோ, பிறருக்கு நடுவே பிரபலமாக வேண்டும் என்ற

ஆசையோ இல்லாதிருப்பார். எந்த நிகழ்ச்சியிலும் பின்னணியிலேயே இருப்பார். தேசூரம்மா, பகவானுக்கு உணவளிக்க மளிகைப் பொருட்கள், பாத்திரங்கள் போன்றவற்றைக் கொண்டுவர, அதைத் தலையில் சுமந்து வருவதை, மஸ்தான் பெரும் பேறாகக் கருதினார்.



மஸ்தான் சுவாமிகள்

அகிலாண்டம்மாள்

கீரிப்பிள்ளை ஒன்று, ஆஸ்ரமத்தில் முன்னும் பின்னும் ஓடி, அவ்வப்போது பகவான் மடியில் அமர்ந்து கொள்ளும். ஆஸ்ரமத்து மயில்களை அது குதறிவிடப் போகிறதே என்று மஸ்தான் அதை விரட்ட, ஒரு கைத் தடியை வைத்திருந்தார். அதைப் பிடித்துக் கட்டிவிட்டால் அதுவும் ஆஸ்ரமத்து செல்லப் பிள்ளையாகிவிடும் என்று ஒருவர் சொல்ல, 'அதைக் கட்ட முடியாது. அது சித்த புருஷர். இங்கு தரிசனம் செய்ய பல சித்தர்கள் பல வடிவில் வருவார்கள். உங்களுக்குப் புரியவில்லை' என்றார் பகவான். ஒருமுறை மஸ்தான், அன்பர்களுடன் யாசகத்துக்குச் சென்று உணவு வாங்கி வந்தார். அதில் ஒரு அவித்த முட்டையும் இருந்தது. சகலரும் திடுக்கிட்டு நிற்க, பகவான் அந்த முட்டையை வீசியெறிந்துவிட்டு, உணவை சகலருக்கும் பகிர்ந்தளித்து, தானும் உண்டார். ஆச்சாரக் கூச்சல் இல்லாது, உயர்ந்த ஒரு மனப்பக்குவத்தை தன் அன்பர்களுக்கு பகவான் அறிவுறுத்தினார்.

மலையடிவாரத்தில் ரமணாஸ்ரமம் ஏற்பட்டபிறகு, ஒருநாள் கள்வர் புகுந்து, 'எல்லா காசையும் எடு. ஏகப்பட்ட கூட்டம் வருகிறதே, அவர்கள் தருவதை எங்கே வைத்திருக்கிறீர்கள்' என்று தடி கொண்டு மிரட்ட, பகவான்... 'எங்களிடம் ஏதுமில்லை' என்று சொல்ல, அவர்கள் நம்பாமல் அடிக்கத் துவங்கினார்கள். ஸ்ரீரமணருக்கும் தொடையில் இரண்டு அடிகள் விழுந்தன. மஸ்தான் சுவாமிகள் உடனே வெகுண்டு தடியோடு எழ, பகவான் அவரை அடக்கினார். 'நாம் சாதுக்கள். எதிரே வன்முறை நடந்தாலும், அதை மௌனமாக ஏற்க வேண்டுமே ஒழிய, பதிலுக்கு வன்முறை கூடாது' என்று அறிவுறுத்த, சட்டென்று மஸ்தான் அடங்கினார். இது பகவானின் அன்பர்களுக்குத் தரப்பட்ட மிகப் பெரிய பாடம். நான் என்கிற அகங்காரம், முற்றிலும் அழியாது உள்ளே பதுங்கி, திடீரென்று வெளிக் கிளம்பி, இதுவரை கடைப்பிடித்து வந்த உயர்நிலை அமைதியைக் குலைத்துக் குப்புறத் தள்ளும். எனவே எது நேரிடினும் அமைதியாக இருப்பது என்பதைக் கடைபிடிக்க வேண்டும் என்கிற பாடம்.

அகிலாண்டம்மாளும் மஸ்தான் சுவாமியும் தேசூரில் ரமண மடா லயம் ஏற்படுத்தினார்கள். இதுதான் பகவான் பெயரில், உலகில் தோன்றிய முதல் மையம். 'ஆஹா... ரமண மடாலயம் வந்துவிட்டது. இனி என் பேரும் புகழும் பிரபல மாகப் போகிறது' என்று பகவான் வேடிக்கையாகக் கூறினார். தேசூரைச் சுற்றியுள்ள பலரும் பகவானைப் பற்றி அறிய, மஸ்தான் சுவாமியிடம் வந்து பேசுவார்கள். தலை மழித்து, துறவு உடை அணிந்து, அமைதியே உருவாக இருக்கும் மஸ்தான் சுவாமி, தேசூர் விட்டு, மடம் எனும் கிராமத்தில் வாசம் செய்தார்.

உடல் நலம் குன்றி, 1938-ஆம் வருடம் நவம்பர் 8-ஆம் தேதி தீபாவளி நன்னாளில் தேகம் நீத்தார். இவர் மறைவு பகவானிடம் சொல்லப்பட்டது. குஞ்சு சுவாமிகளை பகவான் அழைத்து, மடம் கிராமத்துக்குச் சென்று சமாதி அமைக்கும்படி கூறினார். அதற்கான திருநீறு, கற்பூரம் போன்ற பொருட்கள், சமாதிக் குழியில் இடுவதற்காக தன் கையாலேயே தந்து, எவ்வாறு சமாதி அமைக்க வேண்டும் என்பதையும் விளக்கினார். பகவான் தம் அன்னை அழகம்மை, பசு லட்சுமி, மஸ்தான் சுவாமி மூவருக்கும் சமாதிக்கான பொருட்கள் தந்து சிறப்பித்தார். ஓர் இஸ்லாமியர், பகவானிடம் முழுமையாய் சரணடைந்ததும் பகவான் அவரை நேசித்ததும் உயர்வானவை. மதம் தாண்டிய நேசத்தில் பகவானும் அவரது அன்பர்களும் திளைத்திருந்தார்கள் என்பது மஸ்தான் வாழ்வின் மூலம் தெரிகிறது.




விருபாக்ஷி குகையில் பகவான் இருக்கும் போது, அவருடைய அன்னை அழகம்மை அடிக்கடி வருவார். இரவு கீழிறங்கி அன்பர் கள் வீட்டில் தங்குவார். இதைக் கண்ட பகவானின் தொண்டர்கள் சிலர், தாயாருடன் பகவான் இங்கிருந்து வேறிடம் போய் விடுவார் என்று பயந்தனர். தாயார் ஆயினும் பெண்கள் எவரும் விருபாக்ஷி குகையில் தங்கக் கூடாது என்று கட்டளையிட்டனர். சிலர், குருவின் மௌனத்தைத் தவறாகப் புரிந்து கொண்டு, தான் அதிகம் அறிந்தவனாகக் கற்பனையில் ஈடுபட்டு, நெஞ்சு நிமிர்த்தி விதிமுறைகள் பேசத் துவங்கினார்கள். எதிலும் பிறழாதவர்களாகக் கம்பீரம் காட்டுவார்கள். ஆண் உயர்வு, பெண் தாழ்வு என்று அலட்டுவார்கள். சத்தியத்தின் ஒளி உள்ளே இருப்பின் இப்படி அற்பமான பேச்சுக்கள் எழாது. 'ஏன் பெண்கள் வேண்டாம்னு சொல்றேன்னா...' காரணங்கள் கூடிக் கொண்டே போயின.

'அம்மா அவர்கள் இங்கு இருக்கட்டும். நாம் வேறு இடம் போவோம்.' ஒரே வீச்சில் ஸ்ரீரமணர், அவர்களை துடைத்தெறிந்தார். கிளம்பத் தயாரானார். பேசிய கூட்டம் இருட்டாயிற்று. சூரியன் நகர்ந்துவிட்டால் உலகம் ஏது? காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டனர். சரி. ஒரே வார்த்தையில் அந்த சாந்த சொரூபி தன்னிருப்பிடம் திரும்பினார். மறுபடி பிரச்னை வந்தது. கணபதி முனிவரின் வீட்டுப் பெண்கள் விருபாக்ஷி குகையில் தங்க விரும்ப, எதிர்ப்பு கிளம்பியது. கணபதி முனி கோபமானவர். 'இன்று இரவு என்ன நடக்கும் தெரியுமா?' என்று சீறினார். இரவு பலத்த மழை, இடி மின்னல் காற்று. இடி, கோயில் தேரில் இறங்கி தீக்கிரையாயிற்று. விதிமுறைப் போர்வையை மூடிக் கொண்டனர். ஆனாலும், பெண்கள் தங்க வசதி வேண்டுமே!

கந்தசாமி, பகவான் தொண்டர். மலை யில் அலைந்து இடம் கண்டு பிடித்தார். பகவானிடம் காட்டினார். நீர் கசியும் பாறையைப் பார்த்துவிட்டு பகவானும் ஒப்புதல் தந்தார். கள்ளிக்காரைச் செடிகளை ஒருவராகவே அப்புறப்படுத்தி, மலையிலிருந்து உருண்டு விழுந்த பாறைக்கற்களை அடுக்கி அழகாய் ஒரு ஹால் இரண்டு அறைகள் என்று இருப்பிடத்தை உருவாக்கினார். கந்தசாமி, தொழில்முறைக் கொத்தனார். ஆனால், சகலமும் விட்டுவிட்டு பகவானிடம் சரணடைந்திருந்தார். அவருடைய தொழிற்திறன் இப்போது ஒரு நல்ல கட்டடத்தை மலையில் உருவாக்க உதவியது. அவர் ஒருவராகவே இரவு பகல் பாராது கடினமாக உழைத்துக் கட்டிய இடம் இது என்று பகவான் சொல்லிச் சொல்லிப் பூரிப்பாராம். அந்தக் கட்டடம், கந்தசாமியின் பெயரால் கந்தாஸ்ரமம் என்று வழங்கலா யிற்று. குருவுக்காக உழைத்தவர்கள் பெயர், பொன்னெழுத்தில் பொறிக்கப்படும். இன்று வரை அந்த இடம் கந்தாஸ்ரமம்தான். ராமநாத பிரம்மசாரி, மஸ்தான் சுவாமி, கந்தசாமி போன்ற



தொண்டர்கள் வாழ்வு பார்க்கும் போது, அது மிகப்பெரிய படிப்பினையாகிறது. சரணாகதி என்பதற்கு இவர்கள் சாட்சிகளாய் இருக்கிறார்கள். குரு, இவர்களை நல்ல கதிக்கு இட்டுச் செல்கிறார்.

ஸ்ரீரமணரின் சரித்திரம் சொல்லும்போது, குஞ்சு சுவாமிகளைச் சொல்லாது இருக்க முடியாது. அது தங்கத்தில் செய்த இன்னுமொரு பெயர்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் பற்றி அறிய விரும்புகிறவர்கள் மிகக் கட்டாயமாக, ஸ்ரீகுஞ்சு சுவாமிகள் எழுதிய 'எனது நினைவுகள்' புத்தகத்தைப் படித்தாக வேண்டும். திருவண்ணாமலை ஸ்ரீரமணாஸ்ரம வெளியீடான இந்தப் புத்தகம் எளிய விதத்தில் பகவானை நமக்கு அறிமுகப்படுத்துகிறது. குரு வேண்டும் என்கிற வேட்கையை நமக்குத் தெளிவாகத் தெரிவிக்கிறது.

1897-ம் ஆண்டு ஜனவரியில், கேரளத்து பாலக்காட்டுக்கு அருகில் உள்ள செறக்கொடு என்கிற சிறிய கிராமத்தில் பிறந்தார் ஸ்ரீகுஞ்சு சுவாமிகள். மற்ற குழந்தைகளைப்போல ஓடியாடியோ, பிடிவாதம் பிடித்து அழுதோ செய்யாது, ஓர் இடத்தில் அமைதியாக அமர்ந்திருப்பார். இந்தக் குணத்தைக் கண்ட அவரது பெற்றோர், குழந்தையின் தாய்மாமனிடம் ஜாதகம் காட்டினார்கள்.

''இந்தக் குழந்தை தெய்விக சம்பத்து நிறைந்தது. அபூர்வமான குணம் கொண்டது. எனவே, ஆகார விஷயங்களில், மிக ஆசாரத்தோடு இருத்தல் நலம்'' என்றார் தாய்மாமன்.

நல்ல பெற்றோர்கள் அமைந்த காரணத்தால், ஸ்ரீகுஞ்சு சுவாமிகள் மிகச் சரியானபடி வளர்க்கப்பட்டார் தகப்பனா ருடன் குளத்தில் நீராட, காலையில் போகும்போது, மறு கரையில் வைதிக பிராமணர்கள் நீரில் நின்றும், படித்துறையில் அமர்ந்தும் மந்திர ஜபம் செய்வது கண்டார். அவருக்கும் அவ்விதம் செய்ய வேண்டுமென்ற ஆவல் உண்டாயிற்று. ஆனால், யாரிடம் கேட்பது என்று தெரியவில்லை. அன்று இரவு கனவில் ஜடா முடியும் விபூதியும் கொண்ட கோலத்தோடு பரமேஸ்வரன் தோன்றி, சிவ பஞ்சாட்சர மந்திரம் உபதேசித்தார். விடிந்ததும், அந்தக் கனவு நினைவில் இருந்தது. மந்திரம் மறந்துவிட்டது. கை நழுவ விட்டோமே என்று மனம் வருத்தமடைந்தது. ஆனால், அன்று இரவு சிவன் மறுபடியும் கனவில் தோன்றி மீண்டும் பஞ்சாட்சர மந்திரத்தை உபதேசிக்க, விடியலில் அது நினைவில் தங்கியது. அன்று முதல் இடைவிடாது சிவபஞ்சாட்சர ஜபம் செய்து வந்தார் ஸ்ரீகுஞ்சு சுவாமிகள்.

ஒரு விபூதிப் பை வேண்டும் என்று ஆசை வந்தது. சிவ பஞ்சாட்சரம் சொல்லியபடியே, தோன்றும்போதெல்லாம் திருநீறு இட்டுக்கொள்ள வேண்டும் என்கிற ஆவல் எழுந்தது. அன்று கனவில் சிவன் அவருக்கு ஒரு மரத்தைக் காட்டி, அந்த மரத்தின் கீழ் உள்ள காசுகளை எடுத்து விபூதிப் பை வாங்கிக் கொள்ளச் சொன்னார். சொன்னபடியே, மரத்தின் கீழ் மூன்று காலணாக்கள் இருந்தன. கடையில் விபூதிப் பை விலை கேட்டபோது, மூன்று காலணாவுக்கு ஒரு விபூதிப் பை என்று சொல்லப்பட்டது. கூடவும் கொடுக்காது, குறையவும் தராது மிகச் சரியானபடி அவர் ஆசை நிறைவேறியது.

விபூதிப் பை ஏது என்று தகப்பனார் கேட்க, குஞ்சு சுவாமி விஷயம் சொன்னார். தந்தை சந்தோஷப்பட்டார்.

சிறிது நாட்கள் கழித்து ருத்திராட்ச மாலை அணிந்து கொள்ள ஆசை வந்தது. நண்ப னுடன் குளம் நோக்கி நீராடப் போகும்போது, நண்பன் ஏதோ காரணம் சொல்லிப் பிரிய, அடுத்த ஐம்பதடி தொலைவில், போகிற வழியில் ஒரு பெரிய தாமரைப் பூ கிடந்தது. எடுத் துப் பார்க்க, அந்தப் பெரிய தாமரைப் பூவுக்கு நடுவே, தங்கத்தில் கோத்த ருத்திராட் சம் இருந்தது. 'இது என்ன அதிசயம்!' என வீடு வியந்தது. இன்னும் குஞ்சு சுவாமியைக் கொண்டாடியது. இந்தப் பிள்ளை ஒரு வரம் என்று கவனமாய் பேணிக் காத்தது.

திருவிளையாடற் புராணம் தமிழ் காவியத்தைப் படித்து, மலையாளத்தில் விளக்கி, தொடர் சொற்பொழிவு நிகழ்ச்சி ஒன்று ஊருக்கு அருகே நடந்தது. அதைக் கேட்க தந்தையும் மகனும் போவார்கள். கேட்டதை மனதில் பதித்துக்கொண்டு, உறவினர்களுக்கு விவரித்துச் சொல்வார் குஞ்சு சுவாமிகள். அவர் கதை போல் சொல்வதைக் கேட்டு, ஊரே சந்தோஷப்படும். என்ன ஞானம்... என்ன ஞானம் என்று வியக்கும்.


ஊருக்கு, கௌபீனம் மட்டுமே தரிந்த சாதுக்கள் வர, அவர்களை வந்து தரிசிக்கும்படி தந்தை வற்புறுத்தி அழைப்பார். சாட்சாத் பரமசிவனே வந்து மந்திர உபதேசம் சொல்கையில், யாரைப் போய் தரிசிப்பது என குஞ்சு சுவாமி மறுத்து விட்டார்.

பிறகு, எலப்புளி சுவாமிகள் என்கிற பெரியவர் ஊருக்கு வந்தபோதும், ஊர் அவரைக் கொண்டாடி, வேண்டுமென்ற உபசாரங்கள் செய்தது. இவரையும் தரிசிக்க வர குஞ்சு சுவாமி மறுத்துவிட்டார். ஆனால், தந்தை விடவில்லை. வேறு வேலைக்குப் போக வேண்டும் என்று தந்திரமாய் அழைத்துப் போய், எலப்புளி சுவாமி முன்பு நிறுத்திவிட்டார்.

''கனவில் வந்து கடவுள் உபதேசம் செய்தார் என்பதால், உயர்வாகி விடமுடியுமா..? பதினாறு வயதில் பிரசங்கம் செய்கிறாய் என்பதால் எல்லாம் தெரிந்தவனாகிவிடுவாயா? எது கேட்டாலும் கிடைக்கிறது என்று பேசி இறுமாந்து விடாதே! இவை ஆரம்ப கால சித்திகள். வேதாந் தம் தெரியாமல், முறைப்படி படிக்காமல் இறை வழியில் முன்னேற முடியாது. எனவே, கர்வம் விட்டு, என்னிடம் வா!'' என்று எலப்புளி சுவாமி சொல்ல, இளைஞருக்கு என்ன செய்வது என்று புரியவில்லை. சரி என சம்மதித்தார்.

எலப்புளி சுவாமியிடம் தஞ்சம் அடைந்தார். ''என்ன படித்தாலும், என்ன மந்திர ஜெபம் செய்தாலும் அக்கால முனிவர்கள் அடைந்த உன்னத நிலையை அடைய முடிய வில்லையே..! அப்படிப்பட்ட முனிவர்கள், இறைவனைத் தன்னுள் கண்டவர்கள் இப்போது யாரும் இல்லையா? அவை பழங்கதைகள்தானா?'' என குருவிடம் குஞ்சு சுவாமி கேட்டார். ''ஏன் இல்லை... தமிழ்நாட்டில் திருவண்ணாமலை என்கிற தலத்தில், பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்கிற மகான் இருக்கிறாரே!'' என்றார் எலப்புளி சுவாமிகள். சடேரென்று குஞ்சு சுவாமியின் உடம்பில் மின்சாரம் பாய்ந்தது போன்ற அதிர்ச்சி உண்டாயிற்று. ரமண மகரிஷி... ரமண மகரிஷி என்று அவர் பெயரே நெஞ்சுக்குள் திரும்பத் திரும்ப ஓடியது. வேதாந்தப் படிப்பு, அதனோடு சில அப்யாஸங்கள் செய்து வந்தும் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லையே என உள்ளே அயர்ச்சி தோன்றியது.

இதற்கிடையே, எலப்புளி சுவாமிகள் தமிழ்நாட்டின் சில முக்கியத் தலங்களுக்கு யாத்திரை போய் வந்தார். அவரோடு சில தனவந்தர்களும் போய் வந்தார்கள்.



இன்ன மாதத்தில், இன்ன நாளில், இன்ன நேரத்தில், தான் சமாதி அடையப் போவதாக, எலப்புளி சுவாமி அறிவித்தார். 'தனக்கு அடுத்த வாரிசு குஞ்சு சுவாமிகள்' என்றார். நாள் நெருங்கியது. சமாதிக் கட்டடங்கள் எழும்பின. குஞ்சு சுவாமிக்கு இவை எதுவும் புரிபட வில்லை. இனம் புரியாத வேதனை வாட்டியது. வாழ்க்கை முழுவதும் வெறும் நாடகமாக இருக்கிறதே என்கிற துக்கம் முட்டியது. கொள்ள முடியாமலும் சொல்ல முடியாமலும் தவித்தார். ஸ்ரீரமணரைத் தரிசிக்க வேண் டும் என்று குருவிடம் குஞ்சு சுவாமி கேட்க, 'என்ன, விளையாடுகிறாயா! நான் மகா நிர்வாணம் அடையப் போகிறேன். இந்த நேரத்தில் என்னை விட்டு எங்கே போகிறாய்?' என்று கூச்சலிட்டார். வேறு வழியின்றி, அவரின் மகா நிர்வாண நாளுக்குக் காத்திருக்க வேண்டிய தாயிற்று. குறிப்பிட்ட மாதம், நாள், குறிப்பிட்ட தருணம் வந்ததும் எலப்புளி ஸ்வாமிகள் சமாதிக் குழியில் உட்கார்ந்தார். தலையாட்டல் நின்றதும், தட்டைக் கருங்கல்லை நகர்த்தி, சமாதியை மூடிவிட ஏற்பாடு! ஊர் ஜனம் கடவுளர் பெயர்களை உரக்க உச்சரித்துக் கொண்டிருந்தது. சுவாமிகள் தலையாட்டம் நிற்கவில்லை. நேரம் நகர்ந்து கொண்டிருந்தது. உள்ளே இருக்க முடியாமல், எலப்புளி சுவாமிகள் சடாரென்று மேலே ஏறி, கூட்டத்திற்கு நடுவே புகுந்து ஓடி மறைந்தார். கேலியும் கோபமுமாய் ஜனங்கள் கூவினார்கள். எல்லாச் சாமியார்களும் இப்படித்தான் என்று இழிவுபடுத்தினார்கள். பிற்பாடு, ஒரு தோப்பில் ஒளிந்திருந்த எலப்புளி சுவாமி, கூட வந்த தனவந்தரோடு ஊரை விட்டு வெளியேறினார்.

ஸ்ரீரமண மகரிஷியிடம் போக வேண்டும் என்கிற தாபம், குஞ்சு சுவாமிகளுக்கு இப்போது மேலும் அதிகரித்தது. எவருக்கும் சொல்லாது வீட்டை விட்டு குஞ்சு சுவாமிகள் வெளியேறி னார். அவரது ஆன்மிக நண்பர் ஏற்கெனவே திருவண்ணாமலைக்குப் போய் ஸ்ரீரமணரிடம் சேர்ந்துவிட்டார் என்று செய்தி கிடைத்ததால், அங்கு போனால் உதவிக்கு ஆள் இருக்கிறது என்ற நம்பிக்கையும் ஏற்பட்டது.

பயணங்களில் பல தடை கடந்து, குஞ்சு சுவாமி திருவண்ணாமலை அடைந்தார். சிலர் வழிகாட்ட, மலை ஏறினார். மிக உன்னதமான ஓர் ஆத்மாவை தரிசிக்கப் போகிறோம் என்கிற ஆவல், பரபரப்பு தொற்றிக் கொண்டது. போய் பகவானை பார்த்ததும் என்ன செய்ய வேண்டும் என்று மனதுள் பலமுறை யோசித்து வைத்துக் கொண்டார். மலையேறி அங்கு பகவானைக் கண்டதும் மெய் சிலிர்த்து நின்றார். விழுந்து வணங்கினார். ஆன்மிக நண்பர் ஸ்ரீராம கிருஷ்ணர், குஞ்சு சுவாமியை வரவேற்றார். பகவானிடம் அறிமுகப்படுத்தினார். 'சரி' என்று பகவான் தலையசைத்தார்.

குஞ்சு சுவாமி வந்த அன்று, பகவானுக்குத் தொண்டு செய்துகொண்டிருந்த அண்ணா மலை என்பவர் ப்ளேக் நோயினால் இறந்து விட்டிருந்தார். அவரின் இறப்புக்குத் துக்கப் பட்டு பகவானின் தாய் வாய்விட்டு அழ, 'அண்ணாமலை இறந்தால் என்ன... இந்த பிள்ளை வந்துவிட்டானே' என்று தாய்க்கு பதில் சொன்னார். பகவான் ஸ்ரீரமணருக்கு அண்மையில் குஞ்சு சுவாமிக்கென ஓர் இடம் ஒதுக்கப்பட்டுவிட்டது என்பதை, அப்போது அறிந்துகொள்ள முடியவில்லை.

ஆஸ்ரமத்தில் உள்ளவர்கள் அண்ணாமலை அடக்கத்துக்கு போய்விட, பகவான் கூழ் தயாரித்து, தட்டில் விட்டு ஆற்றினார். ஒரு கூடையைத் திறந்தார். உள்ளே இருந்து நான்கு நாய்க் குட்டிகள் ஓடி வந்தன.

'நான்கையும் பிடி' என்று பகவான் கட்டளை யிட்டார். நான், மகாவாக்கியங்களைப் பிடித்துக் கொள்ள வேண்டும் என்று குஞ்சு சுவாமி தீர்மானித்தார். 'ஒவ்வொன்றாக விடு!' - பகவான் அடுத்துப் பேசினார். மனதின் ஆசாபாசங்களை ஒவ்வொன்றாக விடவேண்டும் என்று குஞ்சு சுவாமிகள் சங்கல்பம் செய்துகொண்டார்.

நாய்க் குட்டி சிறுநீர் கழித்தது. 'துடை' என்று பகவான் கட்டளையிட்டார். மனத்தில் மாசுகள் இன்றி, சுத்தமாகத் துடைத்து வைத்துக் கொள்ள வேண்டும் என்று, பகவான் ஸ்ரீரமணர் தன்னிடம் பேசிய முதல் மூன்று வாக்கியங் களையும் அவர் உபதேசித்த மந்திரங்களாக எடுத்துக் கொண்டார் குஞ்சு சுவாமிகள்.

பகவானுக்குப் பணிவிடை செய்யும்

பாக்கியம் வெகு விரைவில் கிட்டியது. அவரோடு தனித்திருக்கும் பேறும் வந்தது. எந்தப் பண உதவியும் செய்யாமல், பகவானுக்கு வரும் பி¬க்ஷயில் பங்கு போட்டுச் சாப்பிடுகிறோமே என்ற கவலையும் இருந்தது.

'இங்கே நல்லபடியாக சில மாதங்கள் இருந்துவிட்டோம்; உள்ளே ஆழ்ந்து பார்க்க முடிகிறது. இதை வீட்டிலேயே இருந்து செய்தால் என்ன? ஏன் பகவானுக்குச் சுமையாக இருக்கவேண்டும்?' என்று நண்பரோடு விவாதித்து, ஊர் வந்தார்.

ஆனால், பகவான் சன்னதியில் கிடைத்த அமைதி, ஆழ்ந்து நோக்குதல் வீட்டில் கிடைக்கவில்லை. தனி அறையில் இருந்தும் பயனில்லை. மறுபடி பகவானிடம் போகும் எண்ணம் பொங்கியது. இந்த முறை வீட்டில் முறையாக விடைபெற்று, திருவண்ணாமலை வந்தார்.

இதுதான் தன் இடம் எனத் தெளிந்தார். பகவான், போனதற்கும் கோபித்துக் கொள்ளவில்லை; வந்ததற் கும் பாராட்டவில்லை. ஒருநாள், தனிமையில் பகவானோடு இருக்கை யில், தன் வாழ்வு முழுவதையும் விளக்கி, தேடல் பூரணமாகவில்லையே என்று வருத்தப்பட்டார். 'உன்னை நீ அறிந்தாயாகில் உனக்கொரு கேடுமில்லை என்று கைவல்யம் சொல்கிறதே' என்று பகவான் பதில் சொன்னார்.

''தன்னை எவ்விதம் அறிந்துகொள்வது பகவான்?''

''நீ யார் என்று விசாரி!''

''எப்படி விசாரிப்பது பகவானே?''

''எங்கு நினைப்பு தோன்றுகிறதோ, அங்கே பார்!''

''அதை எப்படிப் பார்ப்பது பகவான்?''

''மனத்தை உள்முகப்படுத்தி இதயத்தில் பார்!''

இதைச் சொல்லிவிட்டு, பகவான் ஸ்ரீரமணமகரிஷி மௌனமானார். அதேவிதமாய் குஞ்சு சுவாமிகளும் மௌனமாக இருந்தார். ஸ்ரீரமண மகரிஷியின் அருட் பார்வை குஞ்சு சுவாமியின் மீது நிலைத்திருந்தது. அந்தக் கணத்திலேயே உள்ளே ஒரு மாறுதல் ஏற்பட்டு, குஞ்சு சுவாமிக்குள் அமைதியும் ஆனந்தமும் தோன்றின.

இப்படியாக, குஞ்சு சுவாமியின் வாழ்வுப் பயணம், மிகச் சரியான இடத்தில் வந்து அமைந்தது. நல்ல குருவை அடைய, பல தடைகள் தாண்டித்தான் வர வேண்டும். ஊராரின் கேலிக்கு ஆளான எலப்புளி சுவாமிதான், பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் பற்றித் தெரிவித்தார்.

ஸ்ரீகுஞ்சு சுவாமிகள், தொடர்ந்து பகவானோடு வாழ்ந்து ஆன்மிகச் சாதனை செய்யலானார்.

**வி**ளாச்சேரியைச் சேர்ந்த ரங்கன் என்பவர் பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் பள்ளித்தோழர். போலீஸ் இன்ஸ்பெக்டராக இருந்த ரங்கனின் தந்தையும் வக்கீலாக இருந்த பகவானின் தந்தை சுந்தரமும் நண்பர்களாக இருந்ததால், அவர்களின் குடும்பமும் நெருங்கிப் பழகிவந்தது. ரங்கனும் பகவானும் திருச்சுழியில் ஒரே பள்ளியில், ஒரே வகுப்பில் படித்து வந்தார்கள்.

போலீஸ் இன்ஸ்பெக்டருக்கு பணிமாற்றம் வர, அவர்கள் பிரிய நேர்ந்தது. பிறகு பகவானும் அவர் மூத்த சகோதரரும் மதுரைக்குப் போய் பள்ளியில் சேர, ரங்கனும் படிப்பதற்கு மதுரை வந்தார். வெவ்வேறு பள்ளியில் படித்தாலும், இருவரும் ஒருவருக்காக மற்றவர் காத்திருந்து வைகைக் கரையில் விளையாடிவிட்டுப் போவார்கள்.

பகவான் ஸ்ரீரமணர் மதுரையை விட்டு நீங்கி, திருவண்ணாமலை வந்ததும் தொடர்பு விட்டுப்போயிற்று.

பகவான், பிராமண சுவாமி என்று அழைக்கப்படுவது தெரிந்து, ரங்கன் அவரை பார்க்கப் போனார். விருபாட்சி குகையில் அவரைத் தரிசித்தார். எதுவும் பேசவில்லை. பிறகு மீண்டும் தன் குடும்பத்துடன் போய், ''என்னை அடையாளம் தெரிகிறதா?'' என்றுகேட்க 'ரங்கன்' என்று மெல்லிய, ஆழ்ந்த குரலில் பகவான் பதில் சொன்னார்.

'நீங்கள் மிகப் பெரிய நிலையை அடைந்துவிட்டீர்கள்' என்று அன்பும் வியப்புமாய் ரங்கன் சொல்ல, பகவான்... 'இக்கரைக்கு அக்கரை பச்சை' என்றார்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி, தன் உன்னத நிலையைப் பாராட்டிக் கொள்ளாதது மட்டுமல்ல, மற்றவர் பாராட்டினாலும் மெள்ள அதை ஒதுக்கினார். 'இது எனக்கு மட்டும் உரித்தானதல்ல, உனக்கும் கைகூடும்' என்கிற அர்த்தத்தில் பதில் இருந்தது.

இன்னொரு முறை சந்திக்கும்போது, பகவான் அடைந்ததிலெல்லாம் எனக்கும் ஒரு பங்கு இருக்கிறது என்று ரங்கன் சொல்ல, பகவானின் தாய், 'ரங்கன் சொல்வதைக் கேட்டாயா?' என்றார். 'ஆமாம்! அவனும் நம்மில் ஒருவனல்லவா! அவனுக்கும் பங்கு உண்டு' என்றார்.

'இந்த ஞானம் என் சொத்து' என்று இடுக்கிக் கொள்ளும் தன்மையே இல்லை. ஆமாம் என்று சொல்லிவிட்டால் சம்பந்தப்பட்டவருக்கு சந்தோஷம். அத்தோடு அந்தப் பேச்சும் முடிவுக்கு வந்துவிடும். மேற்கொண்டு தொடர முடியாது.

பகவான் சமதிருஷ்டி உள்ளவர். சகலரையும் ஒரேவிதமாக பாவிப்பவர். ஆனாலும் ரங்கன் மீது அவருக்கு நல்ல வாஞ்சை இருந்தது. ரங்கன் வேலை தேடி சென்னைக்குப் போனார். போகும் முன் பகவானைத் தரிசித்தார்.

'ஆண்கள் எங்கேயும் போய், எப்படியும் பிழைத்துக் கொள்ளலாம். ஆனால் வீட்டில் உள்ளவர்கள் அப்படியில்லையே! குடும்பத்துக்கு என்ன செய்திருக்கிறாய்?' என்று ரங்கனைக் கேட்டார். 'வேண்டியதைச் செய்திருக்கிறேன்' என்று ரங்கன் பதில் சொல்லிவிட்டு, சென்னைக்குப் போனார்.

ரங்கனின் தாய் தரிசனத்துக்கு வந்தபோது, ரங்கனின் குடும்பம் பற்றி பகவான் விசாரித்தார். 'போகும்போது கொஞ்சம் காசு கொடுத்து விட்டுப்போனான். அது செலவாகி விட்டது. இப்போது திண்டாட்டம்தான்' என்று ரங்கனின் அம்மா பதில் சொன்னார். மறுபடி ரங்கன் தரிசிக்க வந்தபோது, 'என்னப்பா... குடும்பத்துக்கு தேவையானது செய்தேன் என்றாய். உன் அம்மா, உன் குடும்பம் திண்டாடுகிறது என்கிறாளே?' என்று கேட் டார். ரங்கன் பதில் சொல்ல வில்லை.

அன்று இரவு தூங்கிக் கொண்டிருந்த ரங்கனுக்கு அருகே பகவான் வந்து உட்கார்ந்தார். 'என்ன ரங்கா, மிகவும் கவலையாக இருக் கிறதா? உன் கஷ்டம் போக ஒரு பத்தாயிரம் ரூபாய் போதுமா?' என்று வாஞ்சையோடு கேட்டார். ரங்கன் பதில் சொல்லவில்லை.

சாதாரண மனிதருக்கு ஒரு குடும்பம். ஆனால் துறவிக்கோ பலநூறு குடும்பங்கள். எல்லோர் கவலைகளும் அவர் கவலைகள் ரங்கனுக்கு மதுரையில் உள்ள ஒரு மோட்டார் கம்பெனியில் மேனேஜர் வேலை கிடைத்தது. பிறகு அதே கம்பெனியில்பேருந்து விற்கும் ஏஜென்டாக மாறினார். சம்பளம் மட்டுமில்லாது ஒவ்வொரு பேருந்து விற்பனைக்கும் நல்ல கமிஷன் கிடைத்தது. எல்லாம் சேர்த்து பத்தாயிரம் ரூபாய் மிச்சம் பிடிக்க முடிந்தது.

இதை வைத்து தன் இரண்டு பெண்களுக்கும் தன் அண்ணன் மகளுக்கும் ரங்கன் ஐந்து நாட்கள் விமரிசையாய் திருமணம் நடத்தினார்.

நடுவே மறுபடி வேலையில்லாதபோது, ரங்கனிடம் 'மேனேஜர் வேலை கிடைத்தால் செய்வாயா?' என்று பகவான் கேட்டார்.



சில நாட்களிலேயே சென்னையில் ஸ்ரீராம விலாஸ் மோட்டார் கம்பெனியில் வேலை கிடைத்தது. பகவான் மறைமுகமாக ரங்கனிடம் அவருக்கு வருவதைச் சொன்னபடிதானிருந் திருக்கிறார். பாவம், ரங்கனால் அதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடியவில்லை.

சிறுவயதில், குளத்தில் நீச்சல் அடித்ததுபோல ரங்கனும் பகவானும் பாண்டவ தீர்த்தத்தில் குளித்து மகிழ்ந்தார்கள்.

அப்போது இஞ்சிக்கொல்லை தீட்சிதர், தரையில் படுத்து தூக்கத்தில் நகத்தால் மண்ணை கீறிக் கொண்டிருந்தார்.

'தக்கிளி கிடைத்துவிட்டதா?' என்று பகவான் கேட்க, விழித்துக் கொண்டுவிட்டார். ஆவணி அவிட்டம் வருகிறது; அதனால் தக்கிளியில் நூல்

நூற்க வேண்டும் என்று தீட்சிதர் கனவு கண்டு கொண் டிருந்தாராம். பகவானுக்கு அவர் கனவில் நடப்பதும் தெரிந்திருக்கிறது.

'ஞானிகள் முக்காலும் உணர்ந்தவர்களா? -ரங்கன் கேட்டார்.

'முக்காலும் உணர்வதெல் லாம் ஞானிகளுக்குச் சாதாரண விஷயம். பிற உலகங்களில் நடப்பது கூட தெரியும். நமது உலகம் போலவே பிற உலகங் கள் இருப்பதும் உண்மை.

சாதாரண மனிதனுக்கு எல்லா அறிவையும் கொடுத்துவிட்டு எதிர்காலத்தில் என்ன நடக்கும் என்று தெரியாதபடி கடவுள் வைத்திருக்கிறார்' என்றார்.

மூன்று காலங்களும் உணரும் ஞானிகள் சாதாரணர்கள் அல்ல என்று சூசகமாக இங்கே சொல்லப்பட்டது.

வேறொரு முறை, 'சந்நியாசம் வாங்கிக் கொள்ளலாம் என்று இருக்கிறேன்' என்று ரங்கன் சொன்னபோது, பக்த விஜயம் என்கிற புத்தகத்தைக் கொண்டு வந்து, அதில் விட்டோபா என்கிற பக்தரின் வாழ்வைப் படிக்கச் சொன்னார் பகவான்.

விட்டோபா, குடும்பம் விட்டு போனபோது அவர் மகன் ஞானதேவ் கூடவே போய், 'ஒருவன் மனம் காட்டுக்கு போனாலும் வீட்டுக்குப் போனாலும் கூடவே போகிறது' என்று அறிவுறுத்தினான். ஞானத்தை வீட்டிலிருந்தே அடையலாம் என்றான். விட்டோபா வீடு திரும்பினார்.

'நீங்கள் ஏன் சந்நியாசி ஆனீர்கள்?' -ரங்கன் பகவானைக் கேட்டார். 'அது என் பிராப்தம். குடும்ப பாரம் சுமப்பது கடினம்தான். ஆனால் ஞானம் பெற இதுவே எளிதான வழி' என்று பகவான் நிதானமாகப் பதில் சொன்னார்.

சந்நியாசம் சற்று பிசகினாலும், புரட்டி கீழே தள்ளிவிடும் என்று சொல்லாமல் சொல்லப் பட்டது.

ரங்கனிடம் பகவானின் தாயார், தான் கண்ட காட்சியை விவரித்தார்.

பகவானை அவர் தாய் பார்த்துக் கொண்டே இருந்தபோது, அவர் உடம்பு மறைந்து லிங்கம் தோன்றியது. அந்த லிங்கம் திருச்சுழி கோயிலில் உள்ள லிங்கம் போல் இருந்தது. பகவான் மறையப் போகிறாரோ என்று தாய் கவலைப்பட, லிங்கம் மறைந்து பகவானின் உடம்பு தோன்றியது.

இன்னொரு முறை, பகவான் உடம்பெல்லாம் சில பாம்புகள் படர்ந்திருந்தன. சற்று நேரம் தழுவியபடி இருந்துவிட்டு இறங்கி மறைந்தன.

'என்னை உன் பிள்ளையாகக் கருதாதே' என்கிற உணர்வை தாய்க்கு ஏற்படுத்த, இந்தச் சம்பவங்கள் உதவியிருக்கும். அன்னையின் வாயால், இது கேட்ட அனைவருக்கும் பகவானின் பெருமை புரிந்திருக்கும்.

ஒருநாள், மலையில் உலவிக்கொண்டிருந்த போது, பகவானுக்குப் பசித்தது. அப்போது வயதான ஒரு கிழவி, கஞ்சி கொண்டு வந்து கொடுத்து அருந்தச் சொன்னாள். பிறகு அவளைக் காணோம். 'வந்தது அன்னை பார்வதியாக இருக்கலாம்' என்று பகவான் சொன்னார்.

'ரங்கா, இந்த மலையை வெறும் கல்லால் ஆன மலை என்று நினைக்காதே. இந்த மலையின் குகைகளில், பல சித்த புருஷர்கள் வசிக்கிறார்கள். கீரியாய் பாம்பாய், மயிலாய், சிறுத்தையாய் என்னை வந்து பார்த்து விட்டுப் போவார்கள்' என்று பேசியிருக்கிறார். யோக சாஸ்திரத்தில் தேர்ந்த ஒருவர் யோகா எவ்வளவு முக்கியம் என்று பிரசங்கம் ஒன்று நிகழ்த்தினார். அவர் பேசும் வரை மௌனமாய் இருந்த பகவான், அவரிடம் 'நீங்கள் சொல்வதெல்லாம் மனம் ஒளியிலும் ஒலியிலும் லயப்படுவதற்கு உதவும். ஒளி - ஒலி மறைந்து போனால், மறுபடி மனதில் எண்ணங்கள் குவியல் குவியலாய்த் தோன்றத் துவங்கும். இது நிரந்தரத் தீர்வு அல்ல. மனோ நாசமே தீர்வு. மனம் நசிக்க, இடையறாத விசாரத்தால்தான் முடியும்' என்று விளக்கினார்.

யோக சாஸ்திரியும் 'இது உண்மை' என்று சொல்லிவிட்டுப் போனார்.

உலகில் மனிதனால் பல்வேறு வித்தைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. மனம் என்பதை ஆராய, அதை அடக்க, அழிக்க பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் உபதேசமே தெளிவானது.

இளம் வயது தோழரான ரங்கன் மீது, பகவான் ஸ்ரீரமணர் மிகவும் பிரியத்தோடு இருந்தார். நன்கு தெரிந்தவர் என்பதால் மட்டுமல்ல; ரங்கனின் அவஸ்தைகள், ஒரு குடும்பியின் அவஸ்தைகள். அதே நேரம் ரங்கன், ஸ்ரீரமண மகரிஷியின் தொடர்பு மூலம் மேன்மையான நிலைக்கு வரப் பரிதவித்தார்.

சந்நியாசம் வாங்கிக் கொள்ளலாமா, குடும்பப் பாரம் சுமக்கலாமா என்று அல்லாடினார். உலகில் பல பேர் ரங்கனைப் போல பல குழந்தைகள் பெற்று, அவர்களைக் கரையேற்ற வேண்டுமே என்கிற கவலையோடு இருக்கிறவர் கள். அவர்களின் நிலை பகவானுக்கு நன்கு தெரிந்திருந்தது. குடும்பத்தில் உள்ளவர்களைப் பக்குவப்படுத்துவதுதான், ஒரு துறவியின் கடமை என்பதாய் கூறுவது உண்டு.

'மாட்டிக் கொண்டாயல்லவா... அழிந்து போ' என்று கோபிப்பதில்லை. 'உதறிவிட்டு வா! அவர்கள் எக்கேடோ கெட்டுப் போகட்டும்' என்று வலியுறுத்துவதில்லை. 'ஏற்றுக் கொண்ட பொறுப்பைச் செவ்வனே செய்' என்பதே அவர் அறிவுறுத்தல். அங்கிருந்தபடியே ஆன்மிகத்தில் முன்னேறலாம் என்றும் சொல்வது உண்டு.

குடும்பிக்கு மட்டும்தான் கஷ்டங்களா? சந்நியாசிக்கும் தடைகளும் சிரமங்களும் வருவது உண்டு. உணவுக்கான தட்டுப்பாடும் சுகக்கேடும் விபத்துகளும் அவர்களையும் வேதனை செய்யும் என்று உதாரணங்களுடன் விளக்கியிருக் கிறார் பகவான். குடும்பப் பாரம் சுமப்பவருக்கும் ஆன்மிக வளர்ச்சி உண்டு என்பார். ரங்கனிடம் பகவான் இது தொடர்பாக, ஒரு கதை கூறினார்.

வீரம் மிகுந்த ஓர் அரசன், எவராலும் வெல்ல முடியாத படி வாழ்ந்து வந்தான். திடீரென ஒரு நாள், தன்னை வெல்ல முயன்ற அடுத்த தேசத்து அரசனிடம் தன் நாட்டை ஒப்படைத்து விட்டு காட்டுக்குச் சென்று தவமியற்றத் தொடங்கினான். தன் அகங்காரத்தை அழித்தான். தன் தேசத்துக்குப் போய்ப் பிச்சையெடுத்தான். அப்படி எடுக்கும்போது, வேறு ஒரு நாட்டின் அரசன் மக்கட்பேறு இல்லாமல் இறந்து, அந்த நாட்டு பட்டத்து யானையால் மாலை சூடப்பெற்று, அதை மறுக்காமல் ஏற்று, அந்த நாட்டை ஆளத்துவங்கினான்.

சிறிது நாட்கள் கழித்து, அவனது சொந்த நாட்டு அரசனும் இறக்க, இவனே மீண்டும் சொந்த நாட்டுக்கும் அரசனானான். ஆனால், அவனது முந்தைய அரசாட்சிக்கும் இப்போ தைய அரசாட்சிக்கும் பெரிய வேற் றுமை இருந்தது. முன்பு, தானே எல்லாம் செய்வதாக நினைத்தான். இப்போது, தான் இறைவனின் கருவி என்ற தெளிவுடன்  நல்லாட்சி நடத்தினான். அவனின் இரு நாடுகளும் வளத்துடன் விளங்கின. இந்தப் பக்குவம்தான் குடும்பிக்கு வர வேண்டும் என்கிற கருத்தில் பகவான் இதைச் சொன்னார்.

ஒரு பெண்மணி, தனது மனம் பல திசைகளில் செல்கிறது என்றார். அதற்கு பகவான், 'மனத்தை ஒரே திசையில் திருப்பு' என்றார். 'இதை அடைந்தால் அவர் ஞானியல்லவா' என்று ரங்கன் வியந்தார்.

அதற்கு பகவான், 'இங்கு வந்ததும் ஞானமடைய வேண்டும் என்கிறார் கள். ஞானம் கிடைப்பது எளிது என நினைக்கிறார்கள். வழியில் பல இடையூறுகள் இருப்பதை அவர்கள் கவனிப்பதில்லை' என்றார். தவம் செய்து மறுபடி அரசனானால், நல்லாட்சி தர முடியும்தான். ஆனால், தவம் எளிதா? அதற்கும் இடையூறுகள் பல உண்டே.



பண்டரிபுரம் சென்று வந்த பக்தர் குழு, பகவானுக்கும் அவர் அன்பர் களுக்கும் விருந்தளித்து, உணவுக்குப் பிறகு, பஜனைப் பாடல்கள் பாடி, பகவானைத் தழுவிவிட்டுச் சென்றனர். ரங்கன் தழுவப்போன போது, பகவானின் உடம்பு சிவந்து கன்றிப் போயிருந்தது. இது பற்றி பகவானிடம் ரங்கன் கேட்டார். 'பண்டரிபுரத்தில் உள்ள கடவுளை இவர்கள் தழுவுவார்கள். அதுவோ கல். இது உடம்பு. ஆனாலும், அவர்கள் வழக் கத்தை விடவில்லை' என்று பகவான் பதில் சொன்னார்.

பகவான் வேறு ஒரு சந்தர்ப்பத்தில், ஒரு கதை சொன்னார்.

ஒரு மனிதன் கடும்தவம் புரிந்தான். சிவன் தோன்றி, என்ன வரம் வேண்டும் என்று கேட்டார் அதற்கு, ஏழ்மையும் இன்னல்களும் என்றும் வேண்டும் என்றான் அவன். சிவன் வியந்தார். செல்வம் கேட்கவில்லையே இவன்? ஏன்? காரணம் கேட்டார். அதற்கு அவன், 'செல்வந்தனாக இருந்தால், என் கண்கள் எதைக் காண வேண்டுமோ அதைக் காணாது. எதைக் கேட்க வேண்டுமோ அதைக் கேட்காது. நான் உலக பந்தங்களில் மூழ்கி, பல பிறப்பு கள் எடுத்தபடி கிடப்பேன். என் இன்னல்கள் உன்னையே நினைக்க வைக்கும்' என்றான்.

அப்படியானால் செல்வந்தனாக இருந்தால், ஞானம் கிடைக்காதா?

செல்வந்தனுக்குச் செல்வத்தின் மீதே ஈடுபாடு அதிகம் இருக்கும்; ஞான நாட்டம் மிகக் கடின மாக இருக்கும் என்றார் பகவான்.

இன்னொரு தருணம் பகவான், 'சில பேர் என்னை நமஸ்கரிப்பது, என்னை அடிப்பது போல் இருக்கும்' என்றார், ரங்கனிடம். மற்றவர்களுக்குக் கொடுமை செய்பவர்கள் வணங்குவதைத்தான் பகவான் இப்படிச் சொல்கிறார் என்பதாக ரங்கன் புரிந்து கொண்டார்.

பகவானுடைய ஈறுகள் மிகவும் கரைந்திருப் பதைக் கண்டு, ரங்கன் காரணம் கேட்டார்.

'ஒரு மனிதர் என்னைச் சோதிப்பதற்காக விஷத்தைக் கொடுத்தார். நான் அதைச் சாப்பிட் டேன். விஷம், என் உயிரைக் குடிக்கவில்லை. ஆனால், ஈறுகளைத் தின்றுவிட்டது. சிவனுக்கு விஷம் இறங்காமல் தடுக்க, உமை இருக்கிறாள். எனக்கு யார் இருக்கிறார்கள்?' என்றார்.



நடனானந்தர்

ஒரு முறை, ஆஸ்ரமத்து நிர்வாகி என்று சொல்லிக்கொண்டிருந்த ஒருவர், பகவான் பத்தியத்தில் இருக்கிறார் என்று சொல்லி, அன்பர்கள் கொண்டு வரும் விஷம் போன்ற உணவுப் பொருட்களைத் திருப்பி அனுப்பி விடுவார். ரங்கன் கொண்டு வந்த மலை வாழைப் பழங்களும் ஏற்கப்படவில்லை. ரங்கன் ஏமாற்றத் துடன் பகவானிடம் இதுபற்றிக் கேட்க, 'நீ வழக்கம் போல பரிமாறு' என்றார். ரங்கன் எல்லோர் இலையிலும் வாழைப் பழம் வைத்தார்.

அந்த நபர் ஓடி வந்து, 'பகவானின் பத்தியத்தைக் கெடுத்துவிட்டாயே!' என்று கூவினார். பகவான் அவரைப் பார்த்து, 'எனக்கு என்ன வியாதி? எதற்கு எனக்குப் பத்தியம்?' என்று கேட்டார். 'உங்களை என்ன விலைக்கு அந்த மனிதர் வாங்கியிருக்கிறார்?' என்று கேலியாக ஒருவர் பகவானைக் கேட்க, பகவான் 'ஐயாயிரம் ரூபாய்க்கு' என்றார், சிரித்துக்கொண்டே!

'ஒருவன் எந்தக் காரியம் செய்வதற்காக இங்கு வந்தானோ, அதுவரை இங்கிருப்பான்; அதற்குப் பின் இங்கிருக்க மாட்டான்' என்று பகவான் சொல்ல, ஒரே வாரத்தில் அந்த மனிதரை ஆஸ்ரமம் விட்டு விரட்டி விட்டார்கள். பகவான் சிரித்தார்.

'ஒரு மனிதன் என்னைக் காண வரும் முதல் நாள், தூரத்திலிருந்து தரிசனம் செய்வான். அடுத்த நாள், அருகே வருவான். நாட்கள் போகப் போக, மிக அருகே வந்துவிடுவான் பிறகு, கழியை எடுத்துக்கொண்டு 'அங்கே போ, இங்கே போகாதே' என்று அதட்டுவான். பிறகு, தன்னைத்தானே ஆஸ்ரமத்தின் சர்வாதிகாரி போன்று நினைத்துக் கொள்வான்' என்று விளக்கினார். எல்லா மனித குணங்களும் பகவானுக்குத் தெளிவாய்த் தெரிந்திருந்தன.

பகவானுடைய தலை எப்போதும் ஆடிக் கொண்டேயிருக்கும். இது மூப்பினால் வந்ததல்ல. திருவண்ணாமலைக்கு வந்த நாட்களிலேயே இது இருந்தது. இதுபற்றிக் கேட்க, 'ஒரு சிறு குடிசையில் யானையைக் கட்டுவித்தால் என்ன நடக்கும்? குடிசை ஆட்டமெடுக்காதா? அதுபோலத்தான் இங்கேயும்' என்றார். கைத்தடி இல்லாமல், பகவானால் நேராக, நிற்கவோ நடக்கவோ முடியாது.

'நடனானந்தர்' என்று பிற்பாடு அழைக்கப் பட்ட நடராஜ முதலியார் ஒரு தமிழாசிரியர். அவர் பகவானை கந்தாஸ்ரமத்தில் சந்தித்து, அருள் வேண்டினார். உபதேசமாக எதாவது சொல்லும்படி கேட்டார்.

பகவான் அவர் கனவில் வந்தார். 'இரண்டு கண்களின் பார்வையையும் ஏகப்படுத்தி, புறத்திலும் லட்சியம் வைக்காமல், திருஷ்டியை சமப்படுத்திக் கொண்டு அப்பியசி' என்றார்.

பார்க்கும் பொருளில் மனம் பதியாது, எதனால் பார்க்கப்படுகிறது என்று யோசித்து, கண்களி லேயே கவனம் வைக்க, மனம் கண்களிலிருந்து நழுவி உள்ளே தன்னையே பார்க்கும் வித்தை இது. இப்படிச் செய்து வர, மனம் செய்யும் சேட்டைகள் படிப்படியாகக் குறையும்.

பகவானின் கருணை வேண்டும் என்று நடனானந்தர் இறைஞ்சியபோது, பகவான் அவரிடம் பேசினார்.

'என் முன்னே இருக்கிற நடேசரின் உடம்பா என் கருணையைக் கேட்கிறது; அல்லது, அதனுள் இருக்கும் விழிப்பு உணர்வா? கேள்வி கேட்பது உணர்வு எனின், அது தன்னுடைய உண்மையான நிலையை அறியட்டும்;

பிறகு, தானாகக் கடவுள் பற்றிப் புரியும். இந்த உடம்பு என் கருணையை அடைய ஆசைப்படுவதில்லை. எனவே, உள்ளே இருக்கும் உணர்வுதான் 'நீயாக' ஒளிர்கின்றது.

இப்படி நீயாக இருக்கிற அந்த உணர்வு, நல்ல உறக்கத்தில் உடம்போடும் அதன் பொறி களோடும் மனத்தோடும் தொடர்பு கொள்வது இல்லை. விழித்து எழுந்தவுடன், உன்னை அறியாது அந்த உணர்வுடன் தொடர்பு வந்து விடுகிறது. இதுவே மனிதர் அனுபவம்.

இப்போது செய்ய வேண்டியதெல்லாம் விழிப்பு. கனவு நிலையில் மனம் உடம்போடு எந்தத் தொடர்பும் இல்லாமல் உறக்கத்தில் எப்படியிருந்தாயோ அப்படி இருப்பதுதான்.

உண்மையில், உன் உணர்வுக்கும் மற்றவற் றுக்கும் எந்தத் தொடர்புமில்லை. உறக்கத்தில் எந்த பந்தமும் உருவமும் இல்லாது இருப்பதை, நீ உணர்வதில்லை. எழுந்த பின் தோன்றும் மனநிலையையே உறக்கத்திலும் இருந்ததாக நினைக்கிறாய்.

நீ எந்த பந்தமும் அற்றவன் என்று உறக்கத் திலும் விழிப்பு உணர்வோடு இருக்க வேண்டும். தொடர்ந்த நீண்ட நாள் பயிற்சியில், இந்த அனுபவம் கைகூடும். இந்த அனுபவம் கை கூடினால், உன் நிலை கடவுள் நிலை.

திரும்பத் திரும்ப பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் படிக்க, இந்த ஆன்ம அனுபவத்தில் நிச்சயம் முன்னேற முடியும்.

**'நி**னைவில் நிறைந்தவை' என்று தலைப்பிட்ட அனுபவத் தொகுப்பை, ஸ்ரீமதி டி.ஆர்.கனகம்மாள் என்பவர் எழுதி, திருவண்ணாமலை ஸ்ரீரமணாஸ்ரமம் வெளியிட்டிருக்கிறது. பகவான் ஸ்ரீரமண மகரிஷி பற்றி மிக எளிய தமிழில், சுவையான அனுபவங்களை, தத்துவச் சுடர்களை இது தாங்கியிருக்கிறது.

இது, வாழ்க்கை வரலாறு போல அல்லாது, கனகம்மாள் தான் கண்ட மகரிஷியை, தன் நோக்கில் எழுதியிருக்கிறார். அதிலுள்ள உண்மைகள், நம் நெஞ்சுள் இறங்கிச் சிலிர்க்க வைக்கின்றன.

பிரமிள் என்பவர், சாது அப்பாத்துரை என்கிற ஈழத்து ஞானி பற்றி ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். அதில், சாது அப்பாத்துரை பின்வருமாறு கூறுகிறார். 'சத்தியத்துக்கு வாழ்க்கை வரலாறு கிடையாது. ஒரு ஞானிக்கு வாழ்க்கை வரலாறு எழுதுவது மடத்தனம். அகந்தைக்குத்தான் பிறப்பும் இறப்பும் வரலாறும்! அகந்தையைத் துறந்தவர் பிறந்ததுமில்லை; வளர்ந்ததும் இல்லை; இறப்பதுமில்லை!'.

இதையட்டிய ஒரு விஷயம்... ஸ்ரீமதி கனகம்மாள் சொல்கிறார்:

ஒரு சாது, பகவான் ஸ்ரீரமணரிடம், ''ஆத்மா எங்கும் நிறைந்திருப்பதாக சொல்லப்படுகிறதே... அப்படியானால், அது இறந்துபோன சரீரத்திலும் இருக்குமா?'' என்று கேட்டார்.

''இந்தக் கேள்வி உனக்கு வந்ததா, அல்லது இறந்துபோன சரீரத்துக்கு வந்ததா?'' என்று பகவான் வினவினார்.

''எனக்குத்தான்'' என்றார் சாது.

''உமது தூக்கத்தில், 'நான் இருக்கிறேனா, இல்லையா?' என்கிற சந்தேகம் உம்மைப் பற்றி வந்ததா? விழித்த பிறகுதானே 'நான் இருக்கிறேன்' என்கிறீர். அதேபோல, இறந்துபோன சரீரத்திலும் ஆத்மா இருக்கத்தான் செய்யும்.

உண்மையை விசாரித்தறிந்தால், செத்துப் போன சரீரமுமில்லை; பிழைத்த சரீரமும் இல்லை. அசைவதை 'பிழைத்தது' என்கிறோம். அசையாததை 'செத்தது' என்கிறோம்.

நமது கனவில் செத்தவர்கள், சாகாதவர்கள் என இன்னும் பலவற்றைப் பார்க்கிறோம். விழித்து எழுந்ததும், அவை எதுவுமில்லை. அதுபோலவே வாழ்க்கை. இது ஒரு தூக்கம். ஒரு கனவு. உண்மையில் இங்கு எதுவுமில்லை.

'நான்' என்கிற எழுச்சி இல்லாமல் போவதே மரணம். நான் என்கிற எழுச்சி முளைப்பதே பிறப்பு. இந்த எழுச்சி, ஓர் அகங்காரம். பிறப்பும் இறப்பும் இந்த அகங்காரத்துக்குதான்! இந்த 'நான்' என்கிற எழுச்சி இருந்தபோதும், நீர் இருக்கிறீர்; இல்லாதபோதும், நீர் இருக்கிறீர். இந்த எழுச்சிக்கு நீர் மூலமேயன்றி, நீரே இந்த எழுச்சி இல்லை.

இந்த மூலத்தை அறிந்து, அறிவுடன் சாக வேண்டும். உடம்பின் மரணத்துக்கு முன்பே மரணம் பற்றிய தெளிவு வேண்டும். அப்படிச் செத்தவன் 'அகம்', ஆத்மம்', 'நான் ஆத்மா' என்ற அறிவுடன் புரிந்த கணமே பிறக்கிறான். இது உடம்பின் பிறப்பல்ல. மனதின் விழிப்பு. இப்படி விழித்தவனுக்கு, இப்படி ஆத்மனாய்ப் பிறந்தவனுக்கு எந்தச் சந்தேகமும் இருக்காது. இறந்தது - உயிருள்ளது, இறப்பது - வாழ்வது என்ற பேதம் இருக்காது. 'நான் இன்னார்' என்று அலட்டுகிறபோது, வந்தது வினை. அப்போதே கர்வமும், தொடர்ந்து 'நான் இன்னாரா' என்கிற சந்தேகமும் வந்துவிடும்.''

மிக மிகக் கடினமான ஒரு சூட்சுமத்தை பகவான் ஸ்ரீரமணர், எளிய விதத்தில் புரிய வைக்கிறார். இது பற்றிய தெளிவு, வெறும் படிப்பில் வராது.

வேறொரு தருணம், வேறொரு அன்பர், பகவானி டம் பணிவாகப் பேசினார். ''இங்கு உள்ளவர்கள் பலர் உங்களை அணுகிக் கேள்விகள் கேட்டுத் தெளிந்து போகிறார்கள். எனக்கு எந்தக் கேள்வியும் கேட்கத் தெரியவில்லையே... நான் எப்படிக் கடைத்தேறுவேன்?'' என்று கவலைப்பட்டார்.

அதற்குப் பகவான், ''உனக்கு ஒன்றும் தெரியாது என்கிறாயே... அப்படிச் சொல்கிற நீ யார்? அதைத் தெரிந்துகொண்டால், எல்லாம் தெரிந்தவனாவாய். 'எனக்கு எல்லாம் தெரியும்' என்கிறபோது, அகங்காரம் வளர்கிறது. இதற்கு, 'எதுவுமே தெரியவில்லை' என்பது மேல் அல்லவா?'' என்று அன்போடு பேசினார்.

இன்னொரு சந்தர்ப்பத்தில், ஆஸ்ரமத்துக்குப் புதிதாக வந்த ஒரு பெண்மணி, ''எனக்கு ஒரே ஒரு கோரிக்கை இருக்கிறது. கேட்கலாமா?'' என்று வினவ, ''என்ன கோரிக்கை?'' என்று கேட்டார் பகவான். அதற்கு அந்தப் பெண்மணி, ''மோட்சம் வேண்டும்'' என்றார்.

''ஓஹோ, அப்படியா!'' என்றார் பகவான்.

''ஆமாம். எனக்கு வேறு எந்த ஆசையும் இல்லை. மோட்சம் மட்டும் கொடுத்தால் போதும்'' என்றார் அந்தப் பெண்மணி. தொடர்ந்து, ''எப்போதாவது கொடுப்பேன் என்று சொல்லாது, இப்போதே கொடுக்க வேண்டும் சுவாமி! கொடுக்கிறீரா?'' என்று கேட்டார்.

''சரியாப் போச்சு!'' என்றார் பகவான். ''மோட்சம் கொடுத்தால் போதுமாம்; வேறொன்றும் வேண்டாமாம். இது என்ன மூட்டையா, முடிச்சா, கட்டிக் கொடுப் பதற்கு? எந்த ஆசையும் இல்லையாம். இது மட்டும் ஆசை இல்லையா? மனதில் உள்ள ஆசாபாசங்களை நீக்கிவிட்டால், மீதி இருப்பது மோட்சம்தானே! சாதனை செய்ய வேண்டும்'' என்றார் பகவான்.

பெண்மணிக்கு என்ன புரிந்ததோ... ஆனால், படிக்கிற நமக்கு ஒன்று புரிய வேண்டும். பகவான் ரமணர், தனியே பேருரைகள் நிகழ்த்தியதில்லை; அவர் வாழ்வே உபதேசம்தான்!



ஆஸ்ரமத்தில், பரோடா மகாராணி கொடுத்த வெள்ளை மயில் ஒன்று இருந்தது. அது ஆஸ்ரமம் முழுவதும் சுதந்திரமாக வளைய வரும். பகவான் அருகே வந்து, அவரை ஆவலாகப் பார்க்கும். பகவானும் அதற்குப் பொரி கடலை போடச் சொல்லி, ஆர்வமாகப் பார்ப்பார்.

ஆஸ்ரமத்துக்கு வந்தவர்கள் யாரோ, தரையில் வெள்ளை மாவினால் வெள்ளை மயில் போல அழகாக கோலம் வரைந்திருந்தார்கள். நிஜ வெள்ளை மயில், பொரி கடலையை விட்டுவிட்டு, அந்த மாக்கோலத் தையே உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தது.

அது சலனமில்லாமல் கோலம் பார்ப்பதைக் கண்ட பகவான், 'என்ன, யாரோ போட்டிக்கு வந்துவிட்டார் களோ என்று பார்க்கிறாயா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். உடனே மயில், பொரி கடலையைக் கொத்தித் தின்ன ஆரம்பித்தது. அந்த நிஜ மயிலே திகைத்துப் போகும் அளவுக்குக் கோல மயில் தத்ரூபமாக இருந்தது.

பலரும், கோலம் போட்டவரைப் பாராட்டினார்கள். இந்த மாக் கோலத்தைப் பார்த்த பகவான், ''இந்த மாதிரி கலைஞர்களுக்கெல்லாம் ஆத்ம வித்தை மிகச் சுலபமாகக் கைவரும். ஏனெனில், அவர்கள் புத்தி நுட்பம் அத்தனை சூட்சுமமாய் இருக்கிறது. ஆனால், அவர்கள் அதற்குமேல் போக மாட்டார்களே!'' என்றார்.

''இன்று, இந்த மயில் பிரமிக்கும் அளவுக் குப் போட்ட கோலத்தை, நாளைக்கு இன்னொரு மயில் தோகை விரித்து ஆடும் அளவுக்குப் போட வேண்டும் என்றுதான் தோன்றும். புத்தி அதிலேயே ஈடுபடும். உள் முகமாகாது.

ஒரு சங்கீத வித்வானுக்கு, ரசிகர்கள் பாராட்டினால் போதாது. அதே திறமை உள்ள இன்னொரு சங்கீத வித்வான் பாராட்ட வேண்டும். அப்போதுதான் திருப்தி! இங்கே மயில் கோலத்தை மயிலே பாராட்டிவிட்டதல்லவா!

ஆதிசங்கரர் செருப்பு தைக்க உட்கார்ந் தார். அதே தொழிலை வழக்கமாகச் செய்பவர் போல, மூக்கில் ஊசியைத் தேய்த்துப் பசை உண்டாக்கினார். செருப்பு தைப்பவர், 'அடே' என்று வியந்து விட்டார். இதுதான் கலையின் ரகசியம். தகுதியுள்ளோர் பாராட்ட, கிளர்ந்து எழும். அடுத்தது எப்படிப் பாராட்டு வாங்கலாம் என்று திட்டமிடும். இந்த சக்தி அமைதியாகி உள்ளே திரும்பினால், ஆத்ம லாபம்'' என்றார் பகவான்.

கலைஞர்கள் உயர்வானவர்கள் என்ப தையும், அவர்கள் சறுக்குகிற இடத்தையும், அதே நேரம் ஆத்மானுபவம் கொண்ட ஆதிசங்கரருக்கு எந்தக் கலையும் எளிதில் கைவந்ததையும் அழகாய் தொகுத்துக் குறிப்பிடுகிறார். கலை வியக்தியைவிட, ஆத்மானுபவமே சிறந்தது என்று சொல் லாது சொல்கிறார்.

இன்னொரு முறை, படித்தவனாய்த் தோன்றிய ஓர் இளைஞன், ஸ்ரீரமணரின் எதிரே வந்து அமர்ந்தான். கேள்வி கேட்க விரும்புவது போல், ஆவல் காட்டினான். கூட்டத்தின் மௌனம் கலைத்து, கேள்வி எழுப்பினான்.

''சுவாமி ராமகிருஷ்ண பரமஹம்ஸர், விவேகானந்தரைத் தொட்ட மாத்திரத்தில், சமாதியில் இருக்க வைத்தாரே... அதுபோல பகவானும் சமாதியில் இருக்க வைக்க முடியுமா?'' என்று கேட்டான்.

பகவான் பதிலேதும் கூறாது, மௌனமாய் இருந்தார். இளைஞனோ பதில் பெறும் எதிர்பார்ப்போடு இருந்தான்.

சிறிது நேரம் பொறுத்து, பகவான் அந்த இளைஞனைப் பார்த்து, ''கேட்பது விவேகானந்தரோ?'' என்றார். அந்த இளைஞனால் பதில் சொல்ல முடியவில்லை. ஆர்வம் இழந்து, அந்த இடம் விட்டு நகர்ந்தான்.

யாருக்கும் தன் நிலை பற்றிய கவலையே இல்லை. தான் எல்லாம் உணர்ந்த பூரணன் என்ற நினைப்பு. தன்னைப் பற்றி விசாரிக்காது, பிறரை ஆராயத் தொடங்குதல் காரணம். இந்த ஆராய்ச்சிதான் சகல விபரீதங்களுக்கும் காரணமாகிறது.

'என்னடா, இவர் சோபாவில் அமர்க்களமாக உட்கார்ந்திருக்கிறாரே! இவரைச் சுற்றி இத்தனை பேர் இருக்கிறார்களே... இவர் பெருமை என்ன? நான் சொல்வதை இவர் செய்து காட்டுவாரா, பார்ப்போம்!' என்பதே அந்த இளைஞனின் நோக்கம்.

'என்னை ராமகிருஷ்ண பரமஹம்ஸரா என்று சோதிக்க விரும்பினானே தவிர, தான் விவேகானந்தரா என்று தெளிய முற்படவில்லை. ஏனென்றால், தனக்கு எல்லாத் தகுதியும் இருப்பதாக நினைப்பு. தான் யார் என்ற விசாரம் இருந்தால், இந்தக் கேள்வி வந்திருக்காது. ஒரே ஒரு விவேகானந்தரைத்தான் ராமகிருஷ்ண பரமஹம்ஸர் அப்படிச் சமாதியில் ஆழ்த்தினார் என்பது புரியவும் இல்லை.

மனம் பிறரை ஆராய்வதை விட்டுவிட்டுத் தன்னை ஆராய்ந்தால், எந்தக் கேள்வியும் எழாது. எல்லாக் கேள்விகளுக்கும் சமாதானம் தன்னுள்ளேயே இருப்பது தெரியும்' என்கிறார் பகவான்.

ஒரு பெண்மணிக்கு, அவளுடைய கணவன் சாதனை செய்து, மிகப் பெரிய புகழ்பெற்று, பல பேர் பாராட்ட வாழ்வதை அருகிலிருந்து காணும்போது சந்தோஷமாகத்தான் இருக்கும். ஆனால், அதைவிட மிகப் பெரிய சந்தோஷம், அவள் மகன் செயற்கரிய செயல்கள் செய்து, புகழின் உச்சாணிக்குப் போய், மக்கள் பலர் அவனைப் பாராட்டி, வாழ்த்துவதைக் காணும்போதுதான், மனம் கொள்ள முடியாத சந்தோஷம் ததும்பி நிற்கும்.

'நீங்களெல்லாம் கொண்டாடுகிறீர்களே, இந்தப் பெரிய மனுஷன், நான் மடியில் போட்டு வளர்த்த பிள்ளை. நீங்களெல்லாம் விழுந்து வணங்குகிறீர்களே, இவருக்கு நான் தலையில் எண்ணெய் தேய்த்து, சுடச்சுட வெந்நீர் ஊற்றி, உடம்பை உருவி, அவனை நெடியோனாய் வளர்த்தேன். சாதம் பிசைந்து, குழைவாக ஊட்டியிருக்கிறேன். வாய் அலம்பியிருக்கிறேன். எச்சில் துடைத்திருக்கிறேன். வீட்டுக்கு யாரேனும் புதியவர் வந்தால், இவன் கூச்சத்துடன் என் புடவைத் தலைப்பில்தான் ஒட்டிக் கொள்வான். நான் எங்கு போனாலும் என் பின்னாலேயே வருவான். என்னை கட்டிக்கொண்டுதான் தூங்குவான்.' - அவள் வாய் பெருமிதம் பேசும். அவனுக்கு என்ன பிடிக்கும், என்ன பிடிக்காது என்பதை யெல்லாம் ஆராய்ந்து வைத்தவள்போல் விளக்கமாகப் பேசும்.

திருச்சுழியில் பிறந்ததும், மதுரையில் வளர்ந்ததும், திருவண்ணாமலை என்று எவரோ பெயர் சொல்லக் கேட்டு அதிர்ந்ததும், கண்மூடி அமர்ந் ததும், கடிதம் எழுதி வைத்துவிட்டு, அண்ணனுக்குக் கட்ட வேண்டிய கல்லூரிக் காசோடு வீட்டை விட்டு ஓடிப்போனதும்... எங்கே... எங்கே... என்று பதறிப் பதறி, நாடகக் கம்பெனிகளில் எல்லாம் ஏறித் தேடியதும், திருவண்ணாமலைக்கு அருகேயுள்ள குன்றின் மீது எலும்பும் தோலுமாய் எங்கோ வெறித்தபடி, நீண்ட நகங்களும் சிக்குப்பிடித்த தலைமுடியுமாய் அமர்ந்திருந்ததும், எத்தனை கெஞ்சினாலும் ஏறெடுத்துப் பார்க்காததும், திருவண்ணாமலைக்கு வந்து கந்தாஸ்ரமத்தில் அமர்ந்ததும், அங்கே ஜனங்கள் உரையாடத் துவங்கியதும், உரையாடிய ஜனங்கள் அவரை பிராமண சுவாமி என்று கொண்டாடியதும், மெள்ள மெள்ள அவர் புகழ் பல்வேறு திக்கில் பரவியதும், மடாதிபதிகளும், அறிஞர்களும், ஐரோப்பியர்களும் வந்து வணங்கி விளக்கம் கேட்டுப் போனதும், ஒப்பில்லாத மகானாய்

கருணை கொண்ட கண்களோடு இருப்பதும் பார்த்து, அந்தப் புகழில், அந்த மேன்மையில் தனக்கும் பங்கு உண்டு என்ற எண்ணம் கிளறி வர, 'எனக்கு வேறு போக்கிடம் என்ன? நான் வேறு எங்கிருப்பேன்? உன்னோடே வந்துவிடுகிறேன்' என்று அழகம்மையார், திருவண்ணாமலை கந்தாஸ்ரமத்துக்கு வந்துவிட்டார்.

அழகம்மையார் கணவனை இழந்த, ஆசாரம் மிக்க பிராமணப் பெண்மணி. பகவான் ரமணரோ எல்லாமும் துறந்தவர். எந்த பேதமும் அற்றவர். கௌபீனம் மட்டுமே சொத்தாக உள்ளவர். எனவே, அன்பர் ஒருவர் வீட்டில் தங்கி, தினமும் மலைக்கு வந்து, பகவான் ஸ்ரீரமணருடன் இருந்துவிட்டுப் போவார். ஆனால், அப்படி மலையேறி இறங்குவது அவருக்குச் சிரம மாக இருந்தது. கந்தாஸ்ரமத்திலேயே தங்கிவிட வேண்டும் என விரும்பினார். ஆனால், ஆஸ்ரமத்து அன்பர்கள், 'இங்கு பெண்கள் தங்கக்கூடாது. தங்கினால், மற்ற பெண்களும் தங்க வேண்டும் என்று சொல்வார்கள். அது சரியாக வராது' என்று அவரை அங்கே இருக்கக் கூடாது என்று சொன்னார்கள்.

பகவான் மௌனமாக இருந்தார். மற்ற பெண்மணிகளான தேசூரம்மாவும் இன்னொருவரும், 'நாங்கள் அப்படியெல்லாம் கேட்க மாட்டோம். தயவுசெய்து அழகம்மைக்கு இடம் கொடுங்கள். அவர்கள் தங்கள் மகனுடன் தங்கியிருக்கட்டும்' என்று சொன்னபோதும், அந்த அன்பர்கள் இதை ஏற்கவில்லை. ஆஸ்ரமத்தில் பெண்கள் தங்குவது அத்தனை நன்றாக இராது என்றெல்லாம் பேசினார்கள்.

ரமண மகரிஷி, மெள்ள எழுந்து வந்து, தாயின் கையைப் பிடித்துக் கொண்டார். ''நாம் போவோம். வேறு எங்கேயாவது போய் தங்கிக் கொள்வோம், வா! இவர்கள் இங்கே இருக்கட் டும்'' என்று சொல்லி, தாயாருடன் கிளம்ப யத்தனிக்க, அந்த அன்பர்கள் திகைத்துப் போனார்கள். 'மன்னிக்க வேண்டும்' என்று காலில் விழுந்தார்கள். அழகம்மை அன்று முதல் பகவான் ரமணருடன் கந்தாஸ்ரமத்தில் தங்கினார்.

''ரமண மகரிஷி யாரையும் குறை கூறாதவர். எல்லோரையும் அரவணைத்துப் போகும் சுபாவம் உடையவர். அதேவிதமாக தாயினுடைய ஆசார அனுஷ்டானங்களைப் பற்றிப் பெரிதாகக் குறை கூறாமல், மெள்ளக் கண்டித்து வந்தார். 'எதற்கு இது?' என்று கேள்வி கேட்பதுடன் நிறுத்திக் கொண்டார். 'அடடா... நீ அவளைத் தொட்டுவிட்டாயே, உன் மீது தீட்டுப்பட்டுவிட்டது. போ, போய்க் குளி!' என்று கேலி செய்வார். இப்படிக் கேலி செய்ய கேலி செய்ய, அழகம்மையாருக்குள் அர்த்தமற்ற சில ஆசார அனுஷ்டானங்கள் மெள்ள உதிர்ந்துகொண்டு வந்தன.

ஆனாலும், பிள்ளை கீழே திருவண்ணாமலைக்குப் போய்ப் பிச்சை எடுத்துவந்த உணவை ஒன்றாகக் கலந்து, ஒரு ருசியும் இல்லாமல் சாப்பிடுவது கண்டு அந்தத் தாயுள்ளம் தவித்தது. 'வெறுமேதானே உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். வேலையற்று முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்கிறோம். வருவோர் போவோரைப் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஒரு குமுட்டி அடுப்பு, ஒரு வாணலி, ஒரு கற்சட்டி, இரண்டு மூன்று சமையல் பாத்திரங்கள், நல்ல கரண்டி இருந்தால், அற்புதமாக சமைத்துப் போட மாட்டேனா? பிச்சையாக சாதம் வாங்கி வருவதைவிட, அரிசியும் பருப்பும் வாங்கிவந்தால் ஆகாதா?' என்றெல்லாம் எண்ணத் துவங்கி, அதற்கான நச்சரிப்பைத் துவக்கினார். 'அப்படியானால், நீ ஊருக்கே போய்க் கொள்' என்று பகவான் ரமணர் முதலில் மறுத்தாலும், தன்னாலான உதவியைச் செய்ய வேண்டும் என்று அந்தத் தாயுள்ளம் மருகுவதைப் புரிந்துகொண்டு அனுமதித்தார்.





முதலில் நாலைந்து சமையல் பாத்திரங்கள் சேர்ந்தன. பிறகு, மெள்ள மெள்ள அதிகமாயின. 'ஒரு இரும்புக் கரண்டி இருந்தால் நன்றாக இருக்கும்' என்று கேட்பார். 'ஆஹா... அதுக்கென்ன, வாங்கி னால் போச்சு' என்று ரமணர் சொல்வார். அடுத்த நாளே யாராவது நாலைந்து இரும்புக் கரண்டிகள் கொண்டு வந்து கொடுப்பார்கள். 'சின்ன கத்திரிக்

காய் கிடைத்தால் நன்றாக இருக் கும். அதை நாலாக நறுக்கி, வதக்கி...' என்று விவரிப்பாள் அம்மா. மறுநாளே, பிஞ்சுக் கத்திரிக்காய் ஒரு கூடை வந்து இறங்கும். யாரும் கேட்காமலேயே அவர் நினைத்தது நடந்தேறியிருக்கும். ஆஸ்ரமத்தில் அவருடன் தங்கியிருப்பவர்களுக்கெல்லாம் அழகம்மையால் சுவையான உணவு கிடைத்தது. 'அப்பளம் இருந்தால் நன்றாக இருக்கும்' என்று சொல்லி, மடியாக அப்பளம் செய்கிற ஒரு வேலையும் நடந்து, அப்பளப் பாட்டும் உருவானது.

ஒருமுறை மலையேறி வந்தபோது, ஒரு முள்செடி, அழகம்மையாரின் புடவையைக் கிழித்துவிட்டது. இதைக் கண்ட அன்பர்கள் அந்தப் பாதையை விரைவாக, அழகாகச் சீர் செய்தார்கள். மலையேறுவது, எல்லோருக்கும் எளிதா கவும், எந்த இடைஞ்சலும் இல்லாமலும் இருந்தது. அதே நேரம், பகவானுடைய இளைய சகோதரர் நாகசுந்தரம் என்பவர்

(இவரே, பின்னாளில் நிரஞ்சனா சுவாமி என அழைக்கப்பட்டார்) மதுரையில் குமாஸ்தாவாக வேலை செய்து வந்தார்.

அவர் மனைவி இறந்து போக, அவருக்குப்

பிறந்த ஒரே மகனை திருவண்ணாமலை அடிவாரத்தில் வசிக்கிற தன் சகோதரி யிடம் இருக்கும்படி ஒப்படைத்தார். பல்வேறு இடங்களில் குமாஸ்தாவாக வேலை செய்து, மனம் நிறைவு பெறாமல், பிறகு தாயோடும் தனயனோடும் வாழ்வதற்குக் கந்தாஸ்ரமம் வந்து விட்டார் அவர். அங்கே தங்கியிருந்தபடி, வருவோர் போவோரை கவனித்து வந்தார் அவர். பகவானுக்கு வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதத் துவங்கினார். மெள்ள மெள்ள ஆஸ்ரமத்தின் எல்லாச் சீரமைப்புகளுக்கும் அவரே காரணமாக இருந்தார். பள்ளியில் படித்து வந்த நாகசுந்தரத்தின் மகன் வேங்கடராமன், அடிக்கடி பகவானைக் காண வருவார். சில தருணம், இரவு அங்கேயே தங்கி விடுவார். பகவான் அவருக்குப் பல் தேய்த்து, குளிக்க வைத்து, கவனமாகப் பார்த்துக் கொள்வார். பகவானுக்குச் சரியானபடி உணவு கொடுக்கவும், ஓய்வு கொடுக்கவும், ஓய்வு நேரத்தில் எவரும் தொந்தரவு செய்யாது கவனித்துக் கொள்ள வும், அன்பர்கள் கூச்சலிடாது மௌனமாக அமர்ந்து கொள்ளவும் ஏற்பாடு செய்தார் நிரஞ்சனா சுவாமி.

1922-ஆம் வருடம் மே மாதம், அழகம்மை சுகவீனப் பட்டார். அவருக்கு மூச்சு விடுவதில் சிரமம் இருந்தது. தன் அந்திமக் காலம் நெருங்கிவிட்டதை உணர்ந்த அழகம்மை, நிரஞ்சனா சுவாமியை அருகே அழைத்து, பகவான் கையில் வைத்து, ''தயவுசெய்து ஒரு பார்வை இவன் மீது வைத்திரு. இவனுக்கு உலக வாழ்க்கை தெரியாது. நீதான் பார்த்துக் கொள்ள வேண்டும்'' என்று ஒப்படைத்துவிட்டுக் கண்களை மூடிக்கொண்டார்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷிக்கும், தன் அன்னை உடலை விடும் நேரம் வந்துவிட்டது என்பது புரிந்து விட்டது. அவளை விட்டு அகலாமல், அருகேயே இருந்தார். ஆஸ்ரமத்து அன்பர்கள் பகவானைச் சாப்பிட அழைத்தனர். ''நீங்கள் எல்லோரும் சாப்பிடுங்கள். நான் பின்பு வருகிறேன்'' என்று சொல்லிவிட்டு, அன்னையைப் பார்த்தபடியே அமர்ந்திருந்தார். தனது வலது கையை அன்னையின் இதயத்திலும், இடது கையை உச்சந் தலையிலும் வைத்தபடி, அவளையே பார்த்துக் கொண்டிருந்தார். முதலில், மூச்சுத் திணறல் ஏற்பட்டது. ஆனாலும், பகவான் கை வைத்திருந்ததால், சட்டென்று சரியாயிற்று. இதற்குள் சாப்பிட்டுவிட்டு வந்த மற்ற அன்பர்கள், சுற்றி அமர்ந்து ராமநாமம் சொல்லத் தொடங்கினார்கள்.

அம்மாவுக்குள் என்ன நடந்தது என்பதைப் பின்னால் பகவானே சொன்னார்.

''கடந்த பல ஜென்மங்களின் வாசனைகளும் நினைவுகளும் மேலும் மேலும் பொங்கி எழுந்தன. ஆனால், அவையெல்லாம் என் கைபட்டு, உடனுக்குடன் அழிந்து விட்டன. அவள் அப்படியே சென்றிருந்தால், பல ஜென்மங்கள் எடுக்க வேண்டியிருக்கும். வாசனை களெல்லாம் ஒழிந்து, ஆழ்ந்த சாந்தி அவளை ஆட்கொண்டது. அவள் உயிர், இதயத்தில் ஒடுங்கியதன் அடையாளமாக, ஒரு சிறிய அதிர்வு ஏற்பட்டது. அது மணியோசை போல இருந்தது. ஆனால், நான் கையை எடுக்க வில்லை. முழுவதுமாக அவள் அடங்கி விட்டாள் என்று தெரிந்த பிறகுதான் கையை எடுத்தேன். ஏனெனில், முன்னர் பழனி சுவாமி யின் மூச்சடங்கும் நேரத்தில், அவர் மேல் வைத்திருந்த கையை எடுத்ததும், அவர்

உயிர் கண் வழியாக வெளியேறி விட்டது. அதனால்தான் அம்மாவின் பிராணன், இதயத்தில் முழுவதுமாக ஒடுங்கி விட்டது என்று தெரிந்த பிறகே என் கையை எடுத்தேன்'' என்று சொன்னார்.

இரவு 8 மணிக்கு அழகம்மையின் ஆன்மா,  அவர் இதயத்துடன் கலந்தது.

வெகுநேரம் அருகே அமர்ந்திருந்த பகவான் மெள்ள எழுந்தார். ''வாருங் கள் சாப்பிடலாம், தீட்டெல்லாம் ஒன்றும் கிடையாது'' என்று சொல்லி, உணவு எடுத்துக்கொள் ளாத அன்பர்களுடன் உட்கார்ந்து, தானும் சாப்பிட்டார்.



'உண்மையே நம் தன்மை!'

– சுவாமி சுத்தானந்த சரஸ்வதி

வாழ்வில் மிகப்பெரிய உயரத்தை அடைவதற்கான பயணம், முதல் அடியை எடுத்து வைப்பதில் இருந்து துவங்குகிறது. இறைவனை அடைவதற்கான பயணத்தை இங்கேயே, இப்போதே துவங்குவோம்.

கடவுளின் தன்மை என்னவோ அதுவே மனிதனின் தன்மையும்! கடவுளின் தன்மை என்பது உண்மை. ஆசை மற்றும் கோபத்தால் நாம் எவரிடமும் உண்மை யாகவும் இருப்பதில்லை; நிம்மதியாகவும் வாழ்வதில்லை. எனவே நாம் அனைவரிடமும் உண்மையாகவும் அன்பாகவும் இருக்கப் பழகுவோம். மரங்களும் செடிகொடிகளும், காய்கனிகளும் காற்றும் தன் தன்மையை மாற்றிக்கொள்ளாதபோது, நாம் மட்டும் ஏன் நம் தன்மையை, கடவுள் தன்மையை மாற்றிக்கொள்ள வேண்டும்?!

நாம் நாமாக இருப்பதற்கு நம்முடைய இருப்புதான் காரணம். அதை வெறும் புறத்தளவில் பார்க்காமல், அகத்தளவில் பார்க்கிறபோதுதான், அழிவே இல்லாத ஆன்மாவை உணர்ந்து தெளிய முடியும்! அந்த ஆன்மாதான் கடவுள் தன்மை!

படம்: ப.சரவணகுமார்

பகவானும் மற்றவர்களும் மாற்றி மாற்றி திருவாசகம் படித்தனர். விடிந்த பிறகு என்ன செய்வது என்று யோசித்து, புடவையை தூளியாகக் கட்டிக்கொண்டு, அதில் அம்மாவின் உடலை வைத்து, மூங்கிலால் சுமந்து வந்தனர். பகவானும் அம்மாவைச் சுமந்து வந்தார் என்று உடன் வந்தவர்கள் சொன்னார்கள்.

மலைக்குக் கீழே பாலி தீர்த்தம்  என்ற இடத்தில் சமாதி வைப்பது என்று முடிவாயிற்று. மலைமீது சமாதி வைத்தால், பல பேர் மலை முழுவதும் சமாதியாக்கிவிடுவார்கள்; அதனால் கீழேயே இருக்கட்டும் என்று கீழே கொண்டு வந்து வைத்தார்கள்.

குழி செய்தார்கள். யாருக்கும் தெரிவிக்க வேண்டாம் என்று கவனமாக இருந்தும், ஊருக்குள் எப்படியோ செய்தி பரவி, பகவானை ஈன்றெடுத்த புண்ணியவதிக்குக் கடைசி வணக்கம் சொல்வதற்காக, ஊர் ஜனங்கள் திரண்டு வந்தனர். பாலும், இளநீரும், விபூதியும், ஊதுவத்தியும், கற்பூரக் கட்டிகளும் வந்து நிறைந்தன. அன்னையின் உடம்பு நீராட்டப்பட்டு, புதுத்துணி உடுத்தப்பட்டு, நெற்றியில் திருநீறு இடப்பட்டுப் பொலிவுடன் வைக்கப் பட்டிருந்தது.

பரத கண்டத்தில் சகலமும் துறந்த துறவிகள் பலர் உண்டு. அவர்களில் ஒருவர்கூட தாயைப் புறக்கணித்ததில்லை. பகவானே ஆன்மாவை சமனப்படுத்தி, அவரை உலகம் வணங்கும் உயர்வுக்கு அழைத்துப் போனார்.

அன்னையின் முகம் பளபளத்து, ஒரு யோகினியின் முகம்போல பிரகாசமாகக் காணப்பட்டது. திருமூலர் சொல்லியபடி, சமாதி கட்டும் வேலை நடந்து கொண்டிருந்தது. அமர்ந்த வண்ணம் சமாதிக் குழியில் தாயாரை இறக்கினர். விபூதி, தர்ப்பைகளைப் பரப்பினர். பகவான் கையில் விபூதியும் கற்பூரமும் கொடுக்கப்பட்டு, சமாதிக் குழிக்குள் பகவான் போட்டதும், மற்றவர்களும் ஆளுக்கொரு பிடி போட்டனர். அதற்குமேல் வில்வம், செங்கற் பொடி மற்றும் விபூதியைக் கொட்டி நிறைத்து, மேலே பலகைக் கற்களால் மூடி, லிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. சமாதியை மேலும் மண் கொண்டு பூசி கெட்டிப்படுத்த மண் வெட்டியபோது, அந்த இடத்திலே ஜலம் இருந்தது. மழைக் காலம், அதனால் ஜலம் இருக்கும் என்று நினைத்தார்கள். ஆனால், பின்னால் வெயில் வந்தபிறகும், அந்த இடத்திலே ஜலம் இருந்தது. அதை பக்தர்கள் சுட்டிக்காட்ட, அந்த இடத்தைத் தோண்டச் சொன்னார் பகவான். தோண்டத் தோண்ட, ஒரு ஊற்று கிளம்பியது. அதுதான் தற்சமயம் ஆஸ்ரமத்தில் மிகப் பெரிய கிணறாக உருவெடுத் திருக்கிறது.

தினமும் மலைக்குப் போய், பிறகு கீழே தாயாரின் சமாதிக்கு வந்து கொண்டிருந்த ரமணர், ஒருநாள் அங்கேயே தங்கிவிட்டார். பிறகு, மலைக்கு மேல் போகவேயில்லை. சமாதிக்கு அருகிலேயே கூரைக் கொட்டகை போட்டு, எல்லா அன்பர்களுக்கும் உணவு கொடுக்கும்படியாக சமையல் வேலை நடந்தது. மெள்ள மெள்ள ரமணாஸ்ரமம், அம்மாவின் இறப்புக்குப் பிறகு, இப்போது இருக்கும் இடத்தில் உருவாயிற்று.

முன்பைக் காட்டிலும் அதிகம் திரள்திரளாக ஜனங்கள், ஸ்ரீரமணரை வந்து தரிசித்துக் கொண்டிருந்தனர். அவர் தாயாரின் சந்நிதியை வணங்கிக் கொண்டிருந்தனர். அப்படி வந்தவர் களில், இங்கிலாந்தைச் சேர்ந்த பால் பிரண்டன் என்பவர் மிக முக்கியமானவர். அவருடைய எழுத்தால், ஆங்கிலக் கட்டுரைகளால், பகவானின் புகழ் உலகமெங்கும் பரவியது.

ஓர் ஆங்கிலேயன் எந்தக் காரணம் கொண்டும் இந்திய சாதுக்களின் முன்போ, யோகிகளின் முன்போ, ரிஷிகளின் முன்போ அல்லது இந்தியாவில் உள்ள குருமார்களின் முன்போ தரையில் சம்மணமிட்டு உட்காரவேண்டிய அவசியம் இல்லை; ஆங்கிலேயன் என்பவன் பிறப்பால் உயர்ந்தவன்; அடிமை நாடான இந்தியாவில் எவரும் அவனுக்கு நிகரானவர் இல்லை. அப்படி ஓர் ஆங்கிலேயன் இந்திய சந்நியாசியின் முன் சம்மணமிட்டு உட்கார்ந்தால், அது அவனின் தாய்நாட்டுக்குச் செய்யும் அவமரியாதை... இப்படித்தான் திடமாக நம்பினார்கள், இங்கு வந்து அதிகாரம் செய்துகொண்டிருந்த ஆங்கிலேயர்கள்.

அவர்களுடைய கர்வம், இந்தியாவைப் பற்றி அறிந்துகொள்வதைத் தடை செய்தது. இந்தியா ரகசியங்கள் மிகுந்த நாடு என்று அவர்கள் தங்கள் நாட்டுக்குப் போய்ப் பிரசாரம் செய்தார்கள்.

'நீங்கள் இருபது வருடமாக இந்திய ரயில்வேயில் வேலை செய்கிறீர்கள். ஏதாவது ஒரு யோகியைச் சந்தித்திருக்கிறீர்களா?' என்று ஓர் ஆங்கிலேய அதிகாரியைக் கேட்டதற்கு, 'யோகிகளா? அப்படியென்றால்..? ஏதாவது துஷ்ட வகை மிருகமா?' என்று பதிலுக்குக் கேட்டார் அந்த அதிகாரி. 'இந்தியாவில் அறிந்துகொள்ள என்ன இருக்கிறது? ரயில்வே இன்ஜினா? போர்க் கப்பலா? ஆகாய விமானமா? வேறு ஏதேனும் அரிய கண்டுபிடிப்புகளா? எதுவும் இல்லையே!' என்று அலட்டல் பேச்சு பேசினார்கள்.

இதையெல்லாம்விட கண்டுபிடிக்கவே முடியாத மனம் என்கிற ஒரு விஷயம் பற்றி, ஆத்மா என்ற விசாரம் பற்றி இந்தியர்களில் பலருக்குத் தெளிவான அறிவு இருந்தது என்பது அவர்களுக்குப் புரியவே இல்லை. ஆனால், ரபேஃல் ஹர்ஸ்ட் என்கிற ஆங்கிலேய பத்திரிகையாளரின் எண்ணம் வேறாக இருந்தது. அவர் ஆங்கில பத்திரிகைகளில் பயணக் கட்டுரை எழுதுவதில் நாட்டம் கொண் டிருந்தார். அதற்காகப் பல இடங்களுக்குப் பயணம் போனார். குறிப்பாக, ஆசியாவைச் சுற்றி வருவது அவருக்குப் பிடித்திருந்தது. இந்தியாவைப் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் இருந்தது. தன்னுடைய இயற் பெயரை விட்டுவிட்டு, பால் பிரண்டன் என்கிற புனைபெயரில் அவர் கட்டுரைகள் எழுதினார். அந்தப் பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது.


இந்தியாவின் ரகசியங்களை அறிய வேண்டி, இமயமலைச் சாரலிலும், கங்கைக் கரை ஓரங்களிலும், வட இந்தியாவில் பல பகுதிகளிலும் அவர் சுற்றி வந்தார். மந்திரவாதிகளையும், நிர்வாண சாதுக்களையும், மிகப்பெரிய மடாதிபதிகளையும் சந்தித்தார். ஒவ்வொருவரிடமும் ஒவ்வொரு சிறப்பு இருந்தது. அநேகமாக எல்லோருமே வியக்க வைத்தார்கள். ஆனால், முழுமையான ஈடுபாடு, 'ஹா..!' என்ற வியப்பு பால் பிரண்டனுக்கு எவரிட மும் கிடைக்கவில்லை. சென்னைக்கு வந்தார். ரமண மகரிஷி பற்றிக் கேள்விப்பட்டார். எத்தனையோ சாதுக்களைப் பார்த்துவிட்டோம்; இவரும் ஒரு சாது என்ற எண்ணம்தான் ஆரம்பத்தில் அவருக்குள் ஏற்பட்டது. அழைத்துப் போவதாகச் சொன்ன நண்பரை தட்டிக்கழித்தார்.

பிறகு, வேறு ஒரு நண்பர் மூலம் காஞ்சிபுரம் சென்று, அங்கு ஸ்ரீகாஞ்சிகாமகோடி பீடாதி பதியாக வீற்றிருந்த ஸ்ரீசந்திரசேகரேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் என்கிற மகா பெரியவாளை தரிசனம் செய்தார். அவரின் அமைதியான முகமும், புன்சிரிப்பும், ஊடுருவிப் பார்க்கும் பார்வையும் பால் பிரண்டனை அசைத்தது.




மகா பெரியவாளைப் பார்க்கப் பார்க்கப் பொறாமை எழுந்தது. தனது மனதில் ஏற்பட்ட விகாரங்கள் எதுவும் எதிரே அமர்ந்திருக்கின்ற இந்த ஞானிக்கு ஏற்பட்டிருக்காது என்ற எண்ணம் திகைக்க வைத்தது. தான் திறந்த மனத்தோடு இந்தியாவைச் சுற்றி வருவதாகவும், எந்த மார்க்கத்தைப் பின்பற்றினால் தனது மனம் உயர்நிலையை அடையும் என்று தவிப்பதாகவும் அவர் மகா பெரியவாளிடம் விண்ணப்பித்துக் கொண்டார். ''பல சாதுக்களை தரிசித்தேன் என்று சொன்னாயே... அவர்களில் ஒருவரைத் தேர்ந்தெடு. அவரையே குருவாகக் கொள். அவர் சொல்லும் வழியைப் பின்பற்று. அப்படி எவரும் உன்னை ஈர்க்கவில்லையெனில், உன்னுடைய மனத்தையே நீ கவனம் கொள். உன் ஆத்மாவை தரிசிக்க முயற்சி செய். அது உன்னை வழிநடத்தும்'' என்று மகாபெரியவாள் சொன்னார்.

''ஏன், என்னை வழிநடத்தக்கூடிய ஒரு குரு எனக்குக் கிடைக்கக்கூடாதா? அவரை அடைய நீங்கள் எனக்கு வழிகாட்டக்கூடாதா?'' என்று இரைஞ்சலாக, பால் பிரண்டன் கேட்டார். எதிரே அமைதி நிலவியது. சிறிது நேரம் மகாபெரியவாள் எதுவும் பேசவில்லை. பிறகு, சன்னமான குரலில் அவர் சொன்னார்... ''இந்தியாவில் இரண்டு பேர் இருக்கிறார்கள். ஒருவர் காசியில் இருக்கிறார். அவர் யாரையும் சந்திப்பது இல்லை. இன்னொருவர் தெற்கே, திருவண்ணாமலையில் இருக்கிறார். அவரை நான் ஒரு முறை பார்த்திருக்கிறேன். அவர் மிகப் பெரிய ஞானி!''



''ரமண மகரிஷிதானே? அவரிடம் அழைத்துப் போவதாக ஒரு நண்பர் சொன்னார். நான்தான் அவரைப் பற்றித் தெரியாமல், மறுத்துவிட்டேன்'' என்றார் பால் பிரண்டன்.

''அப்படியானால் ஒன்று செய். உன் பயணத் திட்டத்தை மாற்றி, அவரிடம் போய் வா. அவரைச் சந்திக்காமல் இந்தியாவை விட்டுப் போக மாட்டேன் என்று எனக்கு உறுதி கொடு'' என்று அந்த ஆங்கிலேயரிடம் மகா பெரியவாள் சத்தியம் கேட்டார். நிச்சயம் போய் சந்திப்பதாக பால் பிரண்டன் உறுதி அளித்தார். ஒரு மகத்தான ஞானியிடம் இன்னொரு மகத்தான ஞானி ஓர் ஆங்கிலேயரை வழியனுப்புகிறார். அந்த ஆங்கிலேயரால், தெற்கே வாழும் அந்த மகரிஷியின் பெருமை உலகம் எங்கும் தெரியப்படப் போகிறது. அந்த ஆங்கிலேயரின் கட்டுரையால் பல பேர் ஈர்க்கப்பட்டு, திருவண்ணாமலைக்கு வரப் போகிறார்கள்.

அவர்கள் வெறுமே வேடிக்கை பார்க்க வராது, இந்தியாவினுடைய ஆழ்ந்த ஞானத்தை, இந்தியாவினுடைய தேடலில் கண்டுபிடிப்பான ஆத்மவிசாரத்தை அறிந்து கொண்டு, அது பற்றிப் பேசி, அதிகம் எழுதி, இன்னும் நிறைய மக்களுக்கு, ஐரோப்பாவின் பல்வேறு திசைகளுக்கு இதைப் பரப்பப் போகிறார்கள். அதற்கு மூல காரணமாக இந்த பால் பிரண்டன் இருக்கப் போகிறார். அவர் திருவண்ணாமலை விஜயம் இதை நிகழ்த்தப்போகிறது.

இந்தியா ஒரு காட்டுமிராண்டித்தனமான நாடு, அங்குள்ள மக்கள் ஏழைகள், ஆசை மிகுந்தவர்கள், சில்லரைக் காசுகளில் அவர் களை வாங்கிவிட முடியும் என்றெல்லாம் ஆங்கிலேயர் கொண்டிருந்த தவறான அபிப்ராயங்கள் உடைந்து, இந்தியாவை நோக்கிக் கூப்பிய கரங்களோடு வரப் போகிறார்கள் என்று மகா பெரியவாளுக்குத் தெரிந்திருந்தது.

சிறிய பாறாங்கல்லைப் புரட்டி மிகப் பெரிய நதிக்கு வழி ஏற்படுத்திக் கொடுத்ததுபோல, மகா பெரியவாள் சர்வ சாதாரணமாக ஒரு மகத்தான காரியத்தைச் செய்தார். திருவண்ணாமலையில் ஏற்றி வைக்கப்பட்ட தீபத்தால் உலகமெங்கும் ஒளிபெறக்கூடிய ஒரு கால கட்டம் வந்துவிட்டது. சத்தியம் சத்தியத்தைக் கொண்டாடி, அந்தச் சத்தியத்தை உலகிலுள்ள பல பேர் மனதில் ஏற்றி வைத்தது.

'நீங்களே எனக்கு வழிகாட்டியாக இருக்கக் கூடாதா?' என்று அந்த ஆங்கிலேயர் கெட்டிக்காரத்தனமான ஒரு கேள்வியை மகா பெரியவாளிடம் கேட்டார்.

சக்தி கதம்பம்

044-42890471

**கூக்குரல் விநாயகர்!**

மதுரை மாவட்டம், காளவாசல் அருகில் உள்ள கோச்சடை எனும் பகுதியில் அருள்புரிகிறார் ஸ்ரீகூக்குரல் விநாயகர். மின்வசதி இல்லாத முற்காலத்தில், கள்வர் நடமாட்டம் குறித்து இப்பகுதி பக்தர்களை எச்சரிக்கும் விதமாக, பல்வேறு குரல்களில் கூக்குரல் எழுப்புவாராம் இந்த விநாயகர். அதனாலேயே இப்படியொரு வித்தியாசமான நாமகரணமாம்! சிறந்த வரப் பிரசாதி இவர் என்கிறார்கள் உள்ளூர் பக்தர்கள்.

– எஸ்.விஜயா ஸ்ரீநிவாஸன், திருச்சி

''நான் உன்னை எப்படிச் சீடனாக ஏற்றுக் கொள்வது? இப்போதெல்லாம் நான் மூன்று அல்லது நான்கு மணி நேரமே தூங்குகிறேன். அப்படிப்பட்ட காலகட்டத்தில் உன்னை அருகே வைத்துக்கொண்டு, உன்னுடைய கேள்விகளுக்கு என்னால் பதில் சொல்ல முடியாது. எனக்கு விதிக்கப் பட்ட வேலைகள் வேறு. நீ, நான் சொன்னபடி மகரிஷியைப் போய் பார். நீ தேடுவதை அடைவாய்'' என்று ஆசீர்வதித்தார் பெரியவா.

தென்னிந்திய நண்பருடன் புகைவண்டி ஏறி, திருவண்ணா மலைக்கு வந்த பால் பிரண்டன் ஒரு சினிமாவைப் போல, தான் திருவண்ணாமலையில் கண்ட காட்சிகளை விவரிக்கிறார்.

இன்று இருப்பது போலத் தார்ச் சாலை இல்லை. கோயிலும், கோயிலைச் சுற்றி உள்ள இடத்தில் வீடுகளும், மடங்களும் இருந்தன. மற்ற இடங்களெல்லாம் தோப்புகளும், புதர்களுமாய்க் காட்சி அளித்தன. புழுதி நிறைந்த மண் சாலையில் ஒற்றை மாட்டு வண்டியில் அவர்கள் ரமண ஆசிரமம் நோக்கிப் பயணித்தனர். மக்கள் மிகக் குறைவான உடையே உடுத்தியிருந்தார்கள். இங்கொன்றும் அங்கொன்றுமாய் சில மனிதர்களே தென்பட்டனர். ரமணாச்ரமம் அடைந்ததும், கிணற்றிலிருந்து நீர் இறைத்துக் கொண்டிருந்த இளைஞன், ரமணாச்ரமத்தைச் சுற்றி வேலை செய்து கொண்டிருந்த பல மனிதர்கள் என்று பலரை வியப்போடு பார்த்தார் பால் பிரண்டன்.

ஒரு ஹாலில் வெள்ளை வெளேரென்ற சோபாவில் உட்கார்ந்து கொண்டிருப்பவரே மகரிஷி என்று புரிந்துகொண்டார். மகரிஷிக்கு அருகே குமிட்டியில் இருந்து வாசனையான புகை எழுந்துகொண்டிருந்தது. தென்னிந்தியர்கள் நிறம் போல் இல்லாது, கோதுமை உடைத்த நிறமாக மகரிஷியின் உடம்பு இருந்தது. அவருடைய உடல் அமைப்பு ஐரோப்பியர்களைப் போல் இருந்தது. இவர்கள் வந்ததைத் திரும்பிப் பார்த்து விட்டு, மகரிஷி மறுபடியும் தொலைநோக்கில் பார்த்துக் கொண்டிருந்தார். மறுபடியும் தன்னை நோக்கித் திரும்புவார் என்று ஆவலோடு, தான் கொண்டு வந்த பழங்களை அருகே வைத்துவிட்டு பால் பிரண்டன் காத்திருந்தார். நேரம் கடந்தது. மகரிஷி திரும்பவேயில்லை. இவர் நடிக்கிறாரா என்ற வழக்கமான மேற்கத்திய குறுக்கு எண்ணம் பால் பிரண்டனுக்கு வந்தது.

நினைக்க நினைக்க பெரிய ஆச்சரியம் பரவுகிறது. எங்கோ ஐரோப்பாவில் வாழ்ந்து, உலக வரைபடத்தில் உள்ள தேசங்களைத் துழாவிக்கொண்டிருந்த ஒரு பத்திரிகையாளருக்குச் சரியான ஆன்மிக வழிகாட்டி பகவான் ஸ்ரீரமணரே என்று தெரிவித்த மகா பெரியவாளின் தீர்க்கதரிசனம் பெரும் வியப்பு தருகிறது.

கேள்விகள் அதிகமுள்ள அந்த ஐரோப்பியர் பால் பிரண்டனுக்குச் சகலமும் வியப்பாக இருந்தது. ஆனாலும், உள்ளே ஏதோ ஓர் அமைதி படர்வதை உணர்ந்தார். நேரம் செல்லச் செல்ல, தன் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்து காலி ஆவதையும், தான் வெறுமே அமர்ந்திருப்பதை சுகமாக அனுபவிப்பதையும் அறிந்துகொண்டார். 'இதென்ன, இங்கு நினைவுகளே வரவில்லை. நாலா பக்கமும் அலைகின்ற மனது, தன்னுடைய சுயம் விட்டு, ஏதோ மகுடிக்குக் கட்டுப்பட்ட நாகம் போல அமர்ந்திருக்கிறதே! அமைதியாக இருக்கிறதே' என்று வியந்தார். இப்படி ஒரு தன்மை தனக்கு இதுவரை ஏற்பட்டதே இல்லையே... இது இவரால் ஏற்படுகிறது என்பதையும் தெரிந்துகொண்டார்.

மகரிஷியிடம் ஏதாவது கேள்வி கேட்க விரும்புகிறீர்களா என்று ஒருவர் கேட்டதற்கு, 'இல்லை... கேள்வி கேட்க எதுவும் இல்லை; கேட்பதற்காகவே வந்தேன். ஆனால், இப்போது கேட்கும் நிலையில் நான் இல்லை' என்று பால் பிரண்டன் மறுத்துவிட்டார். மதிய இடைவேளைக்குப் பிறகு மகரிஷியைப் பார்க்க மறுபடி வந்தபோது, பால் பிரண்டனுக்குத் தேவையான காரமில்லாத உணவைத் தன்னால் கொடுக்கமுடியாமல் போனதற்காக, மகரிஷி வருத்தப்பட்டதாகச் சொன்னார்கள்.

''உணவு முக்கியமில்லை, மகரிஷி! நான் உண்மையைத் தெரிந்துகொள்ள வேண்டும். அதற்காகவே வந்திருக்கிறேன். மேற்கத்திய விஞ்ஞானிகள், வாழ்வின் உண்மையைச் சொல்லவில்லை; மறைபொருளைக் காட்டவில்லை. மக்கள் சுக சௌகரியங்களுக்காகப் பேராசைப்பட்டு அலைந்து, அமைதி இழந்து இருப்பதையே நான் கவனித்திருக்கிறேன். இதுபற்றி நான் பலபேரிடம் பேசியும் எனக்குத் திருப்தியான பதில் கிடைக்கவில்லை. எனக்கு எது உண்மை என்று தெரிந்தாக வேண்டும். அதற்காகவே நான் உங்களை நாடி வந்திருக்கிறேன்'' என்று பணிவாகப் பேசினார்.

சிறிது நேரம் அமைதியாக இருந்த ஸ்ரீரமணர், 'நான், நான் என்று சொல்கிறாயே, அந்த நான் எது? அந்த நான் யார் என்று தெரியுமா?' எனக் கேட்டார்.

பால் பிரண்டன் தலையசைக்கிறார். ''தெரியும். இவனுக்குச் சிந்திக்கத் தெரிந்த நாளிலிருந்து இவன் யார் என்பதை இவன் அறிவான்.''


''இப்போது, நான் என்று நீ சொல்வது உன் உடலை அல்லவா? உனக்கு உடலுக்குள் இருக்கின்ற அந்த விஷயம் என்ன என்பதை அறிவாயா? அதை எப்படிக் கண்டுபிடிப்பது?''

''நீங்கள்தான் சொல்லித் தர வேண்டும். இதற்கு என்ன பயிற்சி இருக்கிறது நீங்கள்தான் விளக்க வேண்டும்.''

''உன் மனம் என்ன செய்கிறது என்பதை இடைவிடாது பார். உன் நிலையைப் பற்றி ஆழ்ந்து சிந்திப்பதிலிருந்து உனக்கு விடை கிடைக்கும்.''

''நான் தியானம் செய்து வருகிறேன். ஆனால் அதில் முன்னேற்றம் இல்லை.''

''முன்னேற்றம் இல்லை என்பது உனக்கு எப்படித் தெரியும்? ஆன்மிக வாழ்வில் முன்னேற்றம் என்பதை எளிதில் அறிய முடியாது.''



''என் எதிர்காலம் எப்படி இருக்கும்?'' பிரண்டன் மிக சாதாரணமான ஒரு கேள்வியைக் கேட்கிறார்.

''நிகழ்காலத்தைப் பற்றியே தெரிந்துகொள்ள முடியாதபோது, எதிர்காலத்தைப் பற்றித் தெரிந்து கொள்வதில் என்ன பயன்? இப் போதுள்ள உன்னைக் கவனி.''

''உலகத்தைச் சுற்றிப் பல பிரச்னைகள் உள்ளன. எதிர் காலத்தில் மக்கள் நட்போடு பழகுவார்களா அல்லது யுத்தத்தில் இந்த உலகம் மூழ்கிப்போகுமா?''

''இந்த உலகைப் படைப் பவனுக்கு இந்த உலகத்தைக் காப்பதற்கும் தெரியும். உலகத்தைப் படைப்பவனே காப்பான்; நீ அல்ல! எனவே, இதைப் பற்றி நீ கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை.''

''மகரிஷி, நான் சுற்றிப் பார்க்கி றேன் கடவுளுடைய கருணையைக் காண்பது அரிதாக இருக்கிறது.''

''நீ யாரென்று அறியாமல், உலகத்தைப் பற்றி அறிந்து என்ன புண்ணியம்? அதுவும் இல்லாமல், உன் சக்தியை உலக விவகாரங் களில் செலுத்தி ஏன் வீண் செய் கிறாய்? உன்னை நீ அறி. அப்போது, உலகம் பற்றிய தெளிவும் உனக்கு நிச்சயம் ஏற்படும்.''

''ஒருவன் உண்மையை அறிய வேண்டுமென்றால் அல்லது தன்னை அறிய வேண்டுமென்றால், காட்டுக்குப் போய் தனியே அமர்ந்து தவம் செய்ய வேண்டுமென்று யோகிகள் சொல்கிறார்களே. இது உண்மைதானா?''

''அவசியம் இல்லை. ஒரு நாளைக்கு ஒரு மணி நேரமோ, இரண்டு மணி நேரமோ கண்மூடி அமர்ந்து தியானம் செய்தால் போதும். அந்தத் தியானம் உன் மற்ற வேலைகளை மிகத் தெளிவாக்க உதவும். அதாவது, செய்கின்ற வேலைகளையெல்லாம் கூட தியான நிலையில் இருந்து செய்ய முடியும். தியானம் என்பது, ஒரு நாள் முழுவதும் வாழும் வாழ்க்கையாகிவிடும் தியானத்தின்போது இருந்த உணர்வே மற்ற வேலைகள் செய்யும்போதும் ஏற்படும்.''

''இதனால் ஏற்படும் விளைவு என்ன?''

''அப்போது உலகத்தின் மீதும், மற்றவர் மீதும், உன் மீதும் நீ கொண்டிருந்த கருத்துக்கள் மாறும்.''

''ஒருவன் தன்னுடைய வேலைகளைச் செய்துகொண்டே ஞானம் அடையலாம் என்று சொல்கிறீர்களா?''

''ஏன் முடியாது? அப்போது, ஒருவன் எந்த வேலையையும் தான் செய்வதாக நினைக்க மாட்டான். அதில் உள்ள லாப-நஷ்டங்களுக்கு அப்பால், எது சத்தோ அதில் மனம் லயித்திருக் கும். ஒரு மணி நேரம் இரண்டு மணி நேரம் என்பது ஆரம்ப சாதகர்களுக்கு ஒதுக்கப்பட்டது. எல்லா நேரமும் தியானத்தில் இருப்பது என்பது இதனால் ஏற்பட்ட பிறகு, வாழ்க்கை வேறு விதமாக இருக்கும்.''

''ஆத்மா என்கிறீர்கள்; ஆத்மாவைத் தேடு என்கிறீர்கள். அறியப்படும் ஆத்மா, அறியும் ஆத்மா என இரண்டு இருக்கிறதா?'' என்று கேட்கிறார் பால் பிரண்டன்.

''எப்படி இரண்டு ஆன்மா இருக்க முடியும்? நீ உன்னை உண்மையில் யார் என்று உணர்வதே இல்லை. நீ உன்னை வெவ்வேறு விதமாகக் கற்பனை செய்து கொண்டிருக்கிறாய். உன்னை உடலாக, புத்தியாக, இது செய்பவனாக, அது செய்பவனாக நினைத்துக்கொண்டிருக்கிறாய். உண்மையில் நீ யார் என்ற உணர்வு உனக்கு மறைக்கப்பட்டிருக்கிறது. இந்த மறைப்புகளுக்கு அப்பால் இருக்கின்ற உன்னை நீ தேடுகிறபோது... அதாவது, நீ கற்பிதமாகக் கொண்டிருந்த நினைப்புகளை ஒவ்வொன்றாக உதறிவிட்டு உன்னைப் பார்க்கிறபோது ஓர் உண்மை புலப்படும். அந்த மனத்திலிருந்து, பின்னால் ஒரு பெரிய விஷயம் எழுந்து நிற்கும். அது உன்னை முழுவதுமாக ஆக்கிரமித்துவிடும். அந்த ஏதோ ஒன்றுதான் மனத்தின் பின்னால் இருப்பது.




அது அகண்டமானது, உத்வேகமானது, நிலையானது. சில மதத்தினர் இதை 'சொர்க்கத் தின் சாம்ராஜ்ஜியம்' என்கிறார்கள். இன்னொரு மதத்தினர் இதை 'ஆன்மா' என்கின்றனர். சிலர் 'நிர்வாணா' என்கின்றனர். இந்துக்களாகிய நாங்கள் இதை 'முக்தி' என்கிறோம். எந்தப் பெயரில் அழைத்தாலும், சத்தியம் ஒன்றுதான். பின்னால் இருக்கின்ற அது எது? உனது கற்பிதங்கள் எவை? கற்பிதங்களை எல்லாம் உதறி விட்டு, எது எது எது என்று கேட்கும்போது, அது எழுந்து உன்னை ஆக்கிரமித்துக் கொள்கிறது. அப்போது, இந்த நிலை ஏற்பட்டால், உன்னை இழந்து விடுவதில்லை. மாறாக, உன்னை யார் என்பதைத் தெளிவாக உணர்கிறாய்.

உலகத்தில் பேரரசர்களும், அரசியல்வாதிகளும் எதையோ ஆளவேண்டும் என்று ஆசைப்படு கிறார்கள். உண்மையில், தன்னை ஆளமுடியாதவனால் மற்றவரை எப்படி ஆள முடியும்? கடவுள் என்பது என்ன என்ற புதிருக்கு விடை தெரிந்துவிட்டதா? அது தெரியாமல் வேறு என்ன தெரிந்துவிட்டதாம்?''

''அப்படித் தேடுவது மேற்கத்தியருக்கு எளிதா?''

''இது எல்லோருக்கும் எளிதான வழி. இந்தியர், மேற்கத்தியர் என்று எந்தப் பிரிவும் இல்லை. கடினம் என்று நினைக்கிறாயே, இது நீ நினைத்ததைவிட எளிதானது. என்னால் முடியுமா... முடியாது போல் இருக்கிறதே என்ற எண்ணமே மிகப் பெரிய தடை. இந்தத் தோல்வி மனப்பான்மையே இதற்கு இடைஞ்சல். என்னால் முடியும் என்று செயலுக்குள் இறங்குகிற போது, வாழ்வைச் செம்மையாக்குகிறாய் என்பதைப் புரிந்துகொள். தன்னை செம்மை யாக்கிக்கொள்வதை விட்டுவிட்டு, இங்கு செய்ய வேண்டியது வேறு என்ன இருக்கிறது? கண்டிப்பாகச் செய்யப்பட வேண்டும். ஒவ்வொருவராலும் செய்யப்பட வேண்டும்.''

சிறிது நேரம் கேள்வியற்று, பால் பிரண்டன் மகரிஷி முன்பு அமர, ஸ்ரீரமணரின் பார்வை அவர் மீது குவிகிறது. பால் பிரண்டன் தன் உடல் உணர்வை இழந்துவிடுகிறார். எல்லா இடத்திலும் பரந்துபட்டு இருப்பதாக உணர்கிறார். அந்த உணர்வில் இருந்து விடுபட்டு மீண்டும் தன்னிலை பெறுகிறார். மனம் மிக அமைதியாக இருக்கிறது.

எந்தக் கேள்வியும் இல்லாமல், எந்த ஆசையும் இல்லாமல், எந்தப் பரபரப்பும் இல்லாமல் சுருண்டு, பேச்சற்று இருக்கிறது.

''மகரிஷி, நீங்கள் என்னைச் சீடனாக ஏற்க முடியுமா?'' - பால் பிரண்டன் ஸ்ரீரமணரை நோக்கிக் கை கூப்பிய வண்ணம் கேட்கிறார்.

''குரு- சீடன் என்பதெல்லாம் என்ன? இந்த பேதங்கள் எல்லாம் சீடனுடைய பார்வையில்தான்! ஆனால், ஆன்மாவை அறிந்த பிறகு குருவும் இல்லை; சீடனும்

இல்லை. எல்லோரையும் அவன் சம திருஷ்டியால் நோக்குகிறான். எந்த வித்தியாசமும் இல்லாமல் பார்க்கிறான்.''


''காட்டுக்குப் போய் அமர்ந்து விட்டால், என் கவனத்தை யாரும் திருப்ப முடியாதல்லவா? ஒரு நகரத்தில் என் மனம் சிதறு வதற்கு வாய்ப்பு இருக்கிறதே?'' - பிரண்டன் வினவுகிறார்.

''நீ அடையவேண்டிய இலக்கை அடைந்து விட்டால், உள்ளிருக்கிற உன்னைத் தெரிந்து விட்டால், காடாக இருந்தாலும் நாடாக இருந்தாலும் ஒன்றுதான்!''

''உயர்ந்த நிலையைப் பற்றிப் பேசுகிறீர்கள். ஆனால், வாழ்க்கையில் இந்தியர்கள் முன்னேற வில்லையே?''

''ஆமாம். நீ சொல்வது உண்மைதான். நாங்கள் பின்னடைந்த வர்க்கம்தான். ஆனால், அதற்காக நாங்கள் சந்தோஷமாக இல்லை என்று நீங்கள் நினைத்துவிடக்கூடாது. எங்களது தேவைகள் மிகக் குறைவானவை. அதிகமான தேவைகளும், உடைகளும் இருக்கின்ற ஐரோப்பியர் சந்தோஷ மாக இருக்கிறார்களா? சந்தோஷம் இல்லாதபோது தேவைகள் அதிகரித்தோ, குறைவாகவோ இருப்பதில் என்ன லாபம்? அது என்ன கணக்கு? தேவைகள் என்பது சந்தோஷத் துக்குத்தானே! எல்லாத் தேவைகள் இருந்தும் சந்தோஷம் வரவில்லை எனில், மனம் அமைதியாகவில்லை எனில்... உன் தேவைக்கு, நீ அடைந்த லாபங்களுக்கு என்ன அர்த்தம்?''






பிரண்டன் லண்டனுக்குப்போய் 'A Search in Secret India' என்ற புத்தகம் எழுதினார். பல புத்தகங்கள் எழுதியிருந்தாலும், இந்தப் புத்தகம் மூலம் கிடைத்த பாராட்டே இன்னும் நிலைத்து நிற்கிறது. பால் பிரண்டன் அந்தப் புத்தகத்தில் மகரிஷியைப் பெரிதும் பாராட்டுகிறார். 'புத்தகப் படிப்பால் ஏற்பட்ட தத்துவ ஞானமோ, விஞ்ஞான அலட்டலோ இல்லாமல், தான் நேரடியாகக் கண்ட தன் அனுபவ உண்மையை, மகரிஷி எளிதான முறையில் மற்றவர்களுக்குப் பயன்படும் வகையில் விளக்கி வைக்கிறார். அதுமட்டும் அல்லாது, அவருடைய பார்வையால், அவரு டைய இருப்பால், ஒரு சூட்சம சக்தியால், வெளியே அலைந்துகொண்டிருக்கிற மற்றவர் மனத்தை அமைதிப்படுத்துகிறார்.

சகலருக்கும் ஒரு வழியைக் காட்டுகிறார். பகவான் ஸ்ரீரமணர், வெறும் உபன்யாசி இல்லை. வெறும் பேச்சோடு அவர் நின்றுவிடுவதில்லை. தன் ஆன்ம அனுபவத்தை மற்றவருக்கு மிக எளிதாக உள்ளுக்குள் செலுத்துகின்ற வன்மையைப் பெற்றவர். பகவானின் மார்க்கம் முரட்டுத்தனமான யோக மார்க்கத்தைப் பின்பற்றாமல், பக்தி மார்க்கத்தையும், ஞான மார்க்கத்தையும் கொண்டது. எப்படி ஒரு முகமதியர் எங்கிருந்தாலும் மெக்காவை நோக்கி அமர்ந்து வழிபடுவாரோ, அப்படி என் மனமும் அவ்வப்போது திருவண்ணாமலைக்கே திரும்பு கிறது. என்னுள் ஒரு புனிதத்தலமாக அது இருக்கிறது. இந்த ஞானியின் காலடியில் இருந்து ஆன்மிக ஜோதி ஏற்றி, அதை மேற்கத்திய நாடுகளுக்கு எடுத்துச் சென்று, அங்கே ஆவலாகக் காத்திருக்கும் ஆன்மாக்களுக்கு அளித்தேன். இந்த ஜோதியை அவர்கள் ஆவலோடு வரவேற்றனர். இந்த நல்ல காரியத்துக்காக நான் பெருமை அடையக்கூடாது. ஏனெனில், மேற்கத்திய சாதகர்களுக்குக் கிடைத்த இந்த ஆன்மிக ஜோதி, உண்மையில் மகரிஷி ஏற்றி வைத்தது. நான் வெறும் தூதன் மட்டுமே!'

இன்று திருவண்ணாமலையில் பல தேசத்து சாதகர்கள் வந்து குவிந்து அந்த மலையையும், ஸ்ரீரமணரையும், மற்ற உயர்ந்த ஞானிகளையும் வணங்கிக் கொண்டிருக்கின்றனர் என்றால், அதற்குக் காரணம் பால் பிரண்டன்.

ஞானம் என்பது தனிப்பட்ட ஒரு தேசத்துக்கோ, ஒரு மதத்துக்கோ, ஒரு மார்க்கத்துக்கோ சொந்தமானதல்ல. அது மனிதனின் இலக்கு. அவன் இடையறாது தேடி அலைய வேண்டிய விஷயம். அதைத் தேடத் துவங்கியவர்களுக்கு திருவண்ணா மலை ஒரு புகலிடம்; ரமணாச்ரமம் ஒரு பெருங்கோயில்.

பால் பிரண்டனுடைய புத்தகம் இன்னும் பல அரிய செய்திகளை உள்ளடக்கி இருக்கின்றது. ஓர் ஆங்கிலேயனின் பார்வையில் திருவண்ணாமலையை மிக அழகாக அவர் விவரித்து இருக்கிறார். 40 வருடங்களுக்குப் பிறகு, மறுபடியும் திருவண்ணா மலைக்கு வந்து ஸ்ரீரமணரின் சமாதியைத் தரிசித்து இருக்கிறார். 'நாற்பது வருடங்களில் பல விஷயங்கள் மறந்து போயின. ஆனால், பகவான் ஸ்ரீரமணருடைய நினைவு மிகச் செழிப்பாக உள்ளே இருக்கிறது' என்று சொல்கிறார்.



ஸ்ரீரமண மகரிஷியின் தரிசனம் இன்னும் ரமணாச்ரமத்தில் நிகழ்ந்துகொண்டிருப்பதாகச் சொல்கிறார் பால் பிரண்டன்.

1949 ஏப்ரல் மாத நடுவில், பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் இடது முழங்கைக்கு அருகில் தோன்றியிருந்த பரு போல் இருந்த கட்டி ஒன்று, அறுவை சிகிச்சை செய்து அகற்றப்பட்டது. டாக்டர் சங்கர்ராவ் என்பவர் அந்த அறுவை சிகிச்சையை மேற்கொண்டார்.

'எனக்கு இது வலிக்கவில்லையே! எதற்காக இதை அகற்றவேண்டும்? இது சாதாரணமாகத்தானே இருக்கிறது.

மிகவும் அழுத்தினால் வலிக்கிறது. இருந்துவிட்டு போகட்டுமே' என்று பகவான் கேட்க, டாக்டர் சங்கர்ராவ் அதை மறுத்தார். 'இந்தக் கட்டி பெரிதாகிக்கொண்டே இருக்கிறது. விட்டால் மிகவும் பெரிதாகிவிடும். இப்போதைக்கு, இந்த அறுவை சிகிச்சை செய்தால், இம்மாதிரி பெரிதாகாது. கட்டுப்படுத்தி விடலாம்' என்று சொன்னார். பகவான் ரமண மகரிஷி மௌனமாக இருந்தார்.

ஆஸ்ரமத்தில் உள்ளவர்களும் மருத்துவர்களும் ஆஸ்ரமத்து சர்வாதிகாரி நிரஞ்சனா சாமியினுடைய அலுவலகத்தில் ஒன்று கூடி விவாதித்து, அறுவை சிகிச்சை மேற்கொள்வதே சரி என்று சொல்லி பகவானிடம் தெரிவித்தனர். பகவான் சரி என்று சொல்லிவிட்டார். அவருடைய அன்பர்கள் இதைக்கண்டு பதறினார்கள்.

'இது ஒன்றும் பெரிய விஷயமில்லையே! அரசமரத்து பால் வைத்து கட்டினால் போதுமே. அடங்கிவிடுமே' என்று ஒரு பக்தை சொன்ன போது, 'ஆமாம், அரசமரத்துப் பால் இதற்கு நன்றாகக் கேட்கும். ஆனால் என்ன செய்வது. அவர்கள் வேறு விதமாகத் திட்டம் வைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் பெரிய மருத்துவர்கள்' என்று பகவான் பதில் சொன்னார்.

'என்ன வேண்டுமானாலும் நடக்கட்டும். என் முயற்சி எதுவுமில்லை' என்பது போல் அமைதி அவரிடம் இருந்தது. அறுவை சிகிச்சை நடத்தப்பட்டு கட்டுப் போடப் பட்டது. ஆனால் மூன்று வாரங்களுக்குப் பிறகு மறுபடியும் வேறொரு கட்டி சற்று மேல்பக்கம் வந்தது. அதையும் அறுவை சிகிச்சையில்தான் எடுக்கவேண்டும் என்பது போல் சொன்னார்கள். அறுவை சிகிச்சை மேற்கொள்ளக் கூடாது என்று பக்தர்கள் சிலர் வாதாடினார்கள்.

ஆயுர்வேதம், ஹோமியோபதி என்றெல்லாம் பேசினார்கள்.

இரண்டாம் முறை அறுவை சிகிச் சைக்குப் பிறகு ஹோமியோபதி மருத்துவமே சிறந்தது என்று நிலைநாட்டப்பட்டு, அந்த மருத்துவமுறை பின்பற்றப்பட்டது. 'கட்டியைக் கீறாமல் இருந்திருந்தால் ஹோமியோபதி நிச்சயம் வேலை செய்திருக்கும். கீறிவிட்டார்கள். இதை நான் குணப்படுத்த முடியும் என்று அகங்காரப்படவில்லை. பகவானே தன்னை குணப்படுத்திக் கொள்ள வேண்டும்' என்ற பிரார்த்தனையோடு ஹோமியோபதி மருத்துவர் தன் மருந்துகளை ஆரம்பித்தார். ஆனால், வியாதி குணமடையவில்லை.

ஆயுர்வேதம் மிகச் சிறந்தது என்று மறுபடியும் பலர் விவரமாகச் சொல்ல, அதற்கும் பகவான் சம்மதித்தார்.

ஆஸ்ரமத்து அன்பரான குஞ்சுசுவாமிகள் மூஸ் என்பவரை கேரளாவில் இருந்து அழைத்து வந்தார். 'கடவுளே, இதைக் கீறிவிட்டீர்களே... இது சீறும் அல்லவா. நாகப்பாம்பை கிளறிவிட்டது போல் அல்லவா ஆகிவிட்டது' என்று அந்த ஆயுர்வேத வைத்தியர் அலுத்துக்கொண்டார். அவரும் மருத்துவ முறையை ஆரம்பித்தார். கை சிவந்து வீங்கி, ரத்தப் போக்கும் இருந்தது. வெகு நிச்சயமாக அது கடுமையான வலியை பகவானுக்குக் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் வலிக்கிறது என்று பகவான் முனகக்கூட இல்லை. மிக அமைதியாகத் தாங்கிக் கொண்டார்.

ஒரு நாட்டு வைத்தியர் பச்சிலை வைத்துக் கட்டினார். காரமான பச்சிலையில் கால்களில் நடுக்கம் உண்டாயிற்று. தடுமாற்றம் ஏற்பட்டது. தவறி விழுவது என்பது ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் ஏற்பட்டது. அவரால் நடமாட முடியவில்லை. எனவே பச்சிலை வைத்தியம் நிறுத்தப்பட்டது.

எப்போதும், சமையலறைக்குப் போய், ஒருமுறை உணவு தயாராவதை எட்டிப்பார்த்து விட்டு, உணவுக் கூடத்துக்கு போய் சாப்பிடுவதை வழக்கமாகக் கொண்ட பகவான்,

**இனிப்பு அரிசி...**
**சோளப்பொரி...**


பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநிலத்தில் 'லோகிரி' எனும் பெயரில் பொங்கல் திருநாளை கொண்டாடுகின்றனர். அன்று இனிப்பு கலந்த அரிசி, சோளப்பொரி ஆகியவற்றை தீயிலிட்டு, கிராமியப் பாடல்கள் பாடி மகிழ்வார்கள்.

– நெ.இராமன், சென்னை-74

ஹாலிலேயே இருந்த இடத்திலேயே கை அலம்பினார். இது பக்தர்களுக்கு வேதனையைக் கொடுத்தது. ஆயுர்வேத பிளாஸ்டர் போடலாமா, அரச மரத்து பால் வைக்கலாமா என்று பக்தர்கள் டாக்டரிடம் கேட்டபோது. 'ஏதாவது செய்து கொள்ளுங்கள். இதையெல்லாம் என்னிடம் கேட்காதீர்கள். சரியான மருத்துவர் வைத்து நடத்திக்கொள்ளுங்கள்' என்று சினந்து கூறினார்கள். பக்தர் கூட்டம் எந்த வழியில் பகவானுக்கு உதவுவது என்று தெரியாமல் இருந்தது. பகவானோ எது நடந்தாலும் நடக்கட்டும் என்று மௌனமாக இருந்தார்.

ஆயுர்வேத பிளாஸ்டர்கள் போடப்பட்டன. ஆனால் சென்னையிலிருந்து புதிய மருத்துவர்கள் வந்தார்கள். அவர்கள் வந்து பார்த்துவிட்டு உடனடியாக மறுபடியும் அறுவை சிகிச்சை மேற்கொள்ள வேண்டும். இல்லையேல் ரத்தப் போக்கு அதிகரித்து உடம்பு க்ஷீணமடையும் என்றார்கள். ஆயுர்வேத பிளாஸ்டர்கள் அகற்றப்பட்டன.

மீதி இருந்ததை என்ன செய்வது என்று சொல்லும்போது, அங்கு வந்த பக்தைக்கு இதே மாதிரி கழுத்தில் கட்டிகள் இருந்தது தெரிந்து, அவளுக்கு அது கொடுக்கப்பட்டது. அந்த ஆயுர்வேத ப்ளாஸ்திரிகளை அவள் போட்டுக்கொண்ட சில நாட்களிலேயே அவளுக்குக் குணம் தெரிந்தது. ஆனால் பகவானுக்கு அறுவை சிகிச்சை மூன்றாம் முறையாக நடத்தினார்கள். கையை எடுக்க வேண்டியிருக்கும் என்று டாக்டர்கள் சொன்னார்கள். கையை எடுத்துவிட்டால் வேறு இடத்தில் கட்டி வராதா என்று பகவான் கேட்டதற்கு, அவர்களால் பதில் சொல்ல முடியவில்லை. வந்தாலும் வரும் என்ற நிலைமைதான் இருந்தது. எனவே கை எடுப்பது என்பது பற்றி பகவான் மறுத்து விட்டார்.



வங்கத்திலிருந்து வந்த கவிராஜ பண்டிதர் மிக விலை உயர்ந்த மருந்துகளை கொடுக்கச் சொல்லிவிட்டு, பகவானாகத்தான் இதை ஆற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லி விட்டுப் போய்விட்டார். அந்த மருந்துகள் பகவானுக்கு ஒத்துக்கொள்ளவில்லை. எனவே அவையும் நிறுத்தப்பட்டன.

நாளுக்கு நாள் கட்டி பெரிதாகிக் கொண்டே வந்தது. செக்கச் சிவந்து காணப்பட்டது. சூரிய ஒளியில் நின்றால் அது குணமாகும் என்று சொல்லப்பட்டது. 'சூரிய ஒளியில் அது மரகதமணி போல் பிராசிக்கிறது பார்' என்று பகவான் அதை அழகாக அனுபவித்தார். சூரிய நமஸ்காரம் செய்தால், ம்ருத்தியுஞ்ஜய ஜபம் செய்தால், பகவானுடைய உடல் குறை நீங்கும் என்று சொன்னார்கள். எனவே ஆஸ்ரமத்து அன்பர்கள் சூரிய நமஸ்காரம் செய்தனர். ம்ருத்தியுஞ்ஜய ஜபம் ஆரம்பித்தார்கள்.

'ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்தால் மரணம் நின்றுவிடுமா?' என்று பகவான் கேட்டார். எவரும் பதில் சொல்லவில்லை. 'ம்ருத்யுஞ்ஜய ஜபம் செய்தால் மரண பயம் போகும். ஆனால் மரணம் போகாது' என்று

பகவானே பதில் சொன்னார். ஆனால், அன்பர்கள் செய்கிற எந்தவித பிரார்த்தனைக்கும் தடை சொல்லாது நடக்கட்டும் நடக்கட்டும் என்று ஆதரவாகத்தான் பேசினார்.


1950-ஆம் வருடம்,ஏப்ரல் மாதம், யுகாதி பண்டிகையை யட்டி, பக்தை ஒருவர், அவருக்கு வழக்கம் போல பரிசளிக்கும் விதமாக கௌபீனமும் மேல் துண்டும் கொண்டு போய்க் கொடுத்தார். 'அட, யுகாதியா!? அப்படியானால் விக்ருதி வருடம் வந்து விட்டதா? சரி' என்றார். அப்படிச் சொன்ன போது, அது யுகாதியை அவர் வரவேற்பதாக இல்லை. இதோடு முடிந்துவிட்டது என்பது போல த்வனி இருந்தது. பக்தர்கள் அதைக் கேட்டுக் கண்கலங்கினார்கள்.

பக்தை அவரிடம் அருகே போய், "யார் யாருடைய நோயை எல்லாமோ குணப்படுத்தி இருக்கிறீர்களே. உங்களுடைய நோயை நீங்கள் குணப்படுத்திக் கொள்ளக் கூடாதா. இந்த உடல் வாதையிலிருந்து நீங்கள் விடுபடக் கூடாதா?" என்று கதறினார்.

"நீ ஏன் என்னை உடலாக நினைக்கிறாய்? நான் உடலல்லவே. இத்தனை நாள் பழகியும் இது தெரியாமல் இருக்கிறாயே" என்று, கதறிய பக்தையையே குற்றஞ்சாட்டி சமாதானப் படுத்தினார் பகவான்.

நாளாக நாளாக, பகவான் உடல் க்ஷீணமடைந்தது. நடக்கும்போது தவறி விழுந்தார். அவருடைய கட்டு முழுவதும் ரத்த விளாறாகியது. ரத்தத்தால் கௌபீனம் நனைந்தது. தரையெல்லாம் ரத்தம் சிதறியது. ஆனால், பலபேர் உதவி செய்ய வந்தும் அதைத் தடுத்துவிட்டு, பகவான் தானே எழுந்து நின்றார். பின் பக்கம் போய் வந்தார். அதற்குப் பிறகு உணவு உண்பது என்பது சிரமமாயிற்று. நீராகாரமாகத்தான் எடுத்துக் கொள்ள முடிந்தது. லேசான வயிற்றுப் போக்கும் குமட்டலும் இருந்தன. ஜீரணசக்தி குறைந்து போயிற்று. நோயினாலோ மருந்தினாலோ அவர் உடல் நலம் குன்றிக்கொண்டே இருந்தது.

கவிராஜ பண்டிதரின் மருந்து, ஆறுவேளைக்கு திரவ ரூபமாகக் கொடுக்கப் பட்டது. மீண்டும் மீண்டும் மருந்தா என்று பகவான் அலுத்துக் கொண்டார். 'போதுமே, விட்டுவிடுங்களேன்' என்பது போல அது இருந்தது. ஆனால் அன்பர்கள் விடவில்லை. பகவானும் மறுக்கவில்லை. எது சொன்னாலும் சரி என்று கேட்டுக் கொண்டார். ஆனால், மக்களுக்குத் தரிசனம் செய்வதைத் தடுக்கக்கூடாது என்று கண்டிப்பாக இருந்தார். நோயுற்ற நிலையிலும் துவண்டு கிடந்த நிலையிலும் கட்டிலில் இருந்தபடியே, வருகின்ற பக்தர்களுக்கு ஒன்றரை மணி நேரம் இரண்டு மணி நேரம் தரிசனம் கொடுத்தார். வருவோரை உற்றுப் பார்த்து பார்வையாலேயே ஆசிர்வதித்தார்.



ஆனால், ஏப்ரல் 10-ஆம் தேதியிலிருந்து தரிசனம் நிறுத்தப்பட்டது. பகவான் படுக்கையில் சலனமில்லாமல் இருந்தார். அவருடைய ரத்த அழுத்தம் மிகவும் கீழாகப் போய்விட்டது. அந்த நிலையில் ரத்த அழுத்தம் இருப்பின், ஒருவர் நிச்சயம் மரணமடைய வேண்டும். ஆனால் பகவான் நிதானமாக மூச்சு விட்டுக் கொண்டிருந்தார்.அவ்வப்போது கண் திறந்து ஏதாவது பேசினார். ஆனால் ஏப்ரல் 13-ஆம் தேதி, மறுபடியும் தரிசனம் ஆரம்பிக்கப்பட்டது. பக்தர்களை வரிசைப்படுத்தி, சட்டென்று பார்த்துவிட்டு நகரும்படியாகக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். சாரை சாரையாக ஜனங்கள் வந்து பார்த்துக் கொண்டிருந் தனர். ஏப்ரல் 14-ஆம் தேதி தரிசனத்தை நிறுத்தி விடலாம் என்று ஆஸ்ரம அதிகாரிகள் முடிவு செய்தபோது, நிறுத்தக்கூடாது என்று பகவான் கட்டளை இட்டுவிட்டார். எல்லோரையும் வரிசையாக நிற்க வைத்து அனுப்பினார்கள். பகவான் கண் திறந்து சகலரையும் பார்த்தார். அவருக்கு நெருக்கமான அன்பர்கள் மீது,

அவர் கண்கள் நிலைத்தன. ஒவ்வொருவராக தடவிக் கொடுப்பதைப் போல அந்தப் பார்வை நகர்ந்தது. துக்கத்தை அடக்கிக்கொண்டு, அழுகையை நெஞ்சுக்குள் தேக்கிக்கொண்டு, அந்த இடத்தில் அழக் கூடாது என்று மனதை ஒருமுகப்படுத்திக்கொண்டு, கைகூப்பிய வண்ணம் 'எங்களை விட்டு பிரியாதீர்கள்' என்று சில பக்தர்கள் மனமுருக வேண்டிக் கொண்டிருந் தனர். 'இத்தனை வேதனை தாண்ட வேண்டுமா. பரவாயில்லை நீங்கள் இந்த உடலை விட்டு எங்குமாய், எல்லா இடத்திலுமாய் எங்களோடு இருங்கள்' என்று வேறு சில பக்தர்கள் மெல்லிய குரலில் பிரார்த்தனை செய்தார்கள்.

இரவு ஏழு மணிக்கு தரிசன நேரம் முடிந்தது. பகவான் தன்னை பத்மாசன நிலையில் வைக்கும்படி கேட்டுக் கொண்டார். செயற்கை சுவாசத்துக்கு உண்டான ஆக்ஸிஜனை எடுக்கும்படி சொல்லிவிட்டார். சற்று தொலைவே உள்ள பகவானுடைய தாயாரின் சமாதி இருந்த மண்டபத்தில் உள்ள அன்பர்கள், பகவான் எழுதிய 'அட்ச ரமண மாலை'யைப் பாட ஆரம்பித்தனர். அதைக் கேட்டதும் பகவானின் கண்கள் மெள்ளத் திறந்து கண்ணீர் சொரிந்தன. காது முழுவதும் அட்ச ரமண மாலையிலேயே இருந்தது.

எல்லோர் மனதிலும் பகவான் தங்களை விட்டு போகப் போகிறார் என்ற துக்கம் இருந்தது. எதுவும் செய்ய முடியாமல், இந்த விஷயத்தைத் தடுக்க முடியாமல், இது அவருடைய விருப்பம் என்பதாக எல்லோரும் மௌனமாக ஒரு சக்திக்கு கட்டுப்பட்டு இருந்தனர். யாரும் யாரோடும் பேசிக் கொள்ளவில்லை. ஆஸ்ரமத்து வேலைகள் எதுவும் நடைபெறவில்லை. நமசிவாய மந்திரம் சொன்னார்கள். சிலர் வேத பாடங்களை சொன்னார்கள். சிலர் எதுவும் செய்யாமல் பித்துப் பிடித்தது போல, வெட்ட வெளியை வெறித்து பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

அற்புதமான குருவை, தினம் தினம் சந்தித்து ஆனந்தம் அடைந்த குருவை, எல்லா விதமான உதவிகளும் பெற்றுத் தங்களுக்கு அருகே கம்பீரமாக வாழ்ந்த ஒரு குருவை இழக்கப் போகிறோமே என்ற அவஸ்தையில் இருந்தனர். இது நடக்காமல் நின்றுவிடக் கூடாதா. மறுபடியும் இந்த ஆஸ்ரமம் சிரிப்பும் பாட்டுமாய் இருக்கக் கூடாதா, அவருடைய அசைவான நடையை இந்த பக்தர்கள் தரிசிக்கக் கூடாதா. ஒவ்வொருவராக விசாரித்து நடப்பாரே, அது மீண்டும் இங்கு நடக்கக் கூடாதா என்றெல்லாம் ஏங்கினர். அந்த சந்தோஷம் எல்லாம் இல்லை. இனி அந்தச் சம்பவங்கள் எல்லாம் நடக்கப்போவது இல்லை; எல்லாம் ஒரு முடிவுக்கு வரப் போகிறது என்று தெரிந்து, பேரவஸ்தையில் நெளிந்தார்கள். முன்னும் பின்னும் அலைந்தார்கள். அயர்ந்தார்கள். அட்ச ரமண மாலை தொடர்ந்து பாடப் பட்டுக் கொண்டிருந்தது.

8.45-க்கு அவருடைய மூச்சு நின்றுவிட்டது. உடம்பு சில்லிடத் துவங்கியது. பக்தர்கள் கதறினர். சிலர் தலையில் அடித்துக் கொண்டு அழுதனர். சிலர் கீழே விழுந்து புரண்டு கதறினார்கள். சிலர் என்ன செய்வது என்று தெரியாமல் தலையை பிடித்துக்கொண்டு தனியே விம்மித் தீர்த்தார்கள். பெற்ற தாயை இழப்பதை விட, தந்தையை இழப்பதைவிட மிகக் கடினம் குருவின் பிரிவை சகித்துக் கொள்வது. உலகமே இருண்டது போல, இருதயமே அறுந்து விழுந்தது போல, வெட்ட வெளியில் நிர்கதியாய் விடப்பட்ட கன்றுக்குட்டியைப் போல மனம் தவிக்கும்.

உலக வாழ்க்கைக்கும் உயர்ந்த மனோநிலை அடைவதற்கும் இகத்திற்கும் பரத்திற்கும் எல்லா நேரங்களிலும் உதவி செய்ய ஒரு தனிமனிதருக்கு குருவைத் தவிர யார் உண்டு? மேய்ப்பனை இழந்த மந்தை வேறெங்கும் போகாது, அவனிருந்த இடத்திலேயே இருக்கு மாம். இன்னொரு மேய்ப்பர் யார் என்று தேடுமாம். விதம் விதமான குரலில் கதறிக் கொண்டிருக்குமாம். பகவான் ஸ்ரீரமணரது அன்பர்கள் அப்படித்தான் துடித்தார்கள்.

8.47-க்கு திருவண்ணாமலை வான் வெளியில் ஒரு மிகப்பெரிய வால் நட்சத்திரம் வடக்கு நோக்கிப் போயிற்று. அந்த வால் நட்சத்திரத்தை சென்னையில் உள்ளவர்கள் கூட தெளிவாகக் கண்டார்கள். தமிழ்நாட்டின் பல பகுதிகளில் அந்த வால் நட்சத்திரம் தெளிவாகத் தெரிந்தது. ஒரு பெரிய மகான் இந்த பூமி விட்டுக் கிளம்பி விட்டார் என்பதை அந்த வால் நட்சத்திரம் உறுதி செய்தது.

உள்ளளி பெருகிய ஒரு ஞானியின் ஆன்மா, உடல் பிரியும்போது இன்னும் ஜொலிப்பாகி, சுடராகி, மேலெழும்பி வெளி முழுவதும் கலந்தது. இது இன்னொருவித விஸ்வரூபம். நான் சாதாரணன் இல்லை என்று சொன்ன காட்சி!

குரு என்பவர் உடலல்ல, நான் என்பது மனம் அல்ல, புத்தி அல்ல, அவரின் உடம்பு அல்ல என்று பலமுறை சொல்லிக் கொடுக்கப் பட்டிருந்தாலும், அவையெல்லாம் அந்தக் கணம் மேலெழாமல், அவருடைய இழப்பு மட்டுமே பக்தர்களை உலுக்கிக் கொண்டிருந்தது.

மெள்ள மெள்ள அவரவர் பக்குவத்துக்கு ஏற்ப, அந்த துக்கத்திலிருந்து மீண்டு எழுந்தார்கள். அட, இது எல்லோருக்கும் நடக்கப் போகிறது. நிச்சயம் ஒவ்வொருவரும் மரணமடையப் போகிறோம். இந்த மாதிரியான ஒரு நேரம் இங்கு உள்ள அனைவருக்கும் உண்டு. தொடர்ந்து இந்த மரணம் ஜனங்களுக்கு ஏற்படத்தான் செய்யும். இந்த மரணம் கண்டு தவிப்பது என்பது தேவையில்லை. 'நான்' மரணமடையக்கூடிய விஷயமல்ல; 'நான்' அதைவிடப் பெரியவன். மிகப் பெரிய சக்தி. என் ஆன்ம சக்தி என்பதை நான் பார்த்துவிட்டால் இதெல்லாம் விஷயமே இல்லை. இதைத்தான் எனக்கு என் குரு சொல்லிக் கொடுத்திருக்கிறார் என்று மனம் தேறினார்கள்.

தொடர்ந்து எல்லா வேலைகளும் மளமளவென்று நிறைவேறின. திருவண்ணாமலை மக்கள் சாரி சாரியாக வந்து பகவான் ஸ்ரீரமணரை தரிசித்தார்கள். மறுநாள் காலையில் நல்ல முறையில், பகவான் ஸ்ரீரமண மகரிஷியின் உடல் ஒரு குழியில் இறக்கப்பட்டு விபூதி, செங்கற்பொடி, மஞ்சற்பொடி போன்றவை போடப்பட்டு, பெரிய பாறாங்கல் வைத்து மூடப்பட்டு, அதன் மீது சிவலிங்கமும் வைக்கப்பட்டது.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி இல்லாதது போலவும் இருந்தது; இருப்பது போலவும் இருந்தது. இதுவரை அவரோடு பேசிப் பழகியவற்றை, அவர் சொன்னவற்றை நினைவுபடுத்தி, அவரை மறுபடியும் பக்தர்கள் அனுபவிக்கத் தொடங்கினார்கள். நினைவிலிருந்து தூண்டி எடுத்து அவருடைய உணர்வை மீண்டும் அனுபவித்தார்கள். அவர் இருப்பை மறுபடியும் கொண்டாடினார்கள்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி என்கிற உடல் ஓய்ந்து போயிற்று. ஆனால், மிக மோசமான ஒரு காலகட்டத்தில், இந்துமத தத்துவம் க்ஷீணமடைந்த தருணத்தில், எது சரியான வழி என்று தெரியாமல் ஜனங்கள் தடுமாறிக் கொண்டிருந்த நேரத்தில், 'உன்னை நீ அறிவதே கடவுளை அறியும் வழி! இதற்காகவே பக்தி, இதற்காகவே மதம், இதற்காகவே வழிபாடு, இதற்காகவே எல்லாவிதமான வேலைகளும் இங்கு நடைபெறுகின்றன. உன்னை நீ அறிவதற்காகவே நீ குடும்பஸ்தனாய், துறவியாய், பிரம்மசாரியாய் இருக்கிறாய். உனது எல்லா முயற்சிகளும் நீ யார் என்பதை அறிவதற்காகவே இங்கு இருக்கின்றன.

எனவே, நீ யார் என்பதைத் தேடுவதை விட்டுவிட்டு, அதைத் தெரிவதைப் புறக்கணித்துவிட்டு, நீ செய்கிற மற்ற காரியங்களில் உன்னை முதன்மைப்படுத்திக் கொள் ளாதே. எல்லாக் காரியங்களிலும் நீ யார் என்று தேடு!' என்கிற அவருடைய செய்தி உலகமெங்கும் மெள்ள மெள்ளப் பரவிச் சுற்றிக்கொண்டிருக்கிறது.





நிரஞ்சனா சுவாமிகளின் பூர்வாஸ்ரம மகன் வெங்கட் ராமன் சிவலிங்கத்துக்கு அபிஷேகம் செய்ய, சமாதி வேலைகள் விரைவாக நடந்தன.

இன்று ரமணாஸ்ரமம், உலகில் இருக்கிற பல ஆன்மிக அன்பர்களின் தாபத்தைத் தீர்க்கிற அற்புதமான இடமாக இருக்கிறது. மிக அமைதியாய், அடக்கமாய், எந்த ஆர்ப்பாட்டமும் இன்றி, பகவான் ஸ்ரீரமணரின் செய்தியைப் பரப்புகின்ற உயர்ந்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறது.

இடைவிடாது அன்னதானமும் நடந்து கொண்டிருக்கிறது. ஸ்ரீரமணருடைய இருப்பு அந்த இடத்தில் நிரந்தரமாக இருக்கிறது. அவருடைய அனுக்கிரகம் வெள்ளம்போலப் பாய்ந்து, அங்கு வருகிற பக்தர்களின் உள்ளத்தில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

பொருளாதாரத் தேவை அதிகரித்து, போட்டியும் பொறாமையுமாய் இருக்கிற இந்த வாழ்வில், அவருடைய வாக்கியங்கள் மலரைப் போல நம் நெஞ்சைத் தொட்டு ஆசுவாசப்படுத்துகின்றன. இதுவல்லவே என் வாழ்க்கை என்று ஆர்ப்பாட்டங்களிலிருந்து விடுபட்டு, அமைதியை நோக்கித் திரும்ப, அவை பெரிதும் உதவி செய்கின்றன. சத்தியத்தை நோக்கி வெகுவேகமாக அழைத்துப் போகின்றன. சத்தியத்தைத் தொட்டவர்க்கு மரணம் பற்றிய எந்த பயமும் இல்லை. மரணம் பற்றிய பயம் இல்லாதபோது, வாழ்வின் ஒவ்வொரு நொடியையும் நன்றாக அனுபவிக்க முடியும்.

வாழ்வை நன்றாக அனுபவித்த வர்க்கு உள்ளுக்குள் மிகப் பெரிய நிறைவு ஏற்படும். அந்த நிறைவுதான் சொர்க்கம். அந்த நிறைவுதான் கட வுளுக்கு அருகே கொண்டு வருகிறது. ஹோமமும், யாகமும், பக்தியும் யோகமும் மற்ற வித சடங்குகளும் எளிதில் கொடுக்காத ஒரு விஷயத்தைக் கொண்டு வந்து பகவான் ஸ்ரீரமண மகரிஷி நம் கைகளில் கொடுக்கிறார். நாம் தவறவிடாமல் எடுத்து அதை விழுங்கவேண்டும். ஒரு சிறு முயற்சி, அவரை நோக்கிய ஒரு பார்வை, நம்மை மிகப் பெரிய அளவில் மாற்றும்.



விசார மார்க்கம் எளிதானது. நான் யார் என்று என்னைத் திரும்பத் திரும்ப கவனமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பது மட்டும் என்னை உய்விக்கும்; என்னை கர்வம் அடையாமல் அமைதியாய் காக்கும். இதைத் தெரிந்துகொள்ளவே பல பிறவிகள் எடுத்திருக்கிறோம். அடுத்த பிறவிக்குப் போகாமல் இந்தப் பிறவியிலேயே இது என்ன என்பதைத் தெரிந்துகொள்வது நம் வாழ்வு சுழற்சியை ஒரு முடிவுக்குக் கொண்டு வரும். உன்ன தமான நிலைக்குக் கொண்டு போய் உட்கார வைக்கும். சிவபெருமானே மனித உரு எடுத்து பகவான் ஸ்ரீரமண மகரிஷி யாக திருவண்ணாமலையில் திகழ்ந்தார் என்று சொல்லப்படுவது உண்டு. மிகக் கடுமையான அத்வைத தத்துவத்தை எளிதாக பகவான் ரமண மகரிஷியின் வாய்மொழியால் கேட்க, அது உண்மை என்று புலப்படுகிறது.

இந்தக் கட்டுரையை எழுத வாய்ப்பு அளித்த விகடன் குழுமத்துக்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த கட்டுரைத் தொடரை எழுது வதற்கு பலமளித்த என் சற்குருநாதன் திருவண்ணாமலை மகான் யோகி ராம் சுரத்குமார் அவர்களை நான் பலமுறை நமஸ்கரித்து நன்றி சொல்லுகிறேன். நான் பகவான் ரமண மகரிஷியை நேரில் கண்டதில்லை. ஆனால் என் பதின்மூன்று வயதில், மஞ்சரியில் வெளியான 'ரமணரின் வாழ்வும் வாக்கும்' என்ற புத்தகத்தை பைண்டு செய்து என் தாயார் எனக்குக் கொடுக்க, அதைப் பலமுறை திரும்பத்

திரும்பப் படித்திருக்கிறேன். அன்று ஒன்றுமே விளங்காது போனாலும், அதன் பல வாக்கியங்கள் என் மனதில் இருக்கின்றன. பகவான் ஸ்ரீரமணர் மிகப் பெரியவர் என்கிற எண்ணம் அப்போதே எனக்குத் தோன்றியது.

எப்போது திருவண்ணாமலை போனாலும், பகவான் ரமண மகரிஷியின் இடத்தில் முன்னும் பின்னும் அலைவது என்பது எனக்குப் பிடித்த விஷயமாக இருக்கிறது.
பகவான் ரமணரின் அன்புதான் எனக்கு



என் சற்குருநாதன் யோகி ராம்சுரத்குமாரையும் காட்டிக் கொடுத்தது. அவர் சந்நிதியில் உட்கார்ந்து, 'நீர் இருக்கும்போது நானில்லை; நானிருக்கும் காலத்தில் நீர் இல்லையே! எனக்கு யார் குரு? எங்கே என் குரு?' என்று மனம் கரைந்து கேட்க, என் சத்குருநாதன் பகவான் யோகி ராம்சுரத்குமார் அறிமுகம் எனக்குக் கிடைத்தது. என் குருவோடு நான் பின்னிப் பிணைய, ஸ்ரீரமணரே காரணம்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷியைப் பற்றி எழுதிய பல கட்டுரைகளை நான் படித்திருக்கிறேன். அவற்றை எல்லாம் ஒன்றாகத் தொகுத்து, சற்குரு ஸ்ரீரமண மகரிஷி சரிதமும் உபதேசமும் என்கிற ஸ்ரீரமணாச்ரமத்து புத்தகத்தை அடிப்படையாக வைத்துக்கொண்டுதான், இதை என்னுடைய நடையில் எழுதினேன். அந்த புத்தகம் இல்லையெனில் இதை எழுதியிருக்க முடியாது.

ஒரு பிரபலமான பத்திரிகையில், இவரைப் பற்றி எளிதான முறையில் நான் எழுத, அவரைப் பற்றி இன்னும் அதிகம் தெரிந்துகொள்வதற்காக நீங்கள் ரமணாச்ரமம் போய் அங்குள்ள புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து வாங்குவீர்கள்; திரும்பத் திரும்பப் படிப்பீர்கள் என்ற நம்பிக்கையில் இதைச் செய்திருக்

கிறேன். அப்படித் தொடர்ந்து படிக்கும்போது ஏதோ ஒரு கால கட்டத்தில், ஏதோ ஒரு முக்கியமான நேரத்தில், பகவான் ஸ்ரீரமணருடைய வாக்கியங்கள் உங்களுக்குள் மிகப் பெரிய மலர்ச்சியை ஏற்படுத்தும். அவர் சொல்வது என்ன என்பதை அவர் சொன்ன விதமாகவே உங்களுக்குப் புரியும். இந்த 'சரிதமும் உபதேசமும்' என்பதை எட்டுப் பாகங்களாக, தடித்த புத்தகங்களாக ஸ்ரீரமணாச்ரமம் மிக அழகான முறையில் அச்சிட்டுத் தந்திருக்கிறது. அதை மொத்தமாக வாங்கி நீங்கள் படிக்க வேண்டும் என்பது என்னுடைய வேண்டுகோள்.

பகவான் ரமணரைப் புரிந்துகொள்வது என்பது மிக எளிதானது. புரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையான தாபம் இருந்துவிட்டால் போதும், பகவான் ஸ்ரீரமணர் உங்களை ஆட்கொள்வார்.

ஏனெனில், இங்கு வேறு எந்தவிதமான நாடகத்துக்கும் அல்லது அலட்டலுக்கும் இடம் இல்லை.

அவற்றால் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாது. போலியான உபதேசிகளும் மோசமான மதவாதி களும் கீழ்த்தரமான மதமாச்சர்யங்களும் மிகுந்த இந்த உலகத்தில் சத்தியத்தைச் சொன்ன ஸ்ரீபகவான் ரமண மகரிஷிதான் நம்மைக் காப்பாற்ற முடியும். அவருடைய வாக்கியங்களே நமக்கு உண்மையை நோக்கி வெளிச்சம் தரும்.

என்ன வாழ்க்கை இது, நான் என்ன செய்து கொண்டிருக்கிறேன், உண்மையில் நான் யார் என்ற தாபம் எவருக்கு எழும்பினும், அவருக்கு மிக எளிதாக விடை தரக்கூடிய ஒரே இடம் பகவான் ஸ்ரீரமண மகரிஷி. அவர் ஆஸ்ரமம். அவர் எழுதிய புத்தகங்கள். அவருடைய வாக்கியங்கள். அவருடைய அன்பர்களின் அனுபவங்கள்.

பகவான் ரமண மகரிஷி மதவாதியல்ல. ஆசார அனுஷ்டானங்கள் சொல்கிறவர் அல்ல. இந்தத் தேசத்துக்கு, இன்ன மொழிக்கு, இன்ன மதத்துக்கு உரிமையானவர் இல்லை. அவர் தனியாக எந்த ஒரு மதத்தையும் ஸ்தாபிக்கவில்லை. என்ன இருந்ததோ, அதை வெளிச்சம் போட்டுக் காட்டினார். எந்தவித வர்ணமும் சேர்க்காமல், எந்தவிதக் கலப்படமும் இல்லாமல், மிகத் தெளிவாக சத்தியத்தை உள்ளங்கை நெல்லிக்கனி போல உங்களுக்குக் கொண்டு வந்து கொடுத்திருக்கிறார். அறிவதற்கு ஆவல் இருந்தால் போதும். மற்றவை அவரது அருளால் ஏற்படும்.

பகவான் ஸ்ரீரமண மகரிஷி திருவடிகளே சரணம்.